தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

## அன்பு



தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

## பொருளடக்கம்

# அன்பு

# அன்பு

### 1. அன்பு என்றால் என்ன?

## R 3150 [col. P4] :

அன்பை விவரிப்பது இயலாத காரியமாகத் தோன்றுகிறது. ஆகவே நாம் அதின் குணாதிசயங்களின் விளக்கத்தைக் காண்போம். இப்படிப்பட்ட குணாதிசயங்களை அன்பின் அடிப்படையில் பெற்றிருந்தால் மட்டுமே அன்பைப் பற்றி புரிந்துக்கொள்ள முடியும். இல்லாவிடில் அதை விவரிக்க முடியாது. ஏனெனில் - இது தேவனுடையது. இருதயம், நாவு, கரங்கள், சிந்தை சகலத்திலும் தேவனைப் போல செயல்பட்டு, முழு மனுக்குலத்தின் காரியங்களை மேற்பார்வையிட்டு அவர்களை முழுமையாக தன் கட்டுக்குள் வைக்க முயற்சிக்கிறது.

## R3151[col.2P2]:

கிறிஸ்துவின் சீஷர்கள் அல்லது மாணவர்களாக அவரது பள்ளியில் பயின்று கொண்டிர7த8 6லருக்கும் நாம் நம்முடைய உன்னத அழைப்பின் பந்தயப்பொருளை அடைவதற்கு நாளுக்கு நாள் பல குணாதிசயங்களில் பூர்த்தி அடைவதற்கு அன்பின் பாடத்தையே நாம் அநுதினம் கற்றுக் கொள்ள வேண்டும். "ஒவ்வொரு அழகான சாயலும் ஒளியாக இருப்பது போல, ஒவ்வொரு கருணையும் அன்பாகும்" என்று ஒரு கவிஞர் கூறினது போல, நம்முடைய அநுதின வாழ்க்கையில் செய்யும் கிரியைகளிலும், சிந்தையிலும், வார்த்தையிலும் இந்த அன்புக்கு தொடர்புள்ளதாக இருக்க வேண்டும்.

1கொரிந்தியர் **13:1 "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்."**

## R3150[col.1 P5]:

அன்பின் செயல்பாடுகளை விவரிப்பதற்கு முன், அதன் முக்கியத்துவத்தை அப்போஸ்தலர் மிகத் தெளிவாக வலியுறுத்துகிறார். வசனத்தில் கூறப்பட்டது போல பல வரங்களைக் காட்டிலும் "அன்பு" மேலானது என்றும், மேலும் இந்த "அன்பு" நமக்குள் இராவிட்டால் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கக்கூடிய ஆதாரத்தை இழந்து விடுவோம் என்றும் கூறுகிறார். "நாம் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், கைத்தாளம் போலவும்" இருந்து விடுவோம். நம்முடைய வார்த்தைகளுக்கும், நம்முடைய செய்கைகளுக்கும் தொடர்பில்லாமல் போய்விடும். நாம் சுவிசேஷத்தை சரளமாக பேசக்கூடிய திறமையை பெற்றிருந்தாலும் அது ஆண்டவருக்குள் புது சிருஷ்டிகளுக்கான தொடர்பை நிரூபிப்பதில்லை. "இராவிட்டால்" என்ற வார்த்தையோடு அப்போஸ்தலர் துவங்குகிறார். ஏனெனில் தேவனுடைய குமாரனின் நற்செய்தி வல்லமையோடும், வலுக்கட்டாயத்தோடும் அல்ல, அன்பின் ஆவியோடு போதிக்கப்பட வேண்டும் என்பதை அவர் குறிப்பிடுகிறார். மிக அருமையாக பேசக்கூடிய அநேக பொதுப் பேச்சாளர்களை நாம் கண்டிருக்கலாம். அவர்கள் சத்தியத்தின் மேல் முழு அன்புள்ளவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களுடைய உபதேசம் உணர்வுள்ளதாய் இருக்கும். இல்லாவிடில் மாயமானதாக தோன்றும். (பணத்தின் மேல் அல்லது கௌரவத்தின் மேலுள்ள நேசத்தினால் இவர்கள் போதிக்கிறார்கள். )

1கொரிந்தியர் 13:2 **"நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்க தாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை."**

## R3150[col. 1P6]:

தீர்க்கதரிசன வரத்தை அதிகமாக நாடும்படி பவுல் கட்டளையிடுகிறார். தேவனுடைய மறை பொருள்களை அறிந்து கொள்ளக்கூடிய அறிவையும் பெற வேண்டுமென்று கூறுகிறார். மேலும், ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடிப்படையாக இவைகளின் மேல் மிக ஆழமான விசுவாசம் தேவைப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள அனைத்தையும் நாம் பூரணமாக பெற்றிருந்தாலும் அன்பில்லாவிட்டால், அதில் ஒரு பயனும் இல்லை என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். அன்பு இராவிட்டால் புது சிருஷ்டியின் அங்கத்தினராக மட்டும் அல்ல, ஒரு பூஜ்யமாக என்னப்படுவோம். ஏனெனில் அன்பின் ஆவியினால் மட்டுமே ஒரு புது சிருஷ்டி கருத்தரிக்கப்படுகிறது. இது எவ்வளவு அற்புதமான ஒரு பரீட்சையாய் இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் இதை பொருத்தி பார்க்கலாம். நாம் தேவனுடைய பார்வையில் பூஜ்யமாக இருக்கிறோமா? அல்லது தேவன் மேல், சகோதரர்கள் மேல், அவருடைய

நோக்கத்தின் மேல் பொதுவாக நம்முடைய பகைவர் மேல் உள்ள அன்பில் நாம் எந்த அளவுக்கு தேவனால் அளவிடப்பட்டிருக்கிறோம். நாம் பெற்ற அறிவினாலோ, புகழ்ச்சியினாலோ, பேச்சு திறமையினாலோ இதை அளவிட முடியாது. ஆனால் தேவனுடைய ஆழமான இரகசியங்களை அறிந்து கொள்ளக்கூடிய அறிவை ஒருவர் அன்பின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமல் பெற்றுக் கொள்ள முடியாது, என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், ஒருவருக்கு தேவ ஆவி கொடுக்கப்படா விட்டால் அவர் தேவனுடையவைகளை அறிந்து கொள்ள முடியாது. அதே நேரத்தில் தேவனுடைய அறிவைப் பெற்று ஒருவர் தவறான கிரியைகளை நடப்பிக்கும்போது அவர் தேவனுடைய அறிவை இழப்பதற்கு முன், தேவனுடைய ஆவி அவரிடத்திலிருந்து எடுக்கப்படும். ஆகவே நம்முடைய குணலட்சணங்களை அளவிடும் போது தேவனிடத்தில் நாம் கொண்ட நெருக்கத்தையும், அங்கீகாரத்தையும் நமக்குள் இருக்கும் அன்பை பிரதானமாக சோதித்து அறிந்து கொள்ள வேண்டும்.

1கொரிந்தியர் 13:3" **எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப் படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிரா விட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை"**

**R3150[col.2 P1,2]:**

அப்போஸ்தலன் மற்றொரு கோணத்தில் வாதத்தை துவங்குகிறார். அன்னதானத்தைக் குறித்தும் தனக்கு உள்ளதெல்லாம் மற்றவருக்கு கொடுக்க வேண்டியது என்பதை குறித்தும், அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே இதன் முக்கியத்து வத்தை காட்டிலும் அன்பின் கொள்கைகளை மனதில் பதிய வைக்கும்படி இவ்வசனத்தை கூறுகிறார். அதாவது எந்த விதமான நல் நடக்கையும் அன்பின் அடிப்படையில் இராவிட்டால் அதில் எந்த பயனும் இல்லையென்று கூறுகிறார். மேலும் ஒரு இரத்த சாட்சியாக மரிப்பதற்கு துணிந்தாலும் சரி, அவர்கள் எரிக்கப்பட்டாலும் சரி, அன்பின் குணங்கள் அவர்களிடத்தில் இல்லாவிடில், அவர்கள் எந்த ஆசீரும், பலனும் பெற முடியாது.

சுயக்கட்டுப்பாடு, பலியின் ஜீவியம், விசுவாசத்தில் உறுதி, போன்ற நல்ல குணங்களில் வளர்ச்சி அடையக் கூடியவர்கள் அன்பில் வளர்ச்சி அடையாமல் எவ்வாறு இருக்கக்கூடும்? அன்பில்லாமல் இக்குணங்களை நாம் வளர்க்க வேண்டுமென்பது நம்முடைய நோக்கமல்ல. ஆனால் இக்குணங்களோடு அன்பும் ஓரளவிற்கு வளர வேண்டும். தானம், தர்மம் செய்வதும், பலி செலுத்துவதும் நம்முடைய அறிவு, நம்முடைய போதனை அனைத்துமே அன்பின் அடிப்படையில் இருந்தால் மட்டுமே தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படுவோம் என்று மிக உறுதியாக அப்போஸ்தலர் கூறுகிறதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது. மேற்கூறப்பட்ட நற்குணங்களில் சிறிதளவு அன்பு காணப்பட்டால் தேவனும் சிறிதளவேப் பாராட்டுகிறார். அதே நேரத்தில் மிகப்பெரிய அளவில் காணப்பட்டால் அந்த அளவிற்கு அந்த நல்ல குணங்களை பாராட்டுகிறார். முழுமையாக அன்பின் தூண்டுதலினால் செயல்பட்டால் அவர் முழுமையாக ஏற்றுக்கொள்வார். புது சிருஷ்டிகளாக நம்முடைய நடக்கையில், அன்பு ஒரு பகுதியாக மட்டுமே இருந்தால், தேவனுடைய நாமம் மற்றும் அவருடைய மதிப்பார்ந்த வேலைகளுக்காக நாம் செய்யும் உயர்வான ஊழியங்கள், செலுத்தும் பலிகள் அனைத்தையும், மட்டுப்படுத்தப்படும் மற்ற எண்ணங்கள் நமக்குள் இருப்பதை பொருள்படுத்தும். ஆகவே இப்படிப்பட்ட எண்ணங்களுக்கு நம்மை காத்துக்கொண்டு, நம்முடைய முழு இருதயமும், பூரண அன்பினால் நிரப்பப்படுவதற்கு ஆர்வத்தோடு முயற்சிக்க வேண்டும் - அதாவது நம்முடைய ஆண்டவர், நம்முடைய சகோதரர்கள் மற்றும் சத்தியத்திற்காக நம்முடைய ஒவ்வொரு சேவையும், தனிப்பட்ட லட்சியம், பெருமையின்றி, தூய்மையான இருதயத்திலிருந்து பிறப்பிக்கப்பட வேண்டும்.

1கொரிந்தியர் 13:4 "**அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,"**

**R3150[col.2 P3-6]:**

அன்பைப் பற்றி இவ்வளவு முக்கியமான கருத்தை கொடுக்கும் அப்போஸ்தலர், அது என்ன என்றும் மற்றும் அது எதுவாக இல்லை என்றும், அது எவ்வாறு செயல்படுகிறதென்றும் மற்றும் அது எவ்வாறு செயல்படாது என்றும் அல்லது தன்னை நடத்திகொள்ளும் விதத்தைப் பற்றியும் விவரிக்க தொடருகிறார். இந்த விஷயத்தை குறித்து நாம் ஒவ்வொருவரும் நடைமுறைக்கேற்றபடி சுயமாக, நமக்குள் விசாரிக்கலாம். நான் அப்படிப்பட்ட அன்பை பெற்றிருக்கிறேனா ? - குறிப்பாக விசுவாச வீட்டாரிடம், நீண்ட காலமாக கணிசமான உபத்திரவத்திற்குள் என்னை வழிநடத்தினாலும், நான் தயவாகவே இருக்கிறேனா ? எவ்வளவு சீக்கிரத்தில் நான் புண்படுகிறேன் ? வெகு

சீக்கிரத்தில் என்றால், நிச்சயமாக நான் குறைவான தேவ ஆவியை - அன்பைப் பெற்றிருக்கிறேன் என்று குறிக்கிறது. வாழ்க்கையின் அற்பமான தவறுகளை நான் வெறுப்பதற்கு சினமடைந்தால், - கோபத்தின் ஆவியை கொண்டிருந்தால், தீமைக்கு தீமை மற்றும் உதாசினத்துக்கு உதாசினம் செய்தலால், தெய்வீக ஆய்வில், ஒரு வெற்றிசிறந்தவராக, இறுதியாக ஜெயிப்பவராக இருப்பதற்கு மிக முக்கியமான குணத்தில், நான் குறைவாக குறிப்பிடப்படுவேன்.

"நன்றி அற்றவர்களிடமும் அன்பாய் இருக்கிறார்." - என்று நம்முடைய பரலோக தந்தையைப் பற்றி சொல்லப்படுகிறது. நான் அவருடைய இந்த இரக்கத்தின் ஆவியை பெற்றிருக்கிறேனா ? என் நண்பர்களிடம் கனிவாக, மென்மையாக, மரியாதையாக, நடந்து கொள்கிறேனா ? என்னுடைய கிரியைகள் வார்த்தைகள் மற்றும் சிந்தனைகளில், இந்த அன்பின் அடையாளம் வியாபித்துள்ளதா ? நான் மற்றவர்களிடம் கனிவுடன் இருக்கிறேனா ? வார்த்தைகளில், பார்வையில், மற்றும் செயல்களில் இரக்கத்தை வெளிப்படுத்துகிறேனா ? ஒரு கிறிஸ்தவனாக, எல்லாவற்றிற்கும் மேலாக, வீட்டிலும், வேலை ஸ்தலங்களிலும், சபையிலும் - எல்லா இடங்களிலும், இரக்கம், அன்பு கலந்த மரியாதையோடு இருக்கவேண்டும். முள் செடியில் திராட்சை பழங்கள் கட்டப்படுகிறதைப் போல தேவ பிள்ளைகள், இந்த பொறுமை மற்றும் இரக்கத்தை பார்வைக்காக அணியாமல், அதற்கு மாறாக அவைகள் தேவனோடு ஐக்கியம் கொள்ளுதல், அவரிடமிருந்து கற்றுக்கொள்ளுதல், அவருடைய பரிசுத்தமுள்ள ஆவி, அன்பின் ஆவியைப் பெற்றதன் பலன் அல்லது வளர்ச்சியே - இந்த ஆவியின் கனிகளாகும்.

மற்றவர்கள் செழிப்பாக வாழ்வதை கண்டு, அவர்களின் வளர்ச்சியில் மகிழும் படியாக, பொறாமை இல்லாத அன்பை நான் கொண்டிருக்கிறேனா ? என்னுடைய சொந்த விஷயங்களில் நான் வளமாக இராதபோதிலும், இந்த அன்பு என்னில் காணப்படுகிறதா ? இது பெருந்தன்மை. இது பொறாமைக்கும் நேர் எதிரானது. பொறாமையின் வேர் சுயநலம். அன்பின் வேரில் பொறாமை வளராது. அன்புக்கு பொறாமை இல்லை, நன்மையின் எல்லா வளர்ச்சியிலும் அன்பு மகிழும்.

தன்னை தான் புகழாத அன்பை நான் பெற்றிருக்கிறோனா ? - இது பெருமை இல்லாத, மனத்தாழ்மைக்கு முனைகிற அன்பாகும். "தன்னலமற்ற தன்மையைக் காட்டிக் கொள்ளும் நிலைக்கு தன்னைத்தானே அழைத்துச் சென்று, தன்னை புத்தியீனனாக்கி கொள்வதிலிருந்து ஒருவரை இந்த அன்பு விடுவிக்கிறது." என்று யாரோ ஒருவர் உண்மையிலே கூறியிருக்கிறார்." சுய - மதிப்பைப் பெருமைப்படுத்துதல், ஒருவரை மடமைக்கு மட்டும் அல்ல, சில நேரங்களில், பெருமைக்காக அவர் செய்யும் நன்மைகள், மிகுந்த பாவங்களுக்குள் அவரை வழிநடத்தும். தேவனுடைய ஆவியே, திடமான சிந்தனை ஆற்றல். இது மற்றவர்களை பெருந்தன்மையாக மதிப்பிட முயலுவது மட்டுமல்ல, தன்னைத் தான் பெருமை பாராட்டாது.

**R2204[col.1 P2-5]:**

நல்ல எண்ணங்களை கொண்டவர்களின் குறைபாடுகளுக்கும், அபூரண தன்மைக்கும், **பரிபூரண அன்பு பொறுமையாக** இருக்கும். இதை தவிர, அப்போஸ்தலர் கூறுகிறபடி, வெகு ஜனங்களின் மனதை குருடாக்கி, எதிராளியான சாத்தானின் தாக்குதலின் கீழ் அதிகமாகவோ, குறைவாகவோ, இந்த உலகமும் கிடப்பதை உணர்ந்து வழியை விட்டு வெளியே செல்பவர்களிடமும், நீதியின் பாதையை எதிர்ப்போரிடமும் இந்த அன்பு பொறுமையாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்குள் இந்த அன்பின் வெளிப்பாடு முக்கியமாக காணப்பட்டது. அவருடைய எதிராளிகளிடம் அவர் எவ்வளவு பொறுமையாக இருந்தார். அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை நாம் கவனிக்கலாம். "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்"(எபிரெயர் 12:3)

**பரிபூரண அன்பு** அதன் செயல்முறையிலும் **இரக்கமுள்ளது**. இது மற்றவர்களின் நலனை மட்டும் தேடாமல், அதை மிகச் சிறந்த வழியில் செயல்பட முயலுகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு விவகாரத்திலும், தொனி மற்றும் முறைகள் அதிகமாக சம்மந்தப்பட்டிருப்பதை கண்டு பிடிக்காதவர் யார் ? கருணை நிறைந்த சிந்தனைக்கு ஏற்ற, ஒவ்வொரு வார்த்தையையும், செயல்பாட்டையும், உடனடியாக செய்யும், இருதயத்தின் முயற்சியினாலே, பரிபூரண அன்பு பெறப்படுகிறது. முதுமையான கழக உறுப்பினரின் குறிக்கோளை

நினைவில் கொள்வது நல்லது.-"இந்த உலகத்தை நான் ஒரு முறை கடந்துப்போவேன். நான் இந்த வழியில் மறுபடியும் கடந்து செல்லாததினால், எந்த ஒரு மனுஷனுக்கும், நான் செய்யத்தக்க எந்தவொரு நன்மை அல்லது எந்தவொரு இரக்கச் செயலையும், இப்போது நான் செய்யட்டும். எதையும் நான் தள்ளி வைக்கவோ, புறக்கணிக்கவோ வேண்டாம்."

**பரிபூரண அன்பு பெருந்தன்மையுள்ளது**, பொறாமைக்கு இடமில்லை. இந்த பொறாமை, சுயநலம் என்ற ஒரு தவறான இயல்பிலிருந்து தோன்றுகிறது. இதற்கு எதிராக, அன்பு, ஒவ்வொரு நல்ல கிரியைகள் மற்றும் வார்த்தைகளின் செழுமையிலும் மற்றும் கிறிஸ்தவ கிருபையின் முன்னேற்றம் மற்றும் தெய்வீக ஆவியின் உந்தக்கூடிய அனைத்து தெய்வீக சேவைகளிலும் மகிழக்கூடியவர்களோடு, மகிழும்.

**பரிபூரண அன்பு தாழ்மையுள்ளது,** "அன்பு தன்னைப் புகழாது." அதற்கு முன் எக்காளம் ஊதாது.அதன் நல்ல செயல்களை,மனுஷர் காண வேண்டும் என்று செய்யாது. ஒருவரும் அதை காணவும் மாட்டார்கள் அறிந்துக்கொள்ளவும் மாட்டார்கள். தேவன் மட்டுமே அறிந்துக்கொள்வார். அதனுடைய அறிவு அல்லது கிருபையினிமித்தம் அது பெருமைப் பாராட்டாது. ஆனால் எந்த நன்மையும், பரிபூரணமான எந்த ஈவும் பிதாவிடமிருந்து வருவதை மிக தாழ்மையோடு ஒப்புக்கொள்கிறது. ஒவ்வொரு இரக்கத்திற்கும் அவருக்கு கைமாறு செய்கிறது. "தன்னலமற்ற தன்மையைக் காட்டிக் கொள்ளும் நிலைக்கு தன்னைத்தானே அழைத்துச் சென்று, தன்னை புத்தியீனனாக்கி கொள்வதிலிருந்து ஒருவரை இந்த அன்பு விடுவிக்கிறது." என்று யாரோ ஒருவர் உண்மையிலே கூறியிருக்கிறார்."

1கொரிந்தியர் 13:5, "**அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,**"

## R3151[col.1 P1-6]:

இனிய தோற்றமில்லாத - நடைநயமற்ற, பண்புகுறைவுள்ள அன்பு என்னிடம் உள்ளதா ? அற்ப விஷயங்களிலும் அன்பு செலுத்துவதை நற்பண்பு என்று வரையறுக்கப்படுள்ளது. சிறிய விஷயங்களிலும், அன்பின் வெளிப்பாட்டை - மரியாதை அல்லது உபசரிப்பு என்று சொல்லப்படுகிறது. நற்பண்பின் இரகசியம், மேற்பரப்பான பளப்பளப்பு அல்லது இருதயத்திலுள்ள அன்பாகும். விசுவாச வீட்டாரோடு மட்டும் அல்ல இந்த உலகம் , நம்முடைய வீடுகளிலும், மரியாதை மற்றும் இரக்கமுள்ள கிரியைகளை செயல்படுத்து வதற்கு உந்தக்கூடிய மனமார்ந்த அன்பை கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றிருக்கவேண்டும்.

எனக்குரியதை மட்டுமே தேடக்கூடிய அன்பை நான் பெற்றுள்ளேனா ? மற்றவர்களின் நலன்களுக்காக சில சொந்த உரிமைகள் சிலவற்றை தியாகம் செய்ய அனுமதிக்கக்கூடிய அன்பை பெற்றிருக்கிறேனா அல்லது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என் சொந்த உரிமைகளை மட்டும் கோருகின்ற சுயநலநெறியை நான் கொண்டிருக்கின்றேனா ? ஆனால், மற்றவர்களின் வசதி, ஆறுதல் மற்றும் உரிமைகள் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் அந்த உரிமைகளை கோருகின்றேனா ? இந்த குறிப்பிட்ட விஷயத்தில் அன்பைப் பெற, மற்றவர்களின் எந்தவொரு அநியாயமான நன்மைகளைப் பெற்றுகொள்ளாமல் இருக்க எச்சரிப்போடிருந்து , எந்த ஒரு தவறான செயலுக்கும் தவறான செயலைச் செய்வதை விட மோசமான துன்பத்தை அனுபவிப்பதை விரும்ப வேண்டும், - அநீதி செய்வதை விட அநீதியை அனுபவிப்பதே மேல்.

எளிதில் சினமடையாத அன்பு எனக்குள் இருக்கிறதா ? உண்மையில், மூலபிரதியில் "எளிது" என்ற சொல் விடுப்பட்டுள்ளது. அன்பு எரிச்சலடைந்து, கோபத்திற்கு ஆளாகிவிடாது என்ற எண்ணத்தைத் தருகிறது. அன்பு அதன் உரிமையாளரை, கேள்வியின் இரண்டு பக்கங்களை பார்க்க இயலசெய்கிறது. அது அவரை மெய்யான தத்துவவாதியாக மாற்றுகிறது. நல்ல மனதுக்குரிய ஆவியை அவருக்கு தருகிறது. ஆத்திரமும், வன்முறையான கோபமும், மிக மோசமான தீங்கை, அவர்களுக்கு எதிரானவர்களுக்கு மட்டும் அல்ல, தங்களுடைய இருதயம், சரீரத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார். அன்பானது, கொள்கையை கையாளும் போதும், மதிப்புமிக்க பாடங்களை ஆழப் பதிய வைத்து பயிற்றுவிப்பதற்கும், ஒரு சில வேளைகளில் கடுமையானதாகவும், விறைப்பாயும் இருக்கநேரிடும், மேலும் இது கோபம் என்னும் தலைமையின் கீழ்வரலாம், சரியான அர்த்தம் என்னவெனில், அது நீதியான கோபமாகவும், அன்பின் நோக்கமுடையதாகவும், நன்மை செய்வதற்காகவும், தேவையான நேரத்தில் மாத்திரம் இருப்பதாயும் இருத்தல் வேண்டும். நீதிக்கான கோபமெனில், நாம் உதடுகளினாலும்

இருதயங்களினாலும் பாவம் செய்யாது காத்துக் கொள்ள வேண்டும். எப்போதும், அன்பையும் பெருந்தன்மையான மனோபாவங்களையும், நமது எதிரிகள் மீதோ அல்லது நாம் உதவிச்செய்பவர்கள் மீதோ, சரி செய்ய விரும்பும் நண்பர்கள் மீதோ காண்பிக்க வேண்டும்.

பேராசையுடன் செயல்படுவது, தீய தோற்றம், தீய வார்த்தைகள் மற்றும் கோபமான உணர்வுகளைக் கொண்ட மோசமான மனநிலையில் உள்ளவர்கள் எளிதில் சினமடைவார்கள். இது அன்பின் ஆவிக்கு முற்றிலும் எதிரிடையானது. ஆண்டவரின் பக்கத்தில் இருப்பவரும், அவருக்கு பிரியமாக இருக்க விரும்புபவர்களும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களின் நிலையை பெறவேண்டும் என்று முயலுகிற யாவரும், நம்முடைய நாட்களின் பொதுவான சூழ்ச்சிகளிலிருந்து தம்மை வைராக்கியத்தோடு காத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் நல்ல மனமுடையவர்களாக இருக்கவேண்டும். இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய அன்பின் ஆவியை, நம்முடைய அன்றாட வாழ்க்கையின் விஷயங்களில், வெளிப்படுத்துவதை விட, எந்தவிதத்திலும் நாம் சிறப்பாக அவருடைய புகழ்ச்சியை வெளிப்படுத்த முடியாது. எந்தவிதமான தீமையும் எண்ணாத அன்பும் எனக்குள் இருக்கிறதா ? இது கபடற்றது, தீமையான சந்தேகம் இருப்பதில்லை. அல்லது மற்றவர்களில் குற்றம் காணாது அல்லது அவர்களின் தீய எண்ணங்களுக்கு ஒத்து போவதில்லையா ? ஒரு பழைய பழமொழி - "அன்பு மெலிந்த இடங்களில் குற்றங்கள் பருமனாக இருக்கும்."

இ ங்கு புதிய மொழிபெயர்ப்பில், இந்த சிந்தனை சற்று வேறுப்படுகிறது. தீமையை கணக்கில் எடுத்துகொள்ள வேண்டாம். மன்னிப்புக்காக, அல்லது ஒரு திரும்பி கொடுத்தலுக்காக அல்லது இன்னும் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என காத்திருப்பது போல, குற்றவாளிகளுக்கு எதிராக குற்றம் சாட்ட வேண்டாம். குற்றங்களை கணக்கிடாமல், எந்த ஒரு மனபோக்குகளும் இராமல், அன்பு அதை கடந்துசெல்லட்டும். அந்த அன்பானது அதனுடைய நண்பர்களை நடத்துவது போலவே துல்லியமாக குற்றவாளிகளையும் நடத்தும் என்பது அர்த்தமல்ல. முன்பு இருந்த அதே மனநிலையை வெளிப்படுத்தாத அளவிற்கு குற்றங்களை கொஞ்சம் கவனிப்பது அவசியம் அல்லது தேவையாக இருக்கலாம். ஆனால், எந்தவிதமான வெறுப்போ, தீமையோ, சண்டையோ வெளிப்பட வேண்டாம் - முடிந்தவரை விரைவாக முழுமையான நல்லிணக்கத்திற்காக திறந்த வாய்ப்பை கொடுத்துவிட்டு, இரக்கம் மற்றும் மென்மையைத் தவிர வேறெதும் வெளிப்படக்கூடாது. சீர் பொருந்துவதை ஊக்கமளிப்பதற்கும், தவறுகளை மன்னித்து, மறப்பதற்கும், ஒரு விருப்பத்தை எடுத்துக்காட்டுவதற்கு செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

**R2204[col.1 P6 through col. 2 P2]:**

**பரிபூரண அன்பு நற்பண்புள்ளது** - "அயோக்கியமானதை செய்யாது" பெருமை என்ற வேரிலிருந்து மிக பல அயோக்கியமானவைகள் மற்றும் முரட்டுத்தனம் வளருகிறது. இவைகள், பொதுவாக தங்களை அறிவாளிகள் என்றும் அல்லது நீதி ரீதியாகவே வசதியானவர்கள் என்று எண்ணுபவர்களிடம் காணப்படுகிறது. இதற்கு எதிரிடையாக, பரிபூரண அன்பு மனத்தாழ்மையோடு, நற்பண்புகளை வளரச்செய்கிறது. சிந்தனையுள்ள ஒரு மனுஷன் -"அன்பின் சிறுதொகை நற்பண்பு என்று வரையறுக்கப்பட்டுள்ளது. சிறிய விஷயங்களிலும், அன்பின் வெளிப்பாட்டை மரியாதை அல்லது உபசரிப்பு என்று சொல்லப்படுகிறது. நற்பண்பின் இரகசியம் அன்பு செய்வதாகும். காரியங்களை அமைதியாக, அன்போடு செய்யக்கூடியவரே ஒரு பண்புள்ள மனிதர்."

**பூரண அன்பு சுயநலமற்றது** - "தற்பொழிவை நாடாது."ஒருவர் பராமரிக்கக்கூடிய கடமைகளையும், இயற்கையாகவே அவரை நம்பியிருப்பவர்களுக்கு நன்மை செய்யும் பொறுப்புகளையும் புறக்கணிக்கவேண்டும் என்று இங்கு குறிப்பிடவில்லை. ஒவ்வொரு உணர்விலும், "அன்பு வீட்டில் துவங்குகிறது." சரியான சிந்தையை நாம் ஒருமித்து பார்க்கும்போது, பரிபூரண அன்பின் ஆவியைப் பெற்ற ஆண்களும், பெண்களும், வாழ்க்கையின் எந்தவொரு விவகாரத்திலும் தங்களின் சொந்த நலன்களைப் பற்றி மட்டும் சிந்திக்க மாட்டார்கள். பேரம் பேசுவதில், வாங்குபவர்கள் அல்லது விற்றவர்களின் நலனில் அக்கறைக் கொண்டிருப்பார்கள். அயல்வீட்டாரிடம் நன்மை பெற விரும்பமாட்டார்கள். ஆனால் குடும்பத்திற்கு உள்ளே அல்லது வெளியே ஆனாலும் சரி, இந்த அன்பை வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும், இரக்கத்துடன், பெருந்தன்மையாக, நடைமுறைப்படுத்த விரும்புவார்கள். "வாழ்வோம், வாழட்டும்"

**பரிபூரண அன்பு நல்ல மனமுடையது** - "எளிதில் சினமடையாது. இன்று பொதுவாக, மிகுந்த தீமையின் மத்தியில், இந்த கடும்கோபம், சிடுசிடுப்பான, கெட்ட நகைச்சுவை, எரிந்துவிழும் தன்மை, குற்றம் சாட்டுதலுக்கு விரைதல் போன்ற குணங்கள் அதிகமாக காணப்படுகிறது. எனினும், எந்த அளவுக்கு இந்த நிலைப்பாடு வளர்க்கப் படுகிறதோ அல்லது மனப்பூர்வமாக வளர்க்கப்பட்டு அல்லது அதற்கு எதிராக போராடாமல் இருக்கிறதோ, அந்த அளவுக்கு பிதாவின் பரிசுத்த ஆவியில் நம்முடைய வளர்ச்சிக்கும் ஆண்டவராம் இயேசுவின் சாயலில் நம்முடைய குறைபாட்டிற்கும், அபூரணத் தன்மைக்கும் ஆதாரமாக இருக்கிறது. இது போன்று, தவறான ஆவியின் சான்றுகளில், வெகு சிலவற்றை, அவர்களின் தொடர்ச்சியான, சாக்குபோக்குகளுக்கு மிகுந்த கருணை பெறுகிறார்கள். ஆனால் எப்படியாவது, எப்போதும் இயல்பான துன்பம், பாரம்பரை, மற்றும் நரம்பு கோளாறுகள்- சிடுசிடுப்பு, எரிந்துவிழும் தன்மை மற்றும் குறைபேசும் தன்மையின் ஆவியை நோக்கி செயல்படும். ஆண்டவரின் ஆவியில் நிரப்பப்பட்ட ஒவ்வொரு இருதயமும், மாம்சத்தில் உள்ள இந்த தீமையான மனநிலையை எதிர்த்து, அதற்கு எதிராக ஒரு நல்ல போராட்டத்தை நடத்த வேண்டும். "இது என் வழி" என்று அது சொல்லாது. ஏனெனில், விழுந்து போன இயல்புடைய எல்லா வழிகளும் மோசமானது. பழைய சுபாவத்தையும், மாம்சத்தின் கிரியைகளும் மற்றும் சாத்தானையும் வெல்லுவதே புது சிருஷ்டியின் வேலையாக உள்ளது. அன்பின் வல்லமை இதை காட்டிலும் மேலானது என்று நம்மில் வெகு சிலரே,நம்முடைய நண்பர்களுக்கும், வீட்டாருக்கும் காண்பிக்கிறோம். ஒவ்வொரு தேவ பிள்ளைகளும், இந்த அன்பில் வளரும் போது, இனிமையான மனநிலை அவர்களுக்குள் உருவாகவேண்டும்.

**பரிபூரண அன்பு கபடற்றது** -"தீங்கு நினையாது." இது தர்ம சிந்தையோடு மற்றவர்களின் நடத்தையை புரிந்துகொள்ள முற்படுகிறது. தன்னிலே, தூய மற்றும் நல்ல எண்ணம் கொண்டிருந்தால், முடிந்த வரை, அதே நிலைப் பாட்டில் இருந்து மற்றவர்களின் வார்த்தை களையும், நடத்தையையும் காண்கிறது. அது விரோதங்களையும், சந்தேகங்களையும் பொக்கிஷ மாக கருதாது. இதுவுமல்லாமல், சின்ன சின்ன காரியங்களிலிருந்து, தீமையான எண்ணங் களுக்காக, சூழ்நிலையான சங்கிலி தொடரான ஆதாரங்களை அது உருவாக்காது. "அன்பு மெலிதாக இருக்கும் இடங்களில் தவறுகள் தடிமனாக இருக்கும்" என்று ஒருவர் ஞானமாக குறிப்பிட்டிருக்கிறார். அன்பு இருதயத்தின் உள் நோக்கங்களைக் குறைகூறுவதற்கு பதிலாக, நியாயத்தீர்ப்பில் பிழைகள் திருத்தப்படுவதற்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்கிறது.

**1கொரிந்தியர்13:6"அநியாயத்தில் சந்தோஷப் படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்"**

**R3151[col.1 P7]:**

அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும் அன்பு எனக்குள் இருக்கிறதா ? சரியான மற்றும் தவறான கொள்கைகள் என் மனதில் உறுதியாக நிலைத்திருக்கிறதா ? முற்றிலும், சரியான கொள்கைக்கு ஒத்திசைவாகவும், தவறான கொள்கைக்கு எதிராகவும் இருப்பதால், தவறை என்றுமே நான் ஊக்குவிக்காமல்,எனக்கு லாபம் உண்டானாலும், அதை கண்டனம் செய்கிறேனா ? என்னுடைய முன்தீர்மாணிக்கப்பட்ட கருத்துக்கள் கெட்டுபோனாலும் அல்லது என்னுடைய பூமிக்குரிய சில நலன்களில் குறைபாடுகள் ஏற்பட்டாலும் சத்தியத்திலும், அதன் வெற்றிப்பொலிவிலும், மகிழ்ச்சியாக இருப்பதை தவிர்க்க முடியாத அளவுக்கு நான் சத்தியத்தோடு இசைந்திருக்கிறேனா ? ஆண்டவருடைய ஜனங்களின் ஆவி என்று அப்போஸ்தலர் விவரிக்கும் தேவனுடைய அன்பு, அனைத்து சுயநலத்திற்கும் மேலானதும், நிலையான கோட்பாட்டின் அடிப்படையிலும், நாளுக்கு நாள் தெளிவாக அறிந்துக்கொண்டு, எவ்வளவு நஷ்டங்கள் ஏற்பட்டாலும், எப்போதும் உறுதியாக பற்றிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

**R2204[col.2 P3-5]:**

**பரிப்பூரண அன்பு நேர்மை வாய்ந்தது** - "அநீதியில் சந்தோஷப்படாது"எங்கெல்லாம் தீமைகளை காண்கிறதோ, அப்பொழுதெல்லாம் துக்கப்படுகிறது, தீமையில் விழக்கூடியவர்கள் மற்றும் சோதனையில் அகப்படும் யாவர் மேலும் அனுதாபம் கொள்ளும். இவ்விதமான அன்பு "அநீதியின் கூலியை விரும்பிய "பிலேயாமின் எதிரிடையான நடவடிக்கையை தூண்டியது. மற்ற தீர்க்கதரிசிகளை போல கர்த்தருடைய கட்டளைகளின் கடுமையான வார்த்தைகளை மீறி நடப்பதை குறித்து சிந்தியாமல் பிலேயாமும் கர்த்தருக்கு பயந்திருந்ததை நினைத்துக் கொள்ளலாம் ஆனால் அவருக்கு தேவனுடைய

ஆவி, அன்பின் ஆவி இராததினால், இஸ்ரயேலை சபிப்பதற்கு, வெகுமதி வழங்கப்படும் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டபோது (அந்த பரிசை வாங்குவதற்கு) முழு விருப்பத்துடன், சிந்தையில் உள்ள தீய நோக்கத்தை செயல்படுத்த துவங்கினார்,அதே சமயம் ஆண்டவர் சுட்டிக்காட்டும் காரியத்தை மட்டுமே செய்வதாக, வெளிப்படையாக சொல்லிக்கொண்டார். அவ்வாறு, கிறிஸ்தவர்களில் சிலர், பயத்தினால் தெய்வீக வார்த்தைக்கு மதிப்பளித்தாலும், அன்பின் பரிசுத்த ஆவி இல்லாதவர்கள், செல்வத்தின் மேலுள்ள அன்பின் காரணத்தினால், நெறி தவறி.... ஆண்டவரை வெளிப்படையாக எதிர்க்காமல், அவரை காரணம் காட்டி முடிந்தவரை தீங்கு உண்டுப்பண்ணும் பல்வேறு பழக்கங்களில் ஈடுப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சில பிலேயாமுகள், சம்பளத்திற்கும், தங்களுடைய பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்கும், ஊழியம் செய்கிறார்கள். இந்த ஐசுவரியமுள்ள பிலேயாம்களின் உறவு, அவர்கள் விசுவாசியாத உபதேசங்களை (நித்திய ஆக்கினை, போன்று...) போதிக்க மனப்பூர்வமாக சம்மதிப்பார்கள். மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு முன் பல வழிகளில், தடுக்கலின் கல்லை போடுகிறார்கள். (எண்ணாகமம் 22:7, 31:16,வெளிப்படுத்தல் 2:14) இந்த பிலேயாம்கள் விசேஷமாக பெயர் சபைகளில் உள்ள பொய் போதகர்களை அடையாளப் படுத்துகிறார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். - 2பேதுரு 2:15, யூதா 11, வெளிப்படுத்தல் 2:14 காண்க.

தன்னுடைய இருதயத்தில், பரிசுத்த ஆவியையும், பரிபூரண அன்பையும் வளர்க்க முயல்கிற யாவரும், செயல் நோக்கத்தில் உண்மையுள்ளவர்களாகவும், நடத்தையில் நேர்மையுள்ளவர்களாக இருக்கும்படி கவனம் வேண்டும். நீதி மற்றும் நன்மையை பொருத்தவரையில், யாதொருவரின் விழ்ச்சி, அல்லது நீதியின் வளர்ச்சி அல்லது சொந்த முன்னேற்றமாக இருந்தாலும் சரி, அதில் மகிழ்ச்சி அடைவதை காட்டிலும் முற்றிலுமாக வெறுத்து மேற்கொள்ளவேண்டும். பரிபூரண அன்பு எந்த சூழ்நிலையிலும், அநியாயத்தில் சந்தோஷப்படாது. மற்றவர்களின் வீழ்ச்சியில் அது என்றுமே உடன்படாமல், துக்கிக்கும். பரிபூரண அன்பு "சத்தியத்தில் சந்தோஷப்படும்."தவறு எவ்வளவு லாபகரமாக இருந்தாலும், அன்பு அதில் எந்த பங்கும் வகிக்காது. தீமையினால் வரும் எந்த வெகுமதியையும் அது விரும்பாது. ஆனால் சத்தியத்தில் சந்தோஷப்படும் - ஒவ்வொரு உண்மையான விஷயத்திலும், மற்றும் குறிப்பாக எவ்வளவு பிரபலமற்ற சத்தியமானலும் சரி, எவ்வளவு துன்பங்கள் சம்மந்தப்பட்ட வழக்குகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், எந்த அளவுக்கு இந்த உலகத்தின் சிநேகம் இழப்பதற்கு காரணமானாலும், பரிபூரண அன்பு தெய்வீக வெளிபாட்டின் சத்தியத்தில் அதிகமாக சந்தோஷப்படும். இழப்பு, துன்புறுத்தல், துயரங்கள் அல்லது சத்தியத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் எதிராக வரும் எதையும் பங்கெடுத்துக்கொள்ள அது சந்தோஷப்படும் அளவுக்கு அன்பின் ஆவிக்கு சத்தியத்தின் மேல் அத்தகைய உறவைக் கொண்டுள்ளது. நாம் அவரால் வெட்கப்பட்டாலும், அல்லது அவருடைய வார்த்தையினால் வெட்கப் பட்டாலும்,ஆண்டவரின் மதிப்பீட்டில், அனைத்தும் ஒரே மாதிரியாகவே உள்ளது. அவர் தம்முடைய பரிசுத்தவான்களிலே மகிமைப்படும் படியான வேளை வரும் போது, அவர்கள் வெட்கப்படுவார்கள் என்று இவை அனைத்தையும் குறித்து, ஆண்டவர் அறிவிக்கிறார்.

1**கொரிந்தியர்** 13:7 "சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்"

**R3151[col.2 P1]:**

தீய தாக்குதல்களுக்கு எதிராக அசைக்க முடியாத அளவுக்கு, தீமை, தூய்மையின்மை, பாவம் மற்றும் அன்புக்கு எதிரான அனைத்து காரியங்களையும் எதிர்த்து நிற்கக்கூடியதும், எல்லாவற்றையும் தாங்கக்கூடிய அன்பை நான் பெற்றுள்ளேனா ? - எல்லாவற்றையும் விசுவாசிக்கக்கூடிய அன்பு என்னிடம் உள்ளதா? மறுக்க முடியாத ஆதாரங்களை கொண்டு, கட்டாயமாக மற்றவர்கள் மேல் தீமையை சுமத்த வேண்டிய சூழ்நிலை வரும் வரையில் அவர்களுக்கு தீமைக்கு தீர்ப்பளிப்பதற்கு விரும்பாத அன்பை பெற்றுள்ளேனா ? - எல்லாருடைய தீமையை விட நன்மையை நம்பும் அன்பை பெற்றுள்ளேனா? - தீமையைக் கேட்பதில் சந்தோஷப் படாமல், அதை வெறுத்து அகற்றக்கூடிய அன்பைக் கொண்டுள்ளேனா ? - சாதகமற்ற சூழ்நிலையில் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டாலும், என்னுடைய உதவி வேண்டுபவர்களுக்கு தொடர்ந்து நம்பிக்கையோடு உழைக்கக் கூடியதும், எல்லாவற்றையும் நம்புகிற அன்பை நான் பெற்றுள்ளேனா? மற்ற அனைவரையும் பொறுத்த

வரையில் அவர்களுக்கு சிறந்தவைகளை விரும்பி, அதற்காக போராடி, விடாமுயற்சியுடன், எல்லாவற்றையும் தாங்கக்கூடிய அன்பை நான் பெற்றிருக்கிறேனா ?

**R2205[col.1 P1-3]:**

**பரிபூரண அன்பு** "சகலத்தையும் தாங்கும்." இது தேவனுக்காக எந்த விதமான நிந்தனைகள், கடிந்துகொள்ளுதல்கள், அவமானங்கள், இழப்புகள், தவறான விளக்கங்கள் மற்றும் மரணம் நேரிட்டாலும், சகித்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது "நம்முடைய விசுவசமே இந்த உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" - நமது வாழ்வின் உண்மையான மையமான விசுவாசமே கர்த்தரிடத்திலும், அவருடையவர்களுக்கும் பரிவாய் உலகத்தின் மீதான அன்பின் பரிசுத்த ஆவியாகும்.- பரிபூரண அன்பு எல்லா சூழ்நிலைகளையும் சகித்து, மேலும் அவர் வழியாக நேசித்த நம்முடைய தேவனுடைய கிருபையால் ஜெயம் கொள்கிறவர்களாகவும், முற்றிலும் ஜெயம் கொள்கிறவர்களாகவும் நிறுத்தும்.

பரிபூரண அன்பு "சகலத்தையும் விசுவாசிக்கும்.." அவநம்பிக்கை கொள்ளாது, ஆனால் அதற்கு எதிராக, நம்பிக்கையில் பிரியப்படும். ஒரு நம்பமுடியாத சந்தேகத்திற்கிடமான மனதின் மூலம் புளித்துபோன வாழ்க்கை வாழ்வதற்கு பதிலாக அல்லது எந்த ஒரு மனுஷனையாவது அநீதியாக தவறாக குற்றம்சாட்டி அல்லது சந்தேகப்படுவதை காட்டிலும், தேவைப்பட்டால், ஒரு நூறு முறை ஏமாற்றப்பட்டாலும், அது நல்லது என்ற கொள்கை மீது செயல்படுகிறது."இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என்று சொன்ன நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளின்படி, இந்த சிந்தனைகளுக்கு பொருந்தக்கூடியது ஒரு இரக்கமுள்ள மனநிலையாகும். கருணையற்ற, பொல்லாத எண்ணமானது, மற்றவர்களிடம் காட்டும் இரக்கமற்ற காரியங்களுக்கு ஊற்றாகும்.

**பரிபூரண அன்பு "சகலத்தை நம்பும்."** இது எளிதில் சோர்ந்துபோவதில்லை. இது அன்பின் விடாமுயற்சியின் இரகசியமாகும். தேவனைப் பற்றி கற்றறிந்து, மற்றும் பரிசுத்தமான அவருடைய ஆவியின் பங்குதாரர்களாக அவருக்குள் நம்பிக்கை வைத்து, உடனடியான சூழ்நிலைகள் எவ்வளவு இருளாக இருந்தாலும், அவரது கிருபையான உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் ஊக்கம் குலையாமல் இருக்கிறது. அன்பின் இந்த நம்பிக்கையுள்ள, மூலக்கூறுகளில்(element) பரிசுத்தவான்களின் விடாமுயற்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். இது கடினத் தன்மையைத் தாங்கிக்கொண்டு நல்ல வீரர்களாக செயல்பட உதவி செய்யும். அதன் நம்பகமான தரம் எளிதில் பாதிக்கப்படுவதை இது தடுக்கிறது அல்லது எளிதில் கர்த்தருடைய வேலை நிறுத்தப்படும். மற்றவர்கள் சோர்வடைந்து, விரைந்தோடிவிடுவார்கள். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியை மகிழ்விக்க, நாம் ஒரு நல்ல போராட்டத்தை போராட, அன்பின் ஆவி நமக்கு பொறுமையை கொடுக்கிறது. அன்பு திரைக்கு அப்பால் நுழைந்து உறுதிப்பட்டிருப்பதால், அதனுடைய நம்பிக்கை விரக்தி அடையாது.

1கொரி 13:8 " **அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்**"

**R3151[col.2 P3]:**

அடுத்ததாக, அன்பே மிக சிறந்தது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். ஆகவே இது நிலைத்திருக்கும். தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோகும், அந்நிய மொழிகளில் பேசுவதற்கான தேவைகளும், மதிப்புகள் ஓய்ந்துபோம், இக்காலத்து எல்லா அறிவும் ஒழிந்துபோகும். புதிய யுகத்தில் பூரணநிலைமைகள் முழுமையாக அறிமுகப்படுத்தப்படும்போது, நிச்சயமாக இப்போது இருக்கிற அபூரணங்கள் ஒழிந்துபோகும். இப்போது நாம் அறிந்த சிறப்பான தகவல் ஒரு பகுதி மட்டுமே. இராஜ்யத்தின் நிர்வாகத்தின் கீழ், பரிபூரணம் அடையும்போது, தற்போதைய காலத்தின் அனைத்து பகுதிகளிலும் மற்றும் அபூரண நிலைகள் ஒதுக்கப்பட்டுவிடும். ஒரே ஒரு விஷயம் மட்டும், நிச்சயமாக நிலைத்திருக்கும் என்று கூறப்படுகிறது - அந்த ஒரு காரியம் அன்பாகும்.

**R2205[col.1 P4]:**

எல்லாவற்றிலும், அன்பு சிறப்பானது மட்டும் அல்ல, உண்மையில் நாம் பார்த்தபடி, இவை அனைத்தின் கூட்டு மற்றும் ஒருங்கிணைப்பில் சிறப்பானது. ஆனால் இது நீடித்திருக்கும் மிக அருமையான ஒரு கிருபை. அன்பு ஒருக்காலும் ஒழியாது - அது என்றுமே முடிவுப்பெறாது. இந்த அன்பின் குணத்தை பெற்றிருக்கும் யார் ஒருவரும் தோல்வியடைய மாட்டார். இப்படிப்பட்டவருக்கே, தெய்வீக திட்டத்தில், நித்திய ஜீவன் கொடுக்கப்படுகிறது.

1கொரிந்தியர் 13:9-12 "நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ்

சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப் போலப்பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்."

## R3151[col.2 P4,5]:

வளர்ச்சிக்கு ஒரு விளக்கம் - தற்போதைய மற்றும் இனி வரக்கூடிய அறிவிற்கும் அதன் ஆற்றலுக்கும், இடையில் எதிர்பார்க்கக்கூடிய வளர்ச்சி, ஒரு குழந்தை பூரணப் புருஷராக வளரும் வளர்ச்சிக்கு ஒப்பாக உள்ளது. மற்றொரு விளக்கம் -பழங்கால கண்ணாடிகள், தெளிவற்ற உருவங்களை அதாவது அபூரணமான பிரதிபலிப்புகளை அளித்தது. புதிய நிபந்தனையின் வரையறையின்படி நாம் பரிபூரணமாகப் பார்ப்போம், பரிபூரணமாக அறிந்துக் கொள்வோம், பரிபூரணமாக புரிந்துக்கொள்வோம். ஆதி சபையில் கொடுக்கப்பட்ட வரங்கள் அந்த காலத்திற்கு ஏற்றதாக இருந்ததுப் போல, அதாவது ஒரு குழந்தை நிலைக்கு பொருந்துவதாக இருந்தது. ஆனால் அது முதிர்ச்சி அடையும் போது அந்த "வரங்களின்" மதிப்பு குறைந்தது. அவைகள் இனி இருப்பதில்லை. ஆனால் விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு போன்ற தெய்வீக ஆதரவின் உயர்ந்த வளர்ச்சிகள் எதிர்பார்க்கப் படுகிறது. தேவனுடைய சபை இந்த மூன்றையும் பேணி வளர்த்து, ஆவிக்குரிய வரங்களைக் காட்டிலும் ஆவிக்குரிய கனிகளை உயர்வாக மதிப்பிட வேண்டும். - இந்த மூன்றில் அன்பே பெரிது. அன்பு நீடித்திருக்கும். நாம் கண்டு, முற்றிலுமாக அறிந்துக்கொண்டபின், விசுவாசம் நடைமுறையில் ஒரு முடிவுக்கு வந்துவிடும் அல்லவா? மற்றும் நம்முடைய எதிர்பார்ப்புகள் மகிழ்ச்சியை எட்டும் போதும், நம்முடைய பரம தந்தையின் வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நாம் உடமையாக்கிக் கொள்ளும் போதும், நம்பிக்கையும் முடிவடையும் அல்லவா ? ஆயினும், அன்புக்கு துவக்கம் இல்லாதது போல, அதற்கு ஒருபோதும் முடிவும் இராது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அவருக்கு ஒரு துவக்கம் இல்லாததுபோல, அன்புக்கு துவக்கம் இல்லை. ஏனெனில் அது அவருடைய குணம், அவருடைய மனநிலை மற்றும் அவர் நித்தியமாக நிலைத்திருப்பதைப் போல, அன்பும் நித்தியமாக நிலைத்திருக்கும். ஆயினும், யாரேனும், இக்காலத்தில் கிறிஸ்துவின் பள்ளியில் இப்பாடங்களை முற்றிலுமாக கற்றுக் கொண்டால், இந்த அற்புதமான அன்பின் கனி ஒரு மிகுதியான கையிருப்பாகும். இது நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும் பொக்கிஷத்தை பரத்தில் சேமிக்கும் - இது அவருக்கும், இப்பொழுது அவரை சந்திப்பவர்களுக்கும் ஒரு சிறந்த ஆசீர்வாதமாகும். மேலும், ஆயிரவருட ஆட்சியில் அவர் ஆளுகைச் செய்ய அனுமதிக்கப்படுவதால், இந்த உலகம் ஆசீர்வதிக்கப்படும். அது தெய்வீக அதிகாரத்தின் முத்திரையாக இருப்பதால், இந்த ஆசீர்வாதம் நித்தியமானது.

## R2205[col.1 P6 through col.2 P1]:

அற்புதமானதும், தேவையான பண்பின் இந்த பகுதியை, அதன் பூரண நிலையில் விவரித்த அப்போஸ்தலர், மீண்டுமாக வந்து, மிக சிறந்த "வரங்களும்" அன்புக்கு கீழானவைகள் என்பதை காண்பிப்பதற்கு, அன்போடு, மற்றும் ஆவலோடு விரும்பத்தக்க வரங்களை ஒப்பிடுகிறார். தீர்க்கதரிசனத்தின் தேவை நிறுத்தப்படுவதினால், அவர் அறிவிக்கும் தீர்க்கதரிசனம் நிறுத்தப்படும். அந்நிய மொழிகளில் பேசக்கூடிய அற்புதமான வல்லமையும் இதே காரணத்தினால் நிறுத்தப்படும். பரிபூரண ஒளி அனைத்து மனுஷரிடமும் வரும் போது, முழுமையான, தெளிவான வெளிச்சம் வரும்போது எதுவும் மறைந்திருக்காது. அப்போது இரகசியங்களை அறியக்கூடிய அறிவு மற்றும் தேவனுடைய ஆழமான காரியங்களை விவரிக்கும் திறன் படிப்படியாக மறைந்துவிடும். எல்லாம் வெளியாக்கப்படும், எல்லாரும் பார்க்கமுடியும். எனவே, இரகசியங்களை புரிந்துக்கொள்ளும் திறன்களின் வல்லமை மற்றும் அதை மற்றவர்களுக்கு விளக்கம் அளிக்கூடிய ஆற்றல் ஆகிய இவ்விரண்டும் வரங்களில் சிறந்தவைகளாக இருப்பினும், பூரண வெளிச்சத்தில் இவைகள் மறைந்துபோகும். ஆனால் அன்பு ஒருகாலமும் ஒழிந்துபோகாது. உலகத்தில் இதுவே மிக பெரிது. இனி வரவிருக்கும் உலகிலும், இதுவே மிக பெரிதாக தொடரும். தேவன் அன்பாகவே இருக்கிறார். அவருடைய இரக்கத்திலும், வெகுமதிகளிலும், மகிழக்கூடிய அனைவரும், இந்த பரிசுத்தமான குணத்தை உடைமையாக்கிக்கொள்ளவேண்டும். ஒரு இடைநிறுத்தத்திற்கு பின், தற்போதைய காலத்தில் நாம் அனைவருக்கும் எவ்வளவுக்

குறைவான அறிவைப் பெற்றுள்ளோம் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். மிக பெரிய அளவில் அறிவைக் கொண்டவர்கள் கூட, தெய்வீக வார்த்தை மற்றும் மறைந்திருக்கும் மறைப் பொருளை விளக்குபவர், ஒரு பகுதியை மட்டுமே அறிந்திருக்கிறார்கள். தெளிவற்றதாக காண்கிறார்கள். நீதியின் சூரியன் உதிக்கும் போது, அதன் பரிபூரண வெளிச்சத்தில் இந்த தெளிவற்ற நிலை மறைந்துவிடும். ஆயினும், அந்நேரம் வரையிலும், ஒரு பகுதியை மட்டுமே நாம் அறிந்துகொள்ள முடியும். அப்போது, பரிபூரண நிலைக்கு இடம் கொடுக்கும்போது, நாம் மாற்றப்படுவோம். நம்முடைய குழந்தைப் பருவத்தை திரும்பிப் பார்க்கும் போது, இந்த பூமிக்குரிய விஷயங்களில், நாம் உடல் ரீதியாகவும், அறிவிலும், வளர்ச்சி அடைந்திருப்பதையும், அதற்கு ஏற்றபடி, நம்முடைய சிந்தனை, நடத்தை மற்றும் மொழி ஆகியவற்றை நமது செயல் முறைகளை மாற்றி விட்டதை காணலாம். அதேபோல, ஆவிக்குரிய விஷயங்களிலும், நம்முடைய ஆதிகால கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு "குழந்தையைப்" போலிருந்ததை நாம் உணர வேண்டும். மற்றும் நாம் அவ்வாறே இருந்து விடுவதில் திருப்தி அடைந்துவிடக்கூடாது. ஆனால் எல்லா காரியங்களிலும், கிறிஸ்துவாக வளர்ச்சி அடைவதற்கு ஒரு தனி நபராக விரும்பவேண்டும். உண்மையான ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், கூட்டமைப்பில் உண்மை சபையாவார். அந்நிய பாஷையின் வரங்களும், அற்புதங்களும் குழந்தை பருவமாக இருந்தது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ், முன்னேற்றம் ஏற்பட்டபோது, குழந்தைப் பருவத்திற்கு பொருத்தமாகவும், மிக தேவையான சில சிறப்பம்சங்களும் மறைந்து போனது. அதற்கு பதிலாக, சத்தியத்திற்குள் வழிநடத்தும் மற்ற அனுபவங்கள், நெறிமுறைகள் வந்தது. எனவே இன்று "அந்நிய பாஷைகள்" மறைந்து விட்டது. வருங்காலத்து நிகழ்வுகளை அறிவிக்கும் "தீர்க்க தரிசனங்கள்" தங்களுடைய நோக்கங்களை சிறப்பாக பணியாற்றிய பின் சென்று விட்டது.... ஆனால், சபை இன்னும் அபூரண அறிவில் இருந்தாலும், கர்த்தர் தொடர்ந்து "அறிவை" அளிக்கிறார். அவிசுவாசிகளுக்கு நற்செய்தியை அல்லது சத்தியத்தைப் பிரசங்கிக்கக்கூடிய முறைகளையும் தொடர்ந்து தருகிறார். அவர் சபைக்கு உதவியாக இன்னும் போதகர்களை தந்து கொண்டிருக்கிறார். ஆனால் ஆதியில் கொடுத்தது போல, இவைகள் அற்புதவிதமாக கொடுக்கப்படுவதில்லை. ஆனால் இயல்பாகவும், இயற்கையான தகுதிகளோடும்கூட ஆண்டவரின் ஆசீர்வாதங்கள் இவைகளைத் தருகிறது. ஆனால், சபையை பொருத்த வரையில், அவளுடைய ஓட்டம் முடிவுப்பெறும் போது, இவைகள் அனைத்தும் நிறுத்தப்படும் - "பூரண நிலை வரும்போது", அபூரணமான எந்த உதவிகளும் அவருக்கு தேவைப்படாது.

1கொரி 13:13 "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது"

**R2205[col.2 P2]:**

ஆவியின் மூன்று வரங்கள், கனிகளாக வளர்ச்சி அடையும்போது, அது நீடித்து வாழும், இம்மூன்றையும் ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் பேணி வளர்க்கவேண்டும். அவையாவன - விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு , ஆனால் இதில் மேலானதும், சிறந்ததும் அன்பே. தற்போதைய காலத்திற்கு நம்முடைய அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படிக்கு நம்மை வழிநடத்தக் கூடிய நம்பிக்கையும், விசுவாசமும் மிக முக்கியமாக பண்புகளாக இருப்பினும், அவைகள் நித்தியத்திற்கும் இருப்பதில்லை. "பரிபூரணமானவைகள் வரும் போது "சுறுசுறுப்பாக செயலாற்றும் இவைகளின் நடவடிக்கைகள் கனிசமான அளவுக்கு குறைந்து விடும். ஏனெனில், பெரிய அளவில், பல பாடங்களின் குறிப்புகள், பார்வை மற்றும் அறிவு, விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் இடத்தை எடுத்துக்கொள்ளும். ஆனால் அன்பு ஒழியாது. மங்காது, ஒளி குறையாது. அது சுறுசுறுப்பாகவும், மகிமையாகவும், இப்போதைய வாழ்க்கையில், பயனுள்ளதாக இருப்பது போல வருங்காலத்திலும் பயனுள்ளதாக இருக்கும். உண்மையில், வருங்காலத்து வாழ்க்கையின் மொத்தத்தொகை அன்பாகும்.

**3.பின்காட்சித் தோற்றம் (spectrum) பற்றிய விளக்கம், அன்பை புரிந்துக்கொள்ள நமக்கு எவ்வாறு உதவுகிறது?**

**R2203[col.1 P3 through col.2 P2]:**

அப்படியானால், அன்பு என்றால் என்ன ? இந்த அற்புதமான குணமில்லாமல், எதுவும் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படாது. அன்பை வரையறுக்க அப்போஸ்தலர் இங்கு முயலவில்லை. ஆனால் அதனுடைய சில வெளிப்பாடுகளை விவரித்து மனநிறைவடைகிறார். உண்மையில், ஒளி

மற்றும் ஜீவனை போல அன்பை வரையறுப்பதும் மிக கடினம். அதைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த முயற்சிகள், அதன் விளைவுகளின் வரிசையில் உள்ளன. அன்பு குறைவதற்கான விளைவு- தீமையாகும். அன்பு இருக்கும் இடங்களில், அதன் அளவைப் பொறுத்தே விளைவுகள் காணப்படுகிறது.

ஒரு கல்லூரி பேராசிரியர், அன்பைக் குறித்து விவரிக்கையில் - " விஞ்ஞான அறிஞர் ஒருவர், ஒளி கதிரை ஒரு கண்ணாடி முப்பட்டகத்தில் (prism) பாய்ச்சும்போது, நீங்கள், முக்கோணத்தின் மறுபுறம் அதன் கூறு வண்ணங்களில் பிரிந்து வருவதை காணலாம் - சிவப்பு, நீளம், மஞ்சள், வைலட்டு, ஆரஞ்சு மற்றும் வானவில்லின் நிறங்களை காணலாம். எனவே பவுல் இந்த அன்பை அவரது ஊக்கமான அறிவாகிய அற்புதமான முப்பட்டை வழியாக, பாய்ச்சும்போது, அதன் கூறுகள் பிரிந்து மறுபக்கத்தில் வெளியே வரும். இதை அன்பின் நிறமாலை, அன்பின் பகுப்பாய்வு என்று ஒருவர் இதை அழைக்கலாம். இதன் கூறுகள் என்ன என்பதை நீங்கள் கவனித்தீர்களா ? இவைகளுக்கு பொதுவான பெயர்கள் உள்ளதை கவனித்தீர்களா ? ஒவ்வொரு நாளும், கேள்விப்படக்கூடிய அம்சங்கள் இவைகளே, வாழ்க்கையில் எல்லா இடங்களிலும், எல்லா மனுஷராலும் கடைபிடிக்க முடிந்த காரியங்கள் இவைகளே. மேலும் சிறிய விஷயங்கள் மற்றும் சாதாரண நல்லொழுக்கங்களின் தொகுப்பு எவ்வாறு ஒரு சிறந்த பண்பாக உருவாகிறது ?

"அன்பின் வண்ணப் பட்டியிலில் (prism)ஒன்பது பொருட்கள் உள்ளது -

பொறுமை - அன்பு நீடிய சாந்தமுள்ளது

தயவு - அன்பு தயவுள்ளது

பெருந்தன்மை - அன்புக்கு பொறாமை இல்லை

மனத்தாழ்மை - அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாய் இராது

நற்பண்புடையது - அயோக்கிமானதைச் செய்யாது

தன்னலமற்றது - தற்பொழிவை நாடாது

நல்ல குணமுடையது - எளிதில் சினமடையாது

கபடற்றது - தீங்கு நினையாது

நேர்மையானது - அநியாத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.

### 4.இயல்பான அல்லது மனித அன்புக்கும், ஆவிக்குரிய அல்லது தெய்வீக அன்பிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**R2648[col.1 P4]:**

இயற்கை அன்புக்கும், கடவுளுடைய அன்பிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நாம் காணலாம். எல்லா மனிதரிடமும் குறைந்தபட்சம் இயற்கையான அன்பு காணப்படுகிறது - சுய அன்பு, குடும்பம் மற்றும் நண்பர்களிடம் கொண்டுள்ள அன்பு. நம்முடைய ஆண்டவர் இந்த அன்பைப் பற்றி பேசுகிறாரா ? இது தேவனுடைய அன்பு இல்லை என்று குறிப்பிடுகிறது. "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" (லூக்கா 6 : 32) எனவே கடவுளின் அன்பு, இயல்பான மனுஷனிடம் காணப்படும் பொதுவான அன்பை விட வித்தியாசமானது மற்றும் "கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக"(2தெசலோனிக்கேயர் 3 : 5) என்று பவுல் கூறுகிறது போல, நாம் அதை இயக்க வேண்டும், அதை வளர்க்க அல்லது உருவாக்க வேண்டும். தெய்வீக வார்த்தையின் வழியாக, இந்த அன்பில் நாம் நடத்தப் படவேண்டும். இது வீழ்ச்சியுற்ற மனிதனுடைய இயல்பான அன்பிலிருந்து வேறுப்பட்ட தேவனுடைய அன்பின் தன்மைக்கு நம் கவனத்தைக் கொண்டு வருகிறது. அதே வேளையில், இயல்பான மனுஷனின் அன்பைச், சிறப்பாக பயிற்றுவித்தாலும், சுய நலமானதாகவே காணப்படுகிறது. நண்பர்களின் சார்பாக தேவன் நம்மீது உயர்ந்தவகையான அன்பை காட்டினார். நாம் பாவிகளும், அந்நியர்களும், துன்மார்க்க செயல்களால் எதிரிகளாக, இருக்கையில், தேவனுடைய அன்பான திட்டத்தின் கீழ் கிறிஸ்து நமக்காக மரித்தார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை"என்று இயேசு கூறினார். ஆனால் அவருடைய எதிரிகளுக்காகத் தம் ஜீவனைக் கொடுப்பது, நிச்சயமாக அன்பின் மிக உயர்ந்த வகையாகும் - சுயநலமற்ற, பரத்திற்குரிய அன்பு - (யோவான் 15 : 13, ரோமர் 5 : 7) இத்தகையான தகுதி மிஞ்சிய, தியாகமான அன்பு, விழுந்துபோன மனுக்குலத்திற்கு எந்தவிதத்திலும், அறிந்திராத முற்றிலும் வேறுப்பட்டதாகும்.

**R3233[col.2 P1-3]:**

ஒரு வார்த்தையில், நட்பின் இரண்டு நிலை உள்ளன - இயல்பான நட்பு, இதில் இயற்கையான குணங்களைப் போன்ற மனிதர்கள் ஒன்றுசேர்க்கப் படுவார்கள். மற்றொன்று ஆவிக்குரிய நிலை - இதில்

நாகரீக பண்புகளைப் போலல்லாமல், ஆவிக்குரிய நம்பிக்கை, நோக்கங்கள் மற்றும் குறிக்கோளில் ஒத்திருப்பார்கள். இவர்கள் மாம்சத்தை அல்ல, புதிய கட்டாகிய, புதிய அன்பு, இவர்களின் இருதயத்தை, கிறிஸ்துவின் அன்பிலும், ஐக்கியத்திலும் இன்னும் நெருக்கமாய்ப் பிணைக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இந்த புதிய சிருஷ்டிகள், மாம்சத்தின்படி அல்ல, ஆவியின்படி ஒருவரை ஒருவர் அறிந்துக் கொள்கிறார்கள். மாம்சத்தின் பலவீனம் என்னவாக இருந்தாலும் சரி, ஒவ்வொருவருடைய ஆவியிலும் அல்லது புதிய சிந்தையிலும், நன்மையான, உண்மையான, உன்னதமான, தூய்மையான - மிக உயர்ந்த உணர்வுகளும், உயர்ந்த அபிலாஷைகளும் உள்ளது. இவர்கள் புதிய நிலைப்பாட்டின் நோக்கத்தில் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள். இது தேவனோடும், அவர்களின் நட்போடும் இசைந்து, உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் தாக்குதல்களோடு விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுவதில், ஒருவருக்கொருவர் மற்றவர்களின் பலத்தை உணர்ந்துக் கொள்ளும் போது, அவர்களின் வல்லமை அதிகரிக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இந்த புது சிருஷ்டிகளுக்கும், பழையவைகள் கடந்து, எல்லாம் புதிதாக மாறினவைகளுக்கும், இடையில் உள்ள அன்பையோ, நட்பையோ, மொழி அல்லது பேனாவினால் சரியாக வெளிப்படுத்த முடியாது. எனினும், ஒரு பெற்றோர் தம்முடைய குழந்தைகள் மேல் வைத்திருக்கும் அதே அன்பை மற்றவரின் குழ்ந்தைகளிடமும் கொண்டிருக்கவேண்டும் என்று பொருள் அல்ல. ஒருவர் தனக்கே உரிய பெரிய பொறுப்புகள் இருப்பதை உணரவேண்டும். பரிசுத்தவான்களும் கூட அதே அளவில் நேசிக்கப்படுவார்கள் என்று இது குறிப்பிடவில்லை. நம்முடைய ஆண்டவர், அவருடைய சில சீஷர்களை விசேஷமாக நேசித்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. காலப்போக்கில் பூரணமானது அபூரணத்தை மாற்றும்போது, எல்லா "சகோதரர்களும் "பரிபூரணமாக இருப்பார்கள். அனைத்து அண்டை சகோதரர்களும் பிரியமான வர்களாக இருப்பார்கள். அதுவரையில், எவ்வாறாயினும், நாம் அனைவரையும் நேசிக்க வேண்டும். ஆனால், இயல்பான கடமைகள் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும், "ஒரு வித்தியாசத்தை காண்பிக்கவேண்டும்" - யுதா 22

**5.கடமை அன்புக்கும் (பிலியோ - phileo) மற்றும் தன்னலமற்ற அல்லது தெய்வீக அன்புக்கும் (அகாபே - agape) இடையில் உள்ள வித்தியாசம் என்ன?**

**R2807-கடமை அன்பு எடுத்துக்காட்டின் வழியாக விளக்கம்.**

"தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத்தேயு 10:37) நம்முடைய குடும்ப நண்பர்களிடம் கடமை அன்பு நியாயமானது. ஆனால், இந்த கடமை அன்பை நம்முடைய ஆண்டவருக்கு ஈடாகாது. இல்லாவிட்டால் நாம் "ஜெயம் பெற்றவர்களாக" அவரைப் பின்பற்ற முடியாது."தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்;" (யோவான் 12:25) வாழ்க்கையை நேசிப்பது நமது கடமை, அதாவது அதை மதிக்க வேண்டும், அதை அழித்துவிட விரும்பாமல், முட்டாள்தனமாக வீணடிக்கக்கூடாது. ஆனால் கிறிஸ்துவின் சீஷரானவர்கள், மரணபரியந்தம் அவருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கு உறுதியளித்தவர்கள், ஒரு ஆவிக்குரிய ஜீவி, "புது சிருஷ்டியாக" வாழக்கூடிய வாழ்க்கையின் நம்பிக்கைக்காக, ஏற்கனவே ஒரு மனிதனாக தனது வாழ்க்கையை சரணடைந்திருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவர் இனி பூமிக்குரிய வாழ்க்கையோடும், கடமைகளோடும் கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஆனால் அகாபே அன்பினால் தூண்டப்பட்டு, தன்னுடைய இயல்பான வாழ்க்கையை மனப்பூரவமாக தேவனுடைய பணிக்கு - "சகோதரர்களுக்காக" - அற்பணித்தவர். "நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவான் 16:27) இந்த இரண்டு காரியங்களிலும் (பிலியோ) கடமை அன்பை குறிக்கிறது. பேதுரு சாட்சிக்கொடுத்தபடி, மொத்தமாக சீஷர்கள் பாராட்டத்தக்கதாக, இதுவே அன்பின் உயர்ந்த வடிவமாகும். மற்றும் அவர்களுக்கான பிதாவின் அன்பும் அதே கடமை அன்பாக இருந்தது. சீஷர்கள் இன்னும் பரிசுத்த ஆவியையும், மற்றும் அதன் அகாபே அல்லது தன்னலமற்ற அன்பு மற்றும் அதன் தன்மைகளைப் பெறாதிருந்தார்கள். இவர்கள் கிறிஸ்துவினிடம் கடமை அன்பை செலுத்தி, அவருடைய நண்பர்களாகவும், சீஷர்களாகவுமானார்கள். எனவே தந்தை அவர்களை நேசிக்க முடியாமல், அவர்களிடம் ஒரு கடமை அன்பையே செலுத்தினார்.

"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்;" (யோவான் 15:19) உலகின் பெற்றோர், குழந்தை மற்றும் அண்டை வீட்டார் அனைவரும் -"தனது சொந்தம்" - என்ற சுயநலத்தின் அடிப்படையில், இந்த பிலியோ அல்லது கடமை அன்பினால் நடத்தப்படுகிறது. "ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் (Anath ema Maranatha) அனாத்யிமா மாராநாதா சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்," (ஆண்டவரின் இரண்டாம் வருகையில், சபிக்கப்பட்டவராக அல்லது இரண்டாம் மரணத்திற்கு தீர்ப்பளிக்கப்பட்டவராக இருப்பார்) 1கொரிந்தியர் 16:22. தேவன் அவருக்குள் அளித்த இரட்சிப்பின் அறிவை பெற்றுக் கொண்ட அனைவரிடமும், கிறிஸ்துவின் வேலைக்கான மதிப்பு எதிர்ப்பார்க்கப்படுகிறது. மற்றும் யாராவது இந்த பிலியோ அல்லது கடமை அன்புக்கு பதிலளிக்க மறுத்தால், ஆயிர வருட ஆட்சியில் பூமிக்குரிய வாழ்க்கையிலிருந்து அறுப்புண்டு போவார். அவர்கள் நித்தியமாக ஜீவனை அடையக்கூடிய யார் ஒருவரும், பிலியோ அல்லது கடமை அன்பை நடைமுறைப்படுத்தி. அவர்கள் முன்னோக்கிச் சென்று, அகாபே அன்பு, உண்மை, தன்னலமற்ற அன்பின் அடையாளத்தை பெறுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. பிலியோ அல்லது கடமை அன்பை இதுவரையில் அறிந்திராதவர்களுக்கு தற்போதய வாழ்க்கை, வாய்ப்பின் வாசலை மூடுவதில்லை. அதற்காக தேவனுக்கு நன்றி. ஆயினும், இன்னும் அகாபே அன்பை பெறவில்லை. "பண ஆசை", "தங்களையே நேசிப்பவர்கள்", "முன்னுரிமை பெற வேண்டும் என்ற ஆசை", "மகிழ்ச்சியை நேசிப்பவர்கள்", "விருந்தோம்பலை நேசிப்பவர்கள்" மற்றும் நண்பர்களிடம் பிலியோ அல்லது கடமை அன்பு அல்லது ஒரு காரணத்திற்காக அல்லது ஒரு கோரிக்கைக்கான அன்பு."தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும் (பிலியோ), சகோதர சிநேகத்தோடே அன்பையும் (தன்னலமற்ற அன்பு -அகாபே) கூட்டி வழங்குங்கள்." என்று பேதுரு அறிவுரைக் கூறுகிறார். (11பேதுரு 1:7)

## தன்னலமற்ற அன்பு (அகாபே) எடுத்துக்காட்டு வாயிலாக விளக்கம்

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) மனிதனின் மீட்பைத் தூண்டிய அன்பு, பிலியோ அல்லது கடமை அன்பு அல்ல. அல்லது கடனாக பதில் செய்வதற்கு மனுஷன் தன்னுடைய சிருஷ்டி கருக்காக எதையும் செய்ததுமில்லை.நம்முடைய மீட்புக்குத் தூண்டப்பட்ட தேவனுடைய அன்பு அகாபே அல்லது தன்னலமற்ற அன்பு, மற்றும் இரக்கமே. தேவனுக்கு மனிதன் எதையும் செய்யாததினால், அவர் அவனுக்கு கடமைப்பட்டவரும் அல்ல. ஆகவே, தேவன் தமது சிருஷ்டிக்கு, மரணத்தீர்ப்பை கொடுத்ததில் எந்த அநியாயமும் செய்யவில்லை. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8) தேவன் நிரூபித்திட்ட இந்த அன்பை (அகாபே), பரிசைப் பெற்றுகொள்வதற்கு நாம் எட்டிப்பிடிக்க வேண்டிய ஒரு உயர்வான நிலை அல்லது அடையாளமாக நமக்கு முன் வைத்திருக்கிறார். விழுந்து போன நம்முடைய மாம்சத்தில் இது சாத்தியமற்றது. ஆனால் புதுப்பிக்கப்பட்ட மனதுகள், சித்தங்கள், இருதயங்கள் இதை அடையலாம். இந்த நிலை வார்த்தைகளில் வெளிப்படுத்தப் படுகிறது - "அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்" (லுக்கா 10:27, ரோமர் 3:9) "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" (1தீமோத்தேயு 1:5) அதாவது, தேவனுடைய பங்கீட்டில், அனைத்து அறிவுறுத்தல்கள் மற்றும் ஒழுக்கத்தின் பொருள் என்னவெனில்,அகாபே அன்பு - என்ற இந்த வார்த்தையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த சாயலில் நம்மை கொண்டு வர வேண்டும் என்பதே. "தேவன் அன்பாகவே இருக்கிறார், அந்த அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனிலும், தேவன் அவனிலும் நிலைத்திருக்கிறார். (1யோவான் 4:16) பவுலை போல, கடமை அன்பை மட்டும் பெற்றிருப்போரை நாம் "சகோதரர்களாக" கண்டுணர வேண்டும். "என்னோடிருக்கிற யாவரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லு." (தீத்து 3:15) ஆனால் நம்மிடம் "சகோதர அன்போடு" (1பேதுரு 2:17) அகாபே அல்லது

உயர்ந்த அன்பு உள்ளதா என்று நாம் பார்க்க வேண்டும். இது இன்றைய வாழ்க்கையின் மதிப்பையும், இரட்சிப்பையும் எண்ணாமல், மகிழ்ச்சியோடே சகோதரர்களுக்காக ஜீவனையே கொடுக்கும் - தங்கள் சார்பாக, அநுதினமும், மணிநேரங்கள், பணம், மற்றும் பூமிக்குரிய சகல காரியங்களையும் பலி செலுத்தும். -1யோவான் 3 : 16) அப்போஸ்தலனாகிய பேதுரு, இந்த இரண்டு விதமான அன்பையும் ஒரே வசனத்தில் வேறுப்படுத்தி காண்பிக்கிறார். "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, (பிலியோ)ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; (அகாபே)" (1பேதுரு 1 : 22) "அன்பானது(அகாபே) பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு(அகாபே) நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." (ரோமர் 13 : 10)"அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" (1கொரிந்தியர் 8 : 1) அன்பைப் பற்றி அப்போஸ்தலருடைய சொற்பொழிவில், 1கொரிந்தியர் 13:1,2,3,4,8,14:1வசனங்களில், அகாபே என்பதற்கு பதிலாக அன்பு என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. இங்கு அவர் பாணியில், அகாபே அன்பு கிறிஸ்தவ குணலட்சணங்களில் மேலோங்கியதும், மிக முக்கியமானதும், என்றும் மற்ற எந்த கிறிஸ்தவ கனிகளிலும் தலைமையானது என்றும், இந்த அன்பின்றி எந்தவிதமான பலிகளும், சுயத்தை வெறுத்தலும், தேவனுடைய மதிப்பில் பயனற்றது என்றும் அவர் குறிப்பிடுகிறார். அதேவேளையில், இந்த அகாபே அன்போடு, நம்முடைய தளர்ந்த முயற்சிகளின் உற்சாகமூட்டும் நோக்கங்கள் கிறிஸ்துவின் வழியாக அங்கீகரிக்கப்படும்.

### 6.அன்பின் ஆவியின் மூன்று விதமான (three-fold) வெளிப்பாடு என்ன?

**R2032[col.1 P7]:**

பரிசுத்த ஆவியின் வெளிப்பாடு மூன்று விதமாக உள்ளது. (1)தேவன் மீது உச்சநிலையான அன்பு செலுத்தவேண்டும் மற்றும் துன்பப்படுவதற்கு ஏதுவானாலும், அவருக்காக மகிழ்ச்சியூட்டும் பற்றுறுதிக் கொண்டிருக்க வேண்டும். (2)சகோதர அன்பு - சுயநலமற்ற, மேன்மையான, சுத்தமான - அவர்களின் நலனை விரும்பி, எப்போதும் நன்மைச் செய்ய விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். (3) இந்த உலகத்தின் மேல் அன்பு, அனுதாபத்தை பாராட்டுவதற்கு,வாய்ப்புகள் கிடைக்கும்போது நல்ல கிரியைகளுக்கு தூண்டப்படவேண்டும் மற்றும் எல்லா மனுஷரோடும் எப்போதும் சமாதானமாக வாழ முயற்சிக்க வேண்டும். அதினாலேயே, பொறுமை, சாந்தம் ஆகியவற்றில் வளர்ச்சி சுட்டிக்காட்டப்படும்.

மன்னா, ஜூன் 27 "உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" (11கொரிந்தியர் 1: 21,22) கிறிஸ்துவின் ஆவியே, புதிய சிருஷ்டியின் அடையாளம் அல்லது முத்திரையாகும்.

### 7.உண்மையான மற்றும் பொய்யான அன்பை நாம் எவ்வாறு வேறுபடுத்தலாம்?

**R1864-"உண்மையான அன்புக்கு எதிராக தவறான அன்பு"**

தேவன் அன்பாகவே இருக்கிறார் ! அன்பைப் பற்றி விரிவாக விளக்கம் அளிக்கும் நபர்கள் தேவனுடைய தன்மையை அழித்து, தங்களை பிரகாசிக்க முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிப்பாக இருக்க வேண்டும். தேவன் அறிவித்தபடி, சாத்தானையும், துன்மார்க்கரையும் அழிப்பார் என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத, அளவுக்கு அவர்களில் சிலர் மிகவும் அன்பானவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் வாதம் தங்களுக்குரிய ஒரு நிலையை அமைத்துகொண்டு, "நிச்சயமாக, தேவன் என்னை விட குறைவான அன்புள்ளவராக இருக்கமுடியாது" என்றும் "நான் சாத்தானையும் மற்ற அனைவரையும் காப்பாற்றுவேன்" என்றும் கூறுகிறார்கள். மோசமான முட்டாள் இருதயங்கள், தங்களுடைய சொந்த நீதியை நிலைநாட்ட போகிறார்கள், இவர்கள் தங்களை தேவனுடைய நீதிக்கு சமர்ப்பிக்கவில்லை. மேலும் இதில் தேவனுடைய வார்த்தை மற்றும் நடத்தை மிக உயர்ந்தவைகளாக இருக்கின்றன.

இவ்வாறாக இவர்களின் முட்டாள் தனமான இருதயம் இருளடைகிறது. பயபக்தியோடு அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து, அவர்களின் தீர்ப்பின் நிலையை அமைத்துக் கொள்கிறவர்கள், மற்றும் அதிலிருந்து தங்களுடைய சொந்த கருத்துக்களுக்கு திசைத்திருப்ப முயற்சிக்காதவர்கள் மட்டுமே தேவனால் நேசிக்கப்பட்டு, விழுகையிலிருந்து

தப்புவார்கள். இவர்கள் மட்டுமே அவருடைய "பொக்கிஷமாக" உருவாக்கப்படுவார்கள். அன்பைப் பற்றி மட்டும் மீறியப் பேச்சுக்களைப் பேசுபவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், மோசமாக உபதேசம், கெட்ட நடத்தையை மூடுவதற்கு ஒளியின் வஸ்திரத்தைச் சாத்தான் அடிக்கடி பயன்படுத்துவான் - அதன் உண்மையான அன்பற்ற தன்மையை, விமர்சிக்காதபடிக்கு மறைத்து விடுவார். உதாரணமாக, உண்மையான அன்பு தேவனிடம் தொடங்குகிறது."ஒவ்வொரு மனிதனும் பொய்யர் என்பதை அவை ஊர்ஜிதப்படுத்துமாயின், தேவன் உண்மையானவர் ஆவார்." என்று கூறப்படுகிறது. தவறான அன்பு பெரும்பாலும் சுயநலமானது. ஒரு கோட்பாட்டின் நிறுவனராக, தன்னையே மகிமைப்படுத்துவதற்காக, தெய்வீக மரியாதையையும், அன்பையும், நீதியையும் மண்ணில் தள்ளுவதற்கு தயங்காது. உதாரணமாக, குற்றச்சாட்டான ஒரு கோட்பாடு - இக்காலத்திலும், கடந்த காலத்திலும் "சகல பாவம் மற்றும் துன்மார்க்கம் மற்றும் குற்றம்"தேவன் மேல் சுமரும். தேவனுடைய பரிசுத்த நாமத்தை தூஷிப்பவர்கள், கடந்த ஆறாயிர வருடங்களின் கொடூரமான மூர்க்கதனத்தையும், அனைத்து குற்றங்களையும் அவர் மேல் சுமத்துபவர்கள், தங்களுடைய முழு இருதயத்தோடும், சிந்தையோடும், ஆத்துமா வோடும், பலத்தோடும் தேவனிடம் உண்மையில் அன்பு கூறுவார்களா ? நிச்சயமாக இல்லை ! அன்பான, நன்றியுணர்வுள்ள இருதயம், தேவனை மிக உயர்த்தரமான அன்பு, நீதி, சத்தியம் மற்றும் நியாயத்தின் உருவமாக கண்டுணரும். தேவன் மேல் உண்மையான அன்பை, ஒரு குறிப்பட்ட அளவைக் கொண்டிருக்கும் எவருக்கும், இத்தகைய கோட்பாட்டை உணரமாட்டார்கள். "எந்த நன்மையும் பூரணமான ஜோதியின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது", "அவருடைய கிரியைகள் பூரணமானது", அவரிடத்தில் இருளில்லை", "அவர் ஒருவரையும் தீமையினால் சோதிப்பதும் இல்லை." என்ற வாக்குறுதிகளும் கூட அவர்களுக்கு அவசியப்படுவதில்லை. எந்த மனுஷன் இப்படிப்பட்ட கோட்பாடுகளை நம்பி, பேசிகிறாரோ, அவருக்குள் ஒளி இல்லை, அவர் இருள் நிறைந்தவராக இருக்கிறார்.

**8.இந்த கிருபையின் (அன்பின்) முக்கியத்துவம் என்ன?**

**R2202[col.1 P3 through col. 2 P3]:**

மகா பெரிய போதகரின் மலைப் பிரசங்கத்திற்கு அடுத்து, மிகப் பெரிய அப்போஸ்தலனாகிய பவுலின் அன்பைப் பற்றிய இந்த சொற்பொழிவு உள்ளது. இந்த இரண்டு சொற்பொழிவுகளும், ஒரே பாடத்தைக் கற்பிக்கிறது, ஆனால் அவை வெவ்வேறு நிலைப்பாடுகளிலிருந்து அணுகப்படு கின்றன. கிறிஸ்துவின் பள்ளியில் மாணவர்களுக்கு, அன்பின் வழிகளோடு இணக்கமாக நடக்கும் படிக்கு, இருதயங்களை வளர்ச்சி அடையும் நோக்கத்துடன், தெய்வீக வார்த்தையின் அனைத்து அறிவுரைகள் மற்றும் வழிமுறைகளும் கொடுக்கப்படுகிறது. "ஒருவரிலொருவர் அன்பு கூறுங்கள் என்று நான் உங்களுக்கு புதிய கட்டளையை கொடுக்கிறேன். " என்பதே ஆண்டவரின் சாட்சியாக இருந்தது. அதேபோல, தேவன் மனுஷனுக்கு கொடுத்த முழு நியாயப்பிரமாணமும் அன்பில் - தேவனிடத்திலும், மனுஷனிடத்திலும் காட்டப்படும் அன்பில் நிறைவேற்றப்படுகிறது என்றும் அவர் அறிவித்தார். "உங்கள் முழு இருதயத்தோடும், பலத்தோடும், ஆத்துமாவோடும் தேவனிடத்தில் அன்பு கூறுங்கள். உங்களை நேசிப்பது போல பிறனை நேசியுங்கள்" அப்படியானால், "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாக இருக்கிறது. மற்றும் "பரி பூரணத்தின் கட்டாக" இருக்கிறது. இது இல்லாமல், மற்ற எந்த குணங்களும் உண்மையில் அழகுப் பெறாது. "தேவன் அன்பாகவே இருக்கிறார். "மீண்டுமாக, "அன்பில்லாதோர் தேவனை அறியான்" என்ற வாக்கியங்களை நாம் வேத நூலில் காண்பது ஆச்சரியமல்ல."ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் (அன்பாக இருக்கும் தேவன்) நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார். தேவனை அறிந்து கொள்வது, என்பதற்கு தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை வெறுமனே அறிந்துக் கொள்வதை விடஅதிகமாக அர்த்தப்படுத்துகிறது.

இது தேவனுடைய அன்பான திட்டம் மற்றும் அவருடைய குணங்களை அறிந்துக்கொள்வதை விட அதிகமாக அர்த்தப்படுத்துகிறது. இது தேவனோடு நன்கு பரிட்சையமானதால் அடையும் அறிவு மற்றும் அவரது குணங்களை கிரகிப்பதாகும். ஒருவர் தேவனுடைய ஆவியை, பரிசுத்த ஆவியை, அன்பின் ஆவியை பெற்று, அதில் பங்கெடுத்தால் மட்டுமே இந்த அறிவைப் பெறமுடியும். மேலும், இந்தப் பரிசுத்த ஆவியை மற்றும் அன்பை ஒருவர் உடனடியாகப் பெறமுடியாது. இது ஒரு வளர்ச்சி,

மற்றும் அதன் முன்னேற்றம் ஒரு முக்கிய கடமையாகவும், தேவனை முழுமையாக அறிந்துக்கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு இது முக்கிய கவலையாக இருக்கும் பட்சத்தில், நித்திய ஜீவனைப் பலனாக அளிப்பார். எனவே, தேவனுடைய ஆட்டுக்குட்டிக்கு அன்பின் மகத்தான ஏற்பாட்டிற்குப்பின், முழு மனுக்குலத்தின் மீட்பும் அவரால் நிறைவேற்றப்பட்டது, பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து விடுவிப்பதற்கான, அதன் பல்வேறுபடிகள் அனைத்தும் அன்பு என்ற இந்த குணாதிசயத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது. இதன் வழியில் நமக்குள் தெய்வீக தராதரத்தின்படி, அன்பின் குணம், தேவனுடைய தன்மையில் வளர்ச்சியடைந்தால் மட்டுமே பிதாவுக்கு முன் நாம் அங்கீகரிக்கப்பட்டு, நம்மிடம் அவருடைய நித்திய ஜீவனைக் கொண்டு வரும். ஓ, அப்படியானால், "தேவனைப் பற்றி போதிக்கப்படுவது" மற்றும் அவருடைய குணத்தில் வளர்ச்சி அடைவதும் எவ்வளவு முக்கியமானது. "என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" என்று நம்முடைய இரட்சகர் கூறினார். மற்றும் அவர் தந்தையில் மகிமையான அன்பின் குணத்தின் சாயலை தெரிவிக்கும் குறியீடு. "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன், (பிதாவின் பரிசுத்த ஆவி, அன்பின் ஆவி) அவருடையவன் அல்ல." தேவனுடைய அன்பான குமாரனுடைய சாயலை பெறுவதற்கு, ஆரம்பத்தில் நாம் மிகவும் இழிவான மூலப்பொருளாக இருந்தோம். (ரோமர் 8:29)நாம் "மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாக" இருந்தோம். பிதாவாகிய ஆதாம் பாவம் செய்வதற்குமுன் முன் பெற்றிருந்த தேவனுடைய அசல் சாயலை, துரதிருஷ்டவசமாக ஆறாயிரம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இழந்தார். எனவே, அன்பின் தெய்வீக சாயலில் நம்மைக் காண்பதற்கு பதிலாக, நாம் "பாவத்தில் பிறந்து, துர்குணத்தில் உருவானோம்." நம்முடைய குணங்களை அன்பு இயற்கையாக மேலோங்கிய கோட்பாட்டிற்கு பதிலாக பல சந்தர்ப்பங்களில் அது அழிக்கப்பட்ட நிலைக்கு சென்றுவிட்டது. மற்றும் தீமையினால் அசுத்தமும், சுயநலமான அன்பு, பாவமான அன்பு, மற்றும் அசுத்தமான உடலின்பத்திற்குரிய அன்பே, பெரும்பாலும் எஞ்சியுள்ளவைகள்.தெய்வீக குணலட்சணத்தின் சாராம்சமான தன்னலமற்ற அன்பிற்கு எதிராக தவறி நடப்பது உள்ளது. ஆயிர வருட காலப்பகுதியில், இந்த உலகிற்கான அன்பின் வேலைகளில், தேவனுடைய இரக்க குணம் மற்றும் அனைவரின் இரட்சிப்புக்காக அவருடைய முன்னேற்பாடும், பாவத்தின் சிதைவுகளிலிருந்து, அன்பின் பரிபூரணத்திற்கு மனப்பூர்வமாக மனந்திரும்புவோரை அவர் மறுரூபமாக்குவார் என்று அனைத்து மனிதர்களுக்கும் தெரிவிக்கப்படும். மனுக்குலத்தை ஒரு முறை தேவனுடைய சாயலாக உருவாக்கினால், அவர்களின் சித்தங்களை மட்டும் அல்ல, அதோடு சேர்ந்து, அவர்களின் உடல் சார்ந்த தோற்றமும் மாற்றப்படும். இது பாவத்தின் அனைத்து களங்கங்களையும், பாரம்பரயத்தின் அனைத்து குறைகளையும் நீக்கி, தேவனுடைய சாயலுக்கு அவர்களை மாற்றும். அதோடு பாவம் மற்றும் அதன் தீமையான விளைவுகளை விரும்பத்தகாத நியாபகத்தையும் விட்டு செல்லும்.

### 9.அன்பு எப்படி அடையப்படுகிறது?

### R2203[col.2 last P]through R2204[col.1 P1]:

நம்முடைய வீழ்ச்சியடைந்த நிலையில், நம்முடைய இயல்புக்கு, அன்பு அந்நியமானது என்று வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன, மற்றும்,"முதலில் நாம் தேவனிடத்தில் அன்பு கூறவில்லை, ஆனால் நம்முடைய பாவங்களை நிவர்த்திச் செய்ய அவருடைய குமாரனை அனுப்பி, தேவன் நம்மேல் அன்பு கூறினார்" என்று சொல்லி, தேவனுடைய வல்லமையினால், அன்பை நமக்குள் அறிமுகப்படுத்த வேண்டும். மேலும், இந்த கற்றல், தேவனுடைய அன்பு மற்றும் அதை உண்மையிலேயே நம்பி, பாராட்டும் போது, "நம்மை கிறிஸ்துவின் அன்பில் கட்டுப்படுத்துகிறது (அன்பு கூற)". "நாம் சத்திய வார்த்தையினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்" -நம்முடைய பாவங்களை மன்னித்து, அவரது இரக்கத்திற்கும், சாயலுக்கும் திரும்பிச் செல்ல அவரது அழைப்பு மற்றும் அவருடைய அன்பான குமாரனின் சாயலை அடையும்படியாக அவருடைய உதவியும் எங்களுக்கு கிடைக்கும் என்பதே தேவனுடைய அன்பின் செய்தியாகும். தெய்வீக அன்பை நாம் எந்த அளவுக்கு மதிக்கிறோமோ, அந்த அளவில் நம்முடைய குணங்கள் தெய்வீக சாயலோடு ஒத்திருப்பதற்கான நம்முடைய வைராக்கியம் அளவிடப்படும். இயற்கையாகவே ஒரு கடினமான, அசுத்தமான, கீழ்த்தரமான மனநிலைக்கு ஒரு நீண்ட காலம் தேவைப்படலாம். தெய்வீக அன்பின் கிருபை இருதயத்திற்குள் நுழைந்தவுடன், அந்த அருளானது எல்லா வார்த்தைகளிலும், எண்ணங்களிலும், செயல்களிலும் தெளிவாக வெளிப்படுகிறது. மற்றவை, அதற்கு மாறாக, மிகவும் மென்மையான பிறப்பு மற்றும் வளர்ப்பு பயிற்சி, உள்ளத்தில் தேவனுடைய கிருபையை

பெறாமலும் கூட, வெளிப்புறமாக பல சுத்திகரிப்புகள் இருக்கலாம். எனவே, இருதயத்தை வாசிப்பவர் எவரும் இல்லை, வாசிக்கக்கூடியவர் மட்டுமே யார் இந்த கிருபையைப் பெற்றிருக்கிறார்கள் அல்லது பெறாமல் இருக்கிறார்கள் என்றும், அவர்களின் இருதயத்தில் அது எந்த அளவு வளர்ச்சி அடைந்திருக்கிறதென்றும் நியாயந்தீர்க்க தகுதி வாய்ந்தவர். ஆனால் ஒவ்வொருவரும் தன்னை தான் நியாயந்தீர்த்துக் கொள்ளலாம். மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியால், அன்பினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் அதன் ஒளி வெளியே பிரகாசிக்க முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய பரலோக பிதாவை மகிமைப்படுத்தவும், இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வர வழைத்தவருடைய புண்ணியங்களை, அவரது சக-சிருஷ்டிகளுக்கு எல்லா வழிகளிலும் அறிவிக்க வேண்டும்.

## R2648[col.2 P6]:

பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் மட்டுமே, தேவ அன்போடு இசைந்திருக்கும், இந்த புதிதான ஆவி, புதிய மனதைப் பெற முடியும் என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். நீதிமானாக்கப்படும் நிலையை மட்டுமே அடையக்கூடிய சிலர், ஓரளவுக்கு சீர் திருத்தப்பட்ட ஒரு வாழ்க்கையின் அனுபவத்தைப் பெறலாம். ஆதலால், அதற்கு பதிலாக வெளிப்படையான ஒரு தீய போக்கில் வாழ்வதற்கு பதிலாக, அவர்கள் குறைந்தபட்சம் தார்மீக வாழ்க்கையை வாழ முயலுவார்கள். ஆனால் உண்மையில் அவர் இருதயத்திற்குள், பரிசுத்த ஆவியை, தெய்வீக அன்பின் ஆவியை பெறும் சூழ்நிலைக்கு அவரை கொண்டுவருதற்கு, தேவனிடம் பிரதிஷ்டை செய்வதற்கான முயற்சிகளை எடுக்கும் வரையில், அன்பின் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்படுவதையும், இதனால் "தேவனுடைய அன்பை" உடைமையாக்கிக் கொண்டு, சுயத்தை பலிச் செலுத்தும் அன்பை யாராலும் எதிர்பார்க்க முடியாது. தேவனுடைய அன்பைப் பெற தேவன் கொடுத்திட்ட வழியைத் தவிர, வேறு எந்த வழியையும் யாரும் முயற்சிக்க வேண்டாம். சந்தேகத்திற்கு இடமின்றி, ஆயிரவருட ஆட்சியில், இயல்பான மனுஷனும் கூட, திரும்ப கொடுத்தலின் வழியாக, "தேவனுடைய அன்பை" பெறசாத்தியமாகும். அந்த நேரத்தில், எந்த அளவுக்குஅதிகதிகமாக மனுஷ பரிபூரண நிலையை அடைகிறார்களோ, அந்த அளவுக்கு தேவனுடைய அன்பைக் கொண்டிருப்பார்கள். இறுதியில் பரிபூரண அன்பை முழுமையாக பெறுவார்கள். ஏனெனில், மனிதகுலமானது, அதன் பரிபூரண நிலையில், கண்ணுக்கு தெரியாத தேவனுடைய மாம்ச சாயலாகும். ஆனால் இப்போது, நாம் இன்னும் அபூரணமான, மரண உடல்களை கொண்டிருப்பதினாலும், இன்னும் திரும்ப கொடுத்தலின் காலம் வராததினாலும் - இந்த யுகத்தின் அழைப்புக்கு கீழ்படிந்து, நம்முடைய சரீரங்கள் தேவனுக்கு பிரியமான ஜீவ பலியாக நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் வழியாக ஒப்புக்கொடுத்தால் மட்டுமே, தேவனுடைய அன்பைப் பெறுவதற்கான ஒரே வழியாகும்.

## R2242[col.1 P5]:

ஆயினும், பரிபூரண அன்பின் இந்த நிலையை ஒரு நொடியில் பெற இயலாது, என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆனால் தெய்வீக அறிவுரைக்கு கீழ்ப்படிவதன் மூலம், தற்போதைய வாழ்க்கையில், கிடைக்கும் அனுபவங்களின் விளைவாக இது இருக்கும். எனினும், இந்த ஆவி வளர்ச்சி அடைய எந்த அளவுக்கு நம்மிடம் வைராக்கியம் காணப்படுகிறதோ, எந்த அளவுக்கு பெரிய ஆலோசகரை உற்று கவனிக்கிறோமோ, அந்த அளவுக்கு வெற்றிகரமாகவும், வேகமாகவும் இது வளரும். தங்களை முழுமையாக ஆண்டவரிடத்தில் ஒப்புக்கொடுத்தவர்கள், அவரால் அங்கீகாரம் பெற்றவர்கள், சந்தேகமின்றி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய புதிதான ஜீவன் துவங்கும் போதே, தேவன் மேலும் அவருடைய ஜனங்கள் மேலும் இந்த பக்தி போதுமான அளவு இருந்தாலும், தினசரி அதிகரிக்க வேண்டும். ஆனால் கிறிஸ்தவரின் அனுபவத்தின் தொடக்கத்தில் பயபக்தியுள்ள அச்சம், பாதுகாப்பிற்காக மட்டுமே தேவனை தேடுகிறது. ஆனால், ஆண்டவரே, உமது சித்தம் செய்ய பெருமகிழ்ச்சி அடைகிறேன், சந்தோஷத்துடன் நான் பாடுபடுவேன், அல்லது நிந்தைகளையும் கஷ்டங்களையும் சகிப்பேன், உமது ஜனத்தைச் சேவிப்பேன், நான் உமக்குப் பிரியமாயிருக்கிறேன் என்றும், உம்மால் அங்கீகாரம் பெற்றிருந்தால் போதும் என்று சொல்லும் அளவுக்கு வளர்ச்சி அடையலாம். இதுவே சரியான ஆவி, மற்றும் இந்த ஆவி யுத்தம் முடியும் வரை தொடர வேண்டும். ஆனால் இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய அன்பின் ஆவியின் ஆழம் மற்றும் நேர்மையை நிரூபிப்பதற்கு, வழியில் சோதனைகளையும், பரிட்சைகளையும் சந்திப்பார்கள். மற்றும் அது உண்மையாக இருக்கும் பட்சத்தில், தெய்வீக சத்தியத்தின் நல்ல விதை நேர்மையான இருதயத்தில் விழும் பட்சத்தில், அது வளர்ந்து, சோதனைகள், ஏமாற்றங்கள் ஆகியவற்றில் செழித்தோங்கும். ஒவ்வொரு

எதிர்ப்பிற்கும் எதிராக,வாழ்வில் கர்த்தருக்கும் அவருடைய ஜனத்திற்கும் சேவைச் செய்யக்கூடிய நற்செயல்களின் பலன் கிடைக்கும். இது "ஜெயம் பெற்றவர்களால்" பெறப்படும் வாய்ப்புகளின் அடிப்படையில் பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கலாம்.

### 10. அன்பைப் பெற ஒரு "வலுக்கட்டாயமான போர்" ஏன் தேவைப்படுகிறது?

### R1751[col.1 P5,6]:

சரியானப் பாதை இன்னும் சுய இழிவு மற்றும் சுயத்தை வெறுத்தல் என்ற "குறுகிய பாதையாகவே" இருக்கிறது - இது சாந்தம் மற்றும் மனத்தாழ்மையின் பாதை. இந்த பாதையில், கடந்த வருடத்தைப் போல, இந்த வருடத்திலும் அல்லது சாத்தியமானால், இன்னும் அதிகமாக முயற்சிகளும், கிருபைகளும் தேவைப்படுகிறது. இன்னும் நாம் கிருபையிலும் அறிவிலும் அதிகமாக வளரும் போது, மேன்மை பாராட்டுவதற்கும், பெருமைக் கொள்கிறதற்கான சோதனைகளும் ஆற்றல் வாய்ந்தாக இருக்கும். மற்றும் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் மற்றும் தேவனுடைய ஊழிய வேலைகளிலும் எந்த அளவுக்கு உயர் நிலை ஏறுகிறோமோ, அந்த அளவுக்கு எதிராளி நமது முன்னேற்றத்தை எதிர்ப்பான்.மேலும் அவனுடைய பணியாட்கள், அவதூறு பேசி, புறங்கூறி, பொதுவாக நம்மை காயப்படுத்த முயலுவார்கள். "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட் களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக் காரருக்கு எச்சரிக்கையா யிருங்கள்"(பிலிப்பியர் 3:2)

ஆனால் இது விஷயத்தின் ஒரே ஒரு பக்கமாகும். நாம் குறுகிய வழியில் செல்லும்போது, சிறிது நேரம், எந்த அளவுக்கு,சாத்தானின் தாக்குதல்களுக்கும், நமது நம்பிக்கை, விசுவாசம் மற்றும் அன்பின் கடுமையான சோதனைகளுக்கு நாம் உட்படுத்தப்படுகிறோமோ, அந்த அளவுக்கு ஒப்பிடமுடியாத ஆவிக்குரிய மகிழ்ச்சிகள், சமாதானமும் நமக்கு அதிகரிக்கும். இவைகள் அதிகமான நித்திய மகிமைக்கும் கனத்துக்கும் நமக்குள் கிரியை செய்கிறதை அறிந்து, இந்த சோதனைகளிலும், உபத்திரவங்களிலும், கூட மகிழ்ச்சியாக இருக்க நம்மை இயலச்செய்யும். கண்ணுக்கு புலப்படாத, அவருடைய நீட்டப்பட்ட கை நம்மை வழி நடத்துவதை, நாம் பார்க்கும் போது, இவைகளை நாம் சகிக்க முடியும். ஒவ்வொரு பிரச்சனையிலும் அவருடைய பிரசன்னம் நமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அவர் ஒருபோதும் நம்மைவிட்டு விலகாதிருப்பார், மற்றும் எல்லாவற்றையும் (வாழ்க்கையில் தீமையாக தோன்றுபவைகளும் கூட) நம்முடைய மிகுந்த நன்மைக்காக, மேற்கொள்கிறார். (over-rule) - ஏனென்றால், நம்முடைய சுயத்தையும்,சுயவழிகளை காட்டிலும், தேவனையும், அவருடைய வழியையும், அவருடைய திட்டத்தையும் அதிகமாக நேசிக்கிறோம். ஏனெனில் அவருடைய நோக்கத்தின்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அழைப்பை ஏற்றுக் கொண்டோம், அதன் கருத்தோடு ஒத்திருக்கிறோம். மற்றும் நம்முடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிச் செய்யும்படிக்கு, அவர் நம்மை அழைத்தப் பரம அழைப்புக்குப் பாத்திரமாக நடந்துக்கொள்ள முயற்சிக்கிறோம்.

**மன்னா, ஏப்ரல் 9** -பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்-(1கொரிந்தியர் 9:24) வெற்றிப் பெற தேவனுடைய சர்வாயுதங்களை மட்டும் அணிந்தால் போதாது, ஆனால் நாம் சண்டையில் வீரர்களாக இருக்க வேண்டும். மேலும் கண்களின் இச்சை, மாம்சத்தின் பெருமை, நீதியின் மற்றும் தூய்மையின் அனைத்து எதிரிகளுக்கும் எதிராக வலியப் போராட வேண்டும். அன்பு - தேவன் மேலுள்ள அன்பு, சத்தியம் மற்றும் நீதியின் மேலுள்ள அன்பு நம்மை ஊக்குவிக்க வேண்டும். இல்லா விட்டால் நாம் ஒருபோது வெற்றிப் பெறமாட்டோம். அன்பு மட்டுமே, மரணபரியந்தம் விசுவாசத்தோடு நம்மை காத்துக்கொண்டு, ஒளியில் உள்ள பரிசுத்தவான்களின் பங்கடையச் செய்யும். ஆர்வமிக்க அன்பு இருதயத்தை ஆட்கொண்டிருந்தால், அந்த இருதயம் முழுவதும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்று அர்த்தம். மேலும் போரின் பத்தில் ஒன்பது பகுதி ஏற்கனவே வென்றதாக பொருள்படுகிறது. அப்படியிருந்தும் அப்போஸ்தலர் (யூதா 21) சொல்லுகிறபடி, தேவனுடைய அன்பில் நம்மை காத்துக்கொண்டு, விழிப்போடும், ஜெபத்தோடும், வைராக்கியத்தோடும் இருக்க வேண்டும். அன்பு பெருக்கெடுக்கும் இடத்தில் கிருபையும் அதிகரிக்கும்.

### 11.ஆவியின் ஆரம்பகால "வரங்களுக்கும்" மற்றும் அன்பின் ஆவிக்கும் உள்ள ஒப்பீட்டின் முக்கியத்துவம் என்ன?

**F238[P2]:**

நியாயமாக அவர்கள் அப்போஸ்தலரின் நிலையை ஆசைப்படவோ, எதிர்ப்பார்க்கவோ முடியாது. ஏனெனில் அன்று பன்னிரண்டு பேர் மட்டுமே இருந்தனர். ஆனால் அவர்கள் தீர்க்க தரிசிகளாகவோ அல்லது போதகர்களாகவோ இருக்க விருப்பம் கொண்டிருக்கலாம். அப்போஸ்தலர் மேலும் "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று கூறுகிறார். (வசனம் -31) "ஆயினும்", எந்த ஒரு வரங்களுக்கும் அல்லது சபைகளில் எந்த வேலைகளுக்கும் மேலாக ஆண்டவரின் அன்பின் ஆவியை அதிகஅளவில் பெறுவதே கனத்திற்குரியது என்று காட்டுகிறார். அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் சபையில் பரிபூரண அன்பை உடைய தாழ்மையுள்ள அங்கத்தினர், ஆண்டவருடைய பார்வையில் அன்பு என்னும் கிருபையில் குறைவுபட்டுள்ள எந்த ஒரு அப்போஸ்தலர் அல்லது தீர்க்கதரிசி அல்லது போதகரைக் காட்டிலும் மேலான இடத்தை அடைந்து விட்டார் என்பதாகும். ஆகவே ஆவியின் கனிகளாகிய அன்பு, விசுவாசம், நம்பிக்கை - மற்ற வரங்களைக் காட்டிலும் சிறந்தது என்பதை அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். எப்படிப்பட்ட வரங்களை பெற்றிருந்தாலும் சரி, அன்பிராவிட்டால், தேவனுடைய பார்வையில் அவர்கள் ஒன்று மில்லாதவர்களும், அவருடைய கிரியைகள் அதிருப்தியைத் தரக்கூடியதாகவும் இருக்கும் என்று அவர் கூறுகிறார். எப்படிப்பட்ட வரங்களை பெற்றிருந்தாலும் சரி, அன்பிராவிட்டால், தேவனுடைய பார்வையில் அவர்கள் ஒன்றுமில்லாதவர்களும், அவர்களுடைய கிரியைகள் அதிருப்தியைத் தரக்கூடியதாகவும் இருக்கும் என்று அவர் கூறுகிறார்.

**R2225[col.2 P2]:**

ஆரம்பக்கால சபையில் மிக முக்கியமான ஆசீர்வாதங்களாகிய, பரிசுத்த ஆவியின் முத்திரை, அன்பின் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஆகியவற்றைக் காட்டிலும், பல மொழி பேசுதல், குணமாக்குதல், அற்புதங்கள் நிகழ்த்துவது போன்ற வரங்கள் மிக முக்கியம் என்று விசுவாசிகள் இயற்கையாகவே யோசித்தார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால், ஆவியின் கனிகளாகிய, விசுவாசம், நம்பிக்கை, அன்பு முக்கியம் ஆனால், அந்நிய பாஷைகள், அற்புதங்கள் மற்றும் பிற வரங்கள் முக்கியமல்ல என்ற உண்மையை நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலரின் வழியாக அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது மிக அவசியமாக இருந்தது, எனவே, "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார் - அன்பைப் பின் தொடர்ந்து, அதன் வளர்ச்சியும் முதிர்ச்சியும் படிப்படியாக முற்போக்கான வேலையாக இருக்கும். அனேகமானோர், "பலவிதமான" வரங்கள், "குணப்படுத்தும் வல்லமை, அற்புதம் செய்யும் வல்லமை, அந்நிய பாஷை பேசுவதற்கான திறமை ஆகியவற்றைக் கொண்டிருக்கலாம். ஆனால், இவைகளோடு தேவ ஆவி, கிறிஸ்துவின் ஆவி, சத்திய ஆவி, அன்பின் ஆவியை அவர்கள் பெறாவிட்டால், அவர்கள் ஓசையிடுகிற தாளங்கள் போலவும், சத்தமிடுகிற வெண்கலம் போலவும் இருப்பார்கள். இவர்கள் ஆவிக்குரிய ஜீவன் அல்லது எதிர்கால வாழ்க்கை அல்லது இராஜ்யத்திற்குரிய எந்த விதமான சரியான நம்பிக்கை இல்லாமல் இருப்பவர்கள்.

**12.எமது அனைத்து செயல்களுக்கும், அன்பு ஒரு உந்துவிசையாக ஏன் இருக்க வேண்டும்.**

**R3166[col.1 P4]:**

மற்றும் ஓர் சிந்தனை நம் அனைவரின் மனதிலும் இருக்கவேண்டும். அதாவது, மற்றவர்களிடம் இருந்து வேறுபட்ட வித்தியாசமான வரங்களைக் கொண்டிருக்கையில், ஆற்றல் அல்லது சேவை அல்லது செல்வத்தின் ஒப்பீட்டளவில் பெரிய அல்லது சிறிய அளவில் தேவனுக்காக பங்களிக்க முடியுமானால், ஆண்டவர் நம்முடைய முயற்சிகளினால் பெற்ற பலன்களின்படி அல்ல, நம்மை இயக்கும் ஆவியின் அறிவின் அடிப்படையில் நம்மை மதிப்பிடுவார். ஒரு ஏழை விதவை இரண்டு காசுகளை போட்ட இந்த சிறிய தாலந்தைப் பற்றி சொல்லப்படுகிறது. பெரிய பரிசைக் காட்டிலும், சிறிய பரிசை ஆண்டவர் மிகவும் பாராட்டினார். இதைக் கருத்தில் கொண்டு, நம்முடைய பலத்தினால், நம் கைகள் செய்யக்கூடிய வேலைகள் மட்டும் அல்ல, நம்முடைய ஒவ்வொரு பலிகளும், ஆண்டவருக்கென்று நம்முடைய காணிக்கைகளையும், முழுமையான அன்பும் பக்தியும் நிறைந்ததாக இருந்தால், நிச்சயமாக ஆண்டவர் அதை அங்கீகரிப்பார். ஏனெனில், வீண் மகிமைக்காக அல்ல, அன்பினால் அவருக்காகவும், அவருடையவைகளுக்காகவும் இவைகள் செய்யப்பட்டது.

**13.அன்பு மற்றும் இருதயத்தின் தூய்மை ஆகியவற்றிற்கும் இடையேயான உறவு என்ன, மற்றும் நாம் எப்படி நம்முடைய இருதயங்களை தூய்மைப்படுத்துவது.**

தீத்து 1:15,16"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப் படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்தநற்கிரியையுஞ் செய்ய ஆகாதவர்களு மாயிருக்கிறார்கள்"

**R2516[col.2 P7]:**

அவர்கள் தீமைச்செய்து, தீமையைப் பேசி, தீமையைச் சிந்திக்கும் அளவுக்கு, அவர்களுடைய உள்ளம் மட்டும் அல்ல, அவர்களுடைய மனசாட்சியும் கெட்டுப்போயிருக்கிறது என்று அப்போஸ்தலர் கருதுகிறார். ஏனெனில், அவர்களின் மனசாட்சியும், மனதும் இசைந்து செயல்படுகிறது. மேலும் அவர்கள் குருடாக்கப்பட்டவர்களும், சுயமாக வஞ்சிக்கப்பட்டவர்களும் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கிறது. இது என்ன பயங்கரமான நிலைமை, ஆண்டவருடைய ஜனங்கள் அனைவரும், இருதயத்திலும், சிந்தையிலும் மட்டும் அல்ல மனசாட்சியை மென்மையாகவும், ஆண்டவரின் வார்த்தைக்கு மிக நெருக்கமாக ஒத்திருக்க வேண்டியதில் எவ்வளவு கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். கண்டிப்பாக, அடிக்கடி, தேவன் நமக்கு அளித்திருக்கும் அன்பின் பிரமாணத்தின் வரை அளவின்படியே நம்மை நாம் நியாயந்தீர்த்தால் மட்டுமே இந்த நிலைமையை பராமரிக்கமுடியும்.

**R2517[col.1 P6 to end.]:** ( பாடத்தின் முடிவில் விளக்கம் காணலாம். )

**R3596[col.1 P2,3]:**

பரிசுத்தராக இருக்க வேண்டும் **:** தேவனிடமும், மனுஷரிடமும் குற்றமில்லாத ஒரு மனசாட்சியை காத்துக்கொள்ள வேண்டும். சிந்தனைகள், தீமையான வார்த்தையைப் பிறப்பிக்கும், எந்தவிதமான தீய எண்ணங்களுக்கும் இடம் கொடுக்க வேண்டாம். இதனை உறுதிப்படுத்திக் கொள்ள, கிறிஸ்து இயேசுவை உங்கள் மனதிற்கு முன்பாக, உங்கள் முன்மாதிரியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்குள் தீமை நுழைந்தால்,அவர் வாக்களித்தக் கிருபைக்காக உங்கள் இருதயத்தை ஜெபத்தில் உயர்த்துங்கள். "என்னுடைய வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரிதியாக இருப்பதாக, என் தேவனே நீரே என் பலன், நீரே என் இரட்சிப்பு " என்ற சிந்தையையும், ஜெபத்தையும் உங்கள் அருகில் தொடர்ந்து காத்துக் கொள்ளுங்கள். "வேத நூலில், பல்வேறு குறிப்பிட்ட கட்டளைகளை கடைப்பிடித்து, பொக்கிஷமாக சேமிக்கும்போது, தெய்வீக பிரமாணத்தின் கீழிருக்கும் கொள்கைகளை புரிந்துக்கொள்வதற்கும், உணர்வுள்ள ஒருமைப்பாட்டில் வருவதற்கும் அதிகதிகமாக முயல வேண்டும்.

இது ஆண்டவரின் வார்த்தைகளிலும் குறிப்பாக குறிப்பிடப்படாவிட்டாலும், நம்முடைய வார்த்தைகள், சிந்தைகள், மற்றும் கிரியைகளில் சரியான மற்றும் தவறான தீர்ப்புகளை தீர்ப்பதற்கு இது உதவும். உண்மையில், எந்த அளவுக்கு நாம், தெய்வீக பிரமாணத்தின் கொள்கைகளை புரிந்து கொண்டு அதோடு உணர்வுள்ள ஒருமைப்பாட்டை அடைகிறோமோ, அந்த அளவுக்கு தெய்வீக வார்த்தையின் ஆவியை நாம் பெறுவோம் - (சங்கீதம் 119 :97-105)

**12.புது சிருஷ்டியாக நாம் ஜெநிப்பிக்கப் படுதலின் முத்திரையாக அல்லது ஆதாரமாக அன்பு எப்படி இருக்கிறது?**

**E264(p2):**

முத்திரை என்பதற்கு ஒரு பணியமர்வு அல்லது நியமனம் அல்லது ஒரு குறிப்பை குறிப்பதாகும். இந்த உலகத்தின் பிள்ளைகள் சில குறிப்புகளால் வேறுபடுத்தப்படலாம். தேவனுடைய பிள்ளைகள், கிறிஸ்துவுக்குளான புது சிருஷ்டிகள் மற்ற குறிப்புகள் அல்லது பண்புகளினால் வேறுப்படுத்தப்படலாம். ஒரு வகுப்பாரின் ஆவி (மனம், நோக்கம், விருப்பம்) உலகத்தினுடையது. மற்றொரு வகுப்பாரின் ஆவி (மனம், நோக்கம், விருப்பம்) தேவனுடையது. தேவனிடத்தில் உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட தருணத்திலிருந்து, அதற்கான ஆதாரத்தை வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் நடத்தையில், முத்திரையாக அல்லது குறிப்புகளாக குறிக்கப்படுகிறது. புதிய சிந்தை கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளரும்போது, இந்த குறிப்புகளும் இன்னும் தெளிவாக வளருகிறது. மற்றொரு வார்த்தைகளில்

சொல்லபோனால், சகல காரியங்களையும் தேவனுடைய சித்தத்திற்கு அல்லது பரிசுத்த ஆவிக்கு ஒப்புக்கொடுத்து, நம்முடைய மனித ஆவியை அல்லது சித்தத்தை கலைந்துவிட்டால், தேவனுடைய ஆவி (சிந்தை)நம்முடைய ஆவியாகும் (சிந்தை). ஆகையால், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தை நமக்குள்ளும் இருக்க, நாம் அறிவுறுத்தப் படுகிறோம் - தேவனுடைய சித்தம் மட்டுமே செய்யக்கூடிய ஒரு சிந்தை. எனவே நம்முடைய புதிய சிந்தை அல்லது ஆவி பரிசுத்தமானது அல்லது தேவனால் வழிநடத்தப்பட்டது. நம்முடைய உடன்படிக்கையை மீறக்கூடிய எதுவுமே செய்யக்கூடாதென்று, அப்போஸ்தலர் இந்த பகுதியில் அறிவுறுத்துகிறார் - நம்முடைய புதிய சிந்தைக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் எதையும் அல்லது கடமை தவறுவதற்கு நம்முடைய மனசாட்சியை கட்டாயப்படுத்தக்கூடிய எந்த செயலையும் செய்யக்கூடாது - கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக, நம்முடைய மனசாட்சியை காயப்படுத்தும் எதையும் செய்யக்கூடாது. உங்களுடைய தெய்வீக புத்திரசுவிகாரத்தை முத்திரையிடும், பரிசுத்த ஆவியை, தேவனுடைய சிந்தையைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

### E246 through E248-பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுதல்

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப் பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபேசியர் 1:13,14)

பழங்காலத்தில் பல்வேறு காரியங் களுக்காக முத்திரைகள் பயன்படுத்தப்பட்டது. (1) கையொப்பம் இடுவதற்கும், ஒரு காரியத்தை உறுதி படுத்துவதற்கும் முத்திரைகள் பயன்படுத்தப் பட்டது.(2) மத்தேயு 27:66, வெளி 10:4,20:3 வசனங்களில் சொல்லப்பட்டது போல, இரகசியமாக, ஊடுருவலுக்கு எதிராக பாதுகாக்க முத்திரைகள் பயன்படுத்தப்பட்டது.

தேவனுடைய ஜனங்கள் "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டார்கள்" என்று (1)ல் சொல்லப்பட்ட அர்த்தத்தில் சொல்லப்படுகிறது. சிலர் எண்ணுகிறபடி நாம் பரிசுத்த ஆவியானவருக்குள், அதாவது சமமான தேவர்களில் மூன்றாவது தெய்வத்தினால், முத்திரை போடப்பட்டோம் என்று அப்போஸ்தலர் கூறவில்லை. "நாம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்திரைப்போடப்பட்டோம்" என்று அவர் அறிவிக்கிறார். பரிசுத்த ஆவி பிதாவிடத்திலிருந்து வருகிறது. அவர் கிறிஸ்துவின் வழியாக முத்திரையாக இருக்கும் பரிசுத்த ஆவியியைக் கொண்டு முத்திரைப் போடுகிறார். இது அப்போஸ்தலரால் உறுதிப்படுத்தப்படுகிறது. (அப்போஸ்தலர் 2:33)மற்றும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் பதிவுகளை பொறுத்த வரையில் முழு இசைவாக உள்ளது. இவரே புத்திரர்களின் வீட்டில் முதலாவது முத்தரிக்கப்பட்டவர்." அவரைப் (இயேசு) பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் ..." (யோவான் 6:27) என்று வாசிக்கிறோம்.

"பரிசுத்தமான ஆவி", "சத்திய ஆவி", போன்ற தேவனுடைய பரிசுத்தமான தாக்கங்களை குறிப்பிடும் மற்றவார்த்தைகளை விவரிப்பதை போல, "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆவியும்" விவரிக்கப்படத்தக்கது. முத்திரிக்கப்படுதலுக்கும், தேவன் நமக்கு தந்திருக்கும் வாக்குத்தத்தத் திற்கும் தொடர்பு இருப்பதாக இது காட்டுகிறது. இது முத்திரையிடப்பட்டவர்களோடு" தேவனுடைய உடன்படிக்கையின் உயர்த்தரமான ஆதாரம் அல்லது மேம்பட்ட சான்றாகும். தேவன் தம்மை உண்மையாக நேசிப்பவர்களுக்கு (யாவருக்கும் மேலாக)"மிக பெரிதும் விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை "ஒதுக்கிவைத்திருக்கிறார்.தேவன் அனுமதிக்கும் அன்பு மற்றும் பக்திக்குரிய சோதனைகளை விசுவாசத்தோடு சகித்ததற்குபின் அவர் வாக்களித்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வார். அதே நிரூபத்தின் பின்னர், இதே முத்திரையைப் பற்றி அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அங்கு இந்த வாக்குறுதி, "மீட்கப்படும் நாளுக் கென்று" அடையாளப்படுத்தப்படுகிறது. (எபேசியர் 4:30) மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், மீட்கப்படும் நாளுக்கென்று வாக்களிக்கப்பட்ட ஆவியின் முத்திரை - நாம் (சபை) "ஆவியின் முதற்பலன்களைக் கொண்டிருக்கிறோம்" என்ற கருத்தை, வெளிப்படுத்துவதற்கான மற்றொரு வடிவமாகும். ஆண்டவருக்கும் நமக்கும் இடையில் உள்ள உடன்படிக்கையின் பந்தத்தில் நாம் சோர்வடையாமலிருந்தால், முழுமையான வாக்குறுதியை நாம் பெறுவோம் என உறுதியளிக்கப்படுகிறது. புத்திரசுவிகாரம் மற்றும்

வாரிசுக்கான உடன்படிக்கையின் தேவனுடைய அடையாளம், நம்முடைய நெற்றிகளில் போடப்படும் வெளிப்படையான அடையாளம் அல்ல. அல்லது பூமிக்குரிய விவகாரங்களில், உலகின் வாழ்வு வளத்திற்கு தேவனுடைய ஆதரவுக்கான அடையாளமும் வெளிப்படையானது அல்ல. சுகமளிக்கும் வரங்கள், அல்லது அந்நிய மொழியில் பேசுவது போன்ற அற்புதமான "வரங்களைப்" பெற்ற அநேகர், ஆவியின் முத்திரையையும் சாட்சியையும் இல்லாதிருந்தார்கள். - அப்போஸ்தலர் 8:13,21, 1கொரிந்தியர் 13: 1-3. முத்திரிக்கப்பட்டவர்களின் இருதயத்தில் பரிசுத்த ஆவியின் அடையாளம் உள்ளது. ஆகவே இதை வேறொருவரும் அறியாததும், பெற்றுக்கொள்ளுபவர் மட்டும் அறிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. (வெளி 2:17) மேலும், அனுதின வாழ்க்கையில் அவர்களிடம் வெளிப்படக்கூடிய நற்பண்புகளாகிய ஆவியின் கனிகளை மட்டுமே மற்றவர்கள் உணரமுடியும். "உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக் கிறார்" (11கொரிந்தியர் 1:21,22) இந்த புத்திரசுவிகாரத்தின் முத்திரை, அன்பின் ஆவியாகும். இது அப்பா பிதாவே, உமது சித்தம் செய்ய பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லத்தக்க பிதாவோடும், அவருடைய எல்லா பரிசுத்தமான ஒழுங்குகளோடு ஈடுசெய்கிறது. இந்த சுவிகாரப்புத்திரரின் அடையாளத்தை அல்லது முத்திரையைப் பெற்றிருப்போர், பிதாவின் சித்தத்தைச் செய்ய மட்டும் முற்படாமல், அதை "துக்கத்தோடு அல்ல" மன மகிழ்ச்சியோடு செய்வார்கள். - (1யோவான் 5:3)புத்திரர்களாக முத்திரிக்கப்படுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவி, முதற்பலன்களை உடைய அல்லது வரவிருக்கும் சுதந்தரத்தின் மேல் மெய்யார்வம் கொண்டிருப்பதே, ஆவியின் சிறந்த முற்போக்கான "சாட்சியாகும்." - இன்றைய வாழ்வில் கிறிஸ்தவ அனுபவங்களின் இது சிறந்தப் பகுதியாகும். அனுபவத்தின் இந்த நிலையைப் அடைவதற்கு முன்,அபிஷேகம் செய்யப்பட்ட நம்முடைய கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே வருவதன் மூலம் அபிஷேகத்தின் பங்கை நாம் பெறவேண்டும். சத்திய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதன் மூலம், தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கும், அதைச் செய்வதற்கும் நம்முடைய ஆவியை பரிசுத்தமாக்க வேண்டும். நாம் நீதியின் ஊழியத்தை செய்வதற்கு ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டபின் இந்த அனுபவம் வருகிறது. நாம் கருவிலிருந்து கடந்து, தேவன் நம்மை புத்திரர்களாக கருத்தில் கொண்டு, நம்மை முத்திரித்திருக்கிறார் என்பதை பேசுவதற்கு இது ஒரு ஆதாரமாக இருக்கிறது. எல்லா விசுவாசிகளும், இந்த அபிஷேகம் மற்றும் தேவனுடைய பரிசுத்த ஆவி, சத்திய ஆவியின் ஜெநிப்பித்தலின் தாக்கத்தின் கீழ் வருவதற்கு முயல வேண்டும். ஆகையால், ஆவியினால் புத்திரராக ஜெநிப்பிக்கப்பட்டவர், பிதாவால் ஏற்றுகொள்ளப்பட்டு முத்திரைப் பெறுவதற்கு பிதாவுக்குள்ளான ஒற்றுமை நிறைந்த அந்த நிலையை அடைய முயல வேண்டும். இந்த நிலைப்பாட்டை அடைந்துவிட்டால், இந்த முத்திரையை மங்காதபடிக்கும், அழித்து விடாதபடிக்கும் எச்சரிப்பாக இருக்கவேண்டும் - இந்த விலைமதிப்புள்ள பொக்கிஷத்தை மூடிவிடவோ, அணைத்துவிடவோ கூடாது - இந்த அன்பின் மற்றும் மகிழ்ச்சியின் ஆவியை மற்றும் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தையும், கூட்டுறவையும், பாரமான, இருளான, துக்கமுள்ள ஆவியாக மாற்றிவிடக்கூடாது. ஆனால் அதைப் பெற்ற அனைவரும், அதை எப்போதும் பிரகாசமாகவும், புத்துணர்வோடும் காத்துக் கொள்ள, தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

**R2225[col.1 P3 through col.2 P 1]:**

யோவான் கூறுவதைப் போல, அன்பின் ஆவியை, பரிசுத்த ஆவியை, சத்திய ஆவியைப் பெற்ற யாவரும், அந்த பரிசுத்தத்தினால், ஒரு அபிஷேகம், ஒரு முழுக்குதலைப் பெற்றிருக்கிறார்கள். ஏனெனில் அது தேவனுடைய ஆவி, அவரிடத்திலிருந்து புறப்பட்டு, அவர்மேல் விசுவாசமுள்ளவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அப்போஸ்தலர் அறிவிக்கிறபடி, "பெற்றுக் கொண்ட அனைவரும் அறிந்திருக்கிறார்களே". அன்பின் ஆவியை, சத்திய ஆவியை பெற்றிருத்தல், தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டு, அவருடைய புத்திரராக இருப்பதற்கு ஒரு ஆதாரம். மற்றும் அவரது ஆண்டவரும், தலையுமானவருக்கு முடிவு வரை விசுவாசமாக இருந்தால், அவர் மூலமாக அவரோடுக்கூட இராஜ்யத்தில் இணைக்கப்படுவார்கள். கர்த்தராகிய இயேசுவை தங்களுடைய மீட்பர் என விசுவாசிக்கிறவர்கள், இந்த ஆவியை பெற்றிருந்தால், அப்போஸ்தலர் கூறுவதுபோல, தேவனுடைய குடும்பத்திற்குள் சுவிகாரப்புத்திரர்களாக முத்திரிக்கப்படுகிறார்கள். "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று

முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியை..."(எபேசியர் 4:30) இந்த அபிஷேகத்தைப் பெறாதவர்கள், சிறிது சத்தியத்தின் அறிவைப் பெற்றிருந்தாலும் கூட, அவர்களின் இருதயம் முழுமையாக ஆண்டவருக்குப் பரிசுத்தப்படுத்தப்படவில்லை என்பதற்கு ஒரு சான்றாகும். அவருடைய சித்தத்திற்கும் வார்த்தைக்கும், சுயசித்தத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்கவில்லை. சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில், தெய்வீக கிருபையின் வெளிப்பாடானது ஆவியின் கனிகள், விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றின் மூலமாக மட்டும் அல்ல, வெளிப்படையான அடையாளங்கள் அல்லது ஆவியின் வரங்களாகிய - அந்நிய மொழி பேசுதல், அற்புதம் செய்தல், தீர்க்கதரிசனம் உரைத்தல் போன்றவைகளையும் வெளிப்படுத்துவது ஏற்றதாக இருந்தது. ஆகவே பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம், தேவனுடைய கர்த்தருடைய ஜனங்களை அன்பின் ஆவியானால் முத்திரையிட்டது மட்டுமல்லாமல் சபையில் அற்புதமான "வரங்களை" வழங்கியது. அவைகள் விரைவில் மறைந்துவிட்டன - இந்த வரங்களை பகிர்ந்துக்கொடுப்பதற்கான வல்லமை, அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வரையறுக் கப்பட்டது. நியாயப்பிரமாண யுகத்தின் ஆவி, நீதியின் ஆவியாக இருந்தது. அந்த யுகத்தில், "கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்" என்ற தேவனுடைய குணத்தின் ஒரு அம்சமாகிய நியாயப்பிரமாணத்தை வெளிப்படுத்தினார். இதற்கு பொருத்தமாக யூத கருத்துக்கள் வடிவமைக்கப்பட்டன. ஆனால் காலம் நிறைவேறிய போது, தேவன் தம்முடைய குணத்தின் மற்றொரு அம்சமாகிய அன்பை வெளிப்படுத்தினார். அதன்பின் அது ஒரு மாதிரியானது, - அவரால் கற்றுக்கொள்ளப் போகிற அனைவருக்கும் இது அடுத்த பாடமாக இருந்தது. "அவருடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்து, தேவனுடைய அன்பை வெளிப்படுத்தினார்." நாம் அவருடைய குமாரன் வழியாக ஜீவிக்க, தேவன் அவருடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்மேல் வைத்த அன்பை வெளிப்படுத்தினார். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவான் 4:9,10) அதற்கிணங்க, நம் மீட்பரைக் கண்டறிந்தோம், அன்பின் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவராக, அவர் பிதாவின் வாயின் வார்த்தைகளை அறிவித்தார் - -"நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பு கூறவேண்டுமென்ற ஒரு புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுத்தேன்." நியாயப்பிரமாணத்தை விளக்கி, அதை நியாயத்தை பொருள்படுத்தினாலும், அன்பினால் மட்டுமே அதை நிறைவேற்ற முடியும் என்பதை அவர் விளக்கம் அளித்ததை காணலாம். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது." இஸ்ரயேலில் போதிக்கப்பட்ட அனைத்தின் முக்கியமானவைகளின் சுருக்கத்தை அவர் கூறுகிறார் - " (1) உங்கள் தேவனாகிய கர்த்தரை முழு இருதயத்தோடும், சிந்தையோடும், பலத்தோடும், அன்பு கூறுவாயாக. (2) உங்களை நேசிப்பதைப் போல, பிறனை நேசியுங்கள் என்றார். இந்த இரண்டு பிரமாணங்களிலும், முழு நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவானும், ஆண்டவருடைய மற்ற சீஷர்களும், அவருடைய அற்புதமான போதனைகளை கேட்டு, இந்த அன்பின் பரிசுத்த ஆவியை எடுத்துக்காட்டின் மூலமாக விளக்கம் அளித்ததற்கு சாட்சிக் கொடுத்து, ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாளன்று அதே ஆவியை பெறும் பாக்கியத்தை அவர்கள் பெறவில்லை. அதற்கு முன்னமே அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்கு சீஷர்களாகி, வாழ்க்கை பாதையைக் குறித்து சில அறிவுறுத்தல்களைப் பெற்றார்கள். ஆனால் அவர் போவது அவர்களுக்கு உகந்ததாக இருந்தது - அவர் சரி நிகரசமான விலையை கொடுக்க வேண்டும், பிதாவின் வல்லமையினால் மரித்தோரிலிருந்து எழுந்திருந்து அவர்களின் பிரதான ஆசாரியராக உயர்த்தப்பட்டு, அவர்களின் பாவங்களுக்கு ஈடுச்செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தேற்றவாளன் வர இயலாது. இவர்கள் பரிசுத்த ஆவி, அன்பின் ஆவி மற்றும் சத்திய ஆவியைப் பெற்று, அவர்களால் ஜெநிப்பிக்கப்பட முடியாது. (யோவான் 14:16,17, யோவான் 15:26, யோவான் 16:7) மேலும், அப்போஸ்தலனாகிய யோவான் "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:12,13)

**15.அன்பு ஏன் "ஒரு அடையாளமாக" அழைக்கப்படுகிறது?**

**R2753[col.1 P5]through R2754[col.1 P3]:**

**பாடத்தின் முடிவில் விளக்கம் காணலாம்.**

**16.கிறிஸ்தவ ஓட்டத்தில் கடக்க வேண்டிய நான்கு quarter-marks என்ன?**

**F187(P2) through F189 (P1):பாடத்தின் முடிவில் விளக்கம் காணலாம்.**

**F369 [P2] through F373 - இலக்கை அடைய ஓடி, அதில் உறுதியாக நிற்க, பாடத்தின் முடிவில் காணலாம்**

**17.திருச்சபையின் அனுபவம் அதனுடைய "முன்னோடி"யிலிருந்து எவ்வாறு வேறு படுகிற து?**

**F187[P1]:**

இந்த ஆவிக்குரிய பந்தய சாலைக்குள் நுழைவது, நம்முடைய உடன்படிக்கைக்கு ஒப்பாயிருக்கிறது. இதுவே துவக்கம். அவருடைய அன்பின் ஆவியினால் ஆட்கொள்ளப்படுவதற்கு, நம்மை நாம் தேவனிடத்தில் அர்ப்பணித்தோம். ஆயினும், நம்முடைய விழுகையின் காரணத்தினால், நாம் அங்கீகாரம் பெறுவதற்கு தேவையான பிதாவின் குணாம்சங்கள் நம்மிடம் இல்லாததை நாம் துயரத்துடன் உணர்கிறோம். எனினும், நாம் ஓடி, குமாரனின் சாயலைப் பெறுவதற்கு விடாமல் முயற்சிக்கிறோம். இதுவே நம்மை குறித்த தேவனுடைய சித்தமும், அவரோடு நம்முடைய ஐக்கியத்திற்கு உண்டான நிபந்தனையுமாகும். இந்த விஷயத்தில் நாம் கர்த்தரிடத்திலிருந்து வேறுபடுகிறோம். ஏனெனில் அவர் பரிபூரணராக இருப்பதால் அன்பின் வளர்ச்சியில், ஒன்றன்பின் ஒன்றான படி நிலைகளை அவர் அடையமுடியாது. அவர் ஆரம்பத்திலிருந்து இந்த நிலையில் இருந்தார். அவர் தேவனுக்கும், அவருடைய ஜனங்களிடமும், அவருடைய எதிராளியிடமும், விசுவாசத்தோடு அதே பரிபூரண அன்பில் நிலைநிற்கிறாரா, இல்லையா என்பதை அவருடைய சோதனை தீர்மாணிக்க வேண்டியதாக இருந்தது. எவ்வாறாயினும், அந்த குறியீட்டை அடைவதற்கு நாம் ஓட வேண்டும், முயற்சி செய்ய வேண்டும்.

**18."அரைக்கச்சை" ஆக இருக்கும் அன்பின் முக்கியத்துவம் என்ன?**

கொலோசேயர் 3:14"இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்"

**R2481[col.2 P4]:**

ஆனால், பரிசுத்த ஆவியின் வாயின் வார்த்தையைப் போல, அப்போஸ்தலர், ஒரு முழுமையான பயிற்றுவிப்பாளராக இருக்கிறார். எதைத்தூக்கி எறிய வேண்டும் என்பதை மட்டும் அல்ல, எதை அணிந்துக்கொள்ள வேண்டும் என்பதையும் நமக்குக் கூறுகிறார். ஆனால் இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, சகிப்புத்தன்மை, பாவமன்னிப்பு போன்ற இந்த மகிமையான குணநலன்களில் அணிவகுப்பை நாம் காண்கையில், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பரிபூரண பிணைப்பாகிய அன்பை தரித்துக் கொள்ளுங்கள் என்று அவர் மேலும் கூறுகிறார். "எனவே, அன்பின் பல்வேறு அருமையான கனிகளை, கிறிஸ்துவின் நீதியின் அங்கியிலுள்ள பல மடிப்புகளின் ஒருமித்தப் பிணைப்பே, "கச்சை" என்று சித்தரிக்கப்படுகிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லபோனால், தாழ்மை, பொறுமை, சாந்தம் ஆகியவற்றைப் பொறுத்தவரை, மரியாதைக்குரிய விஷயங்கள் அல்லது கொள்கைகள் மட்டும் இருக்கக்கூடாது. ஆரம்பத்திலிருந்தே இந்த குணங்களை அவர்கள் பெற்றிருந்தாலும், அவர்களின் சொந்தமான பல்வேறு சித்தங்களின் அல்லது நோக்கங்கள் தேவனுடைய அன்பின் கயிறுகளாலும், கட்டுப்படுத்தி, தேவன் மேலும், நீதியின் மேலும், சகோதரர்கள் மேலும் அன்பு செலுத்தி, ஏங்கி தவிக்கும் இந்த முழு சிருஷ்டிகள் மேல் அனுதாபமுள்ள அன்பை பெறும் அளவு, இருதயத்தில் பூரணப்படாததினால், இராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். உண்மையில், அன்பு ஒரு பூரண பந்தம், அது ஆண்டவருடைய ஆவி.

**19.இறுதியாக அன்பு "பிரமாணத்தின் முடிவாக" எப்படி இருக்கிறது?**

"கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே"1தீமோத்தேயு 1:5

**R2734[col2. P6] through R2735 [col.1 P1]:**

இந்த அன்பின் பிரமாணத்தைப் பொருத்தவரையில், மாம்சமும், மாம்ச சிந்தையையும், நம்மை வஞ்சிக்கக்கூடிய இயல்பில் உள்ளது. மாம்ச சிந்தை, புதிய சிந்தையோடு கூட்டாக செல்ல முயலும். மற்றும் சில **நிபந்தனைகளின் கீழ்,** அன்பை வாழ்க்கையின் சட்டமாகவும், பிரமாணமாகவும், அங்கீகரிக்க ஆயத்தமாக

இருக்கும். வார்த்தையிலும், தொழில் ரீதியிலும், ஒழுக்கநெறிகளிலும், தெய்வீகதன்மையிலும், மாம்ச சிந்தை அன்பை ஒரு வல்லமையற்ற நிலையில் வெளிப்படுத்தும். தன்னைத்தான் ஏமாற்றிக் கொண்டு, மற்றவர்களையும் ஏமாற்ற முயலும் ஒரு சுயநலமான இருதயத்தின் பயிற்சியினால், அன்பு கோறுவது போல கனிவான நடத்தை, உதட்டில் புன்னகை, புகழ்ச்சியான வார்த்தைகள், கனவு, மென்மை காணப்படும். ஆனால் இருதயத்திலோ, சுயநலம், சோர்வு, கசப்பு, கடும் வெறுப்பு, பகை இவைகளுக்கு சாதகமான சூழ்நிலை அமையும் போது, அவதூறு பேசுதல், புறங்கூறுதல், அல்லது ஏச்சுப்பேச்சுகள் போன்றவை வெளிப்படும். இவைகள் தொடர்ந்து இருதயத்தில் உறுத்திக்கொண்டே இருந்தால், சாதகமான சூழ்நிலையில், சாத்தான் மற்றும் மாம்சத்தின் கிரியைகளாகிய கோபம், பகை, வெறுப்பு, மற்றும் துன்மார்க்கமான கிரியைகளைப் பிறப்பிக்கும். இது ஒரு சுத்தமான இருதயத்தின் சரியான பாதையை முற்றிலும் எதிர்க்கக்கூடியது. மற்றும் அன்பின் புதிய உடன்படிக்கையின் பிரமாணத்திற்கு முற்றிலும் மாறுப்பட்டது. ஆகையால், எங்களுக்காகவும், எங்களுடனும் உள்ள எல்லா தெய்வீக செயல் தொடர்புகளின் இறுதிப் பொருளையும், எங்களுக்கு வழங்கப்பட்ட எல்லா தெய்வீக வாக்குறுதிகளின் இறுதி முக்கியத்துவமும் - அன்பின் வளர்ச்சியே என்ற உண்மையை தெளிவாக நம்முடைய சிந்தைக்கு முன் நிறுத்த வேண்டும். இது தேவ சாயல், ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார். இந்த அன்பு நமக்குள் வளர்ச்சி அடைய அதாவது ஆண்டவர் உறுதி செய்திருக்கும் அளவின்படி வளர, அந்த அன்பு ஒரு சுத்த இருதயத்திலிருந்து வர வேண்டும்.மேலும், இது ஆண்டவரோடும் அவருடைய அன்பின் பிரமாணத்தோடும் முழுமையாக இசைந்திருக்க வேண்டும்.இது சாத்தானையும், அவனுடைய சுயநலமான கொள்கையையும் முழுமையாக எதிர்க்கும். இந்த விதமான அன்பு சரியாக வளர்ச்சி அடைய நல்ல மனசாட்சியும் தேவைப்படுகிறது. தவறான மனசாட்சி இருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்முடைய விழுந்துபோன பிற அம்சங்களைப் போலவே, நம்முடைய மனசாட்சியையும் சீரமைக்க வேண்டும். நம்முடைய மனசாட்சியை ஒழுங்குப்படுத்த வேண்டுமானால், அதை சீரமைக்க, ஒரு குறியளவு வேண்டும். மனசாட்சி ஒரு கடிகாரத்தைப் போல் உள்ளது.இது சரியான மணி நேரத்தை காட்டும். ஆனால் அது சரியான மணிநேரத்தை உண்மையாகக் காட்டுவதற்கு, அந்த கடிகாரத்திற்குள் இருக்கும் முக்கிய சுருள்வில்லை, (main - spring)சரியாக சீரமைக்கவேண்டும். இப்படியாகவே, நம்முடைய மனசாட்சியும், நமக்கு சரியானதையும், தவறானதையும் சுட்டிகாட்ட தயாராக இருக்கிறது. ஆனால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய வார்த்தைகளில், அன்பின் பிரமாணத்திற்கு முழு இசைவாக புதிய இருதயம், புதிய சித்தமாகிய முக்கிய சுருள்லில்லை (main - spring). நமக்குள் ஒழுங்குப்படுத்தினால் மட்டுமே, நம்முடைய மனசாட்சி உண்மையில் தவறையும், சரியையும் நமக்கு சரியாக சுட்டிக்காட்ட முடியும்.

### ௨0.அன்பு“நியாயப்பிரமாணத்தை நிறை வேற்றுவது” எப்படி?

"அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோமர் 13:10)

**R3180[col.2 P1,2]:**

அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றம்,என்று நம்முடைய ஆண்டவரால் நியமிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் விரிவான அறிக்கைக்கு அப்போஸ்தலர் நம்முடைய கவனத்தை அழைக்கிறார். எனவே அண்டை வீட்டாரை நேசிப்பதன் மூலம், தேவனுடைய நியாயப் பிரமாணத்தை அவர்களிடம் நிறை வேற்றப் படுகிறது. இருப்பினும், அன்பின் பிரமாணம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுவதை நினைவில் கொள்ள வேண்டும். முதலில் தேவனிடம் அன்பு, இரண்டாவது நம்முடைய சகோதரர்களிடம் அன்பு கூறவேண்டும். நம்முடைய அயல் வீட்டார் மேல் காட்டக்கூடிய அன்பு, தேவன் மேல் செலுத்தக்கூடிய அன்பில் ஒரு பகுதியாக இருக்கும். நம்முடைய அண்டை வீட்டாரை நேசித்து, இன்னும் அவர்களுக்காக நம் ஜீவனை கொடுத்திருந்தாலும், இந்த பிரமாணத்தின் முதல் அம்சத்தை நாம் புறக்கணிக்காதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது நம்முடைய அயல் வீட்டாரை காட்டிலும், நம்மை காட்டிலும், தேவனை அதிகமாக நேசிக்க வேண்டும். எனவே ஒவ்வொரு மனித விருப்பமும், காரியமும், தெய்வீக சித்தத்திற்கு மகிழ்ச்சியோடு பலியிடப்படவேண்டும். அன்பின் பிரமாணத்தின் இரண்டாம் பகுதியின் நிறை வேற்றத்தை பற்றி பேசும் போது - மற்றவர்களிடம் நமக்கு இருக்கும் பொறுப்பைக் குறித்து - கொலை,

வேசித்தனம், பொய்ச்சாட்சி, திருட்டு, போன்ற மாம்சத்தின் கிரியைகளுக்கு விரோதமாக - " என்ற பிரமாணத்தை அவர் சுருக்கமாக கொடுத்திருக்கிறார். நியாயப் பிரமாணத்தில் "இதை செய்யாதிருப்பீர்களாக" என்று தன்னுடைய அயலகத்தாருக்கு விரோதமான காரியங்களை பிரமாணங்களாக சொல்லப்பட்டது. ஆனால் புதிய அன்பின் பிரமாணம் அதற்கு எதிரிடையாக " (இதை செய்யுங்கள்)" என்று கூறுகிறது. இப்படியாக பத்து கற்பனைகளில் "செய்ய வேண்டாம்" என்று சொல்லப்பட்ட பல கற்பனைகளுக்கு பதிலாக "உங்கள் அயலகத்தாரை நேசியங்கள்" என்ற ஒரு கற்பனைக் கொடுக்கப்பட்டது. இப்படியாக அன்பின் பிரமாணத்திற்கு கீழ்படிந்து, பிறருடைய நன்மையை விரும்புவர்கள் நிச்சயமாக அவர்களை கொலைச் செய்ய மாட்டார்கள், அவருடைய நற்பெயரை திருடமாட்டார்கள், அவருக்கு தீங்கு நினைக்க மாட்டார்கள், அல்லது அவருக்கு விரோதமாய் அவதூறு பேச மாட்டார்கள், அவருடைய நற்பெயரை திருடமாட்டார்கள். அல்லது தீங்குச் செய்ய விரும்ப மாட்டார்கள் அல்லது அவரைப் பற்றி சிந்திக்கும்போது, அன்பில்லாமல் இருக்க மாட்டார்கள்.

**21.அன்பானது எவ்வாறு "புது சிருஷ்டியின் நியாயப்பிரமாணம்" - ஆக இருக்கும்?**

**F364(P1) through F367(P2) பாடத்தின் முடிவில் விளக்கத்தை காணலாம்.**

**22.அன்பு "சுயாதீனத்தின் பரிபூரண பிரமாணம்" என்று ஏன் அழைக்கப்படுகிறது?**

"சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" யாக்கோபு 1:25

**F377 through F378 ? சுயாதீனத்தின் பரிபூரணப் பிரமாணம்**

புதுசிருஷ்டியானது சரியான கட்டுப்பாடுகள், சட்டங்கள் இல்லாமல் ஆண்டவரால் அதிக சுயாதீனமாக விடப்பட்டிருக்கிறது என்று யாராவது நினைக்க முற்படுவார்களானால், அன்பு என்று ஒரே வார்த்தையில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட, இந்த தேவப்பிரமாணத்தின் நீளம், அகலம், பொதுவான விசாலத்தையும் காணும்போது, நிச்சயமாகவே அவர்கள் ஒரு மனமாற்றத்தைக் காண்பார்கள், அப்போஸ்தலர் அதை "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம்" (யாக்கோபு 1:25) என்று அழைக்கிறார். இது மற்றவர்களுக்கு அல்ல, தேவன் அவருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டிக்கு மாத்திரமே இந்தப் பிரமாணத்தை பயனுள்ளதாக்குகிறார். ஏனெனில், மற்றவர்கள் இன்னமும் மோசேயினுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாய், பணிவிடைக்காரர்களாய் "கிறிஸ்து விடுதலையாக்குகின்ற சுயாதீனத்திற்குத்" தகுதியில்லாதவர்களாய், குமாரர்களென்னப் படாதவர்களாகவும், இல்லையெனில் அவர்கள் ஆதியில் கொடுக்கப்பட்ட பிரமாணத்தின்படி மரண ஆக்கினைக்குட்பட்டிருக்கிறார்கள். ஆக்கினைக்குட்படுத்தப்பட்ட பாவிகள் இன்னும் புறம்பானவர்களாய், அந்நியராய், நம்பிக்கை இல்லாதவர்களாய், தேவனற்றவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் பொதுவான முறையில் முடிவாக உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வருகின்ற தேவனின் கிருபையைக் குறித்து அறியாதவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் இது வெகு சிலருக்கே தற்காலத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பெரும் திரளான ஜனக்கூட்டம் திவ்விய அன்பின், மீட்பின் செய்தியை கேட்கக்கூடாதபடிக்கு சத்துரு தடைப்பண்ணி இருக்கிறான். அவன் (சாத்தான்) தப்பறையான உபதேசத்தினால் மனுக்குலத்தின் பெரும்பாலானோரின் மனதைக் குருடாக்கி, அவர்களது செவிகளை அடைத்து வைத்திருக்கிறான். (11கொரிந்தியர் 4:4, 1தீமோத்தேயு 4:1) சுயாதீனம் என்பது பொல்லாதவர்களுக்கல்ல. அது அவர்களை சிறைப்படுத்துவதை சமுதாயம் காண்கிறது. ஆகவே பரிபூரண சுயாதீனப்பிரமாணம் என்பது பொல்லாதவர்களுக்கானது அல்ல, ஆனால் அது நல்லவர்களுக்கும், பரிபூரணமானவர்களுக்கும் உரியதாகும். ஆயிரம் வருட யுகத்தில் உலகமானது ஒரு அன்பின் பிரமாணத்திற்குள் விடப்படமாட்டாது, ஆனால் கீழ்ப்படிகிற ஒரு பிரமாணத்திற்கு உட்பட்டு, நீதியாகவும் கிருபையுடனும் ஆட்சி செய்யப்படும். இராஜ்யத்தின் முடிவு வரும்வரை (மனப்பூர்வமாய் தீங்குசெய்கிறவர்கள் இரண்டாம் மரணத்தில் வேரற்றுப் போகும் வரை) மனுக்குலம் திவ்விய திட்டத்திற்கு முற்றிலுமாக ஒத்துப்போனவர்கள், பரிபூரணமானவர்கள் என்று நிரூபிக்கப்படும் வரை, சுயாதீனப் பிரமாணமாகிய அன்பின் கீழாக, அதன் பொன்னான கற்பனைக்குக் கீழாக வைக்கப்படமாட்டார்கள். அவர்கள் சிறுவர்களாக இருக்கும் வரை அவர்கள் பணிவிடைக் காரர்களைப் போல எண்ணப்படுவார்கள். (எபிரெயர்

13:17) புது சிருஷ்டியானது இப்போது சுயாதீனப் பிரமாணத்திற்குக் கீழாக இருக்கிறது. அது அவ்விதமாகவே நடத்தப்படுகிறது, ஏனென்றால், "பழையவைகளெல்லாம் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. "இப்போது அவர்கள் பாவத்தை வெறுக்கிறார்கள், நீதியை நேசிக்கிறார்கள், இப்போது அவர்கள் அவர்களுடைய சுயாதீனத்தை, மாம்சத்தை திருப்திப்படுத்துவதற்குக் கிடைத்த தருணமாக உபயோகிக்கவில்லை. ஆனால் அதை அழிப்பதற்கும், பாவத்தில் சந்தோஷப்படாமல், பாவத்தை அப்புறப்படுத்தவும், உலகத்தை அதிலிருந்தும், அதன் சம்பளமாகிய மரணத்திலிருந்தும் விடுவிக்கவும் ஆண்டவரோடு இணைந்து செயல்படும்படியாக தங்களுடைய பூமிக்குரிய வாஞ்சைகளைப் பலியாகச் செலுத்த ஒரு தருணமாக உபயோகிக்கிறார்கள், தேவ ஆவியாகிய இந்தப் புதிய ஆவிக்குள் மறுபடியும் பிறந்து, மேலும் கிறிஸ்துவின் பள்ளியில் மாணாக்கர்களாகச் சேர்ந்து, அவரைக் குறித்து கற்றறிந்து அவருடைய பாதப்படியில் நடக்கிற இவர்கள், இவர்கள் மாத்திரமே, சுயாதீனப் பிரமாணத்திற்குக் கீழாக வைக்கப்பட முடியும். அவர்கள் தங்கள் புத்திர சுவிகாரத்தின் ஆவியை இழந்து போவார்கள் என்றால், அவர்கள் புத்திரராய் இருக்கமாட்டார்கள். இந்த சுயாதீனப் பிரமாணத்திற்குக் கீழாக இருப்பதில்லை. கிறிஸ்து விடுதலையாக்குகிற இந்த சுயாதீனத்தை இப்போது உபயோகிக்கக் கற்றுக்கொள்பவர்கள், இந்தப் பரிபூரண அன்பின் பிரமாணத்தின் கீழாக அர்ப்பணிப்பின் மூலமாக வருகிறவர்கள், இதற்குக் கீழாக இருக்கும் போது தங்களுடைய ஜீவனையே சகோதரருக்காகவும், சத்தியத்திற்காகவும், நீதிக்காவும் அளிக்கிறவர்கள், இப்படிப்பட்ட உண்மையுள்ளவர்கள், உலகத்தை ஆசீர்வதிக்கிற பெரிய வேலையில், தேவனுடைய பிரியமான குமாரனோடு, அவருடைய பிரிநிதிகளாகவும், உடன் சுதந்திரராயும் இருக்கத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படுவார்கள். அவர்களுடைய வேலைக்கு இந்தத் தகுதி எவ்வளவாய் தேவைப்படுகிறது, போதகர்களாகவும், உதவிக்காரர்களாகவும், நியாயம் தீர்க்கிறவர்களாகவும், உலகத்தை ஆளுகிறவர்களாகவும் இருக்கிறவர்களுக்கு இந்தத் தகுதி மிகவும் அவசியம் என்பது தெளிவாகிறது. இப்படியாக ஆயிரம் வருட யுகத்தின் போது பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு இது மிகவும் தேவைப்படுகின்றது. அதாவது இரக்கமும் உண்மையுள்ள இராஜரீக ஆசாரியராக இருக்கும்படி இவர்கள் அதிகமாக வளர்ச்சியடைய வேண்டும், மேலும் அன்புக்குரிய தகுதியில் சோதிக்கப்பட வேண்டும்.

**R2440[col.1 P2-5]:**

தேவனுடைய வார்த்தையாக இருக்கும் விளக்கின், சத்திய ஒளியின் பொதுவான தாக்கத்தினால், மூடநம்பிக்கையின் நிலைக்குறைகளை தகர்த்து, ஜனங்களை விடுதலைச் செய்கிறது. ஆனால் இந்த விளைவுகள், கிறிஸ்துவின் பள்ளியில் இராதவர்களுக்கு இலாபமாக இருக்குமா என்பது கேள்விக்குரியது. மற்றவர்களுக்கு, சுயாதீனம், அறிவின் வெளிச்சம், எந்த அளவுக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வருமோ, அந்த அளவுக்கு கேட்டின் கருமூலமாக இருக்கவும் வாய்ப்புண்டு. இது அடிக்கடி, சுயநலம், ஒழுக்கக்கேடு, தற்பெருமை, சண்டை மனபான்மை, அதிருப்தி மற்றும் பொதுவான சந்தோஷம் இழந்த நிலைக்கு வழிநடத்தும். சில விதங்களில் மட்டுமே விடுவிக்கப்பட்டு, மற்றவைகளில் கட்டப்பட்டவர்களாக இருப்பவர்களின் மேல் இந்த தீய விளைவுகள் வரும். மற்றும் இன்றைய நாகரீக உலகில், பெரும்பான்மையான பெயர் சபைகள் உட்பட, இது பொதுவாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளது. ஆனால் உண்மையான சீஷர்கள், பெரிய போதகரின் வார்த்தைக்கு செவிசாய்த்து, எல்லாவற்றிலும் தொடர்ந்து அவருடைய மாணவர்களாக இருப்பவர்கள், மூடநம்பிக்கைகள் மற்றும் அறியாமைகளிலிருந்து மட்டுமல்லாமல், பாவ ஊழியத்திலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்கள். மற்றும் அவர்களின் சொந்த பலவீனங்களை மற்றும் கறைகள் மற்றும் தெய்வீக சிந்தையாகிய சத்தியத்தின் சரியான புரிந்துக்கொள்ளுதலைப் பெறுவார்கள். இதன் விளைவாக, அவர்களின் சுயாதீனம், அவர்களை காயப்படுத்துவதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கும். தற்பெருமை மற்றும் பெருமைக்கு பதிலாக மனத்தாழ்மையைக் கொண்டுவரும், கோபத்திற்கு பதிலாக பெருந்தன்மையும் இரக்கத்தையும் கொண்டுவரும், ஆத்துமாவின் அதிருப்தி மற்றும் கசப்புக்கு பதிலாக சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தருகிறது. உண்மையாகவே, குமாரன் மட்டுமே நம்மை விடுதலையாக்க முடியும். எனினும், நம்முடைய விடுதலை மாம்சத்திற்குரியதல்ல, மாறாக, இது புதுசிருஷ்டியின் இருதயம், சிந்தை, சித்தத்திற்கான விடுதலை, என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த பொக்கிஷத்தை நாம் மண்பாண்டத்தில் பெற்றிருக்கும் வரையில், இந்த

விடுதலை அவசியம் நிறைவுபெறாது. ஆகவே இந்த புது சிருஷ்டி இந்த அபூரணமான மாம்ச சரீரத்தை அதனுடைய கருவியாகவும், மாதிரியாகவும் பயன்படுத்த வேண்டும். கிறிஸ்துவுக்குள் இந்த "சகோதரர்கள்", "உன்னதமானவரின் புத்திரர்கள்", அவர்களின் முதலாம் உயிர்த்தெழுதலில், பங்கடையும்போது, முற்றிலுமாக விடுதலை பெறுவார்கள், - "நான் எழுந்திருக்கும் போது உமது சாயலில் திருப்தியாவேன்." பாவம் செய்பவர்கள் பாவத்திற்கு ஊழியர்களாக இருப்பதினால், விடுதலை யாவதில்லை, என்பதை நம்முடைய ஆண்டவர் சுட்டிக்காட்டுகிறார். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். மேலும், "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1யோவான் 3:8, 1:8)" என்றும் கூறுகிறார். அப்படியானால், "பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" ( ரோம 6:18) என்ற இந்த எதிர்த்தரப்பு அறிக்கைகளை நாம் எவ்வாறு சமரசப்படுத்துவது ?

**R3145[col.2 P2 to end] பாபாடத்தின் முடிவில் விளக்கம் காணலாம்.**

### 23."ஆவியின் கனிகள்" எவ்வாறு அன்பின் வெவ்வேறு வெளிப்பாடுகளாக உள்ளது?

**F186 [P1,2]**

தேவனுடைய பிரியமான குமாரனுடைய இருதயத்திற்கு ஒத்த சாயலாய் இருப்பதற்கான இந்த வரம்புகளும் தகுதிகளும், நாம் ஏற்கெனவே, சுருக்கமாக பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த சாயலை குறிப்பாக ஆராய்ந்து பார்க்கும்போது, அப்போஸ்தலராகிய பேதுரு இங்கு சுட்டிக் காட்டுகிறபடி, நாம் பரிசுத்த ஆவியின் கனிகளை உடைவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதை காணலாம். தேவன் பரிசுத்தமுள்ளவர், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவருடைய ஆவியையும், நீதியின் மேல் அவருக்கு உள்ள அன்பின் சுபாவத்தையும் பெற்றவர்களாகவும், அக்கிரமத்தை எதிர்ப்பவர்களாயும் இருக்க வேண்டும். அப்போஸ்தலர் இந்த வேத பகுதியிலிருந்து தேவனுடைய பரிசுத்த ஆவியின் கிரியையின் பல்வேறு அம்சங்களைச் சுட்டிக்காட்டி, நாம் நம்முடைய ஓட்டத்தின் ஆரம்பத்தில், அவருடைய பரிபூரண சாயலை (பரிபூரண அன்பு) பெறும்படியான நிலைக்கு வருவதில்லை என்ற உண்மையை குறிப்பிடுகிறார். ஆனால் அதற்கு மாறாக அது ஓட்டம் முடிவு பெறுவதைக் காட்டும் குறியாக அல்லது அளவாக குறிப்பிடப்படுகிறது. அன்பு என்று பொதுவாக கூறும் போது குணாதிசயத்தின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாயிருக்கிறது. அவைகள் உண்மையில் அன்பின் பாகங்களாக உள்ளன. சாந்தம், தயவு, சகோதர அன்பு தேவ பக்தி எல்லாம் அன்பின் பகுதிகளாகும். யாரோ ஒருவர் தேவனுடைய ஆவியின் கனிகள் பின்வருமாறு வரையறுக்கலாம் என்று கூறியிருக்கிறார். நாங்களும் மனதார ஏற்றுக் கொள்கிறோம்.

1. சந்தோஷம் - அன்பில் அதிக சந்தோஷம்
2. சமாதானம் - இளைப்பாறுதலில் அன்பு
3. நீடிய பொறுமை - அன்பு நீடிப்பது
4. தயவு - சமுதாயத்தில் அன்பு
5. நற்குணம் - செயல்பாட்டில் அன்பு
6. விசுவாசம் - வாழ்க்கை என்னும் யுத்தகளத்தில் அன்பு
7. சாந்தம் - தன்னலமில்லாத அன்பு
8. இச்சையடக்கம் - பயிற்சியில் அன்பு

### 24.பரிசுத்த ஆவியின் உண்மையான கனிகளை நாம் எவ்வாறு தெரிந்துக் கொள்ளலாம்?

**R3545[col.2 P5] through R3546[col.1 P2]:**

ஆவியின் கனிகள் சில நேரங்களில், சத்தியத்தின் சேவையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, சத்தியத்தை பரப்புவது, சத்தியத்தை பேசுவது, இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், சத்தியத்தில் அறிவுக்கும் சிலரை கொண்டுவருதல், சத்தியத்தை வெளியிடுவதற்காக பணம் செலவழித்தல் - இவை அனைத்தும் ஆண்டவர் எதிர்பார்த்திட்ட கனிகள் என்று சிலர் கருதுகின்றனர். அப்படி இல்லை, கனிகள் இன்னும் மேன்மையானதும், இவைகளை காட்டிலும் மதிப்புவாய்ந்ததுமாக இருக்கிறது. அதை ஆவியின் கனிகள் என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். திராட்சை எல்லா கிளைகளிலும் ஊடுருவிருக்க வேண்டும். திராட்சைப் பழம் ஒவ்வொரு கொடியிலும் இருக்க வேண்டும். இந்த ஆவியின் கனிகள் - சாந்தம், தயவு,

பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு, மற்றும் அன்பு என்று கணக்கிடப்படுகிறது. இவைகள் நமக்குள் நிரம்பியிருந்தால்,நம்முடைய கர்த்தரும், இரட்சகருமானவரைப் பற்றிய அறிவில்,நம்மை கனியற்றவர்களாக இருக்கவொட்டாது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். சில குறிப்பில், இந்த கனிகள் அனைத்தும் ஒன்று. அதாவது, சரியான கிறிஸ்தவ பொறுமையின் உள்பொருள் -அன்பு. நம்பிக்கை, விசுவாசம் மகிழ்ச்சி ஆகியவற்றின் உள்பொருள், நம்முடைய பிதாவுக்கான அன்பு மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களில் வெளிப் படுத்தப்பட்டது போல அவருடைய அன்பின் மேல் நம்முடைய நம்பிக்கை.ஆகவே இந்த கனிகளின் பெயர்கள், ஆவியின் கிருபைகள் ஒரே வார்த்தையாகிய அன்பு என்று வெளிப் படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கொடிகளிலும் காணப்படவேண்டிய கனிகள் இவைகளே. ஒரு கொடியாக அதன் இடத்தை தக்க வைத்து கொண்டால், படிப்படியாக மகிமை அடையலாம். இவைகள் இன்று, மற்ற காரியங்களைச் செய்து, தேவனுடைய தெய்வீக ஆய்வில் தேர்ச்சி பெறுவோம் என்று எண்ணி, நம்மை நாம் வஞ்சித்துக் கொள்ள வேண்டாம். மற்ற காரியங்கள், நற்கிரியைகள், சத்தியத்தின் தேடல், சத்தியத்தை பகிர்ந்துக்கொடுத்தல், போன்றவைகள், நம்முடைய இருதயத்தின் இந்த கனியின் விளைவுகளானதால், ஒரு அளவுக்கு தான் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதை குறித்து அப்போஸ்தலர் ஆற்றலுடன் கூறிகிறார் - "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை." குறிப்பாக ஆண்டவருடைய ஊழியத்தை பார்த்தால், இதே சிந்தை உண்மையாக உள்ளது, நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் அறுவடைய வேலையின் செலவழித்து, நம்முடைய பணம் எல்லாவற்றையும் புத்தகங்களை அச்சிடுவதற்கு செலவழித்தாலும் அல்லது வேறு வழிகளில் கர்த்தருடைய ஊழியத்திற்காக நாமே செலவு செய்தாலும், நம்முடைய இருதயங்களில் இவைகள் அன்பின் விளைவுகளாக இராவிட்டால் அதனால் எந்த பிரயோஜனமும் இல்லை. அப்படியானால், பரிசுத்த ஆவியின் கனிகள், சாந்தம், தயவு, பொறுமை, ... அன்பு போன்ற குணங்களை நம் இருதயங்களில் பேணி வளர்க்க வேண்டும் என்ற சிந்தனையும், நாம் கர்த்தருக்கு பிரியமான வர்களாக இருப்பதற்கு"அதிக கனிகளை" ஏராளமாக கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையும் இருக்க வேண்டும்.ஆகையால், இந்த கனிகளின் வெளிப்பாடு, சந்தேகத்திற்கு இடமின்றி, பல வழிகளில் காணப்படும். ஒருவேளை, ஏழைகளுக்கு அன்னாதானம் கொடுக்கலாம், நாம் சுட்டெரிக்கப்படும் படியாக நம்மை இரத்த சாட்சியாக மரிப்பதற்கு வழி நடத்தக்கூடிய சத்தியத்தை அறிவிப்பதில் நம்முடைய விசுவாசம். நீதியின் கொள்கையின் மேல் நம்முடைய விசுவாசம், ஆண்டவரின் மேலுள்ள அன்பு மற்றும் நம்பிக்கை போன்றவைகளுக்காக நம்முடைய சரீரம் சுட்டெரிக்கப்படுதல் அல்லது நம்முடைய எல்லா பொருட்களின் இழப்பும் உண்மையில் மகிழ்ச்சிக்குரியது.

### 25. "பக்தி வைராக்கியம் அன்பின் அளவாக" எப்படி இருக்கிறது?

"அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி," (லூக்கா 7:41-43)

### R2201[col.1 P4-7]:

மரியாளின் மனப்பான்மையைப் பெற்றிருக்கும் யாவரும், ஆண்டவரின் பாதங்களை கழுவி, அபிஷேகிக்க முடியும் என்ற சிந்தனை எவ்வளவு ஆறுதலளிக்கூடியதாக உள்ளது. அர்ப்பணிக்கப் பட்ட சீஷர்களில் சிறியவருக்கு எதைச் செய்கிறீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று நம்முடைய ஆண்டவரின் சொந்த உதடுகளே அறிவித்தது. ஆசீர்வதிக்கப்பட்ட சிந்தனை, நம்முடைய ஆண்டவர் இன்னும் மாம்சத்தில் இருக்கிறார். அவருடைய சரீர அங்கங்களாக இருக்கும் உண்மையுள்ள புது சிருஷ்டிகள், ஆண்டவராக மதிக்கப்படுகிறார்கள். இவர்கள் இன்னும் மாம்சத்தில், கிறிஸ்துவுக்காக படும்பாடுகள் தொடருகிறது. மற்றும் கடைசி நபர் மகிமைப்படும் வரையில் இது முடிவுப் பெறாது. - கொலோசேயர் - 1-24.மேலும், வேதவாக்கியம்

நற்செய்தியைக் கொண்டுள்ளது - கிறிஸ்துவே சீரமாகிய சபைக்கு தலையானவர். இதற்காகவே கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளுக்குள் வளர்ச்சியின் செயல் நடைமுறையில் உள்ளது. இப்பொழுது சீரத்தின் இறுதி அங்கத்தினர் இங்கே இருக்கிறார்கள் - "அவரின் பாதங்கள்".பாத அங்கத்தினர் வகுப்பாரில் பலர் சோர்வடைந்து, களைப்புற்றவர்களுக்கு, அன்று ஆண்டவரின் பாதங்களுக்கு ஆறுதல் அளிக்கப்பட்டது போல இவர்களுக்கும் ஓய்வும், புத்துணர்வும், ஆறுதலும் தேவைப்படுகிறது. இயேசுவின் பாதங்களை பொறுத்தவரை, மரியாளின் மிகுந்த அன்பு நிரூபிக்கப்பட்டது போல, இப்பொழுது, கிறிஸ்துவின் அடையாளமான பாதங்களைப் பொறுத்தவரையில் சோதனை வருகிறது. வேதபாரகர்கள், வேதவல்லுனர்கள் மற்றும் பரிசேயர்களை ஒப்பிட்டுகையில், ஆண்டவர் தம்முடைய நாட்களில் செல்வாக்கற்றவராக இருந்ததுப் போல, பாத அங்கத்தினர்களும் இன்று செல்வாக்கற்றவர்களாக இருக்கிறார்கள். ஆண்டவரை அதிகமாக நேசிப்பவர், தாங்கள் பெற்ற பாவமன்னிப்பை நன்கு உணர்ந்துக் கொண்டவர்கள் மட்டுமே, அவருடைய "பாத அங்கத்தினரை" நேசித்து, இந்நாளிலும் அவர்களுக்கு ஊழியம் செய்ய விரும்பி, அவர்களோடு ஐக்கியப் பட்டிருப்பார்கள். சீமோன், நிக்கோதேமு போன்ற மற்றவர்கள் நன்கு அறிந்திருந்தாலும், கணிசமான ஆர்வமிருந்தாலும், தற்போதைய நசரேயனுடைய சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படுவார்கள். "உங்கள் தேவன் இராஜரீகம் பண்ணுகிறார்" என்று சீயோனுக்கு நற்செய்தியை சுவிசேஷமாக அறிவிக்கும் அவருடைய பாதங்களை கண்டு வெட்கப்படுவார்கள் - ஆயிர வருட யுகம் விடிந்து கொண்டிருக்கிறது, கிறிஸ்துவின் ஆட்சி துவங்கிவிட்டது. (ஏசாயா 52:7)சுவிசேஷம் அல்லது அதன் ஊழியர்களை நிமித்தம் வெட்கப் படுகிறர்வர்கள், ஆண்டவரும், பிதாவாகிய தேவன் நிமித்தம் வெட்கப்படுகிறவர்களாக இருப்பார்கள். இவர்கள் உலகத்தை ஜெயிப்பவர்களாக அங்கீகரிக்கப்படாமல், அதற்கு பதிலாக இந்த உலகத்தினாலும் அதன் ஆவியினாலும் ஜெயிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், சீஷர்களுக்குரிய சிறப்புரிமைகளிலும், முழு அறிவிலும் முன்னேறி செல்ல, தகுதியற்றவர்களாக காணப்படுவார்கள். மரியாளைப் போல, அதிக அளவிலான ஆவியைப் பெற்றவர்கள் வெகு சிலர். ஒருவருக்கொருவர் உதவி செய்யக்கூடியவர்கள் வெகு சிலர். ஆறுதலான வார்த்தைகள், உதவிகரமான ஆலோசனைகள் மற்றும் உற்சாகம் என்னும் பரிமளதைலத்தை ஒருவர் மீது ஒருவர் ஊற்றுவது வெகு சிலர். இவ்வாறு உதவக்கூடியவர்கள், "தலையின்" மேலும், பொதுவாக சீரத்தின் மேலும், இன்னும் பாத அங்கங்கள் மேலும் உண்மையான அன்பினால் நிறைந்திருப்பர். மரியாளின் சொந்த குறைபாடுகளின் புரிந்துக்கொள்ளுதல் மற்றும் அதற்கான ஆண்டவரின் இரக்கம் மற்றும் கிருபையினால் அவளுக்கு கொடுக்கப்பட்ட பாவமன்னிப்பே, அவர்களுடைய அன்பின் ரகசியமாக இருந்தது. இவர்கள் மட்டுமே தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிச்செய்யக்கூடியவர்கள் என்று சீரத்தின் அன்பான, உதவிசெய்யக்கூடிய அங்கத்தினரின் உணர்வுகளை பற்றி அப்போஸ்தலர் அறிவித்து, "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்." (11கொரிந்தியர் 5:14,15) என்றும் கூறுகிறார்.

**R3561[col.2 P1]:**

அதிகமாக அன்பு செலுத்துவோம்.சிலுவை சுமக்கும் நம்முடைய ஆர்வத்தின் வழியாக அன்பை வெளிப்படுத்துவோம். எந்த நேரத்திலும் நம்முடைய ஆர்வம் குளிர்ச்சியடைந்தால், "சிலுவை சுமக்காமல் கீரீடம் இல்லை" என்பதை நினைவில் கொள்ளுவோம். "அவரோடுக் கூட பாடுகள் பட்டால், அவரோடுக்கூட ஆளுகையும் செய்வோம், அவரோடுக் கூட மரித்தால் அவரோடுக் கூட உயிர்த்தெழுவோம்" என்ற அப்போஸ்தலர் பவுலின் வார்த்தையை நினைவில் கொள்ளலாம். ஆயினும் மரணத்தின் பயமோ அல்லது கிரீடத்தின் மதிப்புயர்வுகள் நம்முடைய நோக்கத்தை என்றுமே கட்டுப்படுத்தக்கூடாது. தேவன் நமக்கு செய்தவைகளை பற்றிய மதிப்பீடுகள், அவருக்காக நம்முடைய அன்பு, மற்றும் அவரைப் பிரியப்படுத்த விரும்பும் காரியங்களைச் செய்வதற்கான விருப்பம் ஆகியவை, நம்முடைய ஆண்டவர் மேலுள்ள பக்தியின் முக்கிய உந்து விசையாக இருக்கவேண்டும். இவ்வாறாக, நாம் பதிலளிக்கூடிய அன்பை காட்ட வேண்டும்.

ஆண்டவராம் இயேசு சபையின் தலையாக நீண்ட காலத்திற்கு முன்பு மகிமைப்படுத்தப்பட்டிருந் தாலும், அவருடைய "சரீரத்தின் அவயவங்களாக" இன்னும் நம்மை அவர் கண்டுணருகிறார். ஆகவே, இவர்களில் சிறியவருக்கு நாம் எதை செய்தாலும், அவர்கள் சிலுவை சுமப்பதற்கு நாம் எப்படிப்பட்ட ஒத்தாசை செய்தாலும், அவருக்காக நம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறோம் என்று அவர் நம்மை பாராட்டுவார். எந்த அளவுக்கு மற்றவர்களின் சிலுவையை சுமப்பதற்கு நாம் உதவி செய்கிறோமோ, அந்த அளவுக்கு அவரிடத்தில் நாம் அன்பு செலுத்துகிறோம் என்றும் அதை அவருக்கே செய்தோம் என்று எண்ணி, அவர் நம்மை பாராட்டுவார்.

## 26.வைராக்கியமான அன்பின் முக்கியத்துவம் என்ன, அதை நாம் எப்படி வளர்ப்பது?

### R2289[col.1 P4]:

நாம் எஜமானருக்கு மிக நெருக்கமாக இருந்து, அவருடன் ஐக்கியம் கொள்ள அடிக்கடி சலுகைப் பெற்றால், அதன் விளைவாக நமக்கொரு படிப்பினை உண்டு. அதேபோல நாமும் உற்சாகமான, ஆர்வமுள்ள ஆவியில் உண்மையாக வளரவேண்டும். குளிர்ச்சியை கணக்கிடும் ஜனங்களுக்கு மற்ற நல்ல குணங்கள் இருக்கலாம். ஆனால் ஆண்டவருடைய கிருபையை ஒரு முறை ருசித்தவர்களுக்கு, குளிர்ச்சிக்கும், வெது வெதுப்பான நிலைக்கு இடமில்லை. அப்படிப்பட்ட கொழுந்து விட்டெரியும் அன்பு, பட்சிக்கும் வைராக்கியத்திற்கு நம்மை வழிநடத்தவேண்டும். இவ்வாறாக நம்முடைய ஆண்டவராம் இயேசு, தம்முடைய தந்தையால் நேசிக்கப்பட்டதற்கு ஒரு காரணமாக இருந்தது. "என் பிதாவின் வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது" என்று அவரைக் குறித்து தீர்க்கதரிசி கூறினார். கர்த்தருடைய பார்வையில் பிரியமான இருக்க விரும்பும் யாவரும், நீதி மற்றும் சத்தியத்தின் அதே வைராக்கியமுள்ள ஆவியினால் நிறைந்து, அவைகள் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பலிகளாக அவருடைய பலிபீடத்தின்மேல் வைக்கப்படும். இவ்வாறு அவைகள் நம்முடைய கர்த்தராகிய இயேசுவினால், அவருக்கு மிகவும் பிரியமும், ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் உள்ளது. சட்டப்பூர்வமாக, அனலும், வைராக்கியமும் உள்ளவர்கள் மட்டுமே, பாபிலோனிலிருந்து விடுதலைப் பெறமுடியும். அவர்கள் ஒளிக்குள்ளாகி, கணிசமானவற்றைப் பார்த்தபோதும், இந்த உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் ஆவி, புதிய கண்மூடித்தனமான கட்டுகளினால், அவர்களை குருடாக்கி வைத்திருக்கும் வரையில் இவர்கள் ஆர்வமற்றவர்களாக காரியங்களை கணக்கிட்டு, எடைப்போட்டுக்கொண்டிருப்பார்கள்.

### R3199[col.2 P4,5]:

இந்த வழி எவ்வளவு குறுகியது, என்று சிலர் இறுமாப்பாக கூறுவதுண்டு, பவுலைப் போல சிலர், தங்களுடைய ஆற்றலை சத்திய சேவை என்ற ஒரே ஒரு காரியத்திற்காக ஒப்புக்கொடுப்பார்கள். ஆம்,

உங்களைப் போல் வெகு சிலர், இந்த "இடுக்கமான பாதையில்" செல்ல முற்பட்டு, எவ்வளவு இகழ்ச்சிகள் வந்தாலும், அதில் நடக்கத் தீர்மானிப்பவர்களை தவிர, இது உங்களுக்கு எதிரான தீர்மானமாக இருக்கும். நம்முடைய பரம அழைப்பின் பரிசுக்கான அடையாளத்தை குறிக்கும் வழி, வீணான தத்துவங்கள் மற்றும் மதியீனமாக கேள்விகள் மற்றும் பிதற்றுதல், அறிவியல் பற்றிய தவறான ஊகங்கள் ஏற்றுக்கொள்வதற்கு போதுமானதாக இல்லை. தேவனுடைய திட்டத்தை ஒப்புக்கொள்வது மட்டுமே போதுமானது. மற்ற எல்லா திட்டங்களையும் செயல்முறை ஏற்பாடுகளையும், கேள்விகளையும் நிராகரித்து, எவ்வளவு நிந்தைகள் வந்தாலும் அதை மனப்பூர்வமாக தாங்கிக் கொண்டு, தங்களை முழுமையாக அவருடைய பணியில் ஒப்புக் கொடுப்பார்கள். உங்கள் அழைப்பை எண்ணிப்பாருங்கள், உங்களை அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வர வழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்கு, நீங்கள் தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததியாயும், தேவனுக்கு ஏற்ற பலிகளை செலுத்தும் இராஜரீகமான ஆசாரியரும், பரிசுத்த ஜாதியும், விசேஷித்த ஜனங்களுமாக இருக்கிறீர்கள். இந்த ஒளிக்குள் நாம் அழைக்கப்பட்டிருக்கும் ஒரு நோக்கம், அதை நாம் பிரகாசிக்க வேண்டும் என்பதே. நாம் அதை பிரகாசிக்கவில்லை என்றால், அதற்கு நாம் அபாத்திரராகிவிடுவோம். நம்மிடம் இருந்து இந்த பொக்கிஷம் எடுக்கப்பட்டு, மீண்டும் நாம் இருளுக்குள் விடப்படுவோம். நாம் உண்மையில் வெளிச்சத்தைப் பெற்றிருந்தால், முழுமையாக தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்திருந்தால், "இருளிலிருந்த என்னை வெளியே கொண்டு வந்தவரைப் பற்றிய புகழை வெளிப்படுத்துவதற்கு நான் என்ன செய்துக் கொண்டிருக்கிறேன்?" என்ற கேள்வியை நம்மிடம் கேட்கலாம். என் அருகில் மற்றும் தொலைவில் இருக்கும் அண்டை வீட்டாருக்கு இந்த நற்செய்தியை அறிவிக்க நான் செல்லுகிறேனா ? தெய்வீக குணத்தை மெய்ப்பித்து காட்டவும், தேவனுடைய நீதியான பாதைகளை அறிவிக்க, நாளுக்கு நாள் நான் சுறுசுறுப்பாக

முயற்சிக்கிறேனா ? என்னுடைய நேரத்தையும், பொருளாதாரத்தையும் சிக்கனம் செய்து, என்னுடைய தற்காலிகமான வேலைகளை ஒழுங்கு செய்து, போதுமான நேரத்தை தேவனுடைய வேலைகளை செய்வதற்கு ஒதுக்குகிறேனா ? அதன்பின், சத்தியத்தை நன்கு அறிந்திருக்க நான் விடாமுயற்சியுடன் படித்து வருகிறேனா ? இப்படியாக, என்னை சுற்றியுள்ளவர்கள் என்னை வாசிக்கும் படியாக, உண்மையில் நான் ஒரு வாழும் நிரூபமாக இருக்கிறேனா ? ஒரு ஊழியக்காரர், உண்மையில் வெட்கப்படவேண்டிய அவசியம் இல்லை.

“என் அனைத்து பரிகரிக்கும் வல்லமைகள், என் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் எல்லாம், என் நாட்கள், என் மணிநேரங்கள் எல்லாம், இயேசுவுக்கே, எல்லாம் இயேசுவுக்கே”-என்று உறுதியாக என்னால் உண்மையில் சொல்ல முடியுமா ?

**R2808[col.2 P3]:“நான் வரும் வரைக்கும் இவன் உயிரோடிருக்க எனக்கு சித்தமானால் உனக்கென்ன... ”**

யோவானைப் பொருத்த வரையில் நம்முடைய ஆண்டவருடைய இந்த வார்த்தைகள், அப்போஸ்தலனாகிய யோவான் மரிப்பதில்லை என்ற யோசனையை சீஷர்களின் சிந்தையில் எழுப்பியதைப் போல் தோன்றுகிறது - அதாவது மற்றவர்கள் மரித்தாலும், இயேசுவின் இரண்டாம் வருகை வரைக்கும் யோவான் உயிரோடிருப்பார். ஆனால் இயேசு அப்படிப்பட்ட காரியத்தை சொல்லவில்லை என்று யோவான் தாமே கூறுகிறார். அது முற்றிலுமாக சீஷர்களின் ஒரு அனுமானமாக இருந்தது. சுவிசேஷ யுகத்தின் முடிவில், நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னம் வரை, சபையாக வாழ்ந்துக்கொண்டிருக்கும் சிலரை யோவான் அடையாளப்படுத்துவதை நாம் காணலாம். யோவான் உயிரோடில்லை, ஆனால் அவர் அடையாளப்படுத்தும் வகுப்பார், தொடர்ந்து, இந்நாள் வரையில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். பின்னர் மறுரூபமாக்கப்படுவார்கள். தேவனை மகிமைப் படுத்தும் ஞானமும், இந்த கிருபையும், இந்த ஆசீர்வாதத்தின், காலம் வரை உயிரோடிருப்பதற்கு நாம் சலுகைப் பெற்றுள்ளோம். மற்றும் யோவானின் அன்பான மனப்பான்மை, அவருடைய ஆற்றலும், பக்தியும், நமக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், அவர் அன்பான சீஷர் என்று அழைக்கப் பட்டாலும் அவருடைய சகோதரனுடைய பாணியில் கட்டுக்கடாங்காத வைராக்கியம் கொண்டிருந்த தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும் - இடி முழக்கத்தின் சகோதரர்கள். அவர் நமக்கு தந்த நம்முடைய சரீரத்தினாலும், ஆவியினாலும், முழு ஆற்றலுடன், அன்பினால் ஏவப்பட்டு முழு பலிகளைச் செலுத்தி, நம்முடைய ஆண்டவரை மகிமைப்படுத்துவோம். இந்த முடிவு காலம் வரை, ஏழு சபைகளுக்கும் முழுமையாக பொருந்தக்கூடிய நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை, நாம் நினைவில் கொள்ளலாம்."இவைகளைவிட என்னை அதிகம் நேசிக்கிறாயா ?" என்று முழு சபையின் சார்பாக பேசக்கூடிய பேதுருவுக்கும் இது பொருந்தும். இதே கேள்வி, இன்றைய ஆண்டவரின் அனைத்து ஜனங்களிடமும் கேட்கப்படுகிறது. இந்த உலகம், வியாபாரம், வீட்டு கடமைகள், சமுதாய வசதிகள் முதலியவற்றிற்கு நாம் உலகோடு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தொடர்பு கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. இப்போது கேள்வி என்னவென்றால், "புது சிருஷ்டிகளாக" , அவருடைய "இராஜரீகமான ஆசாரியர்களாக" இருக்கும் நாம், தேவனுடைய கடமைகளுக்காக, நம்முடைய சொந்த கடமைகளை சமநிலைப்படுத்தி, தேவனுடைய கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது ? அவரை காட்டிலும், பூமியின் காரியங்களை அதிகமாக நாம் நேசிப்பதை ஆண்டவர் காண்கிறாரா ? அப்படியானால், நாம் அவருக்கு தகுதியற்றவர்கள் என்று அவர் அறிவிக்கிறார், மற்றும் அவருடைய மணவாட்டியாக நம்மை அவர் கண்டுணரமாட்டார். வீடுகளையும், நிலங்களையும், கணவர்கள் அல்லது மனைவிகள் அல்லது பிள்ளைகள் அல்லது மற்ற எந்த பூமிக்குரிய காரியங்களை விட அவரை அதிகமாக நேசிப்பவர்களை மட்டுமே அவருடைய சிறு மந்தையாக தெரிந்துகொள்கிறார். - மத்தேயு 10:37

**R2888[col.2 P3]:**

யோசேப்பினிடம் வந்த செழிப்பு அவருடைய சிந்தையை மாற்றவில்லை. அதற்கு தன்னை தகுதியுள்ளவராக காண்பித்தார்.அதாவது அந்த செழுமையை புத்திசாலித்தனமாக பயன்படுத்திக் கொள்ள, அவருடைய முந்தைய அனுபவங்கள் ஆதாயமாக இருந்தது. வியாபாரத்தில் அவர் சுருசுப்புள்ளவராக இருந்தார். சிந்தையில் ஆர்வமுள்ளவராக இருந்தார், இதை கண்ட தேவன் அவருக்கு வழியைத் திறந்தார். அவர் உடனடியாக அவருடைய திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தார். களஞ்சியங்களை அல்லது பண்டக சாலைகளைக் கட்டிய

மைப்பதற்கு நேர்த்தியான தளங்களை தீர்மானிப்பதற்காக எகிப்தின் எத்திசையிலும் பயனித்ததே, அவருடைய முதல் நடவடிக்கையாக இருந்தது. ஆண்டவருடைய ஆசீர்வாதம் தொடர்ந்து அவரோடிருந்து, அவருக்கு நியமிக்கப்பட்டிருந்த வேலைகளில் முன்னேற்றம் அடைந்தார். இவ்வாறாக இது நம்முடனும் இருக்க வேண்டும். தேவனுடைய சேவையின் எந்த ஒரு துறையிலும், நமக்கு வாய்ப்பின் கதவை திறக்க அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். அதில் நாம் உடனடியாக ஆற்றலுடனும் வைராக்கியத்துடனும், அவர் நம்மை அழைத்ததற்கான நோக்கத்திற்காக அதில் பிரவேசிக்க வேண்டும். அவர் நம்மை ஏற்றுகொள்ளுவதற்கு இது ஒரு நிபந்தனையாகும். வாய்ப்புகளை பயன்படுத்துவதில் நாம் சோம்பலாக இருந்தால், சந்தேகத்திற்கிடமின்றி அவைகள் நம்மை விட்டு அகற்றப்பட்டு, மற்றவர்களுக்கு கொடுக்கப்படும். ஏனென்றால், ஆண்டவர் ஒருவரின் சுயாதீனத்தில் தலையிடாமல், ஒருவரை அல்லது மற்றொருவரை அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உயர்த்த, ஏராளமாக ஆற்றலுடையவராக இருக்கிறார். தேவனோடும் குறிப்பாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடும் கூட உடன் வேலையாட்களாக ஒருமித்து, இந்த மகத்தான சேவையைச் செய்வதற்கு நாம் பெற்ற சலுகையை எண்ணி அதிகதிகமாக பாராட்ட வேண்டும். மேலும், அவர் நம்மை அவருடைய மணவாட்டி மற்றும் பங்காளிகள் என்று அழைப்பதனால் நாம் பெற்ற ஐக்கியத்தை எண்ணி, சந்தோஷப்படவேண்டும்.

### R2006[col.1 P4, last third]:

மகிழ்ச்சியோடு நற்செய்தியைப் பிரசங்கிக்க உங்களுக்கு பட்சிக்கும் பக்தி வைராக்கியம் இல்லை என்றால், அதற்காக உண்மையுடனும், விசுவாசத்துடனும், இடைவிடாமலும் ஜெபியுங்கள். அதற்காக முயற்சி செய்யுங்கள். நீங்கள் விரைவில் அதைப் பெறுவீர்கள். உங்களுக்கு நற்செய்தியின் மேல் அன்பும் வைராக்கியமும் இருந்தாலும், அதை வழங்குவதற்கு திறமை இல்லாவிட்டால், நீங்கள் பெற்ற திறமையை முழுமையாக பயன்படுத்திக் கொண்டே, அதிகமான திறமைக்காக ஜெபியுங்கள். உங்களுக்கு வைராக்கியமும், திறமையும் இருந்து, வாய்ப்புகள் இராவிட்டால், அதை நீங்கள் உடனடியாக ஜெபத்தில் தேவனிடம் கொண்டு செல்லுங்கள், உங்களிடம் உள்ள எல்லா வாய்ப்பு களையும் நீங்கள் உண்மையாகப் பயன் படுத்துகிறீர்கள் என்று அவரிடம் கூறுங்கள். பிறகு, உங்கள் அருகில் இருக்கும் மிகக் குறைவானதும், மிக எளியதுமான வாய்ப்புகளை சோர்வின்றி பயன்படுத்திக்கொண்டு விழித்திருங்கள்.

### 27.அன்பான கீழ்ப்படிதலை நாம் எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்?

### R1944[col.2 P1,2]:

அனுபவத்தின் பள்ளியில், நாம் மிகவும் மதிப்புமிக்க பாடங்களை கற்றுக்கொள்கிறோம். ஆழமான அனுதாபம், மிகுந்த பொறுமையுணர்வு, மற்றும் மென்மையான உதவிடும் உணர்வுகளோடு நாம் காணும் முதிர்ச்சி அடைந்த பரிசுத்தவான்கள், துன்பகரமான தீச்செயல்களை, சரியான முறையில் பயன்படுத்தி, இந்த நிலைக்கு வந்திருப்பதை காணலாம். அப்பொழுது சிலுவை மிகவும் பாரமானது, மேகங்கள் இருளடைந்தது, புயல் உச்சக் கட்டத்தை எட்டியது, அங்கு எஜமானருடைய பிரசன்னம் அதிகமாக உணரப்பட்டது. விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் ஆசீர்வதிக்கப்பட்ட போதனைகள், ஆண்டவருடைய கனிவு, ஆண்டவரின் தனிப்பட்ட அன்பு ஆகியவை சீஷர்களின் இருதயத்தில் முத்திரையிடப்பட்டன. இதுபோன்ற ஒழுக்கத்தின் கீழ், ஆத்துமா ஒரு கனிவான ஆழ்ந்த அன்பின் கீழ்ப்படிதலுக்குரிய மனப்பான்மைப் பெற்று, "என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எதையும் செய்ய எனக்கு பெலன் உண்டு" என்று அமைதியாக கூறும்.படிப்படியாக பழைய சுபாவத்தின் கசடுகள் களையப்படும்போது, பொன் அதிகதிகமாக வெளியே வரும். இந்த விலைமதிப்பற்ற ஆத்துமாக்கள் தங்கள் அன்பான தேவனுக்கு என்றும் நேசிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு துன்பங்களிலும் அவருடைய கிருபையை தக்க வைத்துக் கொள்ளவும் அவர்களை மகிழ்விக்கவும் அவரே அவர்கள் அருகில் இருக்கும் அளவுக்கு அவர்கள் அவருக்கு மிகவும் நேசிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அப்போது, துயரத்தின் ஆழமான நிழல்கள், பரிசுத்தமான ஓய்வு இடங்களாக நினைவில் தங்கிவிடும். அங்கு பகல் நட்சத்திரம் பிரகாசிக்கும். கிறிஸ்தவருக்கு எப்போதாவது ஒரு புதிய சோதனை வந்தாலும், " நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை... என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும்.... உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." என்ற ஆண்டவருடைய பிரமாணத்தை சிந்தைக்குள் கொண்டு வருவார். இது தைரியத்தை ஊக்குவித்து, நீடிய சகிப்பு தன்மையை கொண்டு வந்து, சுயத்தை பலி செலுத்த விரைவுபடுத்தும். "பொன் அக்கினியால்

சோதிக்கப்படும்" அதை உருக்கும் பாத்திரமும், அக்கினியும் இல்லாமல் எவ்வாறு அது புடமிடப்படமுடியும் ? அல்லது அதில் உள்ள கசடு எவ்வாறு அகற்றப்படும் ? வேறு வழி இல்லை. "ஆகவே இதை குறித்து நீங்கள் திகையாதேயுங்கள்" அக்கினி பட்சித்து எரியட்டும். கழிவுகள் அகற்றப்படட்டும். அந்த அக்கினி கொழுந்து, பலிபீடத்தின் மேலுள்ள "ஜீவ பலியை" எரித்துவிடாதபடிக்கு பார்த்துக்கொள்ளுங்கள். புடமிடுகிறவரின் கண்கள் எப்போதும் உங்களை நோக்குவதை நினைவுக்கொள்ளுங்கள். அந்த பொன்னைப் புடமிடுகிறவர், அதில் தம்முடைய உருவம் பிரதிபலிக்கிறதா என்று அவருடைய கண்கள் அதை கவனித்துக் கொண்டிருக்கிறது. புடமிடக்கூடிய நம்முடைய மீட்பர் உன்மேல் கண் வைத்திருக்கிறார். விலைமதிப்பற்ற பொன்னாகிய உங்கள் நற்குணங்கள் அவருடைய உருவத்தை எப்படி பிரதிபலிக்கிறது என்று அவர் கவனிக்கிறார். தெளிவாக சொல்லப் போனால், ஒவ்வொரு சோதனையிலும், நம்முடைய செயல்களை கட்டுப்படுத்தும் தாக்கங்களை அவர் கவனிக்கிறார். அது தற்போதைய நன்மையின் செல்வாக்கா அல்லது உலக கொள்கை, அல்லது தனிப்பட்ட நட்பு, அல்லது பூமிக்குரிய அன்பு அல்லது கணவன் அல்லது மனைவி அல்லது குழந்தைகள் அல்லது வீடு, அல்லது நிலங்களா அல்லது மனுஷருக்குள் மதிப்பை பெறுவதா அல்லது என்ன விலைக்கொடுத்தாலும், சமாதானத்திற்கான அன்பா அல்லது மறுபுறம் நாம் சத்தியத்தின் மற்றும் நீதியின் அப்பட்டமான கொள்கைகளினால் கட்டுப்படுத்தப்படுகிறோமா மற்றும் என்ன நஷ்டம் வந்தாலும், கஷ்டம் வந்தாலும், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை கசப்பான முடிவு, வரையிலும், அதாவது மரண பரியந்தமும் போராடி இந்த கொள்கைகளை முழு வைராக்கியத்தோடும் ஆற்றலோடும் பாதுகாக்கிறோமா என்று அவர் கவனிக்கிறார்.

**R2412[col.2 P6] through R2413 [col.1 P1]:**

அதிருப்தி அடைய விரும்புகிறீர்களா, உங்கள் வாழ்க்கையின் அனுபவங்களில் உள்ள நிறைய ஏமாற்றங்களை உணருகிறீர்களா ? நீங்கள் மரித்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் உங்கள் சுயசித்தம் இன்னும் மரிக்கவில்லை என்று இக்காரியங்களின் மூலமாக அறிந்துக் கொள்ளலாம். யார் ஒருவர் தன்னுடைய சொந்த சித்தத்தை முழுமையாக தேவனுடைய சித்தத்திற்குள் புதைத்துவிட்டாரோ, அவர் ஏமாற்றத்தைப் பற்றி அறியமாட்டார். ஆனால் அவருடைய வாழ்கையின் எல்லா விவகாரத்திலும், விசுவாசத்தின் வழியாக, தெய்வீக நியமனங்களையும் அல்லது மேற்பார்வையையும் காண்கிறார். மேலும் அவருடைய வாழ்க்கையில் சகல காரியங்களிலும் "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"( ரோமர் 8:28) என்று உறுதியளிக்கும், தேவனுடைய வார்த்தைக்கு செவிக்கொடுக்கிறார். நம்முடைய இருதயம் ஒரு பூரண தகுதியைப் பெறுவதற்கு இது ஒரு சான்றாகும். இவைகள் நம்முடைய ஞானமும் அன்புமுள்ள தேவனால் பகிர்ந்து கொடுத்திட்ட அனுபவத்தின் ஒரு பகுதியாக உள்ளதென்று அறிந்தால், மிக பெரிய எதிராளி மற்றும் இந்த உலகம் மற்றும் நம்முடைய சொந்த மாம்சம் ஆகியவற்றின் எதிர்ப்புகளை நம்மால் பொறுமையோடும், முறையிடாமலும், முறு முறுக்காமலும், "மகிழ்ச்சியோடு" எதிர் கொள்ளலாம், இதுவே "நல்ல போராட்டமாகும்". முதல் யுத்தம் கடுமையானது. மற்றும் ஒவ்வொரு பின்தொடரும் யுத்தத்திலும் எளிதாக வெற்றிப் பெறலாம். ஒவ்வொரு வெற்றியின் போதும், புதிய சித்தம் (தேவனுடைய சித்தம்) உறுதியாக வளர்ந்து, விசுவாசிகளுக்கு தேவன் ஒதுக்கி வைத்திருக்கும் காரியங்களை, நம்பிக்கையின் பார்வையில் வளர்ந்து, விசுவாசத்தின் பலமும், சகிப்புத்தன்மையும் அதிகரிக்கும். முதன் முதலில் வெற்றியோடு ஆசீர்வாதம் வருகிறது. ஒவ்வொரு வெற்றிக்கும் பிறகு, ஓய்வு, சமாதானம் போன்ற ஆசீர்வாதங்களும், பரிசுத்த ஆவிக்குள் மகிழ்ச்சி மற்றும் விசுவாசத்தின் முழு உறுதியும், "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்;" (மத்தேயு 5:11) என்று நம்முடைய போதகர் வாக்களித்தது போல அனைத்தும் கூடக் கொடுக்கப்படும். இந்த ஒரு நிலைப்பாட்டிலிருந்து மட்டுமே, மனவலிமையோடும் குறைக்கூறாமல் ஏற்றுக்கொள்ள இயலக்கூடிய, பொறுமை, விடாமுயற்சி, விசுவாசம், நம்பிக்கை, மற்றும் தேவன் மேல் கொண்ட அன்பு ஆகியவற்றின் எந்தவிதமான சோதனைகளும் உங்கள்மேல் அனுமதிப்பது பொருத்தமானது என்று ஆண்டவர் காணலாம். இந்த நிலைப்பாட்டில் நம்முடைய எல்லா அனுபவங்களும்,

ஆசீர்வதங்களில் முடிவடையும். ஆயினும், மேற்பரப்பில், அநுகூலம் இல்லாதது போல் தோற்றம் அளிக்கும்.

**R3060[col.2 P5]:**

அதேபோல ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு -தேவன் சில பாடங்கள் மற்றும் அனுபவங்களை கொடுத்த பிறகு, அதில் சிலரது, அமைதியான மற்றும் இளைப்பாறுதலின் நிலையில் வரலாம். நடைமுறை சார்ந்த ஒழுங்குகள் மாறலாம் மற்றும் தேவனுடைய முன்னேற்பாட்டின் அறிகுறிகள் பொருத்தவரையில்,புதிய சூழ்நிலைகளுக்கும், நிலைப்பாட்டிற்கும் வழிநடத்தக்கூடிய, சாதகமான அல்லது சாதகமற்ற சூழ்நிலைகளுக்கும் வழிநடத்தலாம். உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர், முறுமுறுக்கவோ அல்லது புகார் செய்யவோ அல்லது தங்களுடைய விருப்பத்தேர் வைக்கூட வெளிப்படுத்தக் கூடாது. வழிநடத்துதலுக்காக தேவனை நோக்கியிருக்க வேண்டும். அவர் தெய்வீக முன்னேற்பாட்டின் வழிநடத்துதலைப் புரிந்துக்கொள்ள முடிந்தால், அவர் முன்னிருந்ததைக் காட்டிலும் மிக வறண்ட மற்றும் விரும்பத்தகாத நிலையில் இருந்த போதிலும்,கேள்விக்கு இடமில்லாமல் அவர் விசுவாசத்தின் பாடல்களோடும், நம்பிக்கையோடும் தேவனுடைய வழிநடத்துதலைப் பின்பற்ற வேண்டும். நாம் கானானை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நாம் வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக்கொள்ள, நம்மை பாதிக்கக்கூடிய அனுபவங்களை கடக்க வேண்டும். எந்த முறுமுறுப்பில்லாமல், மகிழ்ச்சி யோடே, ஆண்டவரின் வழிநடத்துதலுக்கு கீழ்படிதலின் வழியாக பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம். இதற்கு முன் கொடுக்கப்பட்ட பாடங்களைக் கற்றுக் கொண்டவர்களிடம் மட்டுமே இதை நாம் எதிர்ப்பார்க்க முடியும். மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசத்தின் பாடம் - ஆண்டவரின் வல்லமை, நன்மை மற்றும் விசுவாசத்தின் மேலுள்ள உறுதியான நம்பிக்கை.

**28.பூரண அன்பு பாவிகள் மற்றும் நம்முடைய எதிரிகளையும் உள்ளடக்க வேண்டுமா? மற்றும் நாம் வெறுப்பது பாவத்தை, பாவிகளை அல்ல என்பதை நாம் எவ்வாறு தீர்மானிக்கலாம்?**

"எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" (லூக்கா 6:27,28)

**R2412[col.2 P 4,5]:**

"நல்ல போராட்டத்தை போராட" இதுவே சரியான நேரம். சாந்தமாகவும் பொறுமையுடனும் நல்ல எண்ணங்கள் மற்றும் நல்ல செயல்களின் தவறான பிரதிபலிப்புகள், அவதூறான பேச்சுக்கள் மற்றும் தவறான விளக்கங்களை ஏற்றுக் கொள்வதற்கு, சுய-சித்தத்தின் மேல் முழுமையாக வெற்றிக் கொள்ள வேண்டும். தேவனுடைய அன்பின் ஆவி, நமக்குள் நிறைந்திருப்பதற்கும், நம் சொற்களிலும் செயல்களிலும் மட்டுமல்ல, பெரும்பாலான சிந்தனைகளிலும், கட்டுப்பாட்டுக்குள் அது தன்னை வெளிப்படுத்துவதற்கு இதுவே சரியான நேரம். நம்முடைய பகைவர் மற்றும் அவதூறு செய்கிறவர்களுக்கு எதிராக கடுமையான கசப்பான உணர்ச்சிகள் எழுந்தாலும், அதை எதிர்த்து போராட வேண்டும். "உங்கள் எதிரிகளை நேசியுங்கள், உங்களை துன்புறுத்துபவர்களுக்காக ஜெபியுங்கள் அவர்களை ஆசீர்வதியுங்கள், சபியாதிருங்கள் (காயப்படுத்தாதிருங்கள்)" என்ற நம் பெரிய போதகரின் அடிச்சுவடுகளோடு இசைந்து இனிமையாக இருக்கும் அவருடைய கற்பனைகளை கடைபிடித்து, முழுமையாக அதன் மீது வெற்றி பெற வேண்டும். "காயப்படுத்தாதிருங்கள்" என்பதற்கு, உங்களுடைய எதிராளிகளை நீங்கள் கொல்ல கூடாது அல்லது உடல்ரீதியாக காயப்படுத்தக்கூடாது என்று பொருள் அல்ல. ஆனால் போதகரின் வார்த்தையைக் கவனித்தால், "என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்" என்ற சொற்களைக் கேட்கலாம். அதோடு, "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1பேதுரு 2:22,23) என்று அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளையும் காணலாம். நீங்கள் விசுவாசமுள்ள ஒரு மாணவன் என்றால், சுயாதீனத்தின் பூரண பிரமாணம் மற்றும் கிறிஸ்துவின் பிரமாணம் ஆகியவை, இருதயத்தில் உள்ள எண்ணங்கள் மற்றும் எண்ணங்களின் பகுப்பாய்வு என்பதை வெகு சீக்கிரத்தில் காணலாம். மற்றும் அனைத்து பாவங்களையும் வெறுத்தாலும்,

பாவிகளை வெறுக்க இயலாது. ஏனெனில் தேவனுடைய அன்பு நம் இருதயத்தில் புரணமாக இருக்கும். நீங்கள் உங்கள் எதிரிகளை நிந்திக்கவோ, பழிவாங்கவோ கூடாது, அவ்வாறாக சிந்திக்கவும் கூடாது என்பதே இதன் பொருளாகும். தீய ஆசை சிறைப்பிடிக்கப்படவேண்டும், அதை பிறப்பிக்கும் சுயநலமான சூழ்நிலைகள் முற்றிலும் அழிக்கப்பட்டு, அதற்கு பதிலாக கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பு இடம் பெறவேண்டும். - 1கொரிந்தியர் 4:16,1கொரிந்தியர் 6:10 வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

**R2896[col.1 P1,2]:**

அனைத்து ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் இந்தப் பாடம் கற்றுக்கொள்வதற்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் . அதாவாது, எந்தவொரு விஷயத்தையும் நல்லது என்று ஏற்றுக்கொண்டு, தெய்வீக முன் திட்டப்படி,நாம் அந்த முடிவுகளுக்கு வழிநடத்தப்பட்டிருப்பதை உணர்ந்தால், நம்முடைய நலனுக்காக கருவிகளாக பயன்படுத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர்களிடம், மிகுந்த தாராளமாகவும், தயவாகவும் இருக்க வேண்டும். உண்மையை அறிந்திருந்தால், அவர்கள் விரும்பிய பயிற்று விப்பாளராக இருந்திருக்கமாட்டார்கள். அல்லது யோசேப்பின் சகோதரர்களைப் போல, அவர்கள் தெய்வீக முன் திட்டப்படி, பயன்படுத்தப்பட்ட கருவிகளாக இருந்தாலும், எதிர்மறையான முடிவுகளை சந்தித்தார்கள். தங்கள் அன்றாட வாழ்வில் செயல்படும் விவகாரங்கள் மற்றும் சக்திகளின் இத்தகைய கருத்தை எடுத்துகொள்ள இயலுபவர்கள், "எப்பொழுதும் ஆண்டவரால் வெற்றிக்கொள்ள முடியும்". சாத்தானுக்கு எதிராகவோ, அல்லது அவனுடைய ஊழியர்களுக்கு எதிராகவோ கசப்பான உணர்வுகளோ, வசைமொழியோ, இவைகளுக்கு இடமே இல்லை என்று அப்போஸ்தலர் இதை குறித்து அறிவிக்கிறார் - 11கொரிந்தியர் 2:14, யூதா 9. இது தீய வழியை நல்லவழி என்று அழைக்கப்படுவதாக அர்த்தமில்லை. அல்லது அவர்கள் தீய பாதையில் செல்வதற்கோ, அல்லது தீய உள்நோக்கங்களை ஊக்குவிப்பதற்கோ அல்லது தீய செயல் நோக்கங்களுக்கும் தீய வழிக்கும் இசைவாக இருக்கும் வரையில் அந்த நபர்களுக்கும் எவ்விதமான அனுதாபம் காட்டவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்களின் காரியங்களில் தெய்வீக மேற்பார்வையைப் பற்றிய சிந்தனைகளால் நிறைந்திருக்கும் என்றும் மற்றும் எப்பொழுதும் சர்வவல்லவரின் நிழலில், பாதுகாப்பின் கீழ் இருக்கும் என்பதையும் பொருள்படுத்துகிறது. வெளிப்புறமாக காரியங்கள் எப்படி தோன்றினாலும் சரி, எல்லாவற்றையும் தங்கள் நன்மைக்காகவே, நடைபெறுகிறது என்று அறிந்து, அவர்களுக்கு தீமை செய்ய நினைப்பவர்கள் அல்லாது வெளிப்புறமாக தீமை செய்பவர்களை, வார்த்தை களினாலோ, இருதயத்திலோ, எந்தவிதமான கசப்பான உணர்வுகளின்றி இருப்பார்கள். இவர்களின் தீய எண்ணங்களும், நடத்தைகளையும் தேவனுடைய வல்லமையினால், ஒதுக்கி தள்ளப்படும். தேவனுடைய ஜனங்கள், சூழ்நிலையை ஒரு விரிவான கண்ணோட்டத்தில் காணும்படியாக, ஒரு பெரிய இடத்தை எடுத்துக் கொள்கிறார்கள். அந்த ஒரு நிலையில் அவர்கள் கோபம், தீமை, வெறுப்பு, எதிரிகளை எதிர்த்துப் போராடுவது ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதோடு, அனைத்து புயல்களிலும், எல்லா சீர் கேடுகளின் மத்தியிலும், "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தோடு" அவர்களுடைய இருதயத்தை பாதுகாப்போடு காத்துக் கொள்வார்கள் - ஏனெனில் அவர்களின் நங்கூரம் திரைக்குள்ளே உள்ளது. அவர்கள் "தேவனே உண்மையானவர், என்று தங்களுடைய நிறைவாக அமைத்துள்ளார்கள்", எனவே எப்போதும் மகிழ்வார்கள்.

மன்னா மார்ச் 21 -"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்." மத்தேயு 5:44

இது போன்று உங்கள் சொந்த இதயத்தின் உண்மையான மனநிலையை ஆராய ஒரு வழி உண்டு. நீங்கள் மகிழ்ச்சியுடன் அவர்களிடம் தயவை காண்பித்து, அவர்களின் தவறான வழிகளை அவர்கள் கண்டு அதிலிருந்து விடுபடுவதற்கு உங்களுடைய ஆற்றலைக் கூடுமான அளவுக்கு பயன்படுத்தி உதவ முடியுமா ? இவர்களுக்காக நீங்கள் மென்மையாக ஜெபம் செய்து, அவர்களது பலவீனங்களையும், அறியாமைகளையும், வளர்ச்சியின் குறைவையும், பொறுமையுடன் தாங்கி கொண்டு, இன்னும் சிறந்த வழியைக் காட்டுவதற்கு ஒரு சிறந்த உதாரணமாக நீங்கள் இருக்க முயற்சி செய்வீர்களா ? அப்படியானால்,

நீங்கள் பாவியை அல்ல பாவத்தையே இழிவாக எண்ணுபவர்களாக இருப்பீர்கள். நீங்கள் பாவத்தை வெறுக்க வேண்டும். பாவியை ஒருபோதும் வெறுக்கக்கூடாது. பாவம் மற்றும் பாவியும் பிரிக்கமுடியாத அளவுக்கு இணைந்திருப்பதாக தேவனுடைய தவறிழைக்காத நியாயத்தீர்ப்பு வரையில், அன்பு அவர்களை ஒரு சகோதரர்களாகப் பற்றிக்கொள்ளட்டும்.

**29.அன்புக்கும் நீதிக்கும் இடையேயான உறவு என்ன?**

**R3070- அன்பு மற்றும் நீதியின் கோரிக்கைகள் இந்த பாடத்தின் முடிவில் இப்பகுதியை காணலாம்.**

**R3323[col.1 P1,2]-நாம் இலக்கை அடைய வேண்டும், இல்லாவிட்டால் பரிசு நம்முடையது அல்ல.** புது சிருஷ்டிக்கு இன்னும் முழுமையான நிறுத்தம் இன்னும் வரவில்லை. அவர் ஒரு பரிபூரண நிலையை அடையவதற்கு முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர் இராஜ்யத்தின் வகுப்பாராக எண்ணப்படமாட்டார். உண்மையில், இந்தப் புது சிருஷ்டிகளை முதலில், கிறிஸ்துவுக்குள் பிறந்தக் குழந்தைகள் என்று அப்போஸ்தலர் பேசுகிறார். ஆனால் இராஜ்யம் ஜெயம் பெற்றவர்களாலே கட்டப்படும், கிறிஸ்துவுக்குள்ளான குழந்தைகளைக் கொண்டல்ல. நாம் அறிந்திருக்கிறபடி, ஜெயம் கொள்ளுதல், என்பது உடல் நிலைப்பாடு அல்லது வயதைப் பற்றிய காரியமல்ல, அது கருணை, அறிவு மற்றும் அன்பில் காணப்படும் ஆவிக்குரிய வளர்ச்சி. நாம் அன்பில் வளர வேண்டும், அன்பே அடிப்படையான கூர். ஆனால் இந்த அன்பை நாம் பேணி வளர்ப்பதற்கு முன், நாம் நீதியாகவும், நியாயமாகவும் இருக்க கற்றுக் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தின் சரியான விளக்கம் என்னவெனில், பழமொழியில் சொல்லப்பட்டதுபோல, ஒரு மனுஷன் பெருந்தன்மை அல்லது தாராளமாக இருப்பதற்கு முன் நீதியாக நடந்துக் கொள்ள வேண்டும். எனவே, புதிய சிருஷ்டிகள், தொடர்ந்து நீதியின் பாடத்தை படிப்பதோடு, தினமும் தெய்வீக வார்த்தையில் கற்பிக்கப்பட்டு, படிப்பினைகளை நடைமுறைப்படுத்தி வருவதினால் கர்த்தருடைய ஜனங்கள் பலனடைகிறார்கள். பரிசுத்தவான்கள் அனைவரும் பாவத்திற்கு எதிரிகளாக இருக்க வேண்டும். பாவம் எங்கு இருந்தாலும் அதற்கு எதிராக அவர்கள் போராடவேண்டும். மற்றும் தங்களுடைய இருதயங்களில் பாவத்திற்கு தயவு செய்யாமல் அதை எதிர்த்து நின்று, தங்களுடைய இருதயங்களில், பலவீனங்கள் தங்கும் இடமாகவும், தயைக்காட்டவோ இடம் கொடுக்காதபடிக்கு, தங்களுடைய இருதயம் பாவத்திலிருந்து முழுமையாக விடுப்பட்டுள்ளதா என்று கவனிக்க வேண்டும். இது அவர்களுடைய வாயின் வார்த்தைகள், வாழ்வின் நடத்தைகள் மற்றும் அவர்களின் இருதயங்களின் தியானமும், தெய்வீக வார்த்தையோடும், நீதி, பரிசுத்தம் மற்றம் சத்திய ஆவியோடும் முழுமையாக இசைந்திருக்கச் செய்யும். இத்தகைய நற்குணங்களின் அடித்தளத்தை அவர்கள் உருவாக்கும் முன் அவர்கள் அன்பை உருவாக்கி, அதில் ஒழுங்கான முன்னேற்றம் அடைகிறார்களா என்பதை கவனிப்பார்கள். அநீதி அல்லது நீதியான கருத்துகள் தவறு என்ற சிந்தைனைகளின் மீது நிறுவப்பட்ட எல்லா விதமான அன்பும், ஆண்டவரின் சீஷர்கள் என சோதிக்கப்படுவதற்கு, தேவனுக்கு தேவைப்படும் அன்பு அல்ல.

**R3020[col.2 P2]:**

அன்பு அவசியமாக நீதியின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஏனெனில், தேவனுடைய பிரமாணம், அல்லது அவருடைய தேவைகள் நீதியை அடிப்படையாகக் கொண்டவைகள், "அவருடைய சிங்காசனத்திற்கு நீதியே அஸ்திபாரம்." நாம் இந்த நிலைப்பாட்டிலிருந்து, ஆண்டவரின் கட்டளைகளைக் காண வேண்டும். எனவே, நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பு நீதியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதாவது, அன்பு, பக்தி, அவர் செய்தவற்றிற்கான பாராட்டு மற்றும் அவர் நமக்காக இனி செய்வதாக வாக்களித்த காரியங்களுக்காக கடமைப் படிருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆண்டவருக்கு நம்முடைய அன்பான, பக்தியுள்ள கீழ்படிதலை அவருடைய நீதி கோருகிறது. அன்பை பொருத்தவரையில், நம் சக ஊழியர்களுக்கும் இப்படியாகவே இருக்க வேண்டும். நீதி, நம்முடைய பரலோக தந்தையின் ஒழுங்கைப் பொருத்தவரையில, நம்முடைய அண்டை வீட்டாருக்கும் சரியானதைச் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது. நமக்கு எதைச் செய்துக் கொள்கிறோமோ, அதையே அவர்களுக்கும் செய்ய வேண்டும். இது முழுமையான நீதியிலும் அதிகமானதல்ல.எனினும் இதுவே, அன்பின் தெய்வீக பிரமாணத்தின் ஆவியும், சாராம்சமாகவும் உள்ளது. ஆயினும், அன்பின் கற்பனையின் முதல் அம்சம் நீதியாக இருந்தாலும், அதுவே தேவைகளில் முடிவல்ல.கண்டிப்பான நீதிக்கும் அப்பாற்பட்டது, நம்முடைய அன்பு நம்மை

இரக்கத்தையும், மன்னிப்பையும் பயிற்றுவிக்க நம்மை உந்துகிறது. இப்படியாக நாம் இவைகளை பயிற்றுவிக்கையில், மீண்டுமாக நாம் தெய்வீக அன்பின் மாதிரிகளாவோம். ஏனெனில், நம்முடைய பரலோக தந்தை, தம்முடைய சகல சிருஷ்டிகளோடு நீதியாக மட்டும் அல்ல, நீதியின் வரம்புக்கு மிஞ்சி, இரக்கத்தினாலும், மிகுந்த கிருபையினாலும் கிறிஸ்து இயேசுவுக்குள் பாவிகளுக்கு மீட்பளித்தார். உண்மை, அவருடைய நீதியை மீறி இதை அவர் வழங்கவில்லை. எனினும், அன்பினாலும், இரக்கத்தினாலும், நமக்கு உதவிச் செய்யும்படிக்கு, நீதியை புறக்கணித்ததுப் போல நம்மைப் பொருத்தவரையில் தோன்றலாம். எனவே, நம்மை போலவே விழுந்துபோன, அபூரணமான, இன்னும் நன்றியற்றவர்களிடம் கூட நாம் நடைமுறை தொடர்புக் கொள்ளும் போது, இந்த அம்சத்தை நினைவில் கொள்ளுவதோடு, அவர்களிடம் நீதியாக நடப்பதோடு, கூடுதலாக அவர்களிடம் இரக்கத்தோடும், தாராளமாகவும், கனிவோடும் பெருந்தன்மையாக நடந்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு, நாம் நம்முடைய பரலோக பிதாவின் பிள்ளைகளாக இருக்கலாம்.

## R3635[col.2 P2,3]:

**கேள்வி -** "சுமுத்திரையான நிறைகோலும் தராசும் கர்த்தருடையது; பையிலிருக்கும் நிறை கல்லெல்லாம் அவருடைய செயல்" என்று நீதிமொழிகள் 16:11ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

எனவே, நாம் பூரணப்பட்டு, தேவனுடைய சிங்காசனத்தின் நீதியின் அஸ்பாரத்தின் மேல் நிறுவப்பட்ட அரியணையில் அமர்ந்து, நீதியின் கொள்கைகளின்படி செயல்படும் வரையில், நாம் நியாயத்தைக் காட்டிலும், அன்பின் குணநலத்தை வளர்க்க நாம் முயலக்கூடாதா ?

பதில்: நாம் பூரணப்படும் வரையில் காத்திருக்காமல், இப்போதே நீதியின் கொள்கைகளை கைக்கொள்ளவேண்டும். தெய்வீக நீதியின் செயல்பாட்டையும், மனுக்குலத்தின் மேல் நீதி மற்றும் அநீதியான செயல்பாடுகளையும், நம்மை பற்றிய சிறப்பான திறனாய்வோடு கவனிப்பதற்கு முயற்சிக்கவேண்டும். நியாயத்தை மதிக்க தவறிவிட்டால், அதற்கு சரிசமமாக இரக்கம் காட்டவும் தவறிவிடுவார்கள். ஏனென்றால், அன்புக்கும் நீதிக்கும் உள்ள வித்தியாசம் வெறும் கருணையே. மற்றவர்களிடம் நாம் நியாயமாக நடந்து கொள்கிறோமா என்று கவனிக்க முயற்சிக்க வேண்டும். மற்றும் ஆண்டவரின் வழிநடத்துதலின் படியே, "நியாயமாக நடந்து, நியாயத்தீர்ப்பைக் கடைபிடிக்கவேண்டும்." ஆனால் நம்முடைய சொந்த அபூரணத்தை நாம் சரியீடு செய்வதற்கு, மற்றவர்களின் அபூரணத்தையும் அவர்களின் பலவிதமான குற்றங்களையும், அன்பினால் மூடவேண்டும். ஆயினும், நீதியின் ஒளியில் நாம் நம் நடத்தையைக் காண நாம் நாட வேண்டும், மேலும் முடிந்தளவுக்கு நாம் நமது குறைப்பாடுகளுக்கு சிறிதளவே சலுகைகளை கொடுக்கவேண்டும்.

## 30.அன்பு மற்றும் இரக்கத்திற்கும் இடையில் உள்ள உறவு என்ன?

## R2853[col.1 P3, கடைசி வரி ]:

இந்த உலகில் நிலவுகின்ற துன்பங்கள், பெரும்பாலும் சுயநலத்தின் நேரடியான அல்லது மறைமுகமான விளைவுகளாகும். வாழ்க்கையில் பெரிய விஷயங்களிலோ அல்லது சிறிய விஷயங்களிலோ, கருணைக்கு எதிராக பயிற்சிக்கவும் அல்லது முன் மாதிரியாக இராதபடிக்கு, ஆண்டவருடைய ஜனங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சுயநலம் என்பது ஒரு மோசமான இயல்பு என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இதை எதிர்த்து போராட வேண்டும், முடிந்தவரையில், புதிய சுபாவத்தினால் அதை ஒதுக்கி தள்ளவேண்டும்.

## R2856- ஆபிரகாமின் ஆர்வமிகுந்த ஜெபம் (முதல் இரண்டு பத்திகள்)

இந்த பாடத்தின் போது ஆபிரகாமுக்கு தொண்ணூற்று ஒன்பது வயது. அவர் தனது குடும்பம், வீட்டார், ஊழியர்கள், மேய்ப்பர்கள் மற்றும் ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்ட நபர்களோடு மமரேவின் சமபூமியில் குடியிருந்தார். அவருடைய விசுவாசம் இன்னும், தேவனுடைய வாக்குத்தத்தத்தை சார்ந்திருந்தது. அந்நேரத்தில் பதிமூன்று வயதான அவருடைய குமாரன் இஸ்மயேல் மூலமாக நிறைவேறும் என்று அவர் எந்த சந்தேகம் இல்லாமல் நம்பினார். அவர் கூடார வாசலில் ஓய்வெடுத்து கொண்டிருக்கையில், மூன்று புருஷர் அவரை நோக்கி வந்தார்கள். இந்நாள் வரைக்கும் அந்த தேசத்தின் ஷேக்குகளின் வழக்கப்படி, ஆபிரகாம் எழுந்து அவர்களுக்கு எதிர்கொண்டு போய், அவர்கள் அந்நியராக இருந்தாலும், அவர்களை உபசரித்தார். காலப்போக்கில், அவருடைய விருந்தாளிகள் பரலோக ஜீவிகள் என்பதையும், தேவைக்காக

அவர்கள் மனித ரூபம் எடுத்திருப்பதையும் ஆபிரகாம் உறுதிப்படுத்திக் கொண்டார்.-அதில் ஒருவர் யேகொவா தேவனுடைய விசேஷித்த பிரதிநிதியாகவும், பிரதான தூதர்களில் ஒருவராகவோ அல்லது மனித நிலைக்கு முன் இருந்த ஆண்டவராம் இயேசு என்று நாம் நினைக்கிறோம். ஆபிரகாமை சந்தித்தவர்கள் இன்னார் என்று அவர் கேள்விப்பட்டபோது, அவர்களை அன்பாக, உபசரித்ததை எண்ணி, அவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார். அப்போஸ்தலர் இந்த விஷயத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வருகிறார். விருந்தோம்பல் காட்ட எப்போதும் விழுப்புடன் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். மேலும் இந்த நிகழ்வை சுட்டி காட்டி "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு"(எபிரெயர் 13:2) என்று கூறுகிறார். உண்மைதான், பண்டைய காலத்தை பார்க்கையில், இன்று சூழ்நிலைகள் பல வழிகளில் வேறுபாடாக உள்ளது. இன்று பயணிகளுக்கு விடுதிகள், வழிப்போக்கர் தங்குவதற்கு உணவகங்கள் போன்றவைகள் உள்ளது. எனவே நம்முடைய பொறுப்புகள் குறைந்துவிட்டது. இந்த ஒரு காரியம், உண்மையில், நம்மை அதிக சுயநலமுள்ளவர் களாகவும், குறைவான உபசரிப்பின் உணர்வுள்ளவர் களாகவும் மாற்றி விடுமோ என்ற பயம் நமக்குள் ஏற்படுகிறது. ஆபிரகாமை போல, வேண்டுகோளுக்காக காத்திராமல், செய்த விருந்தோம்பலை தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் பேணி வளர்ப்பார்கள். வாரியிறைத்தும் விருத்திடைய வாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமைடையவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் ( நீதிமொழிகள் 11:24,25) என்று இந்த வசனம் குறிப்பிடுகிறது.தாராள குணத்தை நடைமுறைப்படுத்துவதில், நாம் தேவனுடைய சாயலை வளர்த்துக் கொள்கிறோம். ஏனென்றால் தேவன் உதாரகுணமுள்ளவர் அல்லவா ? அவர் தன் சிருஷ்டிப்புகளுக்கு தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார் அல்லவா? அவர் அளித்த பரிசுகளில், மிக பெரிய பரிசு - நமக்காக, நம்மை மீட்கும்படி, அவருடைய ஒரே மகனை மரிக்கக் கொடுத்தார். உண்மை, அனைவரும் தாராள மனப்பான்மையை ஒரேவிதமாக நடைமுறைப்படுத்த முடியாது. கடன் அல்லது வறுமையில் உள்ளவர்கள் தங்களை தான் சரியாக கவனித்துக்கொள்வதே தடைப்படுகிறது. கடன்கொடுத்தவர்கள், குடும்பம் மற்ற இதர காரியங்களுக்கு நிதி வழங்குவதே வரையறுக்கப்படுகிறது. இருப்பினும், இரக்கம் மற்றும் விருந்தோம்பலின் ஆவி எப்போதும் பெருக வேண்டும். வாய்ப்புகள் குறைவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும் அதை வெளிப்படுத்த வேண்டும். மற்றும் இந்த விஷயத்தை அரிதாக நடைமுறைப்படுத்துபவர்கள், தற்காலிகமான காரியங்களிலும், இதனால் கிடைக்கும் ஆதாயத்தை இழந்துவிடுவார்கள். உதவி வேண்டி வருபவர்களுக்கு தேவையான எல்லா உதவிகளையும் நாம் கொடுக்க முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் ஆறுதல் மற்றும் உற்சாகத்தின் வார்த்தைகளை கூறலாம். இது பணத்தை விட அதிக மதிப்புள்ளதென்று நிரூபிக்கப்படும். அநேகருக்கு, தற்காலிகமான உதவிகளைக் காட்டிலும், ஆவிக்குரிய ஆலோசனை மற்றும் அறிவுரை மற்றும உற்சாகம் தேவைப்படுகிறது. இதை ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவரும் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சாயலை பெறுவது - ஏங்கி தவிக்கும் சிருஷ்டிப்புகளுக்கும் "விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும்" உதவி செய்ய வேண்டும் என்று விருப்பம் கொண்டிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தை மட்டும் அல்ல, நம்முடைய பூமிக்குரிய வசதிகளையும், மகிழ்ச்சியையும் செலவழித்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே சரியாக பொருள்படுகிறது.

### 31.அன்பு மற்றும் பயத்திற்கும் இடையிலான உறவு என்ன?

"அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" 1யோவான் 4:18

### R2289[col.2 P2-5]:

கர்த்தருக்கு பயப்படும் பயம் உண்மையான ஞானத்தின் ஆரம்பம் மட்டும் அல்ல, அது நம் பயணம் முழுமைக்கும் மதிப்புமிக்கதாக உள்ளது. தற்போதுள்ள சத்தியத்தின் ஒளியைப் பெற்றவர்கள், மத்தியில் ஒரு போக்கு காணப்படுகிறது. மற்றும் தெய்வீக குணம் மற்றும் திட்டத்தைப் பற்றிய தவறான விளக்கங்களால், தூண்டப்பட்டு கொடூரமான மற்றும் அடிமைத்தனமான பயத்தை போக்குகிறார்கள் அல்லது இழக்கிறார்கள்.மேலும், நமது தற்போதைய அபூரண நிலைமைகளின் கீழ்

தீவிரமான உரிமை அனுமதியளிப்பது, வேதப்பகுதியின்படி மிகவும் ஆபத்தானதாகும்.

"பூரண அன்பு பயத்தை புறம்பேப் போக்கும்" என்பது உண்மைதான். ஆனால், இந்த பூமியில் பரிசுத்தவான்களின் மத்தியிலும், பூரணமான அன்பு அரிதானது என்பதும் உண்மை. எனவே, ".... அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற் கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்." (எபிரெயர் 4:1) என்று அப்போஸ்தலர் வலியுருத்துகிறார். "ஒரு கண்ணியை உண்டாக்கும் மனிதனின் பயத்தை" நாம் முழுமையாக இழக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவனைப் பற்றிய பயத்தை இழந்தவர்கள், தங்களுக்கு முன் தேவன் வைத்திருக்கும் மகத்தான பந்தயப் பொருளையும் இழக்கக்கூடிய பயத்தில் இருக்கிறார்கள். இது ஒரு அபாயகரமான நிலை. அவர் தன்னறிவுடையவராகவும் சுய திருப்தி அடைபவராகவும் பெரும்பாலும் மாறி, அவர் நம்பாத நிலைக்கு அதாவது பாவிகளுக்கு எதிரான நியாயத்தீர்ப்பான இரண்டாம் மரணத்திற்கு கூட உடனடியாக வழுவிப்போய் விடுகிறார். அதாவது, கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள நியமங் களுடனான கடுமையான ஒழுங்கமைப்பில் அவரது சொந்த வார்த்தைகளையும் எண்ணங்களையும் செயல்களையும் கடைப்பிடிப்பதில் அவர் அக்கறையற்றவராக இருந்திருப்பார். ஆண்டவர் மேலுள்ள பயத்தை இழந்ததினால், ஆண்டவரின் வார்ததைகளை மதிக்கும், பொறுப்பை விரைவாக இழப்பார். மேலும், தன்னுடைய சொந்த புரிந்துக் கொள்ளுதலின் அதிகதிகமாக நம்பி, தனது சொந்த தவறுகளுக்கு குருடாக்கப்படுகிறார். வேதாகமத்தில் பயத்தை கூடுதலாக ஊக்குவிக்கும் பகுதிகளை கவனமாக காணலாம். இவைகளில் சிலவற்று, பின்வருமாறு - "கர்த்தருடய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்", "கர்த்தருக்கு பயப்படுகிறவர்களே அவரைத் துதியுங்கள்..","அவர் கிருபை என்றுமுள்ளதென்று காத்தருக்கு பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக. .","..தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.", "கர்த்தருடைய கிருபை அவருக்கு பயந்தவர்கள் மேலும்....என்றென்றைக்கும் உள்ளது",அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து...", "தமக்கு பயந்து, தனது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

(சங்கீதம் 34:9, 22,23. 118:4, 103:13,17. 145:19, 147:11) . "ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக்கா 12:5) என்று ஆண்டவர் கூறுகிறார். "மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு."(ரோமர் 11:4, எபிரெயர் 4:1) பவுல் கூறுகிறார். "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்" "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்."(1பேதுரு 2:17, அப்போஸ்தலர் 10:35) என்று பேதுரு கூறுகிறார். "அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.""என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்" (மல்கியா 3:16, 4:2) நம்முடைய அருமை இரட்சகரும் தேவனுக்கு பயந்தார் என்று பதிவுகள் கூறுகிறது. "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு," (எபிரெயர் 5:7) இந்த ஏராளமான வசனங்களில் உள்ள பாடம் என்னவெனில், தேவனைப் பற்றிய பயத்தை இழந்து, அதாவது கிருபையாக தேவன் நாம் அடையக்கூடிய பெரும் சாத்தியமான காரியங்களை இழந்துவிடுமோ என்ற பயம் அல்லது அவருடைய அதிருப்தியினால் ஏற்படும் பயம், ஒரு மிகபெரிய இழப்பாக இருக்கும். அநேகமாக நம் நித்திய ஜீவனை ஒருவேளை இழக்கவும் நேரிடலாம். இந்த பயத்தை இழந்தவர்கள், தங்கள் ஆளுநர்களை இழந்த நீராவி - இரயில் வண்டிகள் போல இருக்கிறார்கள். அதிகபட்சமான சுயாதீனத்தோடு சுய அழிவை நோக்கி ஓடி, ஊழியத்திற்கு தகுதியற்றவர்களாக இருக்க பொருத்த மானவர்களாக இருக்கிறார்கள். இதனால், பரலோக தேசத்தை தேடக் கூடியவர்களுக்கு "...நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்." (1பேதுரு

1:17) என்று அப்போஸ்தலர் மீண்டும் கூறுகிறார். கருத்தின்மையோ, உலகத்தின் அற்பமான காரியங்களோ, உணர்ச்சி வசப்படுவதிலோ, நிலத்திலோ, பணத்திலோ, கவனக்குறைவிலோ, அல்லது இன்னும் சோம்பேறிதனத்தினாலோ அல்ல, எந்த ஒரு வார்த்தையையும், செயலையும் கர்த்தரைப் பிரியப்படுத்துவதற்கு கவனமாக விழிப்புடன் இருந்து, அவருடைய சாயலை அணிந்துக் கொள்வதற்கும், இவ்வாறாக அவருடைய இராஜ்யம் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் ஸ்தாபிக்கப்படும் போது, நம்முடைய அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் அதில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### 32.அன்பு மற்றும் அறிவுக்கு இடையிலான தொடர்பு என்ன?

"விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும்" 1கொரிந்தியர் 8:1

### E239[P2]:

இயேசு கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாய் வளர்ச்சி அடையும் வளர்ச்சியும், அதற்கு ஏற்றவாறு முதிர்ச்சி அடைவதற்குரிய ஆவியின் கனியையும் பெறுவதற்கு, ஆவியின் சாட்சியை, பெற்றிருக் கிறோமா என்று ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அன்பிலும், ஆவிக்குரிய மற்ற கனிகளிலும் வளர்ச்சி அடைவதும் நம்முடைய அறிவின் வளர்ச்சியை அடிப்படையாக கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தெய்வீக காரியங்களில் அறிவின் வளர்ச்சி, நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் அடிப்படையை கொண்டிருக்கிறது. அறிவின்படிகள் ஒவ்வொன்றாக நாம் கடக்கும்போது, அதற்கேற்ற பொறுப்புகளையும் கீழ்படிதல்களையும் நாம் கற்று கொண்டு, வழிநடத்தப்படுகிறோம். அப்படிப்பட்ட பொறுப்புகளிலும் கீழ்படிதல்களிலும் வழி நடத்த படும் போது, நாம் அறிவில்,அடுத்த படியை கடந்து செல்கிறோம். இப்படியாக கிறிஸ்துவின் பள்ளியில் அநேக அனுபவங்களின் வழியாக தேவனால் கற்பிக்கப்பட்டு ஆவிக்கேற்ற சாட்சிகளாய் இருக்கிறோம். கிருபையிலும் அறிவிலும் நாம் வளர்ச்சியடைந்தால் நிச்சயமாக நாம் மகிழ்ந்து களிக்கூரலாம். அறிவிலும், கிருபையிலும் பூரண வளர்ச்சி அடையும் வரைக்கும், தெய்வீகமான வழியில் தொடர்ந்து நடப்போம்.

### R2649[col.2P 1,2]

அறிவு மதிப்பு வாய்ந்தது, ஆனால் அது தற்காலிகமானது. அந்த அறிவு நம்மை வீண் பெருமைக்குள் வீழ்த்திவிடும் என்று அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கிறார்.இவ்வாறாக,இந்த அறிவு, தேவ ஆவி, அன்பின் ஆவி, சாந்தம், கனிவு ஆகியவற்றிற்கு முற்றிலும் எதிரானது. அறிவு நம்மை ஒலிதரும் தாளங்களை போலாக்கிவிடும், ஆனால் உண்மையில் தேவனுடைய பார்வையில் எந்த ஒரு நன்மையும் பலன் தராது. ஆனால் அறிவு, சரியான நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டால், "தேவனுடைய அன்பை" மதித்துணரவும், அவருடைய நற்குணத்தை அணிந்துக் கொள்ளக்கூடிய ஞானத்தை உணர்ந்துக் கொள்ளவும் நம்மை நடத்துகிறது. நம்மால் முடிந்தவரை, பரலோகத்தில் உள்ள பிதா, அவருடைய நேசகுமாரனும், நம்முடைய ஆண்டவரின் சாயலை பெற முயற்சிக்க வேண்டும். "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபேசியர் 3:17-19) என்று அப்போஸ்தலர் கூறும்போது, இந்த நிலையை தெளிவாக நம்முடைய கவனத்திற்கு கொண்டு வருகிறார். சந்தேகமில்லாமல் அன்பு, படித்து ஆராய வேண்டியதும், பாராட்டப்படவேண்டியதும், மாதிரியாக பின்பற்றவேண்டியதும் நம்முடைய வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படவேண்டியதுமான ஒரு பிரதான காரியமாகும். வாட்ச் டவர் வாசகர்கள் பெரும்பகுதியானவர்கள் ஏற்கனவே "தேவனுடைய அன்பிற்கு" பங்காளிகளானார்கள் என்று நாம் நம்புகிறோம். இத்தகையானவர்கள், இதில் பூரணப்படவும், அதில் வேரூன்றப்பட்டு, நிலைத்திருக்கவும் முயற்சிக்கிறார்கள். இந்த நிலைப்பாட்டில் உள்ளவர்கள் மட்டுமே, கிருபையிலும், அறிவிலும், நிரந்தரமான மற்றும் முழுமையான முன்னேற்றம் அடையவார்கள் என்று அப்போஸ்தலர் உத்தரவாதம் கொடுக்கிறார். கிறிஸ்துவின் பள்ளியில் பிரவேசித்தவர்கள்,

பூரணத்தை நோக்கி முன்னேற மறுத்தால், விரைவில் அல்லது பின்னர் தாங்கள் பெற்ற தெய்வீக திட்டத்தின் அறிவை நழுவ விடுவார்கள் என்று உறுதியாக எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதே சமயம் இந்த வழியில் சரியாக முன்னேற்றம் அடையக் கூடியவர்களுக்கு, தெய்வீக திட்டத்தின் நீளங்களும், அகலங்களும் தொடர்ந்து அவர்களுக்கு முன் திறக்கப்படும். அவர்களின் அறிவின் வளர்ச்சி அவர்கள் அன்பின் வளர்ச்சியுடன் வேகத்தை அதிகரிக்கும்.

**R 3145 [col.1P 2]:**

இப்படிப்பட்ட அறிவை சபைப் பெற்றிருந்ததினால், மரம் மற்றும் கல்லினால் செய்யப்பட்ட உருவங்கள் தெய்வங்கள் அல்ல என்று புரிந்துக்கொள்வதற்கு இயலச்செய்தது. ஆனால் இது அவர்கள் உட்கொண்ட உணவில் எந்த பாதிப்புகளையோ அல்லது இந்த அறிவு தேவையான அளவு ஆவிக்குரிய வளர்ச்சியில் பெரிதளவில் எதையும் மேம்படுத்தவில்லை. ஒரு சிறிய சோப்பு துண்டு, மிக பெரிய நீர்குமிழியை உருவாக்கும். அதேபோல, சிறிய அளவு அறிவு, நற்குணத்தின் எந்த ஒரு திடத்தன்மையும் இல்லாமல் மிக பெரிய புகையை போலிருக்கும். எனவே, ஒருவர் தானே அறிவில் வளர்ச்சியை அளவிடுவதை காட்டிலும், அன்பின் வளர்ச்சியை அளவிடுவதில் உள்ள நன்மைகளை அவர் சுட்டிக்காட்டுகிறார். இருப்பினும், அறிவு மற்றும் அன்பு ஆகிய இரண்டும் சிறந்த நிலையில் இருப்பதே,முழு நிறைவான நிலையாகும். இதே பாடத்தை அப்போஸ்தலர் மேலும் கற்பிக்கிறார். "சகல அறிவையும் அறிந்தாலும், .. அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. "(1கொரிந்தியர் 13 :2)அன்பில்லாத அறிவு தீங்கு விளைவிக்கும். இல்லையெனில், உண்மையான அறிவு இன்னும் பாதுகாக்கப்படவில்லை என்று பொருள்படும். ஆனால் அப்போஸ்தலர் இதற்கு எதிரிடையாக கூறுகிறார் -"ஒருவர் தேவனில் அன்புக்கூறுகிறவராக இருந்தால், அவர் தேவனுக்கு அறியப்பட்டவராக இருப்பார்."- தேவனுக்கு பரிட்சையமானவர். நாம் மிகுந்த அறிவைப் பெற்றிருக்கலாம், ஆனால் தேவனை அறியாமலும், அவரால் அறியப்படாமலும் இருந்தால், எந்த மனிதனும் தேவனை தனிப்பட்ட முறையில் அறிந்துக் கொள்ளாமல், அவருடைய ஐக்கியத்தின் வழியாக அன்பின் ஆவியைப் பெறாமல், உண்மையான அன்பில் அதிகமான வளர்ச்சி அடையமுடியாது. எனவே, அன்பைப் பெறுவதினால், ஆவியின் கனிகளாகிய பொறுமை, சாந்தம், நீடிய பொறுமை, சகோதர அன்பு, அறிவு, பரத்திலிருந்து வரும் ஞானம் மற்றும் நல்ல மனநிலையின் ஆவி ஆகிவைகளில், கணிசமான அளவு (பகட்டான பெருமையைத் தவிர்த்து)வளர்ச்சி அடைவது நிச்சயம்.

**33.கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வதற்கான சிறந்த ஆதாரம் என்ன?**

**R2330[col.1 P2]:**

இந்த புதிய உடன்படிக்கையின் பிரமாணமாகிய அன்பு - இரக்கம், கனிவு, மென்மை, நற்குணம் ஆகியவற்றோடு தன்னுடைய இருதயம் இசைந்திராவிட்டால் அவர் தேவனுடைய புத்திரனாகவும், கிறிஸ்துவின் உடன் பங்காளி யாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு எவ்விதமான அத்தாட்சியும் இல்லை. இந்த அன்பின் ஆவியை அவர் பெறாவிட்டால், அவர் ஆண்டவரின் அடிச்சுவடுகளில், தொலைவில் செல்வதற்கு முடியாது. ஏனெனில் கிறிஸ்துவின் பலி, வீண் பெருமைக்காகவோ, வெளிப்புறமான கண் காட்சியாகவோ, மனிதரின் நன்மதிப்புக்காகவோ ஏறெடுக்கப்படாமல், தேவன் மேலும், மனுஷர் மேலும் உள்ள அன்பினால் ஏவப்பட்டு செலுத்தப்பட்டது. அதுபோல நம்முடைய இருதயங்களில், நம்முடைய சகோதரர்களை அன்புகூராமல், எல்லா மனிதர்களிடமும், இன்னும் முரட்டுதனமான சிருஷ்டிப்புகளிடமும் கருணையான அன்பும் இரக்கமும் இராவிட்டால், தற்போதைய நிலைமையின் கீழ் தேவைப்படும் பலிகளை ஏறெடுப்பதற்கு நம்மை வழிநடத்தும் ஆவியை நாம் பெறமாட்டோம். அவர்களை பொறுத்தவரையில் அது நேரத்தை சார்ந்ததாய் இருக்கிறது. எவ்வாறெனில், பெருமை, வீண் பெருமை ஆகியவற்றின் சக்தி, தியாகத்தின் வழியை கட்டுப்படுத்துகையில், சுயநிர்ணயம் மற்றும் சுயநலம் முழுக்க முழுக்க கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ளும் நேரத்தை சார்ந்ததாய் இருக்கிறது மரணபரியந்தம் விசுவாசமுள்ளவராக, ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கும் போது, அவரை இப்படியாக பின்பற்று வதற்கு முன், அவர் ஆண்டவரின் அன்பின் ஆவியைப் பெற்றுக்கொள்வார். அப்போஸ்தலர் அறிவிக்கிற படி,"நான் தேவனிடத்தில் அன்பு கூருகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனை பகைக்கிறவன்

பொய்யன். காண்கிற சகோதரனை அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? எனவே, நாம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதற்கும், நம்முடைய எஜமானுடனே சஞ்சரித்து வருகிறோம் என்பதற்கும், நாம் சகோதரர் மேல் வைத்திருக்கும் அன்பே, அத்தாட்சி என்று வேதவாக்கியங்கள் முன் வைக்கிறது.

**R3150[col.1 P6]:**

வரங்களில், தீர்க்கதரிசனம் அல்லது சொற்பொழிவை அப்போஸ்தலர் பரிந்துரைத்தார். தேவனுடைய இரகசியங்களைப் பற்றிய அறிவும் கூட பாராட்டப்படுகிறது. மேலும், கிறிஸ்தவ தேவைகளில் அதிகமான விசுவாசம் பிரதானம் என்று கருதப்படுகிறது. ஆயினும், அவை அனைத்தும் முழு அளவில் பெற்றிருந்தாலும், அன்பு இல்லாவிட்டால், அவர் ஒன்றும் இல்லை என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். இவர் ஒரு புது சிருஷ்டி அல்ல, வெளிப்புறமான பகட்டாகும். ஏனெனில், புது சிருஷ்டியை ஜெநிப்பிப்பதே அன்பின் ஆவியாகும். இது எவ்வளவு ஆச்சரியமானது, நாம் ஒவ்வொருவரும் நமக்கு இதை பொருத்திப் பார்க்கலாம். என்னுடைய அறிவு அல்லது புகழ் அல்லது சொற்பொழிவு காட்டிலும், ஆண்டவருக் காகவும், அவருடைய சகோதரருக்காகவும், பொதுவாக இந்த உலகத்திற்காகவும், இன்னும் என்னுடைய பகைவருக்காகவும் நான் கொண்ட அன்பு, தேவனுடைய மதிப்பீட்டில் ஒன்றும் இல்லையா அல்லது ஏதோ இருக்கிறதா? ஆயினும், அன்பின் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமல், ஒருவர் தேவனுடைய ஆழமான இரகசியங்களின் அறிவை பெற்றுக்கொள்ளமுடியும் என்று நாம் தவறாக புரிந்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில், தேவனுடைய ஆவி இன்றி தேவனைப் பற்றிய ஆழமான காரியங்களை ஒருவரும் அறிய முடியாது. ஆனால் ஒருவர் பெற்ற அந்த அறிவை இழப்பதற்கு முன் ஆவியை இழந்துவிடலாம். ஆகவே, நற்குணங்களை அளவிடுவதில், நாம் அன்பை முதலில் வைத்து, அதனால் ஆண்டவரின் அருகாமையையும், அவரால் அங்கீகரிக்கப் படுவதை முக்கிய சோதனையாக கருத வேண்டும்.

**34.தேவனுடைய நேச குமாரனின் சாயலுக்கு நாம் எப்படி மாறலாம்?**

**R2330[col.2 P1,2]:**

இந்த புதிய உடன்படிக்கையின் நன்மையிலும் சலுகைகளிலும் பங்கெடுக்க, உலகம் அழைக்கப் படுவதற்கு முன்கூட்டியே திருச்சபையின் தற்போதைய அழைப்பின் பொருள், முன்னதாகவே, தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், பூரணமானவர்களை அல்ல, தேவனுடைய நேச குமாரனுடைய சாயலை பெற்றவர்களையும் அல்ல, ஆனால் "குமாரனுடைய சாயலை ஒத்திருப்பதற்கும், விரும்பி, முயற்சிக்கக் கூடியவர்கள் இந்த தெரிந்தெடுப்பில் அழைக்கப் படுகிறார்கள். தேவன் அன்பாகவே இருப்பதினால், அன்பே அந்த சாயல். எனவே கிறிஸ்துவின் சிறப்பியல்பு அன்பு, இதுவே பிதாவாகிய தேவனுடைய சாயலின் பிரதிபலிப்பு. இந்த ஒரு அச்சில் நாம் வடிவமைக்கப்பட வேண்டும். ஆனால் தேவன் இந்த அச்சுக்குள் நம்மை பதிக்கமாட்டார். இந்த நற்பண்புகளைப் பெறுவதற்கு அவர் நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். மாறாக, "மிகப் பெரிதும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களினால்" ஏற்படும் தாக்கங்களினால் மட்டுமே நாம் தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகி, தெய்வீக குணமாகிய அன்பை நம்மேல் பதிக்கும்படிக்கு அவர் முயற்சிக்கிறார். இதனால் நாம் இந்த உலகத்தின் சுயநலம் என்ற கேட்டுக்கு தப்பி அல்லது நமக்குள் ஆழமாக நற்குணங்களை உருவாக்குவதற்கு தேவன் அனுமதிக்கும் எல்லாவிதமான அழுத்தங்களிலும், நம்மை நாம் தேவனுடைய அன்பில் காத்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம் யூதா 21. இந்த காரியம் நமக்கு முன் திறந்திருக்கிறது. நாம் இந்த வாக்குறுதிகளை பயன்படுத்தி, நம்முடைய மாதிரிக்கு எற்றவாறு, கொஞ்சம் கொஞ்சமாக, தினமும், மணி நேரமும், சிந்தையிலும், வார்த்தையிலும், கிரியைகளிலும், அவைகள் நம்மை வடிவமைப்பதற்கு அனுமதிக்கலாம் அல்லது அவைகளில் சரியான தாக்கங்களை எதிர்த்து, அநீதியில் சத்தியத்தை பற்றிக்கொள்ளலாம். பிந்தைய காரியத்தை தெரிந்துக் கொள்பவர்கள், கசப்பான ஏமாற்றத்தை தங்களுக்கென்று விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். "நல்லது உத்தமனும் உண்மையுமான ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையாக இருந்தாய், உன்னை அநேகத்திற்கு அதிகாரியாக்குவேன்" என்ற பாராட்டை இப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டவர் கூறுவதில்லை. எனவே, நம்முடைய ஆண்டவர் மேல் நாம் வைத்திருக்கும் பக்தியின் அளவு, நாம் அவர்மேலும், அவருடையவைகள் மேலும் வைத்திருக்கும் அன்பின் அளவை சுட்டிக்காட்டும். மேலும் நம்முடைய சுயத்தையும், நம்முடைய வாழ்க்கையில் விஷயங்களில் உள்ள அனைத்து காரியங்களிலும், சுயநலத்தை ஜெயிக்கக்கூடிய நடவடிக்கையில் நம்முடைய அன்பு மற்றும்

பக்தியின் அளவு தெளிவாக வெளிப்படும். மற்றும் நம்முடைய சிந்தனைகள், தாலந்துகள், சிறிதோ, பெரிதோ, அன்பினால் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் சுறுசுறுப்போடும் செயலாற்ற வேண்டும். இப்படிப்பட்டவர்கள், "நாம் (நம்முடைய ஆண்டவரின் பரிசுத்த ஆவியினால், அன்பின் ஆவியினால், ஜெநிப்பிக்கப்படுதலை பெற்று, ஓர் அளவுக்கு அவரைப் பற்றிய அறிவைப் பெற்ற நாம்) நம்முடைய சகோதரர்களுக்காக ஜீவனை கொடுக்க வேண்டும்." என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை புரிந்துக்கொள்வார்கள்.

### R3020[col.2 P3] through R3021 [col. P3]:

"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்"(மீகா 6:8) என்று தேவன் தீர்க்கதரிசியின் வழியாக அன்பின் பிரமாணத்தை எவ்வாறு பிரிக்க வேண்டும் என்றும் மற்றும் அது கிறிஸ்தவ நற்பண்புகளின் தேவைகள் அனைத்தையும் எவ்வாறு பூர்த்திச்செய்கிறதென்ற சிந்தனையை இங்கு வெளிப்படுத்துகிறார். மிகவும் நியாயமான இந்த அனைத்து தேவைகளையும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படும், உலகின் எதிர்கால தீர்ப்புக்கு, அவர் பயிற்சியளிப்பவர்களுக்கு இவைகள் தேவையற்றது என்று தேவன் விடமுடியாது என்பது தெளிவாக தெரிகிறது. ஆயினும், தீர்க்கதரிசியின் மூலம் குறிப்பிடப்பட்ட இந்த மூன்று குணங்களும், அன்பு என்ற ஒரே வார்த்தையில் புரிந்துக் கொள்ளப்படுகிறது. மற்றவர்களின் உடல் ரீதியான, தார்மீக மற்றும் அறிவுசார்ந்த உரிமைகள், சுயாதீனம் அனைத்தையும், உரிமைகளை மதித்து, எந்த விதத்திலும் அவற்றை குறைப்பதற்கோ, அல்லது மறுக்கவோ முயலாமல், நம் அண்டை வீட்டாரோடும், சகோதரர்களோடும், நம் குடும்பத்தாரோடும், நம்முடனும், நாம் நியாயமாக நடந்து கொள்ளுதலை நமக்குள் வளர்ப்பதற்கு முயற்சிக்கவேண்டியதே அன்பின் தேவையாகும். "கிருபையை நேசிப்பது" நீதியை நேசிப்பதைவிட அதிகமானது, மற்றும் எந்த விதமான கொள்கைகளுமின்றி, மற்றவர்களின் நலனுக்காக தனிப்பட்ட உரிமைகளை விட்டுகொடுப்பதிலும், மற்றவர்களின் விருப்பத்திற்காக சலுகைகளை வழங்குவதில் மகிழ்ச்சி கொள்வதை குறிப்பிடுகிறது. இது மற்றவர்களின் தவறுகளை மன்னிக்கத் தயாராக இருப்பதை பொருள்படுத்துகிறது. மற்றவர்களைப் பொறுத்த வரையில் விருப்பமின்மை என்பது மிகவும் வற்புறுத்தலாய் இருக்கும், அதேசமயம் நாம் மற்றவர்களை நடத்தும் விதமும் வற்புறுத்துவதாய் இருக்கும் அளவிற்கும் பொருந்தும். அன்பின் பிரமாணத்தில், தேவனோடுக்கூட நடக்கும் தாழ்மையான நடக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், யார் ஒருவர் தன்னை சிருஷ்டித்தவரை நேசித்து, அவருடைய சிருஷ்டிப்புகளுக்காக, இயல்பாகவும், ஆவிக்குரிய காரியங்களுக்காக அவர் செய்திருக்கும் முன்னேற்பாடுகளை புரிந்துப் பாராட்டுகிறார்களோ, அதற்கு பதிலாக அவர்கள் அன்பு செலுத்தி, தேவனை பாராட்டுவார்கள். சர்வவல்லவருடைய மகத்துவத்தைப் பற்றியும், தெய்வீக கிருபையைத் தவிர்த்து, தனது சொந்த குறைபாடுகளும், அபூரண நிலையைப் பற்றியும் சரியான கருத்தைக் கொண்டிருந்தால், உண்மையில் அவர் ஆண்டவரோடு தாழ்மையாக நடக்க முடிவெடுப்பார் - அவர் தனது சொந்த பாதையில் செல்ல முயலாமல், முழு நம்பிக்கையோடு ஆண்டவர் குறித்து காட்டின பாதையில் அதாவது இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க முயற்சிப்பார். நம்முடைய வேத ஆதாரத்தில், நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை பதிவு செய்திருக்கும் அதே அப்போஸ்தலனாகிய யோவான், தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பைப் பற்றிய இந்த பாடத்தைப் பற்றி மேலும் சில கருத்தைக் கூறுகிறார், "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடம் அன்பு கூறுவதாம், (அதாவது, தேவன் மேல் நாம் வைத்திருக்கும் அன்பை நிரூபிப்பது அல்லது செயல் முறைப்படுத்துவதாகும்) அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. (1யோவான் 5:3) ஆண்டவரிடமும், நம்முடைய சகோதரர்களிடமும், அன்பின் பிரமாணத்தை நாம் காத்துக்கொள்வதோடு மட்டும் அல்ல, இவைகளை நாம் கடைபிடிப்பதினால், இந்த பிரமாணங்களையும், அதற்குள்ளிருக்கும் கொள்கைகளையும் நாம் புரிந்துகொள்ளுதலில் நிறைந்திருக்க வேண்டும் என்று ஆண்டவர் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார் என்ற கருத்தை நமக்கு தருகிறது. அவைகள் வெறும் தேவனுடைய பிரமாணங்கள் என்பதற்காக மட்டும் அல்ல அவைகள் கூடுதலாக சரியானதும், நன்மையானதும், தகுதியானதுமாக இருப்பதால் நாம் அதில் பிரியமாக இருக்க வேண்டும். "அவருடைய கற்பனைகள் பாரமானவைகள் அல்ல" என்று அப்போஸ்தலனுடைய வார்த்தை

களில் இந்த சிந்தைனை வெளிப்படுத்தப் படுகிறது. தெய்வீக கட்டளையை காத்துக் கொள்வது, அல்லது அதன்படி செய்ய முயலுவது ஒரு காரியம், எல்லாவற்றிற்கும் மேலாக, கட்டுப்பாடில்லாமல், சுதந்திரம் இல்லாமலும், கட்டாயமாகவும், கடமையாகவும் ... மகிழ்ச்சியுடன் கீழ்படிவது மற்றொரு காரியம். கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய பிரமாணங்களை காத்து நடப்பதற்கு முயற்சிப்பது போல இந்த ஆவியை நம்முடைய அனுபவத்தின் துவக்கத்தில் எதிர்ப்பார்ப்பது நியாயமற்றது. ஆனால், நாம் கிருபையிலும், அறிவிலும் அன்பிலும் வளர்ச்சி அடையும் போது, இந்த ஒரு கட்டுபாட்டின் உணர்வுகள், கடமை உணர்வு ... அனைத்தும் மறைந்தே போய்விடும். அதற்குப்பதிலாக, தேவனுடைய சித்தம் செய்வதில் மகிழ்ந்து, அன்பின் பிரமாணத்தை சந்தோஷமாக காத்துக் கொண்டு,நியாயமாக நடப்பதிலும், இரக்கத்தை சிநேகிப்பதிலும் மகிழ்ந்து தேவனோடு தாழ்மையாக நடக்க வேண்டும் - மற்றும் தேவனுடைய கற்பனைகள் பாரமானதும், சுமையானதும், துக்ககரமானதும் என்ற உணர்வு, முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். இது உயரத்தர கிறிஸ்தவ வளர்ச்சி. தனிப்பட்ட நபர் உண்மையாக, "தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலைப்" பெற்றவர்கள் மட்டுமே இந்நிலையை அடைய முடியும். இவர்களிடம் பிதாவின் ஆவி ஏராளமான வளர்ச்சி அடைந்து, பழுத்த ஆவியின் கனிகளாகிய - சாந்தம், பொறுமை, தயவு, சகோதர சிநேகம், அன்பு - அளவில்லாமல் கொடுப்பார்கள்.

### 35.நாம் எவ்வாறு தேவனுடைய அன்பை நமக்குள் காத்துக்கொள்ள வேண்டும்?

"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்"யூதா 21

### R2649[col.2 P3]:

இறுதியாக, நம்முடைய வேத வசனத்திற்கு இசைவாக, இது தேவன் கவனிக்கக்கூடிய காரியம் இல்லை,மாறாக இதற்கு நம்முடைய சொந்த கவனம் தேவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய அன்பை நாம் அறிந்துக் கொள்ளும்படிக்கு அவர் அனைத்து முன்னேற் பாடுகளையும் செய்திருக்கிறார். அதனால் நாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம், அதில் ஏற்றுக் கொள்ளப்படலாம், ஆனால் தேவனுடைய அன்பில் நாம் காத்துக்கொள்வதற்கு இது பொறுப்புள்ளது. மற்றும் அவருடைய அன்பின் கொள்கைகள், நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பழகுவதற்கு முயலுவதன் வழியாகவே நாம் அவருடைய அன்பை காத்துக்கொள்ள முடியும். நித்தமும் ஆண்டவருடைய பணிக்காகவும், அவருடைய மதிப்புக்காகவும், சத்தியம் பரப்புவதற்காகவும், நம்மை நாம் பலி செலுத்துவதற்கு தேவனுடைய அன்பு நம்மை கட்டுப்படுத்த அனுமதிக்கவேண்டும். ".. நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்." என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி, சகோதர அன்பு நம்முடைய இருதயங்களை நிரப்பப்படுவதற்கு அனுமதிக்க வேண்டும். சோதனைகள் மற்றும் கஷ்டங்களில் "ஏங்கி தவிக்கும்" மனுக்குலத்தின் மேல் ஒரு பொதுவான ஒரு பரிவுணர்வுள்ள அன்பை நாம் அனுமதித்து, நாம் தொடர்பு கொள்ளும் அனைவரிடமும், வாய்ப்பு கிடைக்கும் போது அவர்களுக்கு நாம் உதவி செய்யும் படிக்கும் அவர்களிடம் அன்பாகவும், தாராளமாகவும் உணர்ந்துக் கொள்ள நம்முடைய இருதயங்களை பயிற்றுவிக்க வேண்டும். நம்முடைய பராமரிப்பில் இருக்கும் முரட்டுத்தனமாக சிருஷ்டிப்புகளின் நலன்களையும் நாம் அலட்சியப்படுத்தாதபடிக்கு, இந்த அன்பை இவர்களுக்கும் நீடிக்க வேண்டும். இவை அனைத்தும் தேவனுடைய அன்பில் நம்மை காத்துக் கொள்வதற்கு மிக அவசியம் என்று தோன்றுகிறது. நாம் அதிகதிகமாக இதை நடை முறைப்படுத்தி, இந்த அன்பில் அதிகதிகமாக பூரணப்படுவோம். இதுவே பிதாவின் ஆவி, நம்முடைய ஆண்டவரின் ஆவி, கிறிஸ்துவின் சரீரத்தின் உண்மையான அங்கத்தினர் அனைவரின் ஆவியாகும்.

### R3021-"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு.." யூதா 21

அப்படியானால், இந்த பாடத்தில், மேலே குறிப்பிட்டவற்றின் தெய்வீக கட்டளையின் சாராம்சம் என்ன ? (1) துவக்கத்திலிருந்தே நம்முடைய இருதயங்களில், நம்முடைய சொந்த மாம்சத்தின் அபூரணங்களை உணருவதோடு, ஆண்டவரின் அன்பில் நிலைத்திருக்க வேண்டிய தேவைக்காக எப்போதும்,அவரை நோக்கி பார்க்கவேண்டும். (2) நாம் தேவனுடைய அறிவிலும், கீழ்படிதலின் வழியாக அவருடைய அன்பில் நிலைத்திருக்க, நாம் "தேவனுடைய வல்லமையை" நன்மைக்கு ஏதுவாக, நமக்குள் பெற்றிருக்க, பெரிதும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் ஆராயப்பட

வேண்டும்.(3) இந்த அறிவை நாம் நடைமுறைப்படுத்தி, நம் மனதில், நம் எண்ணங்களில், வார்த்தைகளில், முடிந்தவரை வாழ்வின் எல்லா செயல்களிலும் ஒழுங்குபடுத்த முயற்சித்தால் மட்டுமே, நமக்கு லாபகரமாக இருக்கும். அவருடைய வார்த்தையின் வழியாக தேவன் நமக்கு இதை ஒரு சிறந்த அளவுகோலாக முன் நிறுவியிருக்கிறார். நாம் அறிவைப் பெற்றிருந்தாலும், நமக்குள் அன்பிராவிட்டால், ஒரு பிரயோஜனமும் இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மேலும் தெய்வீக ஏற்பாட்டில், முன்கூட்டியே நாம் பெற்ற அறிவுக்கு கீழ்ப்படியாமல், அதிகமாக அறிவில் முன்னேறுவது இயலாத காரியமாக தோன்றுவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். (4) தேவனுடைய பிரமாணத்திற்கு, தொடர்பான நீதி, கருணை மற்றும் பயபக்தியுடன் உள்ள அன்பின் பிரமாணத்திற்கு இப்படிப்பட்ட கீழ்ப்படிதலின் வளர்ச்சிக்குரிய ஆதாரத்தை, நம்மில் அல்லது மற்றவர்களில் நாம் காணும்போது நாம் அதை பாராட்ட வேண்டும். (5)நம்முடைய அனுபவங்களில் துவக்கத்தில், பிதாவின் சித்தத்தை செய்வதில், மகிழ்ச்சியின் முழு விளைவை நாம் எதிர்ப்பார்க்க முடியாது அல்லது துவக்கத்தில், கொள்கைக்கான அன்புக்கு பதிலாக கடமை அன்பை ஒரு கணிசமான அளவு பெறுவதே நோக்கமாக இருந்தால் நாம் சோர்வடைய வேண்டுமா ? மேலும் ஆசீர்வாதங் களையும், மேலும் அன்பின் ஆவியால் நிரப்பப்படவும், நாம் ஆண்டவரின் கைகளில் தேட வேண்டும். ஆண்டவர் இந்த பிரபஞ்சத்தை நிர்வாகிக்கும் அடிப்படையான கோட்பாடுகளை படிப்பதற்கும், பாராட்டுவதற்கும் நாம் முயல வேண்டும். நியாயப்பிரமாணத்திற்கும், கொள்கைக்கும், நீதியின் ஆவிக்கும் இசைவாக, நம்முடைய இருதய்ங்களில் இரக்கத்தை வரப்பண்ணுவதற்கு முயற்சிக்கவேண்டும். நம்முடைய அறியாமையின் காரணமாக, நீதியின் கொள்கைகளை, புரிந்துக் கொள்வதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் கர்த்தரை அறிந்துக் கொண்டு, அவருடைய திட்டங்களை சிறப்பாக புரிந்துக் கொள்ளும்போது, நம்முடைய புரிந்துக் கொள்ளுதலின் கண்கள் இன்னும் விரிவாக திறக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது "பரிசுத்தவான்கள் அறிந்துக்கொள்வது" மட்டும் அல்ல, அன்பின் தெய்வீக பிரமாணத்தை உள்ளடக்கியிருக்கும், மற்றும் அதன் கொள்கைகளையும் எல்லா பரிசுத்தவான்களோடு அறிந்துக் கொள்ள சாத்தியமாக்கும். இவ்வாறு நாம் தினமும் ஒவ்வொரு மணிநேரமும் நீதியின் கொள்கைகளுக்கும், வளர்ச்சி அடையும் அன்புக்கும் கீழ்ப்படிவதன் மூலம் தேவனுடைய அன்பைக் காத்துக்கொள்வோம். மற்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவ்ங்களிலும் - சோதனைகள், கஷ்டங்கள், துக்கங்கள், ஏமாற்றங்கள்... அனைத்திலும், நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எந்தவொரு அல்லது எல்லாவற்றுக்கும் மேலாக, நம்முடைய சொந்த குறைபாடுகளை தெளிவாக புரிந்துக்கொள் வதற்கும், அவர் உருவாக்கிய சுயாதீனம் மற்றும் அன்பின் பரிபூரண பிரமாணத்தை இன்னும் தெளிவான புரிந்துக் கொள்வதற்கு உள்ளுணர்வை கொடுப்பார். இதற்கு நம்முடைய விசுவாசமுள்ள இருதயத்தின் முழு அர்ப்பணிப்பு அவருக்கு தேவைப்படுகிறது.

**R3553 [col. 2 4]**:

தேவனுடைய இந்த அன்பும் கிறிஸ்துவினுடைய அன்பும் எவ்வளவு அற்புதமானது, அதனுடைய நீளமும், அகலமும், உயரமும், ஆழமும் அளவிடுவது எந்த அளவுக்கும் சாத்தியமில்லை என்று தோன்றுகிறது. ஆண்டவரை தங்களுடைய இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டு, அவரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் பிரவேசித்தவர்கள், அவர்களுடைய சிறிய காரியங்களையும் அவருக்கு கொடுத்து, அவர் ஏற்படுத்தியிருக்கும் எல்லா ஆசீர்வாதங்களிலிருந்தும் ஒரு பங்களிப்பை ஏற்றுக்கொண்ட பின், பலவீனங்கள் அல்லது எதிர்ப்புகளின் காரணத்தால், கீழே தள்ளப்பட்டால், பிதா நம்மேல் வைத்திருக்கும் மகத்தான அன்பையும், அதில் குமாரன் எடுத்துக்கொண்ட பங்கையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இந்த அன்பு நாம் பாவிகளாக இருக்கும்போதே நம்மை இரட்சித்தது. அதுமட்டுமல்ல, நம்மை இப்படிப்பட்ட அற்புதமான ஆசீர்வாதங்களும், சிறப்புரிமை களையும் அளித்து, நம்முடைய ஆண்டவராம் கிறிஸ்துவோடு நம்மை பங்காளிகளாக்கினார். அப்படியானால், நாம் அவரோடு பாடுபடுகையில், இந்த அன்பு கொஞ்சம் கூட விலகாது. இந்த அன்பு நம்மை இரண்டாம் மரணத்தில் விழச்செய்வதை காட்டிலும் நம்மை சிட்சித்து, தூய்மைப்படுத்தும். இயேசுவை தொடர்ந்து நம்பி, அவருடைய விசுவாசமுள்ள வார்த்தைகளை தொடர்ந்து பற்றிக் கொள்ளுபவர்களை இந்த அன்பு இறுதியாக சிறு மந்தைக்கோ அல்லது திரள் கூட்டத்திற்கோ அனுப்பிவிடும். ஆனால் எந்த அளவுக்கு தேவன் மேலுள்ள இந்த அன்பு முழுமையாக நமக்குள் வாசம்

செய்கிறதோ, அந்த அளவுக்கு கிறிஸ்து நம்முடைய இருதயங்களில், அரியணையில் அமர்ந்திருக்கிறார். அதே அளவில் நாம் திரும்ப செலுத்தக்கூடிய அன்பு, நம்முடைய பிதாவின் பார்வையில் செம்மையும், நம்முடைய கர்த்தருக்குப் பிரியமுமானதும் செய்ய மகிழ்ச்சியாக இருக்கும். அதே அளவிலான அன்பு தேவனுக்கும் நம்முடைய ஆத்துமாக்களுக்கும் இடையில் வரும் எந்த மேகத்தையும் தவிர்க்க எதை வேண்டுமானாலும் செய்யத் துணியும். ஆகவே, தெய்வீக அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தைப் புரிந்துகொள்வதன் மூலம் புத்துணர்வூட்டும் புதிய தைரியத்தை நாம் பெறலாம். மேலும், தேவனுடைய அன்பு, அவருக்காக நம்மை, அதிக ஆர்வத்துடனும், பக்தியோடும் இருக்க நம்மை கட்டுப்படுத்தட்டும்.

**R3546 [col. 2 P4, 5]:**

மூன்றாவது கனி அல்லது திராட்சை செடியின் உறுப்பினராக இருக்கக்கூடிய சான்று மற்றும் ஒன்பதாம் வசனத்தில் குறிப்பிட்டபடி,கிளைகளின் தொடர்ச்சியான வளர்ச்சி, அதாவது தந்தையே திராட்சை செடியாகிய இயேசுவை நேசித்தது போல, நம்முடைய இரட்சகர் கிளைகளாகிய நம்மை நேசிக்கிறார். பிதா நம்முடைய ஆண்டவரிடம் கொண்டிருக்கும் அதே அன்பை ஆண்டவர் நம்மீது வைத்திருக்கிறார் என்பது, எவ்வளவு அற்புதமான சிந்தனை, இந்த சிந்தனையை நம்முடைய விசுவாசம் எப்பொழுதும் பற்றிக்கொண்டு, இந்த பிடியை தக்கவைக்குமா ? உண்மையில் நாம் எதற்கும் விருப்பப்படுவதற்கோ அஞ்சுவதற்கோ அவசியம் இல்லை. நமது கோடைக்காலம் முழு வருஷமும் நீடிக்கும். ஆண்டவருடைய இரக்கத்தில் உயர்ந்த நிலையை அடைந்த பின், நாம் அவருடைய சீஷர்களாக, நமக்காக அவர் செய்த சகலத்தையும் உண்மையில் புரிந்து பாராட்டினால், அவருடைய அன்பில் தொடர்ந்து நிலை நிற்க விரும்புவோம் என்பதே அடுத்த சிந்தனையாக கருதப்படுகிறது. நாம் அந்த அன்பில் தொடர்வதற்கும், அடுத்த வரிசையில் வரும், நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் - அவருடைய கற்பனைகளை காத்து நடக்க வேண்டும். இது ஒரு நியாயமற்ற கருத்து அல்ல என்று நமக்கு காட்டுவதற்கு "நான் என் பிதாவின் கற்பனைகளை காத்துக்கொண்டு அவருடைய அன்பில் நிலைத்திருப்பது போல..." என்று கூறி, பிதாவாகிய தேவன் நம்முடைய கர்த்தருடனும் இதே விதிமுறையை கையாளுகிறார் என்று அவர் அறிவித்தார். கர்த்தருடைய கட்டளைகளை கவனியாமல், அவருடைய அன்பில் நிலைத்திருப்பது எதிர்பார்க்க முடியாத காரியம். தம்முடைய பிதாவின் மேல் அவர் வைத்த அன்பின் அளவை, அவருடைய கீழ்ப்படிதல் சுட்டிக் காட்டியதை போல, அவர் மேல் நாம் கொண்ட விசுவாசத்தின் அளவை நம்முடைய கீழ்ப்படிதல் குறிப்பிடும். அப்போஸ்தலரும் இதே சிந்தையை குறிப்பிடுவதோடு இன்னும் கொஞ்சம் இணைத்துக் கூறுகிறார். "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல"1 யோவான் 5:3 கற்பனைகளை கடைபிடித்தால் மட்டும் போதாது, அவைகளை அன்போடும், உண்மையோடும், நல்ல மகிழ்ச்சியோடும் காத்துக் கொள்ள வேண்டும். இவைகளை நாம் பாராமானவைகளாக எண்ணுவதற்கு பதிலாக, ஆண்டவருடைய நீதியுள்ள முன்னேற்பாடுகளுக்கும், ஒழுங்குகளுக்கும், இசைந்திருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைய வேண்டும். நம்முடைய ஆண்டவராம் இயேசுவும், அவருடைய கற்பனைகளிலும் கொடுக்கப்பட்ட நீதியுள்ள கொள்கைகளுக்கு, இசைந்திருக்கும் ஆவியை முழு இருதயத்தோடு அதிகதிகமாக தேடுவோம்.

**36.நாம் எவ்வாறு நம்மை ஆராய்ந்து, விமர்சனத்தின் அன்பற்ற ஆவியை மற்றும் கடுமையான நியாயத்தீர்ப்பை வெல்லுவது எப்படி?**

**F402[P2]throughF409**-"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்;" (மத்தேயு 7:1,2) பாடத்தின் முடிவில் காணலாம்.

**R2589 [ 1P 6 through col. 2P2 ] தங்கள் கண்களில் உள்ள உத்திரம்**

இந்த பாடத்தை வலியுறுத்தி, தங்களைப் போல நெருக்கமான வழியில் செல்ல முயற்சிக்கும் "சகோதரர்களை" ஓயாமல் குற்றம் காண்கிறவர், ஆண்டவருடைய சாயலைப் பெறுவதற்கு சகோதரர்கள் எடுக்கும் உயர்ந்த முயற்சிகளை என்றுமே காணாமல், அவர்களை தொடர்ந்து வேதனைப்படுத்திக் கொண்டிருப்பவர்களே மிகுந்த தவறுகளை செய்தவர்கள் - அன்பற்றவர்கள் என்று

நம்முடைய ஆண்டவர் கருதுகிறார். இந்த வகுப்பாரை கடிந்துக்கொள்வதற்கான நம்முடைய ஆண்டவரின் மிகைப்படுத்திய வார்த்தைகள் ஏளனமாக தோன்றுகிறது. ஏனெனில், - "உன் கண்ணில் இருக்கும் உத்திரத்தை கவனியாமல் சகோதரரின் கண்ணில் இருக்கும் தூசியை கண்டு அவனை ஏன் முறைக்கிறாய் ?" என்று அவர் சொல்லர்த்தமாகவே கூறுகிறார். எல்லா "சகோதரர்களும்" ஏதோ ஒரு வகையில், மாம்சத்தின் பலவீனத்தால், அதிகமாகவோ, குறைவாகவோ கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால், பழைய பாவங்களின், அபூரண மண்பாடங்களில் புதிய சுபாவத்தை பொக்கிஷமாக அனைவரும் பெற்றிருக்கிறோம். "நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" ஆயினும், இருதயத்தில் முழுமையான அன்பை கொண்டிருக்கும் ஒரு சகோதரனுடைய விசுவாசத்தின் கண்களில் தூசி இருந்தாலும், அல்லது அறிவார்ந்த புத்தி சாலித்தனமான விவேகத்தோடும், ஆன்மீக அறிவோடும், ஒருவேளை வாழ்க்கையின் எல்லா செயல்களையும் பாதிப்புக்குள்ளாக்கி, அபூரணமான வேலைகளை வழங்கத்தக்கதாக அவர்களின் கைகளில் பிளவுகளும், தாங்கள் விரும்பி, பரிபூரணமான நடக்கை நடக்க இயலாதபடிக்கும் பாதங்களிலும் பிளவுகள் இருக்கலாம். ஆனாலும், விசுவாசம், அன்பு, மற்றும் இரக்கத்தின் ஆவியை, அதாவது கிறிஸ்துவின் ஆவியை அவர்கள் பெற்றிருந்தால், அவர்கள் கிறிஸ்துவினுடைய வர்கள். மற்றும் அன்பு மற்றும் இரக்கத்தின் ஆவி இல்லாதவர்களை காட்டிலும் இவர்கள் ஆண்டவரால் அதிகமாக ஏற்றுக் கொள்ளப் பட்டவர்கள். ஆகவே இந்த உவமையில், ஆண்டவரின் ஆவி மிக குறைவாக பெற்றிருப்பதினாலும், சகோதரர்களை ஓயாமல் குற்றம் சுமத்துகிற எதிராளியின் ஆவியை அதிகமாக பெற்றிருப்பதினாலும், மற்றவர்களைப் பற்றிய அவர்களின் நியாயத்தீர்ப்பில் முழுமையாக நெறி தவறி இருப்பதாக இந்த உவமை குறிக்கிறது. இந்த அன்பற்ற, குற்றம் கண்டுபிடிக்கிற, சகோதரர் மேல் குற்றம் சுமத்துகிற வகுப்பாரை வெளிவேஷக்காரர் என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். ஏன் ? ஏனென்றால், மற்றவர்களிடம் குற்றம் கண்டுபிடிப்பவர்கள், அந்த குற்றங்களை அவர்கள் செய்யவில்லை என்று அவர்கள் குறிப்பிட விரும்புகிறார்கள். அல்லது அப்படிப்பட்ட குற்றங்களின் தாக்கங்களை அவர்கள் பெறவில்லை என்பதை காட்ட விரும்புகிறார்கள், மேலும் இது பொய்யானது என்று தங்கள் இருதயங்களில் அறிந்தும், அவர்கள் பரிசுத்தவான்கள் என்ற உணர்வை வெளிப்படுத்துகிறார்கள். அநேக குறைபாடுகளும், பல தோல்விகளும் உள்ளதால், அவர்களின் போக்கு வெளி வேஷமானதும், பொய்யானதும், வஞ்சிக்கக் கூடியதும், தேவனுக்கு வெறுப்புண்டாக்கக் கூடியதுமாக உள்ளது. பாவத்தின் மேலுள்ள வெறுப்பினாலும், அன்பினால் ஏவப்பட்டு தவறு செய்கிறவர்களை, குற்றம் கண்டுபிடிப்பதாக கூறுவது, ஏமாற்றக்கூடியதும், பாசாங்குத்தன மானதும் என்று நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் தெளிவாக காட்டுகிறது. இல்லையேல், தங்கள் சொந்த பாவங்களையும், பலவீனங்களையும், பகைத்து, எதிர்த்து போராடி, தங்களுடைய சொந்த சுய - பெருமை மற்றும் பாசாங்குத்தனத்தை வெளியேற்றுவதற்கு, ஏராளமான வழிகளை கண்டுபிடித்திருப்பார்களே. இவைகளினால் பெறக்கூடிய அனுபவங்கள், மற்றவர்களுக்கு உதவுவதில், மிக மென்மையாகவும், இரக்கமுள்ளவர்களாகவும் அன்பானவர்களாகவும் இருக்கலாம். நம்முடைய கர்த்தர் சித்தரித்ததை அனைத்து சகோதரர்களும் ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும். மற்றும் அவர்கள் - தவறு கண்டுபிடித்தல், தொடர்ந்து தொல்லை கொடுக்கும் மனபாங்கு, கடுமையான விமர்சனம், மற்றும் கண்டனம் தெரிவிப்பது மற்றும் அதே தவறின் வெவ்வேறு அளவிலான தீமையான எண்ணங்கள் இருதயத்தில் உள்ளதா என்று கவனமாக பார்க்கவேண்டும். அத்தகைய ஒரு அன்பற்ற மற்றும் சுயத்தின் மேல் தற்பெருமையாகிய உத்திரம் அவர்களின் ஆவிக்குரிய கண்களில் காணப்பட்டால், அவர்கள் விரைவாக "சகோதரர்களுக்கு" மென்மையாகவும், அனுதாபத்தோடும் உதவிச் செய்யவதற்கு, உடனடியாக அவர் பரம வைத்தியரிடம் சென்று, அதை முற்றிலுமாக அகற்றிவிடவேண்டும். மற்றும் மனுக்குலத்தின் குருடாக்கப்பட்ட கண்களை அன்போடும் இரக்கத்தோடு திறக்கவும், பாவத்தின் எல்லா காயங்களை குணப்படுத்தக்கூடிய ஆயிர வருட ஆட்சியின் வேலைக்கு, வெற்றிகரமான வைத்தியர்களாகவும், அறுவை சிகிச்சையாளர் களாகவும் ஆயத்தப்படலாம்.-அன்பற்ற சுய - தற்பெருமையை எவ்வாறு வெல்லுவது.

**R2590 [col. 1 P2, 3]**

"சகோதரர்கள்" கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகளுக்கு திரும்பி வருகிறார். ஒருவருக்கொருவர் தீர்ப்பளிக்கும் போக்கை,

திருத்த, சிறப்புமிக்க சாத்தியமான காரியங்களை மனதில் கொண்டு, நம்முடைய ஆண்டவர் இந்த தவறான குணங்களை எவ்வாறு அழிப்பது என்பதற்கான கட்டளைகளை கொடுக்கிறார். நாம் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதை தடை செய்வதற்கு, தேவையான அன்பையும் இரக்கத்தையும் அனுதாபத்தையும் தேவனிடம் கேட்க வேண்டும். இது நம்முடைய சொந்த குறைபாடுகளை திருத்திக்கொள்வதற்கு தேவையான உதவிகளைச் செய்யும். நாம் உண்மையோடும், விசுவாசத்தோடும் கேட்டால், இந்த வழிக்கு தேவையான உதவியையும், கிருபையையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். கேட்கும்போது, நம்மிடம் இல்லாத காரியம் அதாவது நம்மடைய இருதயங்களில் அன்பின் பரிசுத்த ஆவி நிரப்பப்படும்படியான காரியங்களை தேட கடமைப்பட்டிருக்கிறோம். தேடினால் கண்டடைவோம். நாம் கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சித்து, தேவனுடைய களஞ்சியத்தை தட்டிக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும். இதன் விளைவாக அவைகள் நமக்கு திறக்கப்படும். கேட்டல், தேடல், தட்டுதல், அனைத்தும், கர்த்தருக்குள் விசுவாசத்தைக் குறிப்பிடுகிறது. இது அவருடைய பார்வைக்கு பிரியமாக இருக்கும். நம்முடைய சார்பில், அது நம்முடைய விசுவாசத்தையும், கர்த்தருடைய சித்தத்தின் படியே முழுமையாக செய்வதற்கு ஒரு விருப்பத்தையும் ஏற்படுத்தும். பூமிக்குரிய பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகள் விரும்பி கேட்கக்கூடிய பூமிக்குரிய ஆகாரத்தை, கொடுப்பதுபோல, ஆண்டவரும் தம்முடைய பிள்ளைகளின் தேவைக்கு ஏற்றபடி கிருபை அளிப்பது நிச்சயம். ஆகவே, நம்முடைய இருதயங்களில் உள்ள நல்ல ஆசைகள் திருப்தியாகும். அவர் நம்மை வஞ்சிக்கமாட்டார் அல்லது தீமையான காரியங்களை நமக்கு கையளிக்கமாட்டார். நாம் நன்மையானதை விரும்பும் போது, நாம் கேட்டதைவிட, எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாக கொடுப்பார். ஏனெனில், நம்முடைய பரலோக தகப்பன் பூமிக்குரிய அபூரணமான தகப்பன்களை காட்டிலும் எவ்வளவு மேலானவர் ? இந்த பிரசங்கத்தை லூக்கா 11:13 ல் குறிப்பிடுகிறார். கேட்கிறவர்களுக்கும், தேடுகிறவர்களுக்கும், தட்டுகிறவர்களுக்கும், நன்மையான, அதாவது அவருடைய பரிசுத்தஆவியை கொடுப்பதற்கு தேவன் பிரியமாக இருக்கிறார் என்று அறிவிக்கிறார். இதுவே தேவைப்பட்ட துல்லியமான ஒன்று. மேலும் இது அசுத்தமான, அன்பற்ற, சுயநலமான, நியாந்தீர்க்கிற, மற்றும் மாம்சத்தில் குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியை புறம்பே தள்ளிவிட வேண்டும். நாம் பரிசுத்த ஆவியினால், அன்பின் ஆவியினால் நிரப்பப்படுவதே இந்த விஷயத்திற்கு கொடுக்கக்கூடிய தடுப்பு மருந்து. ஏனெனில், அன்பு மற்றவர்களுக்கு எந்த தீங்கும் செய்யாது"," அன்பு நீடிய பொறுமையும் இரக்கமானது,"தன்னுடைய குற்றத்தை கவனியாமல், மற்றவரின் குற்றங்களை கண்டுபிடிக்கும் படிக்கு, "அன்பு இறுமாப்பாயிராது," "தன்னை தான் புகழுவதற்காக"ஒரு பொது விமர்சகராக, தவறு கண்டுபிடிப்பவராக அல்லது சகோதரர்களை குற்றம் சாட்டுகிறவராக இராது. அன்பானது பரிவுள்ளதும், உதவிகரமானதும், தேவனுடையஆவியுமாயிருக்கிறது. "(1கொரிந்தியர் 13:4, ரோமர் 13:10)

**R3316 [col. 2 P1, 2]:** தேவனுடைய ஆவிக்கு தேவைப்படுகிறது கருணை

குற்றம் கண்டுபிடிக்கும் மனபாங்கு, அதாவது அனைவரையும் குற்றம் சாட்டி தீர்ப்பளிக்க ஆயத்தமான நிலை, ஒருவருடைய தவறான இருதயத்தின் நோக்கத்தை குறிப்பிடுகிறது. ஆண்டவருடைய ஜனங்கள் அனைவருமே இப்படிப்பட்ட நிலைக்கு எதிராக தன்னை காத்துக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் விளக்குவது போல, இது எந்த தீமையையும் சிந்திக்காது, இரக்கம், பரிவு, அன்பும் உள்ள ஆவி அல்ல. இது தேவனுடைய மனப்பான்மைக்கு இணங்காத ஆவி, அல்லது நம்முடைய ஆண்டவர் விளக்குவதை போல, பலியை காட்டிலும் தேவன் இரக்கத்தையே விரும்புகிறார். மேலும், மற்றவர்களை கண்டனம் செய்வதற்குத் தயாராக உள்ளவர்கள், ஆண்டவரின் இரக்கம் மற்றும் மன்னிப்பிற்கான ஆவி இல்லாதவர்கள் என்று காட்டுகிறது. நம்முடைய ஆண்டவர் துவக்கத்தில் தம்முடைய இரண்டு சிறந்த சீஷர்களை இந்த குற்றத்திற்காக கண்டனம் தெரிவித்தார். ஆண்டவர் யூதர்கள் மத்தியில் செய்தது போல, சமாரியாவில் நிற்காமலும், அங்கு அற்புதங்களை செய்யாமல் சென்றதினால், சமாரியாவின் ஜனங்கள் அவருடைய சீஷர்களுக்கு உணவு விற்கவில்லை. அப்போது, யோவானும், யாக்கோபும், கோபமடைந்து, "ஆண்டவரே, எலியா செய்தது போல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்."

அதற்கு இயேசு திரும்பி பார்த்து "நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டினார்," மனுஷனை அழிப்பதற்கு அல்ல அவர்களை இரட்சக்கவே மனுஷகுமாரன் வந்தார்" என்றும் கூறினார். எனவே கர்த்தருடைய சீஷர்கள் அனைவரும் - தங்களுக்கு இரக்கம் பெறுவதை விரும்பும் போது, மற்றவர்களின் குறைகளை கண்டுபிடித்து தீர்ப்பளிக்கும் மனநிலை மற்றும் மற்ற ஜனங்களை அழிக்கக்கூடிய நோக்கங்களை தவிர்ப்பதற்காக தொடர்ந்து நாம் படித்து கொண்டிருக்க வேண்டும். ஆண்டவர் நிலைநாட்டிய பிரமாணத்தில், மற்றவர்களிடம் நாம் காண்பிக்கக் கூடிய இரக்கத்தின் விகிதத்தின் படியே, தேவனிடம் நாம் இரக்கத்தை எதிர்ப்பார்க்க முடியும்.

### 37.தீய எண்ணங்களை அன்பு எப்படி கையாள்வது?

**R3594 [col. 1 PIII to IV]** பாடத்தின் முடிவில் காணலாம்.

### 38."ஒருவருக்கொருவர் அன்பு கூருங்கள்" என்ற கட்டளையை நாம் எப்படி நிறை வேற்றுவது?

**R2453 [col. 2 P2-5]**:

இந்த "சகோதரர்களுக்கான" இறுதி மற்றும் மிகவும் தேடப்படுகிற சோதனையாதெனில், "சகோதரர்களுக்கான அன்பு" மாத்திரமே, இதில் விழித்திருந்து, போராயுதம் தரித்தவர்களும் கூட விழுந்து விடுவார்கள். எனவே இந்த சோதனையில் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஏராளமான வர்கள் தகுதியற்றவர்களாக கணக்கிடப் படுவார்கள். (ரோமர் 8:20)ம் வசனத்திற்கு இசைவாக அன்பின் ஆவியைப் பெற்றிருப்பர், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளி களாயிருக்கிறோம்." என்ற அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை ஒப்புக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. - 1யோவான் 3:14,16, 1பேதுரு 1:22, 3:8. யுகத்தின் முடிவில் (வெளி 3:10) சிறப்பான சலுகை மற்றும் சிறப்பான விசாரணையில், மற்ற சோதனைகளை போல, இதுவும், கவனத்திற்குரியதும், கூர்மையாகவும் இருக்கும். நாம் இவைகளை வெற்றிகரமாக சந்திக்க, நாம் தயாராக இருப்பதற்கு, இந்த சோதனைகள் எப்படி வரும் என்பதை இப்போது பார்க்கலாம்.(a) "மனுஷனுடைய சகோதரத்தும்" என்று அறிவிக்கிற தெய்வீக வார்த்தையை மதிக்காத உலகத்தின் அளவற்ற தளத்தின் மீதும் அல்ல. இது தீமையின் பிள்ளைகளையும் கடவுளின் பிள்ளைகளையும் அடையாளம் கண்டுகொள்ளும். பிந்தையவர்கள் அனைவரும், கனப்படுத்தப்பட்டு, நேசிக்கப்பட்டு, "சகோதரர்களாக" மதிக்கப்படுவார்கள்- மன்னிப்புக்காகவும், ஆண்டவரின் ஊழியத்திற் காகவும், முழுமையாக அர்ப்பணிப்புக்காகவும், அனைவரும் கிறிஸ்துவின் மாபெரும் இரத்தத்தின் மேல் நம்பிக்கையுள்ளவர்கள்.(b) இப்படிப்பட்ட வர்கள் "பாபிலோனில்" அல்லது அவளை விட்டு வெளியே மூட நம்பிக்கைகளினாலும், தவறான போதனைகளினாலும் குருடாக்கப்பட்டு, விலங்கிடப் பட்டு, நித்திரையில் காணப்பட்டால், விழித்திருக்கக்கூடிய ஒரு சிலுவையின் போர் வீரனாக, சர்வாயுதங்களை தரித்துக்கொண்டு, மகிழ்ச்சியோடு சிறந்த மற்றும் விரைவான முறையில் ஞானமாக மீட்பு பணியை வேகப்படுத்த வேண்டியது அவரது கடமையாகும். எந்த ஒரு தன்னுணர்வு, சுய -புகழ் அல்லது சுயத்தின் ஆவி அவரை தடுக்க வேண்டாம். அன்பின் ஆவியே அவருடைய முழு வல்லமையை உற்சாகப்படுத்த வேண்டும். சகோதரர்களுக்காக தன்னுடைய ஜீவனையே கொடுக்கக்கூடிய அளவுக்கும் அன்பின் ஆவி செயல்பட வேண்டும். இந்த ஆவியைப் பெற்றிருக்கும் அனைவரும், அவிசுவாசத்தை நோக்கி குருட்டுதனமாக வழிநடத்தப்பட்டதினால், ஆண்டவரிடம் அவர்கள் கொண்டுள்ள பிடியை விட்டுவிடுவதற்கான அபாயத்தில் இருப்பவர் களுக்கு உதவி செய்ய வாஞ்சிக்க வேண்டும். (c) "இரட்சிப்பின் அதிபதியின்" (எபிரெயர் 2:10) அதே ஆவி, இன்னும் தூங்கிக் கொண்டிருக்கும் சகோதரர்களை மட்டும் அல்ல, தம்மைப் போலவே சர்வாயுதங்களை தரித்திருக்கும் சகோதரர் களுக்காகவும் ஜீவனை கொடுக்கக்கூடிய அன்பில் அவர்களை வழிநடத்தும். அவர் சகோதரர்களின் சோதனையில் இறங்கி, அவர்களின் பாதரட்சை மற்றும் அவர்களின் சர்வாயுதவர்கங்களின் எல்லா பாகங்களையும் சரிசெய்துக்கொள்ள உதவு வார்கள். மூத்த சகோதரராகிய நம்முடைய இரட்சிப்பின் அதிபதியைப் போல, யார் ஒருவரும், குறிப்பான பலவீனத்திலோ, இடறலடையக் கூடியவர்களையோ இகழவோ, கடிந்துக் கொள்ளவோமாட்டார். இதற்கு எதிரிடையாக, பலமுள்ளவர்களுடைய ஐக்கியத்தில் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தாலும், பலவீனரிடம் மிக கவனமுள்ளவராக, உதவிச்செய்யக்கூடியவராகவும் இருப்பார். பரஸ்பர பாராட்டல்களுக்கும்,

மகிழ்ச்சிக்கும், பலவான்கள் தங்களைத் தாங்களாகவே கூட்டிச் சேர்ப்பதற்கு இது நேரம் இல்லை - சகோதரர்கள் தங்கள் சார்பாக தங்களுடைய ஜீவனையும் கொடுக்கக்கூடிய அன்பை பெற்றவர்கள் இனிவரும் காலத்தில் கூடுவார்கள். "நல்லது உத்தமனும் உண்மையுமுள்ள ஊழியக்காரரே- உங்கள் ஆண்டவருடைய மகிழ்ச்சிக்குள் பிரவேசியுங்கள்." என்று சொல்லும் ஆண்டவரின் வார்த்தைகளை கேட்பார்கள்.

**R3180 [col. 1 P2]**:

ஒரு காரியம் உண்டு, எவ்வாறாயினும், நம்முடைய சக சிருஷ்டிகளுக்கு மட்டுமல்ல, நம்முடைய சொந்த குடும்பத்தாருக்கும், நமது சொந்த சுற்றப்புறத்தினருக்கும் மட்டுமல்லாமல், எல்லா மனிதர்களுக்கும் நாம் எப்போதும் தொடர்ந்து கடன்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது அன்பில் கடன்பட்டிருக்கிறோம். தெய்வீக சட்டத்தின் கீழ் நாம் அவர்களுக்கு கடன்பட்டிருக்கிறோம், அன்றாட கிறிஸ்தவ கடமைகளில் இது ஒரு பகுதியாகும். ஒரு பெற்றோர் அல்லது குடும்பத்தின் உறுப்பினர், அவர் வீடு மற்றும் அதன் வசதிகளும் சலுகைகளும், அமைதியாக மற்றும் நல்லிணக்கத்திற்கும் ஆதரவாக செயல்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அவரது அயலகத்தார் மற்றும் நண்பர்களிடையே உள்ள அவரது செல்வாக்கு, தீமைக்காகவும், சண்டைக்காகவும் அல்ல நன்மைக்காகவும், சமாதானத்திற்காகவும் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ளவேண்டும். "ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்." (கலாத்தியர் 6:10) என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவர் எல்லா நேரங்களிலும் தனது சொந்த நேரத்தையும் வசதிகளையும் செலவழித்து எல்லா மனுஷருக்கும் நன்மை செய்ய தயாராக இருக்கவேண்டும். சகோதரார்களுக்காக தம் ஜீவனை கொடுக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அதாவது சத்தியத்தை அறிவிப்பதற்கு, நேரத்தை செலவிடுவதற்கும், தீய நாட்களில் சத்தியத்தில் நிலைத்து நிற்க, ஆண்டவருடைய சகோதரர்களுக்கு எந்த விதத்திலும் அவருடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துக்கொள்ள, உதவி செய்யும்படிக்கு, ஒவ்வொரு நாளும், ஜீவனை கொடுப்பதற்கு வாய்ப்புகளை தேடவேண்டும்.

**R2330 [col. 1 P3, 4]: இந்த பிரமாணத்தின் நடைமுறை செயல்பாடு.**

மற்றும் சகோதரர்களுக்கான அன்பு, வெறுமனே பிரிவினையினாலோ,குழுமனப்பான்மையினாலோ அல்லது நாம் விரும்பும் இயற்கை குணங்களை உடைய சகோதரர்கள் மேல் வைக்கும் அன்பை இது பொருள்படுத்தாது. இது புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட அனைவர் மற்றும் அன்பின் பொன்னான பிரமாணத்தின் படி நடக்க முயல்கிற அனைவர் மேலுள்ள அன்பை இது பொருள் படுத்துகிறது. நம்முடைய சிந்தனைகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் பொருந்தாதபடிக்கு, சிலர் இயற்கையான வளர்ச்சி மற்றும் மனநிலையை தனித்தன்மையாக கொண்டிருந்தார்களானால், நாம் அவர்களை நேசித்து, அவர்களை சந்தோஷப்படுத்தி, மகிழ்ச்சியோடு அவர்களுக்கு ஊழியம் செய்வோம். ஏனென்றால், அவர்கள் ஆண்டவர் மேல் நம்பிக்கை வைக்கிறார்கள், அவரால் அங்கீகரிப்பை பெற்று, புதிய உடன்படிக்கையின் பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, இராஜரீகமான சுயாதீன பிரமாணத்தையும் ஜீவனையும் தங்களுடைய நிலைபாடாக ஏற்படுத்திக்கொண்டனர். ஆகவே நாம் அவர்களை இனி மாம்சத்தின் தனித்தன்மைகளாகிய முடிச்சுகள், திருப்பங்களின்படி அறியாமல், புதிய சுபாவத்தில் உள்ள "புது சிருஷ்டிகளாக" அறிந்திருக்கிறோம். அதாவது, நம் ஒவ்வொருவருக்கும் அன்பின் பிரமாணத்திற்கு எதிரான, நம்முடைய சொந்த இயல்பான வஞ்சகங்கள், சாதுரியங்களை கண்டறிந்து, இந்த மாம்சத்தின் அபூரணங்களை கூடுமான அளவுக்கு துரிதமாக புறம்பாக்க நாம் முயலவேண்டும். மற்றும் அவைகள் கூடுமான அளவுக்கு மற்றவர்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.இந்த நிலைப்பாட்டிலிருந்து, கிறிஸ்துவின் சரீரத்தின் பல்வேறு அங்கத்தினர்கள், என்றுமே குறைபாடுகளை குறிப்பிடமாட்டார்கள். அல்லது மற்றவர்களை பழிப்பதற்கும் கேலிக்குரிய காரியங்களுக்கும் அவர்கள் இணங்கமாட்டார்கள். ஆனால் ஒவ்வொருவரும் முடிந்த அளவுக்கு தங்களுடைய சொந்த குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் போல மற்றவர்களின் குறைபாடுகளை மறைப்பார்கள். மற்றும் தங்களிடம் பரிவுணர்வோடிருப்பது போல, மற்றவர்களைச் சூழும் பிரச்சனைகளில், அவர்களிடம் பரிவுணர்வோடிருந்து, ஆண்டவரும் அவரிடம் பரிவுணர்வோடு நடந்துக்கொள்ள

விரும்புவார்கள்.'. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் (கிறிஸ்துவின் சிந்தை, அன்பு) அவருடையவனல்ல" (ரோமர் 8:9)

**R3547 [col. 1 P3]**:

நாம் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும் என்று கர்த்தர் கற்பித்ததை குறித்து நமக்கு ஆச்சரியம் இல்லை, ஆனால் "நான் உங்களை நேசித்தது போல" என்ற இந்த வார்த்தைகளில் உள்ள சிந்தனையை எண்ணி வியப்படைகிறோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவர் மீதும் வைத்திருக்கும் அதே அன்பை நாம் எவ்வாறு ஒருவருக்கொருவர் காட்டமுடியும்? இது நம்முடைய முதல் கேள்வி. இது இயலாத காரியம் என்று முதலில் நாம் பதில் அளிக்கலாம். ஆனால் நாம் ஆண்டவருடைய ஆவியினால் அதிகதிகமாக நிரப்பப்படும் போது, அவருடைய எல்லாவற்றின் மேலும், பரிபூரண அன்பின் நிலைப்பாட்டிற்கு கிட்டத்தட்ட வந்தடைகிறோம். இந்த அன்பு மற்றவர்களை காயப்படுத்த மறுப்பதோடு, சகோதரர்களுக்கு நன்மை செய்வதில் மகிழ்ச்சி அடையும். ஆம், இது ஒருவருடைய சொந்த நேரத்தையும் வசதிகளையும் இழந்து நன்மை செய்யக்கூடிய அதிகமாக அன்பாகும். இவ்வாறு இயேசு நம்மனைவரையும் நேசித்தார், அவருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே நம்மை மீட்டார். மற்றும் நாம் எந்த அளவுக்கு கிருபையிலும், அறிவிலும் அவருக்கான அன்பிலும் வளருகிறோமோ, அந்த அளவுக்கு நாம் கிறிஸ்துவை போல, கிறிஸ்துவின் அன்பை பெறுவோம். இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாக இருக்கிறது. ஒருவர் சகோதரர்களுக்காக இப்படிப்பட்ட அன்பை பெற்றிருந்தால், சந்தேகத்திற்கு இடமின்றி, ஏங்கி தவித்துக் கொண்டிருக்கும் சர்வசிருஷ்டிகளின் மேல் பரிவுணர்வுள்ள அன்பைப் பெற்றிருப்பார்கள் மற்றும் அவர்கள் சார்பாக ஒரு சிறிய அளவிலான காரியம் செய்ய முடியும் என்ற மகிழ்ச்சி அடையவார்கள், மற்றும் ஆதாமின் இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்காகவும், தாம் நியமிக்கப்பட்ட நேரத்திலும், அவருடைய மகிழ்ச்சியிலும், ஒரு மிகபெரிய அற்புதமான ஆசீர்வாதத்தை அவர் வைத்திருப்பது இரட்டிப்பான சந்தோஷமாகும்.

**R3639 [col. 2 P4, 5]**:

தேவ ஜனங்களை காயப்படுத்துவதற்கான எதிராளியின் கருவிகள் - புகழ்ச்சி மற்றும் தற்பெருமை அல்லது கர்வம். இந்த உண்மையை உணர்ந்துக்கொள்ளும், அதற்கு ஏற்றபடி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உண்மை, தேவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யார் ஒருவரும், தரியுவைப்போல புகழ்ச்சி அல்லது அதிகாரத்தின் உச்சியிலோ, வைக்கப்படக்கூடாது. அல்லது அவர்களை தனிப்பட்ட வணக்க வழிபாடு செய்யக்கூடாது. ஆயினும், பேசுவதற்கு, சிறிய உலகங்கள், சிறிய சாம்ராஜ்யங்கள், அறிமுகமான சிறிய வட்டங்கள் உள்ளன, இவைகளில், அதே கொள்கைகளில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செயல்படலாம். தேவ ஜனங்களின் ஒவ்வொரு சிறிய குழுவிலும், தாலந்துகள் அல்லது பிற விதிமுறைகளின் காரணமாக, நிறுவனத்தின் அன்பிலும் மரியாதையிலும் ஒரு முக்கிய இடம் பெற்றிருக்கலாம். இது நியாயமானது மட்டுமல்ல, நீதியானதும் கூட என்று ஆண்டவருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுகிறது. இவர்கள் உண்மையுள்ள ஊழியர்களாக இருந்தால், இவர்கள் நேசிக்கப்பட வேண்டும், இவர்கள் செயல்களுக்காக கௌரவிக்கப்படவேண்டும். ஆனால் அவர்கள் இன்னும் நம்முடைய சகோதரர்களாக இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும், எந்த அர்த்தத்திலும் தேவனுக்கே உரிய மரியாதையையும், பக்தியையும் அவர்களுக்கு கொடுத்துவிடக்கூடாது. எந்த வழியிலும், வழிபாடுகளிலும், தலைமையான தேவன் மட்டுமே தகுதிப்பெற்றவர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும், இந்த கொள்கையில், எந்த மாகாணமும், சபைகளின் கூட்டமைப்புகளும் தலையிடக்கூடாது. சபையின் சகோதர, சகோதரிகள், உண்மையுள்ள மூப்பர்களை மிகவும் உயர்வாக மதிக்கும்போது, வேறேந்த விதத்திலும் வீணான தற்பெருமையை தூண்டிவிடும்படிக்கும், அவர்களை புகழவோ, முகஸ்துதியோ செய்து, இதனால் அவர்கள் தேவனுக்கும் அவருடைய மந்தைக்கும் ஊழியர்களாக இராதபடிக்கு நீக்கப்படாதபடிக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவனுடைய குடும்பங்களில் எந்தவொரு திறமையும் உள்ள ஒவ்வொரு மூப்பரும், பெருமை, நீசமான ஆசைகள் மற்றும் இலட்சியத்தின் நன்னெறித் தாக்கங்களுக்கு எதிராக அவர்கள் காத்துக் கொள்ள வேண்டும். மேலும் சத்தியத்தையும் அதன் அறிவைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் திறமையைப் பெற்றவர்கள் தேவனுக்கு மட்டுமே

சேர வேண்டிய மகிமையை தாங்கள் பெற்றுக்கொள்வதற்கு எதிராக அவர்களை காத்துக்கொள்ளவேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி, மனத்தாழ்மையே, நம்முடைய முக்கியமான பாடமாகும். இது எந்த அளவுக்கு புறகணிக்கப்படுகிறதோ, அதன் விளைவாக, அந்த அளவுக்கு பிரச்சனைகளை நிச்சயமாக சந்திக்கவேண்டும்

## F489 [P2] through F490: ஒழுங்கீனமான கலப்புதல் இங்கு கூறப்படவில்லை

அப்போஸ்தலர் மூலமாக, ஆண்டவர் தெளிவாக கற்றுக்கொடுக்கிற காரியங்களாவன - ஆண்டவருடைய கிருபையும், சிலாக்கியங்களும் எல்லா புது சிருஷ்டிகளுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அது அவர்களுடைய வைராக்கியம், அவருக்காக அவர்கள் கொண்ட அன்பு, மற்றும் அவருக்குள் காணப்படும் கொள்கைகளை பொருத்தே உள்ளது. மற்றும் அழிவுக்குரிய சரீரத்தின் நிறம், பால், இனம் முதலானவை , அவருடைய ஜனங்களின் நீயாயத்தீர்ப்பு வழங்குவதிலும், மதிப்பிடுகையிலும், இறுதியாக வெகுமதி கொடுப்பதிலும் எந்தவிதமான பாகுபாட்டையும் காட்டாது.

இந்த விஷயத்தில் பிதாவின் சித்தத்தை அறிந்து, புது சிருஷ்டிகள் அனைவரும், ஒரே கண்ணோட்டத்தை உடையவர்களாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவுக்குள் அனைவரையும் "சகோதரர்கள்" என்று எண்ணி,அனைவரிடமும் அன்பாக நடந்து கொண்டு, அனைவருக்கும் சேவைச் செய்ய நாடவேண்டும். தேவனுக்காக அதிக அளவு வைராக்கியத்தைக் காட்டிய வர்களுக்கு அவர் சலுகைகாட்டி, கனப்படுத்தினார். இதுபோன்ற செய்வதற்கு தேவனை தவிர, நாம் எந்த விஷயத்திலும் சகோதரர்களிடையே பாகுபாடு காண்பிக்கக்கூடாது. இந்த நிறம், பால், இனம் என்பவைகளை ஒதுக்கிவிட்டு, பாகுபாடு பார்க்காமல் இருப்பது புது சிருஷ்டிகளாகிய நமக்குரியது, மேலும், நம்முடைய அழிவுக்குரிய சரீரங்களையும், அவர்கள் உலகத்தோடு கொண்டுள்ள உறவையும், ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள உறவையும் ஓரளவுக்கு மாத்திரமே பாதிக்கிறது. ஆகவே இருபாலருக்கும் இடையில் உள்ள உறவும், நடத்தையும் உரிய முறையில் புது சிருஷ்டிகளால் காக்கப்படவேண்டும்.

இவர்கள், உண்மையிலேயே, உலகத்தாரைக் காட்டிலும் அதிக அளவு ஞானமும், முன்யோசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் தெளிந்த புத்தியின் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன்படி, ஒரு புதுசிருஷ்டியாக இருப்பதினால், மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்க முற்படுகிறபடியால், அவர்களுடைய மாம்ச பெலவீனங்களைப் பொறுத்த வரையில், இருபாலருக்கும் இடையில் உள்ள சில சரியான நடத்தை, கற்பு, வரையறுப்பதைக் குறித்து, உலகத்தாரைக் காட்டிலும் இன்னும் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாக இருப்பது அவர்களுக்கு நல்லது. புதுசிருஷ்டி எந்த அளவுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையை வஞ்சிக்கிறதோ, புது சிருஷ்டியின் நலனுக்கு எதிராக பாலிய இச்சைகள் யுத்தம் செய்கின்றன என்று உணரும் அளவுக்கு, அதே விகிதத்தில் அவர்களுடைய பாதங்களுக்கு செம்மையான பாதைகளை உண்டு பண்ணவும், அவர்களுக்கும், இச்சைகளுக்கும் இடையில் எத்தனை தடைகளை, உறுதியாக உண்டுபண்ண முடியுமோ அந்த அளவுக்கு புது சிருஷ்டி உலகத்தாரைக் காட்டிலும் அதிகமாக செய்ய முயற்சிக்க வேண்டும். இந்த விவாதம் ஜாதி வேறுபாடுகள் பார்ப்பதற்கும் பொருந்தும். மாம்சத்தில் உள்ள உறவுக்கும், ஐக்கியத்திற்கும், ஆவியின் உறவிற்கும் ஐக்கியத்திற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உண்டு. புது சிருஷ்டியின் நலன்கள் மாம்சத்தில் தனியாக பிரிக்கப்பட்டு இருப்பதால், பொதுவாக பாதுகாக்கப்படுகின்றன என்று நாம் நம்புகிறோம். ஏனெனில், ஒரு ஜாதியினரின் குறிக்கோள்கள், விருப்பங்கள், வாஞ்சைகள், நிலைமைகள் போன்றவை இன்னொரு ஜாதியினரின் குறிக்கோள்கள் போன்றவைகளோடு ஏறக்குறைய முரண்பட்டே இருக்கின்றன.

ஆகவே, மனுக்குலத்தின் பல்வேறு ஜாதியினர், அவர்கள் புதுசிருஷ்டிகள் என்றிருக்கும்போது, அவர்களின் ஆவிக்குரிய நலன்களின் தனித்தன்மையின் அளவின் மூலம் நன்கு பாதுகாக்கப்படலாம். புது சிருஷ்டிகளுக்கும் மாம்சத்தில் உள்ளவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்கள் இதன் அடிப்படையில் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டால், எந்தவித பிரச்சனையும் இருக்காது. கிறிஸ்து இயேசுவுக்குள் ஆண்களும் பெண்களும் ஒரே சகோதரத்துவத்தில் உள்ளபடியால் அவர்கள் ஒன்றாக சேர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதற்கு, இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் அப்போஸ்தலரின் வார்த்தைகள் ஆதரவு அளிக்கிறது. அதேபோல,

இந்த இரண்டு பாலாருக்கும் இடையில் எந்த விதமான வரைமுறையற்ற காரியத்தை அது குறிப்பிடுகிறது என்றும் ஒருவரும் புரிந்துகொள்ளக்கூடாது. ஆனாலும், ஆவிக்குரிய மேன்மையிலும், உறவிலும், ஒருவருக்கொருவரும் மற்றும், எல்லாருக்கும் செய்ய வேண்டிய ஆவிக்குரிய மற்றும் உலகத்துக்குரிய கடமைகளை குறித்தும் நமக்கு ஒரு நிலைப்பாட்டை அது ஏற்படுத்துகிறது.

### 39.அன்பின் வெவ்வேறு பண்பினை வெளிப் படுத்துவதில் பாரபட்சம் காட்டப்படுமா?

**R3034 [col. 1 P3 through col. 2 P1]**:

ஆனால் இப்போது நாம் மற்றொரு கட்டத்திற்கு வருகிறோம். சகோதரர்களிடம் நாம் காட்டும் அன்பு ஒரே அளவாகவும், ஒரே விதமான தீவிரத்தோடும் அல்லது ஆர்வத்தோடும் இருக்க முடியாது. ஏதோ ஒன்று இதை அளவிடுகிறது அல்லது ஒழுங்குப்படுத்துகிறது. அது என்ன? நாம் தேவனை நேசிக்கிறோம், அவருடைய குணாதிசயங்களை அடையாளப்படுத்தும் நீதியின் மகிமையான கொள்கைகளை நாம் நேசிக்கிறோம். அதே நிலைப்பாட்டில், நன்மையானதும், மென்மையானதும், உண்மையானதும், தாராளமானதும், அன்பும் மற்றும் சகோதர சிநேகம் நிறைந்த எல்லாவற்றிற்கும் முன்மாதிரியாக இருக்கும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவையும் நேசிக்கிறோம். நம்முடைய ஆண்டவரின் சாயலிலுள்ள சகோதரர்களை காணும்போது, அதே விகிதத்தில், நாம் அன்புக்கூரவேண்டியது அவசியமாகும். மாம்சத்தின் சாயல்களை நாம் பொருள்படுத்தாமல், ஆண்டவரின் நிலைப் பாட்டிலிருந்து பார்க்க வேண்டும் - ஆவியில் மாதிரிகள், இருதயத்தில் மாதிரிகள், உள்நோக்கத்தில் மாதிரிகள், எண்ணங்களில் மாதிரிகள், நீதி, சத்தியத்தின் மேல் வைராக்கியத்தின் மாதிரிகள்... இவ்வாறாக, தேவனுடைய அன்பிலும், கிறிஸ்துவினுடைய அன்பிலும், அவர்களை அடையாளப்படுத்தும் அன்பின் கொள்கைகளிலும் நாம் வளர்ச்சி அடையும்போது, சகல மனுஷரிடமும், சகோதரர்களிடமும், குறிப்பாக ஆண்டவரின் சாயலில் வளர்ச்சி அடையக்கூடியவர்களிடமும், அன்பில் நாம் வளர்ச்சி அடைவோம். இதில் பட்சாபாதம் இல்லை. நமக்கு என்ன செய்யவேடுமென்று நாம் விரும்புகிறோமோ, அதை நாம் செய்வதில் எதையும் வேறுபாடாக செய்வதில்லை. இது கர்த்தராகிய இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதாகும், ஏனெனில் அவருடைய அப்போஸ்தலர்கள் மத்தியில், இன்னும் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களில், மூன்றுபேர் விசேஷித்த அன்பு செலுத்தப்பட்டார்கள். மற்றும் அந்த மூன்று பேரில் "இயேசுவினால் நேசிக்கப்பட்ட சீஷர்" என்று ஒருவர் குறிப்பிடப்படுகிறார். அவர் விசேஷமாக நேசிக்கப்பட்டார், ஏனெனில் அவர் விசேஷமாக நேசிக்கப்படத்தக்கவராக இருந்தார். அதேபோல நம்மிடமும் சகோதரர்களிடமும் காணப்படுகிறது. நாம் அவர்களை பிரியமாகவும் ஆர்வத்தோடும் நேசிக்கவேண்டும். ஆனால் தேவைக்கேற்ப அந்த உற்சாகம் வேறுபடலாம். அந்த உற்சாகம், நம்முடைய ஆண்டவரின் இருதயத்தை போலுள்ள வளர்ச்சியின்படி ஒவ்வொரு விகிதத்தில் அதிகரிக்க வேண்டும். இது உண்மையானால், சத்தியத்தை அறிந்தபின், அதன் நன்மைகளை ருசிப்பார்த்து, பாவத்திற்குள் விழுந்துபோனால் என்ன சொல்லுவோம்? ஆவியின் படிநடக்காமல், மாம்சத்தின் படி நடந்தால் என்ன செய்வது? அவர்களுக்காக நம்முடைய அன்பு, முன்னிருந்ததை போல அதே அளவில் உற்சாகத்துடன் இருக்குமா? எக்காரணத்தை கொண்டும், அவ்வாறாக செய்யக்கூடாது. அப்போஸ்தலர் நம் உரையில் கூறியபடி, நாம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால், நாம் பரலோக பிதாவின் மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போம். ஏனெனில், ஆவிக்குரிய வாழ்க்கையில் நடந்தால் மட்டுமே, யாரேனும் தேவனுடைய அன்பில் தங்களை காத்துக்கொள்ள முடியும். இதே வழியைப் பின்பற்றினால் மட்டுமே, சகோதர அன்பிலும் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடியும். இதில் எந்த ஒரு விலகுதலும், அதே சரியான அளவில் சகோதர சிநேகத்திலும் ஐக்கியத்திலும் நஷ்டம் ஏற்படும். இந்த ஒரு வித்தியாசதத்தை ஏற்படுத்துவது, சபையின் தூய்மைக்கும், முன்னேற்றத்திற்கும் மிக அவசியம். ஆவியின் படி நடக்கிற சகோதரர்கள் மற்றும் ஒழுங்கீனமாக, மாம்சத்தின்படி நடப்பவர்களுக்கும் நாம் எந்தவிதமான வித்தியாசத்தை ஏற்படுத்தாவிட்டால், ஆவியின்படி நடப்பவர்களுக்கு தேவன் கொடுக்கவேண்டும் என்று விரும்பிய உயர்மதிப்பையும், ஆசீர்வாதங் களையும் நாம் எடுத்து, தேவன் விரும்பாத, அதாவது தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக, மாம்சத்தின் படி நடப்போருக்கு, நாம் கொடுப்பவர்களாக இருப்போம். இதற்கு தகுதியற்றவர்களிடமிருந்து நம்முடைய

ஐக்கியத்தை விலக்கிக்கொள்ள வேண்டியது நம் கடமையாக இருக்கிறது. அதே நேரத்தில், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களை நாம் காணும் போது அவர்களிடம் ஐக்கியம் கொண்டு ஊக்கமாக அன்பு செலுத்துவதும் நம் கடமையாக உள்ளது. தவறான செயல்களைச் செய்வதற்கு தவறானவர்களை உற்சாகப்படுத்துவதற்கு அன்பு நம்மை ஏவுகிறதாக நினைத்துவிடக்கூடாது - அது அன்பல்ல, ஆனால் அறியாமை. ஆண்டவரிடம், அவருடைய வார்த்தைகளிடம் மற்றும் அவருடைய மாதிரியிடம் நாம் கற்றுக்கொள்வதே அறியாமைக்கான தீர்வு.

**R3529 [col. 1 P4]**:

இது, ஆண்டவராம் இயேசுவை நேசித்த லாசரு என்ற ஒரு மனுஷனுடைய குணாதிசயங்களைப் பற்றிய தொகுப்புகளை பேசுகிறது. ஒரு ஐசுவரியமுள்ள வாலிபனைப் பற்றிய பதிவுகளை நாம் நினைவில் கொள்ளலாம். அவர் தன் இளவயதிலிருந்தே குறைந்தபட்சம் எல்லா கற்பனைகளையும் கடைபிடித்தாரென ஆண்டவருக்கு தெரிவித்தபின்,- ஒரு உண்மையான சீஷராக மாறுவதற்கு, முழுமையாக அர்ப்பணிப்பதற்கு ஏற்ற மனநிலை அந்த வாலிபனிடத்தில் இல்லாதபோதிலும், இயேசு அவரை நேசித்தார். எனவே, நாம் அனைவரும் உன்னதமான குணாதிசயங்களை காணக்கூடிய யாவரையும் நேசிக்க நாம் இணங்கவேண்டும். இவர்கள் அர்ப்பணித்தவர்களானாலும் சரி, அர்ப்பணிக்காவிட்டாலும் சரி - அவர்கள் செய்யும் புத்தியுள்ள ஆராதனையையும், அவர்களின் சரீரங்களை ஜீவனுள்ள பலிகளாக நம்மை இரட்சித்தவரிடம் ஒப்புக்கொடுப்பதை நாம் உணரும்போது, அவர்கள் மேல் நாம் கொண்டுள்ள அன்பும் அவர்களுக்காக நாம் கொண்டுள்ள மதிப்பும் நிச்சயமாக அதிகரிக்கும்.

### 40.“ஒருவரையொருவர் அன்பினால்” எவ்வாறு ஏவப்படுவது?

"மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து" (எபிரெயர் 10:24)

**F308 -** "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போம்"

எவ்வளவு அன்பான மற்றும் அருமையான சிந்தனை இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மற்றவர்கள், தங்கள் சக மனிதர்களை, குற்றம் கண்டுபிடித்து அல்லது சோர்வடையச்செய்து அல்லது அவர்களின் பெலவீனங்களை தங்களுக்கு சாதகமாக, சுயநலத்துடன் பயன்படுத்த நினைக்கும் போது, புது சிருஷ்டிகள் அதற்கு மாறாக செயல்படுகிறார்கள். ஒருவருடைய மனநிலையை ஒருவர் புண்படுத்தக்கூடிய காரியங்களையோ, கோபத்தைக் கிளறிவிடக்கூடிய காரியங்களையோ சொல்லுவதை, செய்வதை தவிர்த்து, அன்பிற்கும் நல்நடத்தைக்கும் அவர்களை ஏவக்கூடிய கண்ணோட்டத்தில் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். ஏன் அப்படிச் செய்யக்கூடாது ? முழு உலகத்தினுடையது மாத்திரம் அல்லாது, பொறாமை, சுயநலம், தவறான எண்ணத்துடன் நோக்குவது, வார்த்தையிலும், செயலிலும், சிந்தனையிலும் பாவம் செய்யும் படியாக தூண்டுகின்ற பிசாசின், மாம்சத்தின் நிலையும் அப்படியாக இல்லையா? அப்படியென்றால் கிறிஸ்துவின் சரீரமான சபையின் புது சிருஷ்டிகள் இப்படியான செயல்களிலிருந்து தங்களையும், மற்றவர்களையும் காத்துக் கொள்வதோடு, இதற்கு எதிர்மாறான அன்புக் கேதுவாக, நற்கிரியைகளைச் செய்யும் படியாகத் தூண்டக்கூடாதா அல்லது செயல்படக்கூடாதா ? இது நிச்சயமாகவே, தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகின்ற கண்டித்து உணர்த்துதலையும், புத்திமதியும் நன்மை விளைவிக்கிறதாயும் நல்லதாயும் இருக்கிறது.

### 41.நாம் எவ்வாறு பொன்னான பிரமாணத்தை உபயோகிக்க வேண்டும்?

"இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே" (மத்தேயு 22:39)

**R2445[col.1 P2]:**

ஆனால் சிலர் இந்த சுதந்திரத்தை நேர்மறையான அறிவொளிகளுக்காக கட்டுப்படுத்துவதை புறக்கணிப்பார்கள், மேலும் முழுமையான அறிவு பொதுவாக சிறியதாக இருப்பதாகக் கூறலாம். நாம் இதற்கு தெய்வீக பிரமாணத்தின்படி பதில் கூறுகிறோம் - "உன்னிடத்தில் நீ அன்புகூறுவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக". உங்கள் அயலான் மூளையையும் நாவையும் உங்களுக்கு விரோதமாக தீய சூழ்ச்சிகளிலும், அவதூறுகளிலும் பயன்படுத்த தாங்கள் விரும்பாததுபோல, நீங்களும் அவரிடம் அவ்வாறு செய்யக்கூடாது கர்த்தரின் பிரமாணமானது உங்கள் அயலார் மீது உங்களுக்குத்

தெரிந்த விஷயத்தை (தனிப்பட்ட அறிவை) விட நீங்கள் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று கேட்கவில்லை, அது உங்கள் சந்தேகங்களையும் தீய ஊகங்களையும் கேட்கவில்லை. மாறாக, புதிய உடன்படிக்கையின் கீழுள்ள அனைவரும் அயலானுக்கு எதிராக ஒரு தனித்த சந்தேகத்தை வெளிப்படுத்தக் கூடாது என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். சூழ்ந்து இருக்கும் சூழ்நிலைகளினால் அறிவுக்கு அப்பாற்பட்ட சந்தேகமானது சிந்தையில் திணிக்கப்படும் போது, புதிய சிந்தையானது, அதின் இயற்கையான இரக்கத்தோடும், அவ்வாறாக இருக்க வாய்ப்பில்லை, தவறான தகவல் அல்லது தவறான புரிதல் ஆக இருக்க கூடும் என்னும் சந்தேகத்தின் வாய்ப்பை குற்றம் செய்தவருக்கு தர வேண்டும்.

## F375 through F376: பொன்னான பிரமாணம்

பொன் என்பது நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி தெய்வீகத்துக்கு அடையாளமாக இருக்கிறது. ஆகவே பொன்னான கற்பனை என்பது திவ்விய கற்பனையாகும். இது உண்மையில் அன்பின் கற்பனை என்பதைவிட நீதியின் கற்பனை என்பதே சரியானதாகும். இப்பொழுது ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் இந்த நீதியின் பிரமாணத்திற்கு அருகில் வந்து, அதை உணர்ந்து கொள்ள, அவனுக்கு அறியப்பட்டிருக்கும் உன்னதமான முறை எதுவென்றால், "உன் அயலான் உனக்கு எதைச் செய்யக்கூடாது என்று நீ நினைப்பாயோ, அதை உன் அயலானுக்கு நீ செய்யாதிருப்பாயாக" அதிகபட்சமாக இது எதிர்மறையான நன்மையானதாக இருக்கிறது. ஆனால், பொன்னான கற்பனையானது, தற்போதைய நிலையில் புது சிருஷ்டியயைத் தவிர வேறு எவரும் உணர முடியாததாக அல்லது புரிந்து கொள்ள முடியாததாக, உள்ளது. அதாவது "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்". இது நேர்மறையான நன்மை, ஆனால் இது நீதியானது. புது சிருஷ்டியின் அங்கங்கள் சில வேளைகளில் இந்த நீதியின் பிரமாணமான பொன்னான கற்பனையின் ஒவ்வொரு அம்சத்தோடும் இணங்கிப் போக தவறுவார்களெனில், அவர்கள் புது வழியில் குழந்தைகளாக இல்லாவிட்டால், அது அவர்களுக்கு விசனமும் பெரிய ஏமாற்றத்திற்குரியதாகும். இந்தக் கற்பனை எவ்விதத்தினாலாவது மீறப்படும்போது வேதனையையும் மன வருத்தத்தையும் கொண்டு வருமானால், அந்த மீறுதல் மனப்பூர்வமானதல்ல, இருதயத்திலிருந்து வந்ததல்ல, புது சிருஷ்டியின் அடிப்படைக் கருத்து மீறப்படவில்லை என்பதற்கு திட்டவட்டமான அடையாளமாகும். அது கூடிய வரை ஆவியின் விருப்பத்திற்கு அல்லது நோக்கத்திற்கு மாறாக மாம்ச பலகீனத்தால் அல்லது தடுமாற்றத்தால் ஏற்பட்டதாகும், இருந்த போதிலும் புதிய மனமானது எந்த அளவுக்கு தேவனை நோக்கி ஜீவனுள்ளதாகவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்ற வைராக்கியம் உள்ளதாகவும் காணப்படுகிறதோ, அதே அளவுக்கு அது வாசம் செய்கிற "மண்பாண்டத்தைப் பாதுகாப்பதில் துரிதமாகவும், ஜாக்கிரதையாகவும் சுறுசுறுப்போடும் இருக்கும். மாம்ச பெலகீனங்களுக்கு எதிராக நல்ல போராட்டத்தைப் போராடும்படியாக அது தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளும். வார்த்தையினாலோ, செயலினாலோ ஒரு தவறு செய்யப்பட்டிருந்தால், நல்ல நோக்கத்துடன் மறுபடியும் பழைய நிலைக்கு வருவதற்கு வாய்ப்பு, முடிந்தால், துரிதமாகக் கொடுக்கப்படும். இப்படியாக "மண்பாண்டம்" அதை எதிர்க்கப் படுவதையும், வெட்கப்படுத்தப்பட்டதையும் கண்டு, புதிய மனதிற்கு எதிர்ப்புக் காட்டுவதில் குறைவாகச் செயல்படலாம். புது சிருஷ்டியின் இந்த திவ்விய பிரமாணம் தேவனோடு உள்ள அவனது உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்பு கூறுவாயாக" என்பதின் அர்த்தத்தை அவன் புரிந்து கொள்கிறான். இங்கே அவன் தேவனோடு முற்றிலுமாக ஒத்துப் போவதினால், சுயத்திற்கு இடம் காணப்படு வதில்லை. இது சகோதரரோடு உள்ள உறவைப் பாதிக்கிறது, எப்படியெனில் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் (விசுவாசக் கண்களினால் தவிர) காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான். (1யோவான் 4 :20, 21) அவர்களோடு தான் பழகும் விதத்தில் அவன் ஜாக்கிரதையாக கவனிக்கக் கற்றுக் கொள்ளும்போது, அதாவது அவர்கள் தனக்கென்று செயல்படவும், தன்னோடு நடந்து கொள்ளவும் தான் விரும்புகிற மாதிரி, தானும் அவர்களுக்கென்று செயல்படவும், அவர்களோடு நடந்து கொள்ளும் விதத்தைக் கற்றுக் கொள்ளும்பொழுது, அது வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணுவதைக் காண்கிறான்.மேலும் அவனும்,

மற்றவர்களும் வாழ்வதற்கும், சிந்திப்பதற்கும், நடப்பதற்கும், பேசுவதற்கும் ஏற்கனவே பழக்கப்பட்டுள்ளபடியால், இது ஒரு கற்பனை அல்லது பிரமாணத்தின் கீழ் இல்லை. தன்னோடு சகோதரர்கள் அன்பாக நடக்க வேண்டும் என்றும், சாந்தமாக பேச வேண்டும் என்றும் விருப்பப்படுவது போன்று, அவனும் அவர்களோடு அன்பாக நடக்க வேண்டும், சாந்தமாகப் பேச வேண்டும் என்பதைக் அறிந்துகொள்கிறான். தன்னுடைய குறைகளில், பலகீனங்களில் அவர்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும், இந்த மனித குறைபாடுகள் மேல் இரக்கம் என்ற திரையை விரிக்க வேண்டும் என்று அவன் விரும்புவது போன்று, அவர்களுக்கும் அது போன்றே செய்ய வேண்டும் என்பதையும் காண்கிறான். அவர்களோடு அவன் பாசமுள்ளவனாக இருப்பதற்காக, சகோதரர்கள் தன்னைக்குறித்து பொல்லாப்பு எதுவும், அது உண்மையாக இருந்தால் கூட, பேசக்கூடாது என்று தான் விரும்புகிறான் மற்றும் "ஒருவனையும் தூஷியாதே," யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்பதையும் அவன் காண்கிறான், தன்னால் நியாயமாகச் செய்யக் கூடியதற்கு மேல் அதிகமாகச் செய்யவேண்டும் என்று மற்றவர்கள் எதிர்பார்க்கக் கூடாது என்று அவன் விரும்புவது போன்று, மற்றவர்களுக்கும் தங்களால் நியாயமாக செய்யக்கூடியதற்கு மேல் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கக் கூடாது என்பதையும் அறிந்துக் கொள்கிறார். உலகம், மற்றும் அதன் காரியங்களைப் பொருத்தமட்டிலும் கூட இதே கருத்து செயல்பட வேண்டும். இப்படியாக வாழ்க்கையின் முழு வழியும் படிப்படியாக மாற்றப்படுகிறது. மேலும் அப்போஸ்தலர் கூறுகிறபடி, "நாம் தேவனுடைய மகிமையைக் காண்கிற" அளவுக்கு ஏற்றபடி இந்த மாறுதல் வருகின்றது. அதற்கேற்றபடி, பரிபூரண நீதியின் பொன்னா பிரமாணம், ஏராளமாக அன்போடு இணைந்து, ஆளுகை செய்யக்கூடிய தெய்வீக குணாதிசயத்தின் மேன்மையான மாதிரியை புரிந்துக்கொண்டு செயல்படுத்த கற்றுக்கொள்ளும், அளவின்படி வருகின்றது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (11கொரிந்தியர் 3:18) பரிசுத்த ஆவியினால் பிறந்த நம்முடைய புதிய சிந்தைகள், புதிய சித்தங்கள் வளர்ச்சியுறும்போது அந்த வளர்ச்சி இருதயத்தின் தன்மையை "மகிமையிலிருந்து மகிமைக்கு "படிப்படியாக மாற்றுகிறது. இப்படியாக நாம் நம்முடைய இருதயங்களிலும் சிந்தைகளிலும், நோக்கங்களிலும் (இயன்ற வரை வெளித் தோற்றத்திலும்) மாற்றப்பட்டு நாம் திவ்விய வாக்குத்தத்தின்படி, பெலகீனத்திலும், அழிவிலும், விதைக்கப் பட்டதானது வல்லமையிலும் மகிமையிலும் உயிரோடு எழுப்பப்படும்போது ஒரு புது சிருஷ்டியாக, தேவனுடைய கிறிஸ்துவாக மாபெரும், இறுதி உயிர்த்தெழுதலின் மாற்றத்திற்குத் தகுதியுள்ளவர் களாகிறோம். பலவிதமான நல்லதும், உதவியானதுமான புத்திமதிகளும், கண்டிப்புகளும், யோசனைகளும் அப்போஸ்தலர்களால் கொடுக்கப் பட்டுள்ளன, அவைகள் பல்வேறு சகோதரர்களால் மறுபடியும் சொல்லப்பட்டு ஊர்ஜீதம் செய்யப் பட்டுள்ளன, அவைகள் கடிந்து கொள்ளுதல், சீர்த்திருத்தல் முதலானவைகளுக்குப் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கின்றன. எதற்குக் கீழாக புது சிருஷ்டி வைக்கப்பட்டுள்ளதோ, அந்த முழு கற்பனையும் பொன்னான கற்பனையாக, அன்பின் பிரமாணமாக இருக்கிறது. இது சரியானபடி அறியப்பட்டால், இப்பொழுது புது சிருஷ்டியினால் செய்யப்படும் அநேக காரியங்கள், இனிமேல் செய்யப்படமாட்டாது. மேலும் இப்போது அவர்களால் அசட்டை பண்ணப்பட்ட அநேக காரியங்கள், வைராக்கியத்துடனும், கவனத்துடனும் இனி செய்யப்படும்.

**R2329 [col. 1 P3-5]**:

புதிய உடன்படிக்கையின் ஐக்கியத்தில், ஆண்டவரோடு தொடர்புகொண்டிருக்கிறோம் என்று எண்ணும் பலர் வெளிப்படையாக தவறு செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இயேசுவையும், பாவங்களுக்காக அவருடைய பலியையும், விசுவாசித்து, இவருடைய ஆசீர்வாதங்களையும், மரணத்தின் சாபத்திலிருந்து விடுதலைப் பெறுவதை விரும்புவார்கள். ஆனால், அவர்கள் தங்களுடைய சார்பில், அதற்கு தொடர்புடைய கடமைகளை அங்கீகரிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ இல்லை. அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அவருடைய உடன்படிக்கையின் பிரமாணம் மற்றும் அந்த பிரமாணத்தை முத்தரிக்கும் இரத்தத்தினால் முத்திரிக்கப்படவும். ஆண்டவருக்கு முன் அவர்கள் நிற்கவில்லை. அவர்கள் புதிய உடன்படிக்கையின் விதிமுறைகளின்படி இருப்பதாக நினைத்துக் கொண்டு, தங்களையே வஞ்சித்துக் கொள்கிறார்கள். அந்த ஏற்பாட்டின் கீழ் பயன் பெறக்கூடிய தேவையான அடுத்த படிகளை அவர்கள் எடுக்கவில்லை. அன்பின் "இராஜரீக பிரமாணத்தை" அவர்கள் கேள்விப்

பட்டிருக்கிறார்கள், அதை புதிய உடன் படிக்கையின் பொன்னான பிரமாணம் என்று அறிந்திருக்கிறார்கள். ஆயினும், அவர்கள் ஒருபோதும், அர்ப்பணிப்பினால், அந்த பிரமாணத்தின் கீழ் தங்களை உட்படுத்திக்கொள்வதே இல்லை. அவர்கள் அந்த பிரமாணத்திற்கு கீழ் உள்ளவர்கள் என்றும், அதுவே அவர்களை கட்டுப்படுத்தும் பிரமாணம் என்றும், இறுதியாக அந்த பிரமாணத்தை கொண்டு அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்றும் அவர்கள் உணராதிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களை தாங்களே வஞ்சிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று தெளிவாகவும், முற்றிலுமாக சுட்டிக்காட்டுவது இரக்கத்தின் ஒரு வேலையாகும். அதை ஏற்றுக்கொள்ளாமல், புதிய உடன்படிக்கையின் இராஜரீக பிரமாணத்தின் கீழ்வராதவர்கள், அந்த உடன்படிக்கையிலிருந்து வரும் ஆசீர்வதங்களில் பங்கு பெறமுடியாது. ஆண்டவரிடமும், புதிய உடன்படிக்கையினிடமும், விசுவாசமும், உண்மையுமாக இருப்பது போல பாசாங்கு செய்பவர்கள், தாங்கள் ஒரு உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள் என்று தங்களை அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய நேரமாக உள்ளது. இவர்கள் ஆண்டவரோடு, கிறிஸ்து இயேசுவினால் உண்டான ஒரு நெருக்கமான உடன்படிக்கையை ஏற்படுத்தியிருப்பவர்கள், அந்த உடன்படிக்கையின் பிரமாணத்தால் பிணைக்கப்பட்டும் இருக்கிறார்கள். இதை அவர்கள் அறிவாற்றலோடு செய்தார் களானால், ஒவ்வொரு செயலையும், வார்த்தையையும், வாழ்க்கையின் எண்ணத்தையும், இந்த உடன்படிக்கையின் பொன்னான பிரமாணத்தோடு அளவிட்டு பார்ப்பதற்கு இது சரியான நேரமாக உள்ளது. இதை நம்முடைய ஆண்டவராம் இயேசு, "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்ற விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக்கா 6:31) என்று வெளிப்படுத்துகிறார். நம்முடைய கர்த்தரும், அப்போஸ்தலரும், அவர்களுடைய போதனையிலும், எழுத்துக்களிலும், புதிய உடன்படிக்கையின் இந்த இராஜரீக பிரமாணத்தை கற்பித்தார்கள். இந்த வரிசையில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, சீஷர்களை நோக்கி, "நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவரையும் நியாயந்தீர்க்காதீர்கள்.(கடுமையாக, இரக்கமற்ற, மிக குறுகிய)" ஏனெனில், எந்த அளவுக்கு மற்றவர்களை இரக்கமற்று, நீதி குறைவாக நியாயம் தீர்க்கிறோமோ, அதே அளவின்படி தீர்க்கப்படுவீர்கள். அப்போஸ்தலனாகிய யாக்கோபு இதே கருத்தை மறுபடியும் கூறுகிறார் - "இரக்கம் இல்லாதவர்களுக்கு இரக்கமில்லாத நியாயத் தீர்ப்பு." அதாவது, புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதமான ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்பட்டிருந்தால், நம்முடைய பாவங்களை மன்னிக்க கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய இரக்கத்தை பெற்றுக் கொண்டது மட்டுமல்ல, இந்த தெய்வீக இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு நிபந்தனையும் கூட முன் வைக்கப்படுகிறது. அதாவது நம்முடைய சக - மனிதர்களிடமும், நாம் பெற்ற அதே அன்பு மற்றும் இரக்கத்தின் பிரமாணத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். ஆகையால், நாம் பொன்னான பிரமாணத்தை பின்பற்றுவதில் தோல்வி அடைந்தால், கிருபையின் உடன்படிக்கைக்கு நிராகரிக்கப்பட்டவர்கள் என்று நம்மை குறித்து நாமே தீர்மானிக்கலாம். மேலும் தெய்வீக தயவை அசட்டை பண்ணுகிறவர்களாகவும், இந்த புதிய உடன்படிக்கையின் வழியாக நமக்கு கிடைக்கூடிய மகத்தான பலியை இலகுவாக எண்ணி, மிதிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**R2330 [col. 1 P1 through col. 2 P1]**:

மேலும், மிருகத்திற்கும், வீட்டு வட்டாரத்திற்கும், குடும்பத்திற்கும் பொருந்தும் இந்த அனைத்தும், தேவனுடைய குடும்பமான சபைக்கு அதே அளவில் அல்லது இன்னும் அதி வலுவுடன் பொருந்தும். எனவே, தீய சொற்கள், கசப்பு, கோபம், மூர்க்கம், வைராக்கியம், பகை, வெறுப்பு, பொறாமை,, பழைய சுபாவத்தின் எல்லா பகுதிகளும், உலகம் மற்றும் பிசாசின் இயல்பு, அனைத்தையும் புறம்பாக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் பரிந்துரைக்கிறார். இவைகள் அனைத்தும் கிறிஸ்துவின் புதிய ஆவியினால் அக்கற்றப்படவேண்டும். இது புதிய உடன் படிக்கையின் பிரமாணமாகிய அன்போடே - சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்புள்ள தயவினால் -இசைந்திருக்கவேண்டும்." இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும்

இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். "
11பேதுரு 1:8-11

இந்த புதிய உடன்படிக்கையின் பிரமாணமாகிய அன்பு - இரக்கம், கனிவு, மென்மை, நற்குணம் -ஆகியவற்றோடு தன்னுடைய இருதயம் இசைந்திராவிட்டால் அவர் தேவனுடைய புத்திரனாகவும், கிறிஸ்துவின் உடன் பங்காளி யாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு எவ்விதமான அத்தாட்சியும் இல்லை. இந்த அன்பின் ஆவியை அவர் பெறாவிட்டால், அவர் ஆண்டவரின் அடிச்சுவடுகளில், தொலைவில் செல்வதற்கு முடியாது. ஏனெனில் கிறிஸ்துவின் பலி, வீண் பெருமைக்காகவோ, வெளிப்புறமான கண் காட்சியாகவோ, மனிதரின் நன்மதிப்புக்காவோ ஏறெடுக்கப்படாமல், தேவன் மேலும், மனுஷர் மேலும் உள்ள அன்பினால் ஏவப்பட்டு செலுத்தப்பட்டது. அதுபோல நம்முடைய இருதயங்களிலும், நம்முடைய சகோதரர்களை அன்புகூராமல், எல்லா மனிதர்களிடமும், இன்னும் முரட்டுதனமான சிருஷ்டிப்புகளிடமும் கருணையான அன்பும் இரக்கமும் இராவிட்டால், தற்போதைய நிலைமையின் கீழ், தேவைப்படும் பலிகளை ஏறெடுப்பதற்கு நம்மை வழிநடத்தும் ஆவியை நாம் பெறமாட்டோம். பலியின் வழியை, அத்தகைய பெருமையின் வல்லமை, அல்லது வீன் மகிமை தடைசெய்தால், சுயநலம் பின்தொடர்ந்து முழு கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொள்ளும். மரணபரியந்தம் விசுவாச முள்ளவராக, ஆண்டவரின் அடிச்சவட்டில் நடக்கும் போது, அவரை இப்படியாக பின்பற்றவதற்கு முன், அவர் ஆண்டவரின் அன்பின் ஆவியைப் பெற்றுக்கொள்வார். அப்போஸ்தலர் அறிவிக்கிறபடி,"நான் தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனை பகைக்கிறவன் பொய்யன். காண்கிற சகோதரனை அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? எனவே, நாம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதற்கும், நம்முடைய எஜமானுடனே சஞ்சரித்து வருகிறோம் என்பதற்கும், நாம் சகோதரர் மேல் வைத்திருக்கும் அன்பே, அத்தாட்சி என்று வேதவாக்கியங்கள் முன் வைக்கிறது. மற்றும் சகோதரர்களுக்கான அன்பு, வெறுமனே பிரிவினையினாலோ, குழுமனப் பான்மையினாலோ அல்லது நாம் விரும்பும் இயற்கை குணங்களை உடைய சகோதரர்கள் மேல் வைக்கும் அன்பை இது பொருள்படுத்தாது. இது புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட அனைவர் மற்றும் அன்பின் பொன்னான பிரமாணத்தின்படி நடக்க முயல்கிற அனைவர் மேலுள்ள அன்பை இது பொருள்படுத்துகிறது. நம்முடைய சிந்தனை களுக்கும், உணர்ச்சிகளுக்கும் பொருந்தாதபடிக்கு, சிலர் இயற்கையான வளர்ச்சி மற்றும் மனநிலையை தனித்தன்மையாக கொண்டிருந்தார்களானால், நாம் அவர்களை நேசித்து, அவர்களை சந்தோஷப்படுத்தி, மகிழ்ச்சியோடு அவர்களுக்கு ஊழியம் செய்வோம். ஏனென்றால், அவர்கள் ஆண்டவர் மேல் நம்பிக்கை வைக்கிறார்கள், அவரால் அங்கீகரிப்பை பெற்று, புதிய உடன்படிக்கையின் பிரமாணத்தை ஏற்றுக் கொண்டு, இராஜரீகமான சுயாதீன பிரமாணத்தையும் ஜீவனையும் தங்களுடைய நிலைபாடாக ஏற்படுத்திக்கொண்டனர். ஆகவே நாம் அவர்களை இனி மாம்சத்தின் தனித்தன்மைகளாகிய முடிச்சுகள், திருப்பங்களின்படி அறியாமல், புதிய சுபாவத்தில் உள்ள "புது சிருஷ்டிகளாக" அறிந்திருக்கிறோம். அதாவது, நம் ஒவ்வொருவருக்கும் அன்பின் பிரமாணத்திற்கு எதிரான, நம்முடைய சொந்த இயல்பான வஞ்சகங்கள், சாதுரியங்களை கண்டறிந்து, இந்த மாம்சத்தின் அபூரணங்களை கூடுமான அளவுக்கு துரிதமாக புறம்பாக்க நாம் முயலவேண்டும். மற்றும் அவைகள் கூடுமான அளவுக்கு மற்றவர்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.இந்த நிலைப்பாட்டிலிருந்து, கிறிஸ்துவின் சரீரத்தின் பல்வேறு அங்கத்தினர்கள், என்றுமே குறைபாடுகளை குறிப்பிடமாட்டார்கள். அல்லது மற்றவர்களை பழிப்பதற்கும் கேலிக்குரிய காரியங்களுக்கும் அவர்கள் இணங்கமாட்டார்கள். ஆனால் ஒவ்வொருவரும் முடிந்த அளவுக்கு தங்களுடைய சொந்த குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் போல மற்றவர்களின் குறைபாடுகளை மறைப்பார்கள். மற்றும் தங்களிடம் பரிவுணர்வோடிருப்பதுபோல, மற்றவர்களை சூழும் பிரச்சனைகளில், அவர்களிடம் பரிவுணர்வோடிருந்து, ஆண்டவரும் அவரிடம் பரிவுணர்வோடு நடந்துக்கொள்ள விரும்புவார்கள்.˙. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் (கிறிஸ்துவின் சிந்தை, அன்பு) அவருடையவனல்ல" (ரோமர் 8:9)

இந்த புதிய உடன்படிக்கையின் நன்மையிலும் சலுகைகளிலும் பங்கெடுக்க, உலகம் அழைக்கப்படுவதற்கு முன்கூட்டியே

திருச்சபையின் தற்போதைய அழைப்பின் பொருள், முன்னதாகவே, தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், பூரணமானவர்களை அல்ல, தேவனுடைய நேச குமாரனுடைய சாயலை பெற்றவர்களையும் அல்ல, ஆனால் "குமாரனுடைய சாயலை ஒத்திருப்பதற்கும், விரும்பி, முயற்சிக்கக்கூடியவர்கள் இந்த தெரிந்தெடுப்பில் அழைக்கப்படுகிறார்கள். தேவன் அன்பாகவே இருப்பதினால், அன்பே அந்த சாயல். எனவே கிறிஸ்துவின் சிறப்பியல்பு அன்பு, இதுவே பிதாவாகிய தேவனுடைய சாயலின் பிரதிபலிப்பு. இந்த ஒரு அச்சில் நாம் வடிவமைக்கப்பட வேண்டும். ஆனால் தேவன் இந்த அச்சுக்குள் நம்மை பதிக்கமாட்டார். இந்த நற்பண்புகளைப் பெறுவதற்கு அவர் நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். மாறாக, "மிகப் பெரிதும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களினால்" ஏற்படும் தாக்கங் களினால் மட்டுமே நாம் தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகி, தெய்வீக குணமாகிய அன்பை நம்மேல் பதிக்கும் படிக்கு அவர் முயற்சிக்கிறார். இதனால் நாம் இந்த உலகத்தின் சுயநலம் என்ற கேட்டுக்கு தப்பி அல்லது நமக்குள் ஆழமாக நற்குணங்களை உருவாக்குவதற்கு தேவன் அனுமதிக்கும் எல்லாவிதமான அழுத்தங்களிலும், நம்மை நாம் தேவனுடைய அன்பில் காத்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம் - யூதா 21.

### 42. போராடும் குணத்தை அன்பு எவ்வாறு கையாளலாம்?

**R3595 [col. 2 last P] through R3596 [col. 2 P1]**:

தேவனுடைய கிருபையால், தற்போதைய அறுவடை சத்தியங்களை மற்றவர்களிடம் வழங்குவதில், அவரால் எந்த அளவிலும் நாம் பயன்படுத்தப்பட்டாலும், நாம் அவருடைய பணியில் மகிழ்ந்து, நம்முடைய உக்கிராணத்துவத்தில் தொடர்ந்து உண்மையுள்ளவர்களாக இருக்க முயலுவோம். ஆனால், இதில் தற்பெருமைக்கு இடமும் இல்லை,வேலையும் இல்லை. இந்த சேவைக்கு தகுதியுள்ளவர்களையும், பொறுத்த மானவர்களையும்,இயல்பாகவே திறமையுள்ள பலரை, நம்முடைய ஆண்டவர் எளிதில் கண்டறிவார் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்"1கொரிந்தியர் 1:27-29. என்பதை மட்டும் நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால், தேவனுடைய கிருபையால் இருளிலிருந்து தேவனுடைய ஆச்சரியமான வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டவர்கள், அந்த அளவின்படி ஆண்டவருக்கு முன் தாழ்மைப்பட வேண்டும் என்று நாம் எச்சரிக்கிறோம். ஏனெனில், பெற்ற வெளிச்சம் இருளானால், அந்த இருள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும். எப்படிப்பட்ட நம்பிக்கையற்ற நிலை, அப்போஸ்தலர் அறிவிக்கிறபடி, "அவர்கள் ஜீவ மார்க்கத்தை அறியாதிருந்தால் நலமாக இருக்கும்." உப்பு சாரமற்ற போனால் அது மணலை காட்டிலும் நல்லது அல்ல. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" தூய்மையாக இருங்கள். தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும், குற்றமற்ற மனசாட்சியை காத்துக் கொள்ளுங்கள். இருதயத்தில் துவங்குங்கள் - சிந்தையில் - தீமையாக இருக்கும் எந்த எண்ணங்களையும் சிந்திக்க வேண்டாம். இதனை உறுதிப்படுத்திக் கொள்ள, கிறிஸ்து இயேசுவை உங்கள் மாதிரியாக வைத்துக் கொள்ளுங்கள். அனுமதியின்றி தீமை உங்களுக்குள் புகுந்தால் அல்லது உங்களுக்குள்ளிருந்து வரும் போது, தேவைப்படும் போதெல்லாம், உதவி செய்ய உறுதியளித்தவரிடம், உங்கள் இருதயங்களை உயர்த்தி ஜெபியுங்கள். "என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் எப்போதும் உம்முடைய சமூகத்தில் பிரீதியாக இருப்பதாக, கர்த்தாவே, நீரே என் பலன், என் இரட்சிப்புமானவர்." என்று தொடர்ந்து இடைவிடாமல் ஜெபித்து உங்கள் சிந்தையை காத்துக்கொள்ளுங்கள். வேத நூலின் குறிப்பான பல்வேறு கற்பனைகளை பின்பற்றுவதற்கு முயன்று, அதை பொக்கிஷமாக காத்துக்கொள்ளும்போது, தெய்வீக பிரமாணத்தின் கீழ் இருக்கும் கொள்கைகளை பரிவோடு புரிந்துக்கொள்வதற்கு அதிகதிகமாக முயலவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இது நம்முடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகள்- தவறானதா அல்லது சரியானதா என்று நியாந்தீர்க்க இயலச் செய்யும். உண்மையில், தெய்வீக பிரமாணத்தின் கொள்கைளை நாம் புரிந்துக்கொள்ளும் பொது, அந்த அளவுக்கு நாம் தெய்வீக வார்த்தையின்

ஆவியை பெற்றுக்கொள்கிறோம். - சங்கீதம் 119 :97-105 வசனங்களை காண்க. சர்ச்சைக்குரிய மற்றும் குற்றம் கண்டுபிடிக்கும் மனப்பாங்கு, கிறிஸ்துவின் சிந்தைக்கு அல்லது அவருடைய ஆவிக்கு எதிரிடையானது அதாவது அன்புக்கு எதிரிடையானது. உலகம், மாம்சம், பிசாசு மற்றும் பிசாசின் பல்வேறு கண்ணிகளை ஜெயம் கொள்கிறதற்கு, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு போராடக்கூடிய தைரியம் தேவைப்படுகிறது. ஆண்டவருக்காக, சரியாகவும், புத்தி சாலித்தன மாகவும் இந்த ஒரு போராடும் மனநிலை, பயன்படுத்தினால், இது நமக்கே மதிப்புள்ள உதவியாக மாறும். பாவத்திற்கு எதிராக- முதலாவது நமக்குள்ளும், இரண்டாவதாக மற்றவர்களுக்குள்ளும் அதாவது சாத்தானுக்கும் அவருடைய இருளின் வல்லமைகளுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் எதிராக, ஆண்டவருக் காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டால் இக்காரியம், மிகுந்த உதவியாக இருக்கும். இதை நல்ல போராட்டம் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. மற்றும் நாம் அனைவரும் சத்தியத்திற்கும், நியாயத்திற்கும், நம்முடைய இரட்சிபின் அதிபதியின் கௌரவத்திற்கும், அவரது ஜனங்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் போராடக்கூடிய கம்பீரமான போர் வீரர்களாக இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட போராடும் குணத்தின் நன்மையான பயன்பாட்டை , இந்த பிரபஞ்சத்தின் அதிபதி பிரியப்படுவதில்லை. அவன் நேரடியாக பயன்படுத்த முடியாததைத் தவிர்ப்பதற்கு, வேறு தப்பான வழிகளுக்கு திருப்ப முயலுகிறான். இதன் விளைவாக, இந்த போராடும் குணத்தை பிரதான நன்மை என்று சிலருக்கு தோற்றம் அளிக்க சில முயற்சிகளை மேற்கொள்கிறான். அவன் எல்லாரையும், எல்லா விஷயத்திலும், போர் செய்யும்படி ஊக்குவிக்கிறான். சகோதரர்கள் அந்தகாரத்தின் வல்லமையை விடவும், தவறுகள் மற்றும் அறியாமையை விடவும், பெயர் சபை மனிதர்களை குருடாக்கி அவ்வாறாக மாற்றி விட்டது. உண்மையில் நாம் "தேவனை எதிர்த்துப் போரிடுவதே", அவனுடைய விருப்பம். இந்த காரியத்தில் நாம் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு முன் இடறலை போடாமல், முதலில் நம்மை நாம் நியாயம் தீர்த்துக் கொள்வோம். அற்ப காரியங்கள் மலைகளாக மாறுவதையும், அத்தியாவசியமாக இல்லாத காரியங்கள் மீது சண்டை போடும் மனப்பான்மையாகிய தவறான ஆவியை நம்முடைய சொந்த இருதயங்களிலிருந்து போராடி வெளியேற்ற வேண்டும். “பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.” (நீதிமொழிகள் 16 : 32) சத்தியத்தின் மேலுள்ள அன்பினாலும், தேவன் மேலும் அவருடைய ஜனங்கள் மேலுள்ள அன்பினாலும் சத்தியத்தை பாதுகாக்க வேண்டிய நோக்கத்தை உடையவர்களாக இருக்க வேண்டுமே தவிர, நம்முடைய சுய மகிமைக்காக இராதபடிக்கு நாம் மிக ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும். அன்பே தூண்டக்கூடிய அல்லது உள்நோக்கமாக இருந்தால், அதற்கேற்றவாறு சக-ஊழியரிடம், அன்பிலும், மென்மையிலும், பொறுமையிலும், மனத்தாழ்மையுள்ள முயற்சி களிலும், தானாக வெளிப்படும் மற்றும் நாம் "அனைவரிடமும் மென்மையாக நடந்துக் கொள்ளலாம். "ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தைகள்" ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்தி, இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கட்டும்.

### 43.அன்பின் ஆவி நாவை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும்?

**F291 [P1, 2]**:

எவரைக் குறித்தாயினும், விசேஷமாக உடன் அங்கத்தைக் குறித்து ஒரு அவதூறான கதையைக் கேட்கும்போது வேதனையை உண்டு பண்ணும் அளவுக்கு சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்குள்ளும், பரிசுத்த ஆவி அதாவது அன்பின் ஆவி அதிகமாக தங்கியிருக்க வேண்டும், இது உடனடியாக பிரச்சனையை பாதியாகவோ அல்லது அதிகமாகவோ, நிவர்த்தி செய்யும். இல்லை என்றாலும், ஆண்டவரால் கோடிட்டு காட்டப்பட்ட முறைகளைப் பின்பற்றும் போது அடிக்கடி வருகிறன்ற சபை பிரச்சனைகள் தவிர்க்கப்படும். அது விரோதங்கள் வருவதற்கான காரியங்களை அகற்றவதோடு, சபையின் தீர்ப்பானது, ஆண்டவருடைய தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும், சபையின் குரல் கேட்கப்பட்டு, அதற்கு ஏற்றபடி கீழ்ப்படியப்படும். இதற்கு மேலாக, ஒழுங்கும் அன்பும் இப்படியாகக் காணப்படும்போது, ஒவ்வொருவரும் தன்னால் இயன்றவரை தன் தன் வேலையை மாத்திரம் கவனிக்க நாடுவர் என்றும் தன்னுடைய சகோதரரை கண்டிக்கவோ, திருத்தவோ

முற்படமாட்டார்கள். மேலும், தன்னை பற்றி அல்லது சபையைப் பற்றி அல்லது சத்தியத்தைப் பற்றி சில முக்கியமாக காரியங்களாக இருந்தால் மட்டுமே அக்காரியத்தை, ஆலோசனைக் குழுவிடமோ அல்லது சபையினிடமோ கொண்டுவருவார்.

கேள்விக்கிடமில்லாமல், சபையில் வரும் பெரும்பாலான பிரச்சனைகள் (சமுதாய, குடும்ப பிரச்சனைகளும் கூட) தவறு செய்ய வேண்டும் என்ற விருப்பத்தில் அல்ல, வேண்டுமென்று அதாவது எந்த உள்நோக்கமும் இல்லாமல், குறைந்தபட்சம், நோக்கங்கள் அல்லது நோக்கங்களை தவறாக புரிந்துக்கொள்ளுவதிலிருந்து பிரச்சனைகள் ஏற்படுகிறது. நாவு தான் பொதுவாக பிரச்சனைகளை உண்டு பண்ணுவதாகும். அது தெளிந்த புத்தியின் ஆவியின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகவே உதடுகளுக்கும், இருதயத்திலிருந்து புறப்படும் பொல்லாத சிந்தனைகள், உதடுகளின் மூலம் வெளியாக்கப்பட்டு தீவிர உணர்ச்சிகளைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து, அநேகமுறைகள் மற்றவர்களுக்குத் தீமையை வருவிக்கும் இருதயத்திற்கு காவல் வைக்க வேண்டும். இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி புதுசிருஷ்டியான சபை, ஆண்டவரும் தலையுமாய் இருக்கிற வரிடத்திலிருந்து கண்டிப்பான கட்டளைகளை பெற்றுள்ளது. யாரோடும் எதையும் பேசாமலும், முன்பு செய்த ஆலோசனைகள் இன்றி, குற்றம் செய்பவரிடம், தனித்து, சொந்த விருப்பத்தின்படி செல்லும் போது, அவருடைய அன்பின் ஆவி அவர்களை நிரப்ப வேண்டும். அவர்கள் அப்படிச் சொல்வது அவருடைய நடத்தையைக் குறித்து வெட்கப்படுத்தும்படிக்கு அல்ல, அல்லது கடின வார்த்தைகளைப் பேசி, தண்டிக்க வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக அவர் குற்றம் செய்வதை நிறுத்தும்படி கேட்டுக்கொள்வதற்கும், முடிந்தால் முன் விளைவிக்கப்பட்ட தீமைக்கு கைமாறு பெறும்படியாகவும் இருக்கவேண்டும். அந்த தவறைக் குறித்து, மற்றவர்களிடம் அறிவிப்பது அன்பில்லாத காரியமாகும். மேலும், நம்முடைய தலையாயிருக்கிறவரின் வார்த்தைக்கும் ஆவிக்கும் எதிர்மாறானதாகும். ஆலோசனை கேட்க வேண்டும் என்பதற்காகக் கூட விஷயம் சொல்லப்படக்கூடாது, நமக்கு ஆண்டவரின் ஆலோசனை உண்டு, அதை நாம் பின்பற்ற வேண்டும். பிரச்சனைகள் விசித்திரமாக தோன்றினாலும், உண்மையான பிரச்சனைகளையும், தவறு செய்தவர்களையும் பற்றி வெளிப்படையாகக் கூறாமல், மூப்பர்களில் மிகவும் ஞானமுள்ள வரிடத்தில் ஆலோசனையை கேட்கப்படவேண்டும். உண்மையான ஆயாசம் மற்றும் தவறு செய்தவரை வெளிப்படுத்தாதபடி, ஒரு கற்பனையான வழக்கின் வழிகாட்டுதலுடன் ஆலோசனையை கேட்கப்பட வேண்டும்.

**R2928 [col. 1 P1 to end]**:

அந்நிய பாஷைகளின் அற்புதமான வரம் இப்போது நமக்கு இல்லை. ஆயினும், நம்மால் பெறப்பட்ட அதே ஆவி, நமக்குள் மிகுதியாக தங்கி, தேவனுடைய மகத்தான வேலைகளை அதிகதிகமாக வெளிப்படுத்துகிறது. ."பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்" (அப்போஸ்தலர் 4:19, 20) என்று அப்போஸ்தலர் அவருடைய காலத்தில் குறிப்பிட்டபடியே, இது அர்ப்பணிக்கப்பட்ட அனைத்து இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்கும் இந்நாள் வரையிலும் ,இது உண்மையாக காணப்படுகிறது. இயேசு இந்த உலகத்தின் மீட்பராகவும், அவருடைய மீட்பின் வேலையில் நமக்குள்ள பங்கையும் நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் அறிவொளி நமக்கு காண்பித்திருக்கிறது. மேலும் பிதாவின் அங்கீகரித்தலும், அவர் வழியாக இராஜ்யத்தில், அவருடைய கூட்டு வாரிசுகளாக இருப்பதற்கும், இப்போது, மிக பெரிய விரோதி இந்த விஷயங்களைக் குறித்து உலகத்தை ஏமாற்றி, வெளிச்சத்தை இருள் என்றும், இருளை வெளிச்சமாக காண்பிக்கும் போதும், இன்றைய காலத்தில் அவருடைய சக ஊழியர்களாக இருப்பதற்கு, உண்மையான சுவிசேஷத்தின் நிமித்தம் நிந்தனைகளை சுமந்துக்கொள்கிறோம். மேலும், நாமும் கூட மற்ற மொழிகளில் பேசுகிறோம். பரிசுத்த நாமத்தை தூஷித்த நாவுகள் யாவும், இப்போது, நன்றிகளை ஏறெடுத்து, துதிக்கிறது. தெய்வீக தன்மையையும், திட்டத்தையும் அறியாமல் தவறாக எடுத்துக் கூறினவர்கள் இப்போது, இருளிலிருந்து அற்புதமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புகழை ஒருவக்கொருவர் அறிவிக்கிறார்கள். நம்முடைய உணர்வுகளையும், சகோதரர்கள் இன்னும் இந்த உலகத்தைப் பொருத்தவரையில் நம்முடைய வெளிப்பாடுகள் அல்லது முகபாவணைகள், பரிசுத்த ஆவியின் தாக்கத்தினால் உருமாற்றப்படுகிறது.

எனவே, வெறுப்பு, கோபம், தீமை ஆகியவற்றிற்குப் பதிலாக, அன்பு, மென்மை, பொறுமையையும் வெளிப்படுத்துகிறது. மேலும் நம்முடைய நாவு பொறாமை, கசப்பு, பெருமை, உலக இலட்சியங்களை வெளிப்படுத்துவதற்கு பதிலாக, எல்லா மனுஷரிடமும், விசேஷமாக விசுவாச வீட்டாரிடமும் உதவிச்செய்யக்கூடிய அன்பை, புதிய சிந்தையின் மென்மையும், ஞானமும் வெளிப்படுத்துகிறது.இவைகள் நம்முடைய புதிதான மொழிகளை மற்றும் புதிதாக வாழும் நிரூபங்களாக நம்முடைய குடும்பங்களிலும், அயலகத்தாரிடமும், இந்த உலகத்திலும் அடையாளமாக இருப்பதை நம்முடைய துதித்தலின் பாடலாக, தீர்க்கதரிசி மிக அழகாக வெளிப்படுத்துகிறார் -" நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்."

**F587 [P1, 2]**:

நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் கெட்ட குணத்தை அறிந்த பின்னரும் கூட, நாவை அடக்குவது எவ்வளவு கடினமான ஒரு விஷயம் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே, நாங்கள் நாவை அடக்க அல்லது கட்டுப்படுத்த உள்ள ஒரே ஒரு சரியான வழி அதாவது இருதயத்தின் மூலமாக, கட்டுப்படுத்துவதற்கு கவனத்தை செலுத்தும்படி கேட்கிறோம். ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வசனம் - "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று அறிவிக்கிறது. இது உண்மையாக இருப்பதால், நம்முடைய நாவுகளை கட்டுப்படுத்த அதிகமான கஷ்டப்படும்போது, நம்முடைய இருதயங்களில் அநீதியான விஷயங்கள் அநேகம் உண்டு என்பதைக் குறிக்கிறது. எந்த அளவுக்கு நம்முடைய இருதயங்களை சரிப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய நாவுகளை அடக்குவதில் உள்ள கஷ்டம் குறையும். மற்றவர்களைக் குறித்து தொடர்ச்சியாக இழிவாக பேசுகின்ற உதடுகள், பெருமையான கர்வமுள்ள, ஆதிக்கம் செலுத்துகிற, தன்னையே நினைத்துக் கொண்டிருக்கிற இருதயநிலையைக் காட்டுகிறது. மற்றவர்களைக் குறித்து பொல்லாங்கு பேசுகிற உதடுகள் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, உதடுகளின் பின்னால் இருக்கும் இருதயம் சுத்தமாக இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும், ஆண்டவரின் அன்பின் ஆவியால் நிரப்பப்படவுமில்லை என்பதை குறிக்கிறது. ஏனெனில், "அன்பு அயலானுக்கு தீங்கு விளைவிக்காது." சிந்தனையில் கூட அப்படி செய்யாது. அது "பொல்லாங்கு நினைப்பதில்லை". அது அவனைக் குறித்து பொல்லாங்கை யூகிக்க அனுமதிக்காது. அனுகூலமற்ற தன்மையை யூகிப்பதைவிட அனுகூலமான தன்மையை யூகிக்கும். அது எழும் ஒவ்வொரு ஐயநிலையையும் அவனுக்கு சாதகமாகவே (நன்மையானதையே) யோசிக்கும். மனுக்குலத்தில் எல்லாரிடமும் சுய அன்பு, தன்னையே காயப்படுத்திக் கொள்ளாதபடி, நாவை தடுத்து நிறுத்த பலமுள்ளதாக இருக்கிறது. சரியான அன்பு, சுய நலமற்றதாக இருக்கிறது. அது அயலானையும் தன்னைப் போன்று நேசிப்பது, மாத்திரமல்ல, அயலான் அல்லது சகோதரனுக்கு கேடு விளைவிக்கும்படி பேசுவதைக் கூடவெறுக்கும், அல்லது அவனுடைய நடத்தையைக் குறித்துக்கூட பிரதிபலிக்க விருப்பப்படாது. ஏனெனில், தனக்கு விரோதமாக அப்படி ஒரு வழியை தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் இருக்கும். அப்படியானால், இந்த விஷயத்தை எந்த வழியிலிருந்து நாம் பார்த்தாலும், புது சிருஷ்டியின் மிக முக்கியமான விஷயம் நம்முடைய இருதயங்களில் பரிபூரண அன்பை அடைவதுதான் என்று நாம் பார்க்கிறோம். இது சத்தியத்தின் ஊழியமாகிய திவ்விய ஊழியத்தில் ஒத்துழைக்குமாறும், அதிக வைராக்கியமும், முயற்சியும், தியானம் உள்ளவர்களாக இருக்கவும் தேவனுக்கு நேராக நம்மை ஊக்குவிக்கும். இது பரிசுத்த ஆவியாகும். இதைக் குறித்துதான் நாம் ஜெபிக்க வேண்டும் என்று நம்முடைய மீட்பர் கற்றுக்கொடுத்தார். மேலும், இதைக் குறித்துதான் அவர், "பூலோகத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பூலோகத்திற்குரிய நல்ல ஈவுகளை கொடுப்பதைக் காட்டிலும் , நம்முடைய பரலோகப் பிதா அதிக நன்மையானதை கொடுப்பதற்கு மிக வாஞ்சையாயிருக்கிறார்." என்று அறிவிக்கிறார். இந்த பரிசுத்த ஆவிக்காகவும், அன்பின் ஆவிக்காகவும் ஊக்கமாக ஜெபிப்பது என்பது, நம்முடைய சரீரம் முழுவதும், சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் அன்பு ஊற்றப்பட வேண்டும் என்பதற்காக ஊக்கமான வாஞ்சையையும், முயற்சியையும் குறிப்பிடுகிறது. ஆகவே, நாம் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் பிள்ளைகளாக இருப்போம். இப்படியாக, அவருடைய அன்புக்கும், அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லாவற்றிற்கும், அவரை நேசிக்கிறவர்களுக்கு என்று அவர் வைத்திருக்கிறவைகளுக்கும் நாம் தகுதி வாய்ந்தவர்கள் என்று எண்ணப்படுவோம்.

## 43.சகல மனிதர்களிடமும் நம் அனுகுமுறை எப்படி இருக்க வேண்டும்?

"ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றென்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" ரோமர் 13:8

**R3180 [col. 1 P2]**:

ஒரு காரியம் உண்டு, எவ்வாறாயினும், நம்முடைய சக சிருஷ்டிகளுக்கு மட்டுமல்ல, நம்முடைய சொந்த குடும்பத்தாருக்கும், நமது சொந்த சுற்றப்புறத்தினருக்கும் மட்டுமல்லாமல், எல்லா மனிதர்களுக்கும் நாம் எப்போதும் தொடர்ந்து கடன்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது அன்பில் கடன்பட்டிருக்கிறோம். தெய்வீக சட்டத்தின் கீழ் நாம் அவர்களுக்கு கடன்பட்டிருக்கிறோம், அன்றாட கிறிஸ்தவ கடமைகளில் இது ஒரு பகுதியாகும். ஒரு பெற்றோர் அல்லது குடும்பத்தின் உறுப்பினர், அவர் வீடு மற்றும் அதன் வசதிகளும் சலுகைகளும், அமைதியாக மற்றும் நல்லிணக்கத்திற்கும் ஆதரவாக செயல்படுகிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அவரது அயலகத்தார் மற்றும் நண்பர்களிடையே உள்ள அவரது செல்வாக்கு, தீமைக்காகவும், சண்டைக்காகவும் அல்ல நன்மைக்காகவும், சமாதானத்திற்காகவும் இருக்கும் படியாக பார்த்துக்கொள்ளவேண்டும். "ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்." (கலாத்தியர் 6-10) என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவர் எல்லா நேரங்களிலும் தனது சொந்த நேரத்தையும் வசதிகளையும் செலவழித்து, எல்லா மனுஷருக்கும் நன்மை செய்ய தயாராக இருக்க வேண்டும். சகோதரார்களுக்காக தம் ஜீவனை கொடுக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அதாவது சத்தியத்தை அறிவிப்பதற்கு, நேரத்தை செலவிடுவதற்கும், தீய நாட்களில் சத்தியத்தில் நிலைத்து நிற்க, ஆண்டவருடைய சகோதரர்களுக்கு எந்த விதத்திலும் அவருடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துக்கொள்ள, உதவி செய்யும்படிக்கு , ஒவ்வொரு நாளும், ஜீவனை கொடுப்பதற்கு வாய்ப்புகளை தேடவேண்டும்.

**R1789[col.1P1,2]:**

(ரோம 13:8-10) வசனங்களுக்கு விளக்கம் தேவையில்லை...."அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" என்பதே, வாக்கியத்தின் உண்மை. இது அனைவருக்கும் தெரிந்ததே. அன்பு ஆசீர்வதிக்க மகிழும் மற்றும் அதன் தூய்மைக்கும், இரக்கமுள்ள உணர்வுகளுக்கும் எதிராக எந்த சட்டமும் இல்லை. தேவனிடமும், சக மனிதர்களாகிய ஒவ்வொரு தனி நபர்களிடமும், உள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மற்றும் சரியான உறவு ஆகியவற்றை அது கண்டுணருகிறது. மேலும் எந்த விதத்திலும், தேவனுடைய புத்திசாலி சிருஷ்டிகளின் சலுகைகளில் எந்த வகையிலும் தலையிடுவதில்லை. மாறாக ஒவ்வொரு நபரின் மிகப்பெரிய வளர்ச்சி மற்றும் மிக விரைவான முன்னேற்றத்தில் மகிழ்கிறது. அது உன்னதமானதும், தாராளமானதும், இலவசமானதும், வெளிப்படையானதும், அன்பானதும், சுயநலமற்றதும், இரக்கமுள்ளதும், உதவக்கூடியதும் உண்மையானதுமாக உள்ளது. "ஒவ்வொரு மனிதனுக்கும் நாங்கள் கடன்பட்டிருக்கிறோம்." - "ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதில், தவிர வேறொன்றிலும் நாங்கள் கடன்படவில்லை" என்று இந்த உன்னதத் தகுதியைப் பற்றி பவுல் கூறுகிறார். கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதரர்களுக்கு மட்டுமல்ல, மனித குடும்பத்தின் சகோதரர்களுக்கும் நாம் கடன் பட்டிருக்கிறோம். முதலில் தேவன் தம்முடைய சாயலில் மனுஷனை சிருஷ்டித்தார், அந்த சாயல் மோசமாக உருக்குலைக்கப்பட்டபோதிலும், அதை அவர் திரும்ப கொடுப்பதற்கு திட்டமிட்டார். அவர் இந்த உலகத்தை மிகவும் நேசித்ததினால், நாம் இன்னும் பாவிகளாய் இருக்கையில், மிக பெரிய விலைக்கிரையத்தைக் கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார். தேவன் இந்த உலகத்தை நேசித்ததினால், நாம் அதே அன்பு, கனவு, மென்மையான இரக்கத்துடன் நேசிக்க வேண்டும். மேலும், நாம் தேவனை நேசித்து, அவருடைய ஆவியால் நம்முடைய இருதயங்கள் நிரப்பப்பட்டால், இதை செய்வதில் மகிழ்ச்சி அடையவோம்.

**R3029 [col. 1 ¶6 through col. 2 P5]**:

யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் அவர் கடனாளியாக இருந்தார் என்று அப்போஸ்தலர் அறிவித்தார். இதேபோன்ற நிலைப்பாட்டில் இருந்து நாம் இந்த விஷயங்களை பார்க்கும் போது, நாமும் அநேக ஜனங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறோம்

என்று சொல்லலாம். நம்முடைய பெற்றோருக்கு உண்மையில் கடமைப்பட்டிருக்கிறோம். தேவனுடைய முன்திட்டத்தின்படி இவர்களின் வழியாகவே, நாம் இன்று உயிர் வாழ்கிறோம். பொதுவாக நாம் மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்ளும், சமாதானம், ஒழுங்கு, சமூக வசதி மற்றும் எல்லாவகைகளிலும் நாம் பெறும் நன்மைகள் ஆகியவற்றிற்காக நாம் இந்த சமுதாயத்திற்கும், பொது சொத்துக்கும் கடன்பட்டிருக்கிறோம். பல ஆசீர்வாதங்கள், சுதந்திரங்கள், நன்மைகள், முதலியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, நாம் நமது நாட்டிற்கும் கடன் பட்டுள்ளோம். இதுவும் தெய்வீக முன்னேற்பாட்டின் மூலமே நமக்கு வருகிறது. இந்த சகல கடன்களுக்கு மேலாகவும், அப்பாற்பட்டும், நம்முடைய சிருஷ்டிகருக்கு கடன் பட்டிருக்கிறோம். அதாவது இந்த பூமிக்குரிய வாழ்க்கை, அதன் ஆசீர்வாதங்கள், அதன் சலுகைகள், அதன் வாய்ப்புகள், நாம் அனுபவிக்கும் இத்தகைய சுதந்திரங்கள் ஆகியவற்றிற்கும் நாம் கடன்பட்டிருக்கிறோம். இன்னும் அதிகமாக, நம்முடைய மீட்பிற்காக விலைமதிப்பற்ற இரத்தமும், அதைப் பற்றிய நம்முடைய அறிவும், நம்முடைய ஆண்டவரோடு கூட்டு உரிமைக்காக நம்முடைய அழைப்பு, பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்படுதல், நமக்கு உற்சாகத்தையும் உதவி செய்யும் வார்த்தைக்கும், நித்திய ஜீவ வாழ்வில் நம்மை வழிநடத்தி, ஊக்குவித்து, பலப்படுத்தும், மகா அருமையும் மேன்மையுமான வாக்குறுதிகளுக்கும் கடன்பட்டிருக்கிறோம். உண்மையில், இந்த கருத்துக்கு மற்றொரு பக்கத்திலிருந்து வாதங்களை சிலர் செய்யலாம். ஆனால் இது நமக்கானது அல்ல. நமக்கு எந்தவிதமான கோரிக்கைகளும் இல்லை, எந்தவிதமான ஐசுவரியமும் இல்லை, நாம் ஒரு ஜீவியாக பிறக்கும் வரையில் நமக்கு ஒன்றுமில்லாதிருந்தோம். நாம் மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், உடல்ரீதியாகவும் இன்னும் அதிக திறமை உள்ளவர்களாக பிறந்திருப்பதற்கு, நம்முடைய பெற்றோர்கள் இன்னும் புத்திசாலிகளாக இருந்திருக்கலாம் என்று நாம் விரும்பியிருக்கலாம். ஒருவேளை நம்முடைய சமுதாயமும், பொது சொத்தும் இன்னும் மேம்பட்டதாகவும், இன்னும் பயன்மிக்கதாகவும், இன்னும் தாராளமாகவும் இருந்திருக்கலாம் என்று நாம் விரும்பியிருக்கலாம். ஒருவேளை நம்முடைய தேசத்திற்கு இன்னும் சிறப்பான சட்டங்கள் இருக்க வேண்டும் என்றும், அதற்கும் மேலாக இன்னும் சிறந்த விதிமுறைகள் இருக்கவேண்டும் என்றும் நாம் விரும்பலாம். நம்முடைய சிருஷ்டிகர் நமக்கு கொடுத்ததைவிட அதிகமான பூமிக்குரிய பொருள்கள் மற்றும் இயற்கையானவைகளை நமக்கு அளித்திருக்கலாம் என்று ஒருவேளை நாம் விரும்பலாம். ஆனால் முன் குறிப்பிட்டபடியே, நாம் பெற்றிருக்கும் அனைத்திற்கும் நாம் கடனாளிகளாக இருக்கிறோம். எனவே, நாம் மகிழ்ச்சியோடு அனுபவிக்கும், தற்காலிக மற்றும் ஆவிக்குரிய எல்லாவற்றிற்கும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் மற்றவர்களுக்கு உதவவும், ஊக்கவிக்கவும், ஆசீர்வதிக்கவும், சேவைச் செய்யவும் நாம் சலுகைப் பெற்றிருக்கிறோம் என்று நன்கு உணர்ந்திருக்கிறோம். ஆயினும்கூட, நம்மிடம் உள்ள அனைவருக்கும் கடனாளிகளாக இருப்பதால், எந்த அடிப்படையிலும், இன்னும் கூடுதலாக கோருவதற்கும் இடமில்லை. தேவனுடைய ஜனங்கள் அனைவரையும், "கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய சிருஷ்டிகள்" அனைவரையும், தற்காலிகமான மற்றும் ஆவிக்குரிய சகலவிதமான இரக்கத்திற்காகவும், நன்றியுள்ளவர்களாகவும், மிகுந்த திருப்தியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே, இந்த நிலைப்பாட்டிலிருந்து, பாடத்தின் பொருளாகும். இந்த எல்லா அம்சங்களிலும் நாம் கடனாளிகளாக இருப்பதை காணும்போது, நம்முடைய அனைத்து பயனாளிகளுக்கும், நம்முடைய கடமைகளை நிறைவேற்ற முயல வேண்டும்.

நமது நாட்டுக்கும், நமது பொது சொத்துக்கும், சமூகத்திற்கும், நம் பெற்றோர்களுக்கும், ஒவ்வொரு நன்மைக்கும், பரிபூரணமான பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கும் நன்றி செலுத்தவேண்டும். இந்த உலகில் நமது வாழ்க்கையினால் எவரும் காயப்படாதபடிக்கு மட்டுமல்லாமல், ஒரு அளவுக்கும், நிலைக்கும் நம்முடைய வாழ்க்கை, புரிந்துக்கொள்ளப்பட்டு, சாட்சி கொடுத்து, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு உதவியை, சேவையை, ஒவ்வொருவருக்கும் மிகச் சிறந்த நலன்களை செய்ய வேண்டும். ஆனால் இது ஒரு எளிய நீதி - நாம் எந்த மனிதனுக்கும் கடன்படாதபடிக்கு, நாம் கடன்களை செலுத்த வேண்டும் என்று நீதி கோருகிறது. ஆனால் நாம் இந்த கடமைகளையும் தாண்டி, தேவனையும் நம் சக மனிதர்களையும் நேசிக்க வேண்டும். நம்முடைய கடமையை மட்டும் செய்வதற்கும்

முயலாமல், வாழ்க்கையின் பொறுப்புகள், வலிகள், பாரங்களை பகிர்ந்துக்கொள்ளுதல், சமூக ஒழுங்குகள், பெற்றோரின் பாதுகாப்பு மற்றும் ஆறுதல் ஆகியவற்றை நாம் நிறைவேற்றவேண்டும். ஆனால் நம்முடைய சிறந்த நியாயத்தீர்ப்புக்காக, புதிய சிந்தையின் வழிநடத்துதலின் படி அன்பே நம்மை இணங்கச் செய்யவேண்டும். கர்த்தருடைய ஆவி, அவரால் ஏவப்பட்ட வார்த்தையின் மூலம் வழிநடத்தி, ஆண்டவரின் பணியிலும், நம்முடைய சக மனிதர்களின் ஆசீர்வாதம் மற்றும் ஆறுதலுக்கும் நாம் எதையாகிலும் பலி செலுத்த வேண்டும். மற்றவர்களை நேசிக்கிறவர், அவர்கள் தொடர்ந்து நன்மை செய்ய முயலுகிறார். இது பரிசுத்த பிரமாணத்தை, பிதாவின் பூரண சித்தத்தை பின்பற்றுவதாகும். இருதயத்தின் நோக்கமே பொதுவாக உதடுகளின் வழியாகவும், வாழ்க்கையின் செயல்பாடுகளிலும் சரியாக வெளிப்படையாக காணப்பட்டாலும், இருதயத்தின் சிந்தனைகளை காட்டிலும், வெளிப்புறமான நடத்தையே ஒரு கேள்வியாகிறது. ஆயினும், நம்முடைய அபூரணமான நியாயத்தீர்ப்புகளையும், மாம்சத்தின் பலவீனங்களையும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். எனவே, முற்றிலும் பூரணமான ஒவ்வொரு வார்த்தை மற்றும் கிரியைகளுக்கு பதிலாக, புதிய உடன்படிக்கையின் கீழ் மிகவும் கருணையுடன் நம்முடைய எண்ணங்களிலும், சித்தங்களிலும் உள்ள பரிப்பூரணத்தை ஏற்றுக்கொள்கிறார். இவ்வாறாக, "நமக்குள் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பவர்களே, நீதியின் பிரமாணத்தை நிறைவேற்றுவார்கள்" - கிட்டத்தட்ட முடிந்தவரை ஆவியின் படி நடக்கவேண்டும்.

**45."உலகத்தில் அன்புக்கூராதிருங்கள்" என்ற எச்சரிக்கையின் முக்கியத்துவம் என்ன?**

1யோவான் 2:15.16 "உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்"

**R1955 - "உலகத்தில் அன்புக்கூராதிருங்கள்"**

மனதில் மற்றொரு வசனத்தையும் சிந்தியாமல், அப்போஸ்தலனாகிய யோவானின் இந்த அறிவுரையை வாசிப்பது அரிது. முதல் காட்சியில் அதாவது, "தேவன் தம்முடைய ஒரு பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகமாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." இது முரண்பாடாக தோன்றலாம். இருப்பினும், சரியான புரிந்துக் கொண்டால், இந்த இரண்டுமே எதிர்மறையான வைகளாக இராமல், முழு இணக்கத்தோடு இருப்பவைகள். பாவிகளாக இருக்கையில், தேவன் இந்த உலகத்தை நேசித்ததினால், (ரோமர்5:8) அவர்களை இரட்சிக்கவும், மீட்கவும், அவருடைய இருதயத்தில் உள்ள பொக்கிஷத்தை பலி செலுத்தினார். நமக்கு இந்த உலகின் மீது, அத்தகைய அன்பும், இரக்கக் குணமும், தேவனுடைய சித்தத்திற்கு இசைவில்லாததாக இருக்க முடியாது. உண்மையில், வார்த்தையின் நேரடியான போதனை இது. "வாய்ப்புகள் கிடைக்கும் போது, எல்லா மனுஷருக்கும் நன்மை செய்யுங்கள்"," "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீ களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள "(மத்தேயு 5:44-48) சூழல் தெளிவாக காட்டுகிறபடி, தேவன் இந்த உலகத்தை நேசிப்பது போல நாம் இந்த உலகத்தை நேசிப்பதை பற்றி அப்போஸ்தலர் சபைக்கு எச்சரிப்பை கொடுக்கவில்லை. இது ஒரு மிக சிறந்த உயர்த்தர அன்பாகும் - தூய்மையின் உயர்ந்த நிலையில் நிற்கும் அன்பு, தூய்மையற்றவர்களுடன் குறைந்தபட்சம் கூட

கூட்டுறவு வைக்காததும், எனினும், விழுந்து போனவர்களுக்கு இறங்கி, அவர்களின் சீரழிவிலிருந்து அவர்களை காப்பாற்றுவதில் தீவிரமாக செயல்படும். இந்த தெய்வீக அன்பு, நாம் பிரதிபலிப்பதற்கு மிகவும் தகுதியானது, இது தனிப்பட்ட விரோதங்கள் மற்றும் பகைமைகளை வெறுமனே புறக்கணிக்கிறது, சுயநல கருத்துக்கள் மற்றும் பழிவாங்கும் உணர்வுகளை தாண்டி, சமாதானத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் இரட்சிப்புக்கும் வழிமுறைகளை சிந்திக்கிறது. ஆனால் யோவான் இங்கு குறிப்பிடுகிற உலகத்தின் அன்பு, சூழ்நிலை காட்டுகிறபடி, இது கூட்டுறவான அன்பு, அதாவது அதன் ஆவியில் பங்கேற்பதை குறுப்பிடுகிறது - அதன் நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் நம்பிக்கைகள் மற்றும் அவற்றைத் தொடரும் வழிமுறைகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. ஒருவர் இந்த உலகத்தில் அன்புகூருகிறவரானால், பிதாவின் அன்பு அவரிடம் இல்லை என்பது நிச்சயம், "ஏனெனில், ."உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் (அதாவது இக்காலத்து தீமையான உலகத்தின் ஆவியின்படி) பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்"(1யோவ 2:15,16) உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம், தேவனுடைய சித்ததின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். கடவுளின் பிள்ளைகள் என நாம் பெரிய தயவுக்காகவும் நன்மைக்காகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய பரலோக தந்தை தன் உயர் நிலை துறந்து கீழ் நிலைக்கு விருப்பத்துடன் வந்து, அவருடைய திட்டங்களையும், நோக்கங்களையும் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது கூட்டுறவிற்கும், செயலுக்குமான ஒத்துழைப்புக்கும் நம்மை அழைத்திருக்கிறார். மேலும், இக்கால வாழ்க்கையில், நாம் எதிர்காலத்தை காணக்கூடிய பார்வை, இந்த உலகம் பார்க்கிறபடி இல்லாமல், ஒரு வித்தியாசமான ஒளியில் நாம் காணக்கூடியது மிக பெரியதும் விரிவானதுமாகும்.இந்த உலகம் ஜீவனுக்குரிய ஒளியின்றி, இருளில் நடக்கிறது, இதன் விளைவாக இந்த பூமிக்குரிய பொருட்கள், அவர்களுக்கு அதிக மதிப்புள்ளதாக காணப்படுகிறது, ஆனால் நாமோ அவைகளை கசடாக கணக்கிட கற்றுக்கொண்டிருக்கிறோம்.

அவர்கள் ஓடி முயற்சித்து, விரையில் அவைகள் கடந்து செல்லும், தவறான பரிசுகளுக்காக போராடுகிறார்கள். இது துக்கத்தையும், உழைப்பையும் மட்டுமே அவர்களுக்கு கொண்டு வருகிறது. அப்போஸ்தலர் இந்த உலகின் பொக்கிஷங்களை - மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்று மிக சுருக்கமாக கூறுகிறார். மாம்சத்தின் இச்சை, அனைத்து ஆசைகளையும், பசியையும், உணர்ச்சிகளையும் உள்ளடக்குகிறது. இது வெறும் மிருகங்களுக்குள்ள உணர்வுகளே. ஆயிரத்திற்கும் அதிகமான இந்த உயர் நலன்களை பலி செலுத்த வேண்டும். முதல் தரமான உணவையும், பானங்களையும் விரும்பி, புசித்து குடிப்பதும், சந்தோஷமாக இருப்பதும் அவர்களின் மகிழ்ச்சி. கண்களின் இச்சையானது, ஆடைகள் மற்றும் வீட்டு காரியங்களில் ஆடம்பரத்தைக் கோருகிறது மேலும், பாராட்டப்படும் மற்றும் விரும்பப்படும் அனைத்திலும், சுய திருப்தியை சேகரிக்கிறது. அந்த ஜீவனத்தின் பெருமை, தன்னுடைய சுயநலமான அவமானத்தில் மகிமைப்படுகிறது. அதாவது, எளிமையானோர் மற்றும் உபத்திரவப்படுபவர்களின் தேவைகள், மற்றும் துக்கங்களை புறக்கணித்து, "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான்." (லூக்கா 12:19) இது மேலும் தொடருகிறது. அது ஏழைகளையும், எளியோர்களையும் வெறுத்து ஒடுக்குகிறது. இதுதான் உலகத்தின் ஆவி. இது தேவனின் மற்றும் கிறிஸ்துவின் ஆவிக்கு எதிரானது. தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படுபவர்கள் முடிந்த அளவு அதை விட்டு விலகி இருக்கவேண்டும். அவர்களின் நடத்தை, அவர்களின் உடை, வீட்டு வாழ்க்கை மற்றும் வீட்டு நியமனங்கள் எல்லாம் வேறு விதங்களில் பேசப்பட வேண்டும். நாம் மேட்டிமையானவைகளை சிந்தியாமல், தாழ்மையுள்ளவர்களுக்கு இணங்குங்கள். சிறந்த ஆடை அல்லது தங்க மோதிரம் அணிந்த மனுஷனுக்கு எந்த முன்னுரிமையும் கொடுக்காமல், நம்முடைய ஆண்டவரை போல, நம் பரலோக பிதாவின் சித்தத்தைச் செய்வோரை உயர்வாக மதிக்க வேண்டும். - ரோமர் 12:16, யாக்கோபு 2:1-5. "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன்

அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" 1யோவான் 4:16-18 இவ்வுலகத்தின் கருத்துக்களுக்கு இசைவாக நடப்பதுடன், அதன் வழிகளுக்கு இசைவாகவும் நடப்பதே, இந்த உலகத்தோடு கூட்டுறவில் இருப்பதாகும். இந்த அர்த்தத்தில் நாம் அதை நேசிக்கமாட்டோம். ஆனால் அதிலிருந்து விலகி, அதை எதிர்த்து நிற்கவேண்டும். இவ்வாறு, நமக்கு சுட்டிக்காட்டப்படும் வழி, குறைந்தபட்சம் சில விதங்களில், ஒரு கடினமான வழியாகவும், ஒரு தனிமையான வழியாகவும் இருக்கிறது, ஆனால் அதுவே, அமைதியானதும், நீடிய மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒரே வழியாகும். இச்சையினால் உண்டான இந்த உலகம் விரைவாக கடந்து செல்கிறது. அது வெறுமையானதும், திருப்தியற்றதும் இறுதியில் பேரழிவையும், பேராபத்துக்கும் வழிவகுக்கும். ஆனால், ஆண்டவரின் வழியில் பிரியமாக இருப்போர், அவரோடு ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்கியத்தையும் கூட்டுறவையும் பெறுவார்கள். உலகம் புரிந்துக் கொள்ள முடியாத ஒரு மூலத்திலிருந்து அவர்களுடைய மகிழ்ச்சி வருகிறது. அவர்கள் ஒரு உயர்ந்த நிலையில் வாழ்கிறவர்கள், ஒரு தூய்மையான வளிமண்டலத்தை சுவாசிக்கிறவர்கள். உலகம் என்றுமே தரமுடியாத இனிமையான, பரிசுத்தமான நட்பை அனுபவிப்பவர்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள் எந்த மனுஷனாவது, இந்த உயர்ந்த சலுகைகளுக்கு பதிலாக, உலகம் வழங்கக்கூடிய சாதாரணமான காரியங்களைப் பெற்றுக்கொள்ள இறங்கினால், அவர் தன்னுடைய புரிந்துக்கொள்ளாத தன்மையை நிரூபிப்பவராக இருப்பார். இவ்வாறு, பரலோக காரியங்களில் அவருடைய தகுதியற்ற தன்மையைக் காட்டுகிறது. பிதாவின் அன்பு அவரிடத்தில் இல்லை, மேலும் முடிவெடுக்கப்படும் தீர்ப்பு நாளைக் கண்டு அவர் அஞ்சலாம்.

**F604 [P2] through F606 [P2]—** புதிய சிருஷ்டியின் எதிரியாகிய உலகம்

இந்த பொல்லாத உலகத்துக்குரியவைகள் எல்லாம், கிட்டத்தட்ட நீதிக்கு உடன்படாததாக இருக்கின்றன. ஆகவே அவைகள் எல்லாம் ஏறத்தாழ புது சிருஷ்டிக்கும் அதன் நீதி நியமத்திற்கும் எதிர்மாறாக உள்ளன. பொதுவாக உலகின் நீதியைச் சுருக்கமாக கூறினால் - சுய நல நெறியாகும். உலகம் நீதியை அறிந்திருக்கிறது என்று உயர்வாக குறிப்பிட்ட அளவு உரிமை கொண்டாடினாலும் சுயநலம்தான் அங்கு காணப்படுகிறது. நாகரீகம் அடைந்துள்ள உலகத்தின் எல்லா சட்டங்களும் எல்லா கட்டுபாடுகளும் பொல்லாதது என்று நம்புகிறவர்கள் நாங்கள் அல்ல. அதற்கு மாறாக கிறிஸ்தவ உலகின் சட்டங்கள் எவ்வளவு உயர்வானதாக இருக்கிறது என்பதை பார்ப்பதில் நாம் அநேக வேளைகளில் ஆச்சரியப்பட்டுள்ளோம். எவ்வளவு சிறப்பானதாக உள்ளன. அவைகளில் பொரும்பாலானவைகள் பலவான்களிடத்திலிருந்து பெலவீனர்களின் நலன்களை காப்பதற்கும் எல்லாருக்கும் நீதியை செலுத்தவும் உண்டாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் முழு உலகத்தின் ஒவ்வொரு சிந்தனையோடும், வார்த்தையோடும், செயலோடும், சுயநலம் பின்னியிருக்கும் போது, அதன் நீதியின் மிக உயர்வான கருத்துக்கள் சில வேளைகளில் வளைக்கப்பட்டு, முறுக்கப்பட்டு பறிக்கப்பட்டுள்ளது என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல.

இதற்கு மாறாக இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளில் உள்ள சட்டப் புத்தகங்களில் காணப்படுகிற உயர்வான சட்ட திட்டங்களுக்கு விழுந்து போன மனுக்குலம் எட்டும்படியான இடத்திற்கு வந்திருப்பது , நமக்கு ஆச்சரியமாக உள்ளது. மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம், நம்முடைய ஆண்டவராலும், அப்போஸ்தலர்களாலும் உதாரண மாகக் காட்டப்பட்டது, விருத்திப்பண்ணப்பட்டது, கனப்படுத்தப்பட்டது, விளக்கப்பட்டது. உண்மையில் இதுவே, மனித சட்டங்களுக்கு ஆதாரமாக அமைந்திருக்கிறது. இருந்தாலும் மனிதனுடைய சுயநலம் மனிதனுடைய நீதியின் வரையறையோடு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அவைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒதுக்கி வைக்கப்பார்க்கிறது. இது உலகில் அதிகமாக முன்னேறிக் கொண்டே வருகிறது. இது புது சிருஷ்டியின் முக்கியமான கஷ்டங்களிலும்,

யுத்தங்களிலும் ஒன்றாக இருக்கிறது. உலகமும் அதன் பெருமையின் ஆவி, சுயநலம் போன்ற வைகளும் புதுசிருஷ்டியின் முக்கியமான சத்துருக்களில் ஒன்று என்பதை அறிந்துகொள்ள வேண்டும். மனுக்குலம் முழுவதும், "இந்த உலகத்தின் ஆவியின்" கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இது ஒரு பெரிய நதியைப் போல ஒரு பொதுவான திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது, சில பகுதிகளில் வேகம் இருக்கிறது. மற்ற பகுதிகளில் அதிக மந்தமாக இருக்கிறது. ஆனாலும் எல்லாம் சுயநலம் என்கிற ஒரே திசையை பின்பற்றுகின்றன. புது சிருஷ்டி தன்னுடைய அர்ப்பணிப்பினால், அவனுடைய புதிய மனதின் ஆவியினால் ஒரு விரோதமான பாதையில் செல்ல கடமைப்பட்டுள்ளான். ஆகவே, தற்போதுள்ள பிரபலமான மனோபாவம், தத்துவங்கள், பரம்பரை பழக்க வழக்கங்கள் முதலானவைகளால் எதிர்க்கப்படுகிறான், விசித்திரமானவன் என்று குறிப்பிடப்படுகிறான். அவன் சந்திக்க வேண்டிய எதிர்ப்பு உண்டு, எதிர் திசையில் செல்படுபவர்களோடும், தன்னோடு தொடர்பு கொள்பவர்களோடும் விரோதம் காட்டவும் அவனுக்கு அவசியமாகிறது. மோதல் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அது வெளிப்படையான சமாதானத்தையல்ல வெளிப்படையான முரண்பாட்டை அர்த்தப்படுத்துகிறது. ஆனாலும் இந்த வெளிப்படையான முரண்பாடு உள்ளான சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் குறிக்கிறது. ஏனெனில் திவ்விய ஆமோதிப்பு உணரப்படுகிறது. உலகத்தின் நோக்கங்களும், இலக்குகளும், முறைகளும் எப்பொழுதுமே இழிவானதும் அநீதியானதுமாக இருப்பதில்லை. ஆனால் அதன் உயர்வான குறிக்கோள்களும் நோக்கங்களும் பொதுவாக புது சிருஷ்டியின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களும் எதிராக உள்ளன. ஏனெனில் உலகம் மனுஷீக ஞானத்தின் துடிப்பின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் புது சிருஷ்டியோ பரத்திலிருந்து வருகிற ஞானத்தினால் இயக்கப்படுகிறான். உலக ஞானம் மதத்தின் மூலம் கெட்டவர்களை பயமுறுத்தி அடக்க உதவுகிறது. அது ஒழுக்கம் தயாளம், விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவைகளைக் குறித்து தன்னுடைய சொந்த கருத்துக்களை கொண்டுள்ளது, புது சிருஷ்டியின் வித்தியாசமான அணுகுமுறைகளை அது புரிந்து கொள்ள முடியாது. மேலும் புது சிருஷ்டியின் கருத்துக்களை, கடுமையானது, நியாயமற்றது போன்று எண்ணுவது பொருத்தமானது என்று நினைக்கிறது. காரணம் என்னவெனில் அது திவ்விய திட்டத்தைப் புரிந்துகொள்ளுகிறதில்லை. தற்கால வாழ்க்கை திவ்விய கருத்தின்படி எதிர்கால வாழ்க்கையோடு ஒப்பிடும்போது, முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. உண்மையாகவே மனுக்குலம் உயர்த்தப்படுவதில் மனுஷீக முயற்சிகள் இயலாததை உலக ஞானம் ஏற்றுக் கொள்ளுவதுமில்லை. ஆண்டவர் தன்னகத்தில் வைத்திருக்கிற மாபெரும் உன்னதமான ஒழுங்குகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்விதமாக இருக்கிறது. அவருடைய தற்போதைய கிரியை முடிந்தவுடன், தெரிந்து கொள்ளப்பட்ட சபை, ஏற்றுக்கொள்ளப்பட்டு, மெருகூட்டப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்படும். அதன் பிறகு தேவன் தன்னிடத்தில் வைத்திருக்கிற மாபெரும் உன்னதமான ஒழுங்கு, வெளிச்சத்திற்குள் முழுமையாக கொண்டு வரப்பட்டு, இராஜ்யத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும். ஆகவே உலகமும் அதன் ஒழுக்கமும், மற்றும் மதத்தில் பற்றுடையவர்களும் வெறுத்தாலும்கூட புது சிருஷ்டி ஆச்சரியப்படக்கூடாது. உலகத்தின் இந்த வெறுப்பும், எதிர்ப்பும், சில சமயங்களில் கோபமூட்டுவதாக இருந்தாலும் கூட, விசுவாசத்தையும் பொறுமையையும் சோதிப்பதாக இருந்தாலும் கூட சாந்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் உலகமானது இன்னும் நூறு சதவீதம் இந்த உலகத்தின் அதிபதியால்" குருடாக்கப்பட்டுள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உலகமானது "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும், ஆவியின் ஆழமான காரியங்களையும், பார்க்கிறதில்லை. இந்த ஆவியின் வெளிச்சத்தில் தேவனுடைய கிருபையால் நாம் எல்லாவற்றையும் - இழப்புகள், பரீட்சைகள் போன்றவைகளை குப்பையும் தூசியுமாக எண்ண முடிந்தவர்களாக இருக்கிறோம். அதனிமித்தம் வேதத்தில் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டுள்ள அற்புதமான காரியங்களை நாம் பெறமுடிந்தவர்களாக இருக்கிறோம். உலகத்தின் ஆவிக்கு விட்டுக் கொடுப்பது என்பது, சமாதானத்திற்காக அதன் உணர்வுகளை நம்மை ஆதிக்கம் பண்ண அனுமதிப்பதும், ஆண்டவரைப் பற்றியும், சத்தியத்தைப் பற்றியும் அவருக்கு ஊழியம் செய்யும்படியான சிலாக்கியத்தைக் குறித்தும்

தாழ்வாக எண்ணுவதற்கு இடம் கொடுப்பதாகும். இதனால் வரும் விளைவு என்னவெனில், உலகத்தனத்திற்கு முழுமையாக சென்ற தினிமித்தம் எல்லாவற்றையும் இழக்காவிட்டாலும் குறைந்தபட்சமாக, பந்தயப்பொருளை இழந்து, "திரள்கூட்டத்தில்" பங்கு பெற்று வரப்போகிற மகிமைக்கு சம்பந்தப்பட்ட ஒரு தாழ்வான இடத்திற்கு மாபெறும் உபத்திரவத்தின் மூலம் வருவோம். அப்போஸ்தலருடைய உறுதியான கட்டளை என்னவெனில், "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூறாதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவான் 2:15) என்பதாகும். ஆகவே உலகத்தின் ஆவிக்கு இரக்கப்படுவதற்கு அல்லது விருப்பம் காட்டுவதற்கு ஏதுவான ஒவ்வொரு அறிகுறிக்கும் எதிராக நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதனால் உலகத்தாராயிருக்கிற நம்முடைய நண்பர்களிடத்தில், அனுதாபம் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதல்ல, அவர்கள் நலன்கள் போன்றவற்றில் அஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதல்ல, ஆனால் உலகத்தாரிடத்தில் நம்முடைய கடமைகளைச் செய்ய ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மரியாதை செலுத்தவேண்டியவர்களுக்கு மரியாதை செலுத்தவும், புகழ வேண்டியவர்களை புகழவும் வேண்டும். உதவி தேவைப்படுவர்களுக்கு உதவியையும், அன்பு தேவையுள்ளவர்களிடத்தில் அன்பையும், இரக்கம் தேவையுள்ளவர்களுக்கு இரக்கத்தையும் காட்ட வேண்டும். இருந்தாலும், இன்னும் சத்துருவின் செல்வாக்கின் கீழ் இருக்கிற நம்முடைய நண்பர்களுக்கும், அயலகத்தாருக்கும் வித்தியாசத்தை காட்ட வேண்டும். இந்த சத்துருவின் செல்வாக்கு, ஆவி மற்றும் அவனுடைய குணாதிசயம், அவர்களை நடத்துகிறது, அவர்களை வஞ்சிக்கிறது.

தற்போதுள்ள எந்த ஸ்தாபனத்தோடும் நாம் அனுதாபம் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. அவைகள் சுயநலத்தை சார்ந்தவைகளாகும். அவைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ திவ்விய கட்டளையாகிய பொன்னான கற்பனைக்கு எதிரானவைகளாக உள்ளன. உலகத்தில் காணப்படுகிற சுய நலம் என்கிற வழியில் நம்முடைய அலுவல்களை அதிகமாக நடத்துவது அவசியமாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்து கேள்வி கேட்பதை நிறுத்தாமல் செய்யவேண்டும். நம்முடைய இருதயங்கள் சுயநலக்கொள்கை களுக்கு அனுதாபம் காட்டாத நிலையில் வைக்கப்பட வேண்டும். அப்படி செய்யும்போது நம்முடைய வாழ்க்கையின் எல்லா அலுவல்களிலும், கூடுமானவரை நாம் உலகத்தோடு கொண்டுள்ள காரியங்களிலும் பொன்னான கற்பனை முழுமையாக ஆளுகை செய்யும்படி விரும்புவோம்.

**46.நம்முடைய "இருதயம்" நம்மை ஏமாற்றாதபடி நாம் எவ்வாறு நம்மை ஆராய வேண்டும்?**

**F600 [P2] through F602 [P2]**:

"எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது." (எரேமியா 17:9) என்று வேத வசனம் கூறுகிறது. இருதயம் என்று அழைக்கப்படுகிற உறுப்பை அல்ல, வேத வசனம் கூறுகிறபடி அது ஜென்ம சுபாவங்களாகும். புதுசிருஷ்டி ஒரு புதிய இருதயத்தை, ஒரு புதிய சித்தத்தை, ஒரு புது சுபாவ நிலையை பெறுகிறான். இதில் தேவனும், அவருடைய நீதியும், சத்தியமும் திட்டமும், சித்தமும் முதலாவதாக இருக்கின்றன. மற்ற விஷயங்கள் எல்லாம் அவைகள் ஆண்டவரோடும், அவருடைய நீதியோடும் ஒத்திருக்கிற அளவுக்கு கனத்துக்குரிய, அன்புக்குரிய இடத்தில் உள்ளன. இந்த புது இருதயத்தை உடையவர்கள் அனைவருக்கும், புது சிருஷ்டியின் அங்கங்கள் அனைவரும் முதலாவதாகவும், நெருக்கமானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே அப்போஸ்தலர் கூறுகிறபடி, சகோதரர்கள் மேல் உள்ள அன்பு, புது சிருஷ்டிகளாக ஆண்டவரோடு வைத்திருக்கிற உறவுக்கு நல்ல பரீட்சைகளில் ஒன்றாகும். ஆனால் இது ஏற்கனவே காட்டப்பட்டுள்ளபடி, மற்றவர்களுக்குரிய கடமைகளை நியாயமாக உணர்வதற்கு இடையூறாக இருக்கக்கூடாது. புது இருதயத்தையும் புது சுபாவத்தையும் உடைய புது சிருஷ்டி, பழைய சுபாவங்களையும், சுயநல குணத்தையும் உடைய பழைய இருதயமாகிய அதன் சத்துருக்களால், தொடர்ந்து தாக்கப்படுகிறது. புது சிருஷ்டி மற்றவர்களிடத்தில் கனிவுடனும், தயாளத்துடனும் இருக்க திவ்விய கட்டளையினால் கட்டப்பட்டிருக்கிறதைக் கண்டு, பழைய இருதயம், அநேக தடவைகளில் புது இருதயத்தின் மேல் வஞ்சகத்தை அப்பியாசப்படுத்துகிறது. அது இப்படியாகக் கூறுகிறது - இப்பொழுது நான் மரித்து விட்டேன் என்று எண்ணுகிறாய், நீ என்னை வெளியே

தள்ளிவிட்டாய், என் இருதயத்தை பொருத்த வரையில் மரித்துவிட்டேன், முன்பு இருந்த அதே இருதயமாக இப்போது இல்ல. ஆனால் நீ எனக்கு சிறிதளவு கனிவு காட்ட வேண்டும். நீ என்னை மிகவும் கடினமாக நடத்தக்கூடாது. நான் ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறேன் என்பதை நீ ஒத்துக்கொள்ள வேண்டும், என்மேல் அதிகமான பாரத்தை சுமத்தக்கூடாது, அது நீதியானதாக இருக்காது. நீ ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சுயநலம் உள்ளவனாக இருக்க வேண்டும். நீ முதலாவதாக உன் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும். அவர்களுடைய தேவைகளை மாத்திரமல்ல, அதற்கும் மேலாக கவனிக்க வேண்டும். நீ அவர்களுக்கு செல்வத்தையும் சமுதாய நன்மைகளையும் கொடுக்க முயற்சிக்க வேண்டும். நீ உன்னை அவர்களுக்காக தியாகம் பண்ண வேண்டும்.

பழைய இருதயம் எவ்வளவு திருக்குள்ளதாக இருக்கிறது பாருங்கள், அதன் பொய்யான காரணங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன, எத்தனை பேர் தங்கள் துக்கத்திற்கு ஏதுவாக இதை நிரூபித்திருக்கிறார்கள், எத்தனை பேர் கவர்ந்திழுக்கப்பட்டு, புதிய மனம் பழைய மனதினால் சிறைப்பிடிக்கப்படும் படி விட்டிருக்கிறார்கள், எத்தனை பேர் பழைய இருதயத்தின் தந்திரத்தால் அடிமைத்தனத்திற் குள்ளாக கொண்டு வரப்பட்டதை பார்த்திருக் கிறார்கள். மிக பிடித்தமான வாக்குகளில் ஒன்று - "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18) என்று புதிய சிருஷ்டிக்கு கட்டளையிடப்பட்டிருப்பது தான். இந்த பொதுவான யோசனை அப்போஸ்தலரிடத்திலிருந்து வருகிறது. அது தன் நிலைமையைக் காட்டிலும் அதிகமாக உயர்த்த விரும்புகிறது, மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள திவ்விய கட்டளைக்கு மேலாக அதை சிறப்புள்ளதாக மாற்ற நாடுகிறது. 1. நம்முடைய ஆண்டவரை நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் நேசிப்போம், அவரை கனப்படுத்துவோம், அவருக்கு ஊழியம் செய்யவோம், அவருக்குக் கீழ்ப்படிவோம். 2. தன்னைத்தான் நேசிப்பது போல பிறனையும் நேசிப்போம். இது எந்த விலையிலும் சமாதானத்தை அனுமதிக்காது. பழைய இருதயம், பழைய மனம், பழைய சித்தம் சமாதானத்தினிமித்தம் சத்தியத்தை அல்லது கடமையை விட்டுக் கொடுக்கும்படி செய்தால், அது ஏற்படுத்தக்கூடிய நிபந்தனைகளுக்கு எல்லையே இருக்காது. இதனால் ஏற்படும் விளைவு என்னவெனில் சமாதானத்தினிமித்தம் புதுசிருஷ்டி வெகு சீக்கிரத்திலேயே ஆண்டவரோடு செய்த அவனுடைய அர்ப்பணத்தின் முக்கிய சாரம்சத்தையே மீறிக்கொண்டிருப்பான், மேலும் அப்படி அது விரும்பாவிட்டாலும் பழைய சித்தத்திற்கு முற்றுமாக தன்னை ஒப்புவித்துக் கொண்டிருப்பான், பழைய சித்தத்துக்கு எதிர்த்து நின்றாலும் திவ்விய வார்த்தையை அது திறமையாக தவறாக விளக்குகிறபடியால் அதன் தந்திரத்தினால் சிறைபிடிக்கப்படுகிறான்.

இப்படியாக தாக்கப்பட்டு இருக்கும்போது, புது சித்தம் சுலபமாக சொல்ல வேண்டியது என்னவென்றால், சமாதானம் வீட்டிலும், வேறு எங்கும் விரும்பத்தக்கதாக இருந்தாலும், ஆண்டவருடைய வாக்குத்தத்தின்படி சமாதானம் முதன்மையானதல்ல என்பதாகும். உண்மையாகவே தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று புதுசிருஷ்டியை ஆண்டவர் எச்சரித்திருக்கிறார். இது எல்லாரோடும் சமாதானமாக இருப்பதை குறிக்காது. ஆனால் அதற்கு எதிர்மாறானது. அவர்கள் வெளிச்சம் பிரகாசிக்கும்படி செய்யும்போது நிச்சயமாகவே இருள் வெளிச்சத்தை வெறுத்து, அதோடு போராடும் என்றும், முடிந்தால் வெளிச்சத்தின் சொந்தக்காரரை, அதை ஒரு மரக்காலின் கீழாக மூடி வைக்கும்படி தூண்டும் என்றும், இந்த வெளிச்சத்தை மறைத்து வைக்கும்படி தூண்டுவதற்காக இருள் ஒரு யுத்தத்தை நடப்பிக்கும் என்றும், அதன் அர்த்தம் என்னவெனில் சமாதானத்தைத் தவிர வேறு எதையும் கொடுக்காது என்பதுதான் என்று அவர் கூறியிருக்கிறார். ஆனால். இவைகளெல்லாம் புது சிருஷ்டிக்கு உள்ள பரீட்சை தான் என்று ஆண்டவர் நமக்கு நிச்சயப்படுத்திக் கூறுகிறார். அவன் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், அவனுக்கு முக்கியமான சமாதானம் என்பது மாம்சத்திற்குரிய சமாதானமல்ல, ஆனால் இருதயத்தின் சமாதானமாகிய "எல்லா புத்திக்கு மேலான தேவ சமாதானம். எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை தன்னுடைய இருதயத்தில், வெளிப்படையான நிலைமைகள் எல்லாம் இந்த சமாதானத்திற்கு எதிராக இருக்கும்போது கூட, புது சிருஷ்டி இதை அடையாளம் காணும் என்பதை

அவன் கற்க வேண்டும். ஆனால், அது எப்படிப்பட்ட கிரயம் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும், எப்படிப்பட்ட தியாகமாக இருந்தாலும், ஆண்டவரோடு ஒரே மனதாய் இருக்கிற நிலைமை என்பது அவரிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கான வெகுமதியாகும். ஆகவே மாம்சீக தூண்டுதல் களினால் வேண்டுதல்கள் வரும் போதும், உலகப்பிரகாரமான உறவினர்கள் வாதிடும்போது, புது சிருஷ்டி முதலாவதாக தன்னுடைய முக்கியமான கடமையை நினைக்க வேண்டும். அதாவது தேவனை தன்னுடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் நேசித்து, அவருக்காக ஊழியமும் செய்ய வேண்டும். அதே நேரத்தில், மாம்சத்தோடு அல்லது அயலகத்தாரோடு உள்ள உறவு இந்த பிரமாணத்திற்கு உட்பாட்டு தான் இருக்க வேண்டும்.

## 47.குறிப்பான அடையாளத்தை அடைந்த பின்னும், செயல்பாடுகள் இன்னும் அத்தியா வசியமா?

**R2755 [col. 2 P3]**:

அன்பின் சரியான அடையாளத்தை அடைந்தவர்கள், கர்த்தருடைய சேவையில் தீவிரமாக ஈடுபட்டு, சகோதரர்களுக்காக தங்களுடைய ஜீவனையும் கொடுப்பார்கள். ஏனெனில், "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?"1யோவான் 4:20 இவர்கள் தேவனுக்கும், அவருடைய நீதியின் கொள்கைகளுக்கு மட்டுமல்லாமல், கர்த்தரின் வல்லமையிலும், அவருடைய பலத்தின் சக்தியிலும் மற்றும் அவருடைய வார்த்தையின் மேல் விசுவாசமுள்ளவர்களும், பிரதிநிதியாக இருக்க வேண்டும். இந்த ஓட்டபந்தயத்தில் ஓடும் மற்ற வீரர்கள் குறிக்கப்பட்ட நிலையை அடைவதற்கு, திறமையோடும், மனமுவந்து, ஆர்வத்தோடு ஊக்குவிக்க ஆயத்தமாக இருப்பார்கள். அப்போஸ்தலர் கூறுகிறபடி, "ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக. சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (பிலிப்பியர் 3:15-17)

**F190 [P1, 2]**:

புது சிருஷ்டிகளாக நாம் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படுவதற்கு முன்னால் நாம் இந்த அன்பின் உச்ச இலக்கை அடையவேண்டும். நாம் ஆண்டவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் மரணத்தை சந்திக்கும் தருணத்தில் இந்த உச்ச இலக்கை அடைவார்கள் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. நாம் நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தில் அந்த இலக்கைக் கூடுமானவரை எவ்வளவு சீக்கிரம் அடையமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அடைய வேண்டும். அதன் பிறகு "சகலத்தையும் செய்து முடித்தவர்களாக நிற்கவும்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை நினைவு கூற வேண்டும். (எபேசியர் 6:13) அந்த உச்ச நிலையை வந்தடைந்த பின்னர் அன்பைப்பற்றியதான பரீட்சைகள் நமக்கு தேவை. அந்த நிலையில் இருக்கும் போதே அந்த பயிற்சிகள், அந்த உச்ச நிலையை அல்லது இலக்கை நம்முடைய வாழ்க்கையில் நிலைவரப்படுத்த முயற்சிப்பது நம்முடைய குணாதிசயத்தை அதிகமாக பலப்படுத்துவதாக இருக்கும். இதில் விசேஷமாக நம்முடைய அனுபவங்கள் ஆண்டவருடைய அனுபவங்களைப் போன்றிருக்கும். அந்த உச்ச இலக்கை அடைய அவர் ஓட வேண்டிய அவசியமிருந்தது. "இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அது போலவே நம்மில் ஒவ்வொருவரும் அந்த இலக்கை அடைந்த பின்னர் அதை உறுதியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். மேலும் நமக்கு வரும்படியாக ஆண்டவர் அனுமதிக்கின்ற எல்லா சோதனைகளிலும், நம்முடைய பெலத்தின் மூலமாக அல்ல, ஆனால் நம்முடைய மீட்பரின் உதவியினால் வரும் பெலத்தின் மூலமாக மேற் கொள்ளுகிறர்வகளாக அவரால் எண்ணப்படும் படியாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

பிதாவுக்குக் காட்டும் பூரண அன்பிலிருந்து நம்மை திசைத்திருப்பும் படியாக, அவருக்கு உரித்தான முழு மரியாதையையும், கீழ்ப்படிதலையும் குறைவாகக் காட்டும்படி நம்மை உந்துகின்ற சூழ்நிலைகள் நமக்கு எதிராக வரும். சகோதரர்களைக் குறித்த சோதனைகளும் நமக்கு வரும். நாம் அவர்களுடைய பெருந்திரளான

பாவங்களை முடும்படியாக அன்பு அனுமதிக்கப்படுவதில்லை. நாம் நேசிக்க கற்றுக கொண்டவர்கள், பலவீனங்களைக் கண்டு பரிதாபப்படும்படியாக நாம் கற்றுக்கொண்டவர்கள் மேலும் கோபப்படும்படியாக யோசனைகள் வரும். நாம் நம்முடைய சத்துருக்களை நேசிக்கக் கற்றுக் கொண்ட பின்னர், சில சாதுர்யமான ஆலோசனைகள் வரலாம். - நாம் விதிவிலக்கான ஒரு வகுப்பார், நம்முடைய எதிராளிகளை பொருத்தவரையில் நமக்கொரு வரம்பு இருக்கவேண்டும் என்ற எண்ணங்கள் நம்மை சூழ்ந்துக்கொள்ளும். இந்த சோதனைகளில் நாம் உறுதியாக இருப்போமென்றால், இலக்கை நோக்கி, ஏற்கனவே நாம் அடைந்துள்ள நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சித்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, இயேசுவின் மூலம் நமக்கென உள்ள நித்திய ஜீவனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளும் போது, நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்போம்.

**F373 [P2, 3]**:

நம்முடைய ஆண்டவர் பரிபூரண அன்பு என்ற "இலக்கில்" சோதிக்கப்பட்டது போல, நாம் எல்லோரும் அதை அடைந்த பின்னர் தான் சோதிக்கப்படுவோம். ஆகவே வாழ்வின் கடைசி மூச்சின் போது அந்த இலக்கை அடையலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது, ஆனால் கூடுமானவரை துரிதமாகச் செயல்பட வேண்டும். நாம் இந்த இலக்கை அடையும் வேகத்தை வைத்து நம்முடைய வைராக்கியத்தின் அளவும், அன்பின் அளவும் தேவனுக்கும் சகோதரர்களுக்கும் சுட்டிக்காட்டப்படும்.

அப்போஸ்தலருடைய வார்த்தையான "சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும்" (எபேசியர் 6:13) என்பது பரிபூரண அன்பு என்ற இலக்கை அடைந்த பின்னர் நமக்கு அதிகமாக சோதனைகள் உண்டு என்பது பொருள். அவையாவன, விசுவாசத்தை சோதிக்கின்ற வைகள், பொறுமையை சோதிக்கின்றவைகள், மற்றும் அன்பின் பல்வேறு அம்சங்களில் வரக்கூடிய சோதனைகளாகும். நம்மைச் சரியான வழியில் முன்னேறும்படி உதவி செய்வதற்கு உலகமானது கிருபைக்கு ஒரு நல்ல நண்பனல்ல. சாத்தான் இன்னமும் நம்முடைய சத்துருவாயிருக்கிறான். நாம் அடைந்துள்ள நிலைமையிலிருந்து நம்மை பின்னடையும்படியாகப் பலவந்தப்படுத்த அதிகமான எதிர்ப்புகளைக் கிளறிவிடுகிறவனாக இருக்கிறான். இதுவே நம்முடைய சோதனையாகும். நாம் அடைகின்ற நிலையில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். நம்முடைய உலக வாழ்க்கையைத் துச்சமாக உதறிவிடும் வரை, நமக்குச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்யவும், தேவனுடைய ஊழியத்தில் சகோதரருக்கென நம்முடைய ஜீவனையே கொடுக்கும் வரை நாம் "இலக்கை நோக்கித் தொடர வேண்டும்", "நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்" இந்த வழியில் நாம் செல்லும்போது தேவையான ஒவ்வொரு உதவியையும், ஆபத்தில் பாதுகாப்பையும் அவர் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். அவருடைய கிருபை நமக்கு போதுமானது. (1தெசலோனிக்கேயர் 5:24, 11கொரிந்தியர் 12:9)

## 48.ஒரு மூப்பரின் தலைமையான பண்பு என்னவாக இருக்க வேண்டும்?

தீத்து 1:7,8 "ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானபிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தைஇச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்தபுத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும்"

**R2446 [col. 2 P3]**:

இந்த தெய்வீக அறிவுரைகளைக் குறித்து, தேவனுடைய ஜனங்கள் முதன்மையான இரண்டு அப்போஸ்தலர்களை கவனிப்பது நலமாயிருக்கும். மேலும், அவர்கள் மதிப்புமிக்கவர்கள் என்று நினைவில் கொள்வது அல்லது நல்ல "பேச்சாளர்களாகவும்" அல்லது சிறந்த "ஞானிகளாக" இருப்பதே, சரியான வழியில் இருப்பதற்கான தெளிவான சான்றுகள் என்று சகோதரர்கள் மத்தியில் தங்களை எண்ணிக்கொள்ளகூடாது அல்லது தங்களுடைய தர்க்கங்கள் உதவக்கூடியதற்கு பதிலாக காயப்படுத்தக்கூடாது. பரிசுத்தமான காரியங்களில் பணி செய்வதற்கு, சபையின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைவரிடமும் எல்லாவற்றிற்கும் மேலாக காணப்படவேண்டிய முதன்மையான பண்பு, அன்பின் ஆவியே. அறிவு மற்றும் திறமை முற்றிலும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று நாம் கூறுவதில்லை ஆனால், எப்பொழுதும் போல, இவைகள் முதன்மையாக

முக்கியத்துவம் பெறாமல்,இரண்டாம் நிலையில் இருப்பதை கூறுகிறோம். உங்கள் மத்தியில், கர்த்தருடைய ஜனங்களின் வெவ்வேறு கூட்டணிகளின் ஆவிக்குரிய காரியங்களை பொறுப்பேற்றுக்கொள்ள வாய்ப்பு பெற்ற, பரிசுத்தவான்களை அதாவது முழுமையாக பரிசுத்த ஆவியை பெற்றவர்களை கவனியங்கள். மற்றும் பரிசுத்த ஆவி தாமே எவ்வாறு தன்னை அதாவது தன்னுடைய குணங்களை வெளிப்படுத்தும் என்ற தெய்வீக விளக்கத்திற்கு, சபையில் உள்ள ஊழியக்காரர்களை கவனிக்க வேண்டும். (1கொரிந்தியர் 13:4-8, 1பேதுரு 1:22, 11பேதுரு 1:13 வசனங்களை காண்க) தங்கள் சொந்த நலனுக்காகவும், சபையின் நலனுக்காகவும், பிற தகுதிகளை கொண்ட மற்ற அனைவரும், மேன்மையான சிந்தையில் இறுமாப்படைவதற்கு ஆதாரங்கள் தருகிறார்கள். மேலும், தேவனுடைய சுதந்தரமாகிய சபையை கைப்பற்ற விரும்புவோர் அல்லது பொறாமை, கலகம், கசப்பு, பகை, தீமை பேசுதலை வெளிப்படுத்துபவர்களை - மேலே இருந்து வராத தவறான ஆவி இருப்பதற்கான ஆதாரங்களைக் கொடுக்கிறது, இவைகள் பூமிக்குரியவர்களும், சிற்றின்பம் மற்றும் பிசாசினால் உண்டானதினால் இவைகள் கடந்து செல்ல அனுமதிக்கப்படவேண்டும்.இவர்கள் பாதுகாப்பற்ற ஆசிரியர்களாக இருக்கிறார்கள், அவர்கள் எந்த அளவிற்கு அறிவைப் பெற்றிருந்தாலும் சரி, நன்மைகளைவிட அதிக தீமைகளை செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

**F251 [P2]:**

"நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராய் எண்ண வேண்டும்." (1தீமோத்தேயு 5:17,18) என்று நாம் வாசிக்கிறோம். இந்த வசனத்தின் வலிமையைக் கருத்தில் கொண்டு, உலகப்பிரகாரமான சபை விசாரணை செய்யும் மூப்பர்கள் என்ற ஒரு வகுப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது சகோதரர் மத்தியில் சர்வாதிகார முறையில் இல்லாவிடினும் எல்லா மூப்பர்களுக்கும் ஒரு விசாரணை செய்யும் அதிகாரம் வேண்டும் என்று கோரியிருக்கிறது. இப்படியான "ஆளுகை" என்ற வார்த்தையை, இந்த விஷயத்தில் வேதாகமத்தில் காணப்படுவதற்கு எல்லாம் முரணாக உள்ளது. ஒரு பெரிதான மேற்பார்வையாளர் அல்லது மூப்பர் என்ற ஸ்தானத்தில் உள்ள தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார். "முதிர் வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளாமல் அவனை ஒரு சகோதரனைப்போல பாவித்து புத்தி சொல்லு." "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்த குணமுள்ளவனாயிருக்க வேண்டும்." இங்கே அதிகார பூர்வ விசாரணையோ, அல்லது சர்வாதிகார தோரணையோ நிச்சயமாக அனுமதிக்கப் படவில்லை. மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப் படுகிறவர்களுக்கு முக்கியமான குணாதிசயங்களாக இருக்க வேண்டியவைகள் சாந்தம், நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பு ஆகியவைகளே. அந்த வார்த்தையின் பிரகாரம் எல்லா விதங்களிலும், மந்தைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆகவே அந்த வார்த்தையின் படி அவர்கள் சர்வாதிகாரம் உடையவர்களாக இருக்கவேண்டுமானால், அவர்கள் சாந்தமும், நீடிய பொறுமையும், மென்மையானவர்களும், அன்பானவர் களுமாக இருக்கவேண்டும். அப்போது, மந்தைக்கு சரியான முன்மாதிரியாக இருப்பார்கள்.

**49.நாம் "சீயோனில் ஆறுதல்படுத்துகிற வர்களாக" இருப்பதற்கு அன்பு நமக்கு எப்படி உதவுகிறது?**

**R3434 [col. 2 P1-3]**:

இது வரையில் பதிவுகள் காட்டுகிறபடி, பேதுருவின் அவமதிப்பு அல்லது அவருடைய அவதூறையைப் பற்றி, ஆண்டவர் அவரிடம் ஒரு முறைக்கூட குறிப்பிடவில்லை.இவைகள் சொல்லப்படாமல் இருந்தாலும், பேதுரு அவைகளைப் பற்றி அறிந்திருந்தார், முன்னதாக அதற்காக அவர் மனங்கசந்து அழுதார். ஆண்டவரின் வெறுமனே கடிந்துக்கொள்ளும் வார்த்தைகள், கண்டித்தல் அவரை நம்பிக்கை அற்ற விதத்தில் சோர்வடையச் செய்திருக்கலாம்."நீ என்னை நேசிக்கிறாயா?" என்ற கேள்வியே நம்முடைய ஆண்டவரின் பாணியில், சிட்சிப்பதாக இருந்தது. சீயோனின் ஆறுதலின் உண்மையான குமாரரும் குமாரத்திகளுமாகிய அனைவருமே, நம்முடைய பெரிய போதகரிடமிருந்து இந்த பாடத்தை கற்றுக் கொள்ளலாம். தண்டிக்கவும், திருத்தவும், கண்டிக்கவும் கடிந்துக் கொள்ளவும் முயலாமல், கூடுமான வரையில் இவைகளை தவிர்த்து, ஆண்டவரிடமும், அவருடைய மந்தையினிடமும் அந்த குற்றவாளியின் நோக்கம் என்ன என்பதை அறிந்துக்கொள்ள, கடந்த காலத்தைப் பற்றி அல்ல நிகழ்காலத்தை குறித்தே விசாரணை செய்வது நலமாக இருக்கும். "நான் போகாதிருந்தால் தேற்றவாளன் (பரிசுத்த ஆவி ) உங்களிடத்தில் வரார்." என்று நம்முடைய

ஆண்டவர் சொன்னபடி கண்டிப்பதற்கும், கடிந்துக் கொள்ளுதலுக்கும் பதிலாக, சபைக்கு ஆறுதல் தேவை என்பது ஒரு உண்மையான காரியம் என்று முழுமையாக புரிந்துக்கொள்ள வேண்டும். பரலோக பிதாவின் ஆசீர்வாதங்கள் பொழியப்படுவதற்குமுன் "மகா பரிசுத்தஸ்தலத்தில்" அவரிடம் "மீட்கும் பொருள் செலுத்தப்படவேண்டும். இயேசுவை அங்கீகரித்து, அவர்களுடைய வார்த்தையினால் அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் இந்த ஆசீர்வாதம், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப் படுதலின் ஆறுதலையும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் ஆறுதலையும் அளிக்கும். உண்மையில், பரிசுத்த ஆவி உங்களை கடிந்துக் கொள்ளுவார் என்று நம்முடைய ஆண்டவர் பேசினார் - ஆனால் சபையை கடிந்து கொள்வதாக அவர் சொல்லவில்லை. "இந்த உலகத்தின் பாவத்தை, வரக்கூடிய நியாயத்தீர்ப்பில் நீதியோடு கண்டித்து உணர்த்துவார்கள்." பரிசுத்த ஆவியைப் பொருத்த வரையில், சபையை அது கையாள்வதில், கடிந்துக் கொள்தலுக்காக கொடுக்கப்படும் நெருங்கிய ஆலோசனையை அப்போஸ்தலர் கொடுக்கிறார் -" அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் ",மீண்டுமாக, "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" என்று அவர் கூறுகிறார். - எபேசியர் 4:30. 1தெசலோனிக்கேயர் 5:19. இதுவே சபையை பொருத்த வரைக்கும் பரிசுத்த ஆவியின் கிரியையாகும். தேவனுடைய ஜனங்களின் ஆறுதலுக்காக செய்யப்படும் மகத்தான முன்னேற்பாடு, இத்தகைய ஆறுதலின் அவசியத்தை தெளிவாக குறிப்பிடுகிறது. இதை கண்டுபிடிப்பது கடினமானதுமில்லை. கிருபை, அறிவு மற்றும் அன்பின் வளர்ச்சியை தடைச் செய்து, புது சிருஷ்டியை சிறைப்பிடிக்க அல்லது சோர்வடைச் செய்ய அல்லது பயமுறுத்த முயற்சி செய்து, விசுவாசமுள்ளவர்களுக்கு மட்டுமே தேவன் வாக்களித்த, பூரணத்தையும் மகிமையையும், அடைவதை தடுப்பதற்கு, தேவனுடைய ஜனங்கள் பாதகமான நிலையில் உள்ள ஒவ்வொன்றாலும் (உலகம், மாம்சம், சாத்தான்) சூழ்ந்துக் கொள்ளப்படுகிறார்கள். சபையில் ஆறுதலின் மகன்களாகவும், மகள்களாகவும் இருப்பதற்கு, நம்முடைய இருதயத்தில் ஏராளமான அன்பும், இரக்கமும் அதிகமாக தேவை. எந்த அளவுக்கு இரக்கமும் அன்பும் வருகிறதோ, அந்த அளவுக்கு நமக்குள் இருக்கும் சண்டை மனபாண்மை, மற்றவர்களை நியாயந்தீர்த்தல், குற்றம் கண்டுபிடித்தல், வாதாடும் சிந்தனைகள் அனைத்தையும் வெளியேற்றப்படும். முதன் முதலில் கோபம், தீமை, பகை, கலகம், வீண் பெருமையின் ஆவி வெளியேற்றப்பட்டது போல இப்போதும் இது நடைபெறும்.

**R3436 [col. 2 P3]:**

இந்த இரட்சிப்பை குறித்தே அப்போஸ்தலர் கூறும் பொது, இயேசு மரித்தாலும், உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவாசித்தால், தேவனுடைய ஜனங்கள், நம்பிக்கையற்ற மற்றவர்களை போல துக்கிக்கக்கூடாது. மேலும் அவர் நமக்காகவும், இந்த முழு உலகத்தின் பாவங்களுக்காகவும், அவருடைய மரணம் ஒரு பலியானது என்ற வேத நூலின் பதிவுகளையும் விசுவாசிப்போம். அதனால் இயேசுவில் நித்திரையடைந்தவர்களை, தேவன் இயேசுவை கொண்டும், அவர் வழியாகவும், மரணத்திலிருந்து கொண்டு வருவார். (1தெசலோனிக்கேயர் 4:11-14) ஆதாமுக்குள் மரணத்தில் இறங்கிய இந்த முழு மனுக்குலத்திற்கு, இது எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டதும், ஆறுதல் அளிக்கக்கூடிய சிந்தையுமாக இருக்கிறது. அதையொட்டி, தேவனுடைய நற்குணத்தைப் பற்றி கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பை பெற, இவர்களின் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டு, அதனால், அவர்களின் மரணம் ஒரு நித்திரையாக மாற்றப்பட்டு, ஆயிரமாண்டு விடியலில், அனைவரும் எழுப்பப்படுவார்கள். அவர்களின் விருப்பப்படி கீழ்படிதலினால் நித்திய ஜீவனுக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

**R3353 [col. 1 P5]:**

"பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா பரிசுத்தராக இருப்பது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்"

இதுவே சரியான நிலை. நாம் குறைவுப்பட்டாலும், இதைவிட குறைந்த தரநிலை நமக்கு இல்லை. நம்முடைய சொந்த பலவீனங்கள் மற்றும் அபூரணங்களை நாம் உணர்ந்து, அந்த படிநிலையை அடைய நாம் முயலும்போது, நமக்கெதிராக குற்றம் புரியும் சக மனிதர்களிடம் இரக்கம் காண்பிக்க வேண்டும். இதுவே அன்பு, இரக்கம், கனிவாகும். மற்றவர்களின் பலவீனங்களுக்கு இரக்கம் பாராட்டி, அவர்களை மன்னிக்க மகிழ்ச்சியோடு ஆயத்தமாக இருக்கக்கூடிய அன்பின் அளவில் ஒருவர் வளர்ச்சி

அடையாவிட்டால் மற்றும் அவர்களுடைய எதிராளிகளை நேசிக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் முன்னேறாவிட்டால், அவர்களுக்காக ஜெபிக்கக்கூட முடியாமல் போனால், ஆண்டவர் கோரும் குணலட்சனத்தின் இலக்கை அடைவதில் அவர்கள் தோல்வி அடைவார்கள். மேலும், அவர் எல்லாவிதமான திரளான பாவங்களை மூடக்கூடிய, அன்பென்னும் ஒரு முக்கியமான குணலட்சனத்தில் குறைந்திருப்பதினால், அவருடைய சொந்த மீறுதல்கள் (வழி விலகிச் செல்லுதல்) தள்ளுபடி செய்யப்படுவதில்லை. இப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக மணவாட்டி வகுப்பில் இடம் பெறமாட்டார்கள். அன்பின் குணம் மற்றும் கொடுக்கக்கூடிய குணத்தைப் பெற்றிருப்ப வர்களை மட்டுமே அதில் பங்குப் பெறுவார்கள்.

## R3646 [col. 2 last P] and R3647 [col. 1 P4 to end]:

"ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமந்து, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" - என்பது தேவபிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்றாகும். கிறிஸ்துவின் பிரமாணம் என்பது அன்பின் பிரமாணம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். "ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமக்கும்படி" அன்பு கூருகிறது. பெரும்பாலும் ஒவ்வொருவரின் அனுபவத்திலும், சில நேரங்களில் சிக்கல்கள் அதிகரித்து, அவைகளினால் பயந்து, குறுகக்கூடிய ஆத்துமாக்கள், அநேகமாக அதற்குள் மூழ்கடிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வர்களுக்கு கிறிஸ்துவின் உடன் அங்கத்தினரின் அனுதாபமும், ஆலோசனையும் எவ்வளவு இனிமையாக இருக்கிறது. உலக சிந்தை கொண்ட நண்பர்கள் இரக்கம் பாராட்டலாம், ஆனால் அவர்களின் ஆலோசனைகள் நிச்சயமாக தவறாக இருக்கும். ஆகையால் உலகத்தோடு அல்ல, கிறிஸ்துவின் சரீரத்திலே நாம் ஐக்கியப்பட்டிருப்பது அவசியம். கிறிஸ்துவின் சரீரத்தில் பல்வேறு அங்கங்கள், சுதந்தரிக்கப்பட்ட பல்வேறு பலவினங்களுக்கு எதிராக வாழ்நாள் முழுவதிலும் போராட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலும் இந்த பலவீனங்கள் சில சமயங்களில் தாங்களும், மற்றவர்கள் பெற்றிருக்கும் கொண்டிருக்கும் உரிமைகளையும் வசதிகளையும் ஓரளவுக்கு தலையிடக்கூடியதாக இருக்கும். இங்கே தான் அப்போஸ்தலர் அறிவுரையாக ஒரு வார்த்தை கூறுகிறார்."அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்"(ரோமர் 15:1,2) இப்படிப்பட்டவர்களோடு நாம் விவாதம் செய்யவேண்டும் என்றோ மற்றும் அவருடைய குறைகளை போக்க உதவிட முயற்சிக்கக்கூடாது என்றோ இதற்கு பொருள் அல்ல. இதை அன்பு மற்றும் சாந்தத்தின் ஆவியோடு, செய்யவேண்டும். நம்மை பிரியப்படுத்த முயலாமல், நம்முடைய பலவீனமான சகோதர, சகோதரிகளுக்கு உதவியாக நம்முடைய பொறுமையின் பரீட்சையை நாம் பொறுமையோடு சகிக்க வேண்டும். அப்போஸ்தலரின் ஆலோசனையின்படி, "நாம் ஒவ்வொருவரும், அவரவர் சகோதரரின் நன்மைக்காகவும், நல்லொழுக்கப்படுத்துவதற்கும் முயலுவோம்." அதாவது, அவரது தவறுகளை வெறுமனே புறக்கணித்து, அவைகள் அனைத்தும் சரி என்று கருதாமல், உங்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளையும் இன்னும் பொறுமையோடும் தாழ்மையோடும் சகித்து, அவைகளுக்கு எதிராக போராட அன்போடு வலியுறுத்த வேண்டும். இந்த ஆவி நிலவினால், சரீரத்தில் எந்தவிதமான பிரிவுகளும் இராது என்று மேலும் அப்போஸ்தலர் காட்டுகிறார். (1கொரிந்தியர் 12:24-26) ஏனெனில்,உறுப்பினர் அனைவருமே பரஸ்பர கவனிப்பும், ஒருவருக்கொருவர் அன்பையும் கொண்டுள்ளனர். இந்த விதமான கவனிப்பு, எல்லாரையும் நன்மைக்கு ஏதுவாக ஊக்கப்படுத்தவும், பலப்படுத்தவும், தோல்வியுற்ற அனைவரையும் உற்சாகப்படுத்தி, பலவீனமான சகோதரர்களின் குறைகளை மற்றவர்கள் கண்டிப்பதற்கு வெளிப்படுத்தாமல், அவைகளை மறைக்க முயற்சித்து,அன்பென்னும் போர்வையால் அவைகளை மூடுவார்கள். இவ்வாறாக, அன்பினால் பிணைக்கப்பட்ட, உண்மையான கிறிஸ்துவின் சரீரத்தில், அனைவரும் அவரோடு பாடுப்படுவார்கள். அல்லது ஒருவர் மகிமைப்படுத்தப்பட்டால், எல்லாரும் அவரோடுக்கூட சந்தோஷப்படுவார்கள். பூமிக்குரிய குடும்பத்தில் ஒரு உறுப்பினர் கௌரவமான ஒரு நிலைக்கு உயரும்போது, மற்ற அனைத்து உறுப்பினர்களும் அந்த கௌரவத்திலும், மகிழ்ச்சியிலும் பங்கைப் பெறுவதை போல, ஓர் அளவுக்கு அந்த மகிமையிலும் பங்கையும் பெறுவார்கள். இத்தகைய தன்னலமற்ற அன்பிற்கு, மனத்தாழ்மை, மென்மை, பொறுமை, விசுவாசம் ஆகியவை எவ்வளவு அவசியம், ஆண்டவரின் வார்த்தைகள் எவ்வளவு ஆற்றல் வாய்ந்தாக உள்ளது, " நீங்கள்

மனந்திரும்பி (இந்த உலகத்தின் ஆவியிலிருந்து, கிறிஸ்துவின் ஆவிக்கு ) பிள்ளைகளைப் போல் (சாந்தத்திலும், கற்றுக்கொள்ளுதலிலும்) ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 18 : 1-6)

மேலும், "இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றும் கூறுகிறார். ஆகையால், நாம் ஒவ்வொருவரோடும், மனதார ஐக்கியப்படுதற்கு துரிதப்படுவோம். மேலும், "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்." என்று அனைவரும் கவனிக்கும்படியாக நமக்கொரு எச்சரிப்பும் கொடுக்கிறார். அப்படியானால், நாம் எவ்வளவு கவனத்தோடு ஒருவரையொருவர் நோக்க வேண்டும். அன்பார்ந்தவர்களே, நேசிக்கப்பட்டவர்களே, ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமந்து, கிறிஸ்துவின் சரீரத்தில் பிளவுகள் இல்லாமல், கிறிஸ்துவின் பிரமாணத்தை அதாவது அன்பின் பிரமாணத்தை நிறைவேற்றி, அதிகதிகமாக அன்பின் கட்டினால் பிணைக்கப் பட்டிருப்போம். கிறிஸ்துவின் நாமத்தினால் தங்களை அர்ப்பணித்தவர்கள் அனைவரையும், ஆசீர்வதிக்கப்பட்ட இந்த கிறிஸ்துவின் பிரமாணம் முழுமையாக ஆளக்கடவது. மற்றும் சமாதானத்தையும், இசைவையும், மகிழ்ச்சியையும் எவ்வாறு கொண்டு வரும் என்றும் மென்மையான மற்றும் அர்ப்பணிப்புள்ள மனைவிகளையும், சிறந்த, கனிவுள்ள, அன்பான கணவர்களையும், அதிக விசுவாசமுள்ள, அன்பான பிள்ளைகளையும், மிகவும் நல்ல அயலகத்தாரையும் எவ்வாறு உண்டு பண்ணுகிறது என்றும் தற்போதைய அனுபவத்தின், கஷ்டத்தின், தண்ணீரின் மீது எண்ணெய் ஊற்றி, நீதியின் பலன்களின் மகிழ்ச்சிக்காக இருதயத்தை எப்படி ஆயத்தப்படுத்துகிறது என்றும் காண்பிக்கக்கூடிய , அதன் பக்தியுள்ள தாக்கம் இந்த உலகத்தின் மேல் பிரகாசிக்கட்டும்.

## 50.அன்பு "அறுவடையின் பரிட்சைகளில்" ஒன்றாக இருப்பது ஏன்?

**R3437 [col. 2 P2]**:

இந்த "அறுவடையின்" பரிட்சைகள், யூத யுகம் அல்லது நிழலான "அறுவடையை" போல இருக்க வேண்டும். அவைகளில் ஒன்று சிலுவை, மற்றொன்று கிறிஸ்துவின் பிரசன்னம், இன்னுமொன்று பணிவு, வேறொன்று அன்பு. "அவர் வரும் காலத்தை அறியாததினால் " யூதர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். (லூக்கா 19:44) தற்போதைய சத்தியத்தின் ஒளியை ஒரு முறை பார்த்தவர்களுக்கும், பின்னர் உலகத்தின் "புறத்திலுள்ள இருளில்" செல்லுபவர்களுக்கும், இந்த விஷயம் இரட்டிப்பான துன்பமாகும். இது துரோக செயலாகும்"...உன் கண் கெட்ட தாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" - மத்தேயு 6:23

## 51.நம் அன்பு மிகுந்த அளவில் பரி சோதிக்கப் பட்டு, நிரூபிக்கப்படுமா?

உபாகமம் 13:3 "அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிற வைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்"

**R2258 [col. 1 P2]**:

இந்த சிந்தைக்கு இசைவாக, மாம்ச இஸ்ரயேலுக்கு, நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் - "அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3) இது சுவிசேஷ யுகம் முழுவதிலும், உண்மையான இஸ்ரயேலர்களாகிய நமக்கு, தேவனுடைய வழிகளையும், நோக்கத்தையும், பொருளையும் விளக்குகிறது. அவர்கள் அவர் மேல் கொண்ட அன்பின் பலத்தையும், வலிமையையும் உறுதிப்படுத்தும்படிக்கு, அவர் தம் ஜனங்களை சோதித்து, நிரூபிக்கிறார். "என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" என்று அவர் கூறுகிறார். முழுமையாக தங்களை அர்ப்பணித்து, உடன்படிக்கை செய்தவர்கள், அதை கடைப்பிடிக்க தவறிவிட்டு, அதன் தேவைகளுக்கு கீழ்ப்படிய தவறின அனைவரிடமும், தேவனுக்கான அன்பில் உள்ள குறைகள் குறிப்பிடப்படும். மற்றும்

அந்த சுய-சித்தம் இன்னும் அவர்களின் இருதயத்தை ஆளுகைச் செய்து, தேவனுக்கு இரண்டாவதாக ஒரு இடத்தை கொடுக்கிறது. தேவனுடைய கிருபையினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல இருதயத்தை உடையவர்கள் மட்டுமே இராஜ்யம் கொடுக்கப்படும். அவர்கள் தங்களுடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் தேவனை நேசிப்பார்கள். "கர்த்தாவே, என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தம் செய்ய வருகிறேன்" என்று அவர்களால் சொல்ல கூடும். கர்த்தருக்கு முழுமையான கீழ்ப்படிதல் என்ற இந்த சூழ்நிலையைக் காட்டிலும் வேறு எந்த சூழ்நிலையும், நம்மை இராஜ்யத்திற்கு தகுதிப்படுத்தாது. தேவனிடம் முழுமையான அன்பும், கீழ்படிதலும் இருப்பதற்கு இந்த நிலையே அடையாளமாக உள்ளது. "... தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை (பரலோகத்தின் அனைத்து காரியங்களும்) கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;" என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**F369 [P1]**:

நம்முடைய ஆண்டவரோடு நாம் கொண்டுள்ள உடன்படிக்கைக்கு அன்பின் பிரமாணம் அடிப்படையாக இருந்தபோது, அதன் கீழாக நாம் புது சிருஷ்டிகளானோம். இருந்தாலும் முதலாவது, நாம் அந்தப் பிரமாணத்தை முற்றுமாக விளங்கிக்கொள்ளவில்லை. நாம் கிறிஸ்துவின் பள்ளியில் சேர்ந்ததிலிருந்து, அன்பின் உண்மையான அர்த்தத்தை அதன் பூரணத்தில், அதன் முழுமையான தன்மையில் கற்றுக்கொண்டு, கிருபையிலும், அறிவிலும் வளர்ந்து - மென்மை, சாந்தம், பொறுமை, சகோதர இரக்கம் போன்ற பல அன்பின் கூருகள் மற்றும் குணங்கள் நம்முடைய விசுவாசத்தோடு கூட்டப்படுகிறது. நாம் இந்த அன்பின் வழிகளில் சோதிக்கப்படுகிறோம். நம்முடைய பட்டப்படிப்பின் பரிசோதனை குறிப்பாக இருந்த விஷயத்தில் இருக்கும். பரிபூரண அன்பையும், சுயத்தை பலியாக செலுத்தும் அன்பையும் பெற்றவர்கள் மட்டுமே,புது சிருஷ்டியாகவும், கிறிஸ்துவின் சரீரமான சபையின் உறுப்பினராகவும் இருக்கத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படுவார்கள்.

**52.அப்போஸ்தலர் ஏன் அன்பைக் காட்டிலும் பொறுமையுள்ள - சகிப்புத்தன்மையைக் உயர்நிலையில் வைக்கிறார்?**

**R2791[col. 2 P1] through R2792 [col. 1 P1]- நீடிய பொறுமைக்கான தேவை**

இது ஏன் ? என்ற நியாயமான கேள்வி எழுகிறது. அத்தகைய சகிப்புத்தன்மை எந்த அர்த்தத்தில் அவசியம் ? இது இராஜ்யத்தில் பங்காளிகள் என்று அழைப்பதற்கு தேவன் வைத்திருக்கும் நிபந்தனைகளில் ஒன்றாகும் என்று நாம் பதில் அளிக்கிறோம். மற்றும் நாம் அழைக்கப்படுகிற வேலையை நாம் கருத்தில் கொள்ளும்போது, இந்த ஞானம் வெளிப்படுகிறது. - நம்முடைய ஆண்டவரின் கீழ் அவருடைய பங்காளிகளாக, தேவனுடைய ஆயிரவருட ஆட்சியில், பூமியில் உள்ள முழு குடும்பத்தையும் ஆசீர்வதிப்பதற்கான வேலை. இது ஒரு மாபெறும் வேலையாக இருக்கும். தகுதி வாய்ந்தவர்கள் என்று தேவனால் எண்ணப்படுவர்கள், அவருடைய நன்மைகளையும் அவருடைய நல்ல குணங்களையும் புரிந்துக் கொண்டு பாவத்தையும் அக்கிரமத்தை வெறுத்தால் மட்டும் போதாது, இந்த கொள்கைகளுக்கு மகிழ்ச்சியோடு தங்களுடைய விருப்பத்தை தெரிவித்து, நியாயத்திற்கு பொறுமையுடன் சகித்து, அவர்கள் கொண்டுள்ள பூரண விசுவாசத்தை செயலாற்ற வேண்டும். ஒன்று, இரண்டு அல்லது மூன்று நீடிய பொறுமைக்கான தற்காலிகமான சோதனைகள், ஒரு நபரின் நீதியுள்ள குணத்தை நிரூபிக்காது. மரணபரியந்தம் உற்சாகமாக பொறுமையுடன் இருந்தால் மட்டுமே, இத்தகையான குணத்தை செயலாற்றி, நிரூபிக்க முடியும். இதை நாம் வைரத்தை கொண்டு விளக்கலாம். சில பிளாஸ்டிக் பொருட்களிலிருந்து பிரமாதமான வைரங்களை தயாரிக்க முடிந்தாலும், அவைகள் வைரத்தை போல அந்த அளவுக்கு உறுதியாக இல்லா திருந்தால், வைரத்தின் மதிப்பை அவைகள் பெறுமா? எவ்வழியிலும் இயலாது. கிறிஸ்த வர்களுக்கும் அப்படி தான். உறுதியான, நீடிய சகிப்புத்தன்மையை தவிர, தேவனுடைய புத்திரர்களாவதற்கு எல்லா நற்குணங்களும் இருந்தாலும், தேவனுடைய பொக்கிஷமாக எண்ணப்படுவதற்கு தகுதியற்றவராக இருப்பார். எனவே, உறுதி தன்மை, அவருடைய முன்னேற்பாட்டில் அனுமதிக்கப்பட்ட எதையும் சந்தோஷமாக சகிக்கும் தன்மையே தேவனுடைய கோரிக்கையாக உள்ளது. இந்த குணங்களை உடையவர்களே அவருடைய இராஜ்யத்திற்கு

பொருத்தமானவர்கள். கிறிஸ்தவ குணங்களில், இந்த நீடிய சகிப்பு தன்மையின் முக்கியத்துவத்தை அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தையின் பயன்பாடு முழுமையாக வெளிப்படுத்துகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில் அவர் அன்பை காட்டிலும் மேலாக நிலைநாட்டுகிறார். இதுவே நாம் அடைய வேண்டிய அடையாள குறி என்று முன்னதாகவே நாம் பார்த்திருக்கிறோம். எடுத்துக்காட்டாக, தீத்துவுக்கு எழுதும் போது (2-2)மேம்பட்ட கிறிஸ்துவ பண்புகளை கணக்கிடுகையில் அப்போஸ்தலர் பின்வரும் வரிசையில் குறிப்பிடுகிறார் - ஜாக்கிரதை, நல்லொழுக்கம், தெளிந்த புத்தி, விசுவாசம், அன்பு மற்றும் பொறுமை (உற்சாகமுள்ள நீடிய சகிப்பு)."தெரிந்துக்கொள்ளப்பட்ட" ஒரு உறுப்பினராக ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு முன் நாம் மற்ற அனைத்து குணங்களை பெற்றிருந்தாலும், பொறுமை, உற்சாகமான நீடிய சகிப்பு தன்மைக்கான இந்த இறுதி சோதனையை, நாம் கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். மீண்டுமாக தீமோத்தேயுவுக்கு எழுதும் பொழுது, அப்போஸ்தலரைப் பொருத்த வரையில், அவர் அன்பை காட்டிலும் மேலான இடத்தில் நீடிய சாந்தத்தை வைக்கிறார். "நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்" (11தீமோத்தேயு 3:10 ) அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாகவும், நம்முடைய பரம அழைப்பின் பந்தயப் பொருளை அடையும் அடையாளக்குறியாக இருக்கும் போது, இந்த குணம் அன்பை காட்டிலும் எந்த விதத்தில் உயர்ந்தது என்ற கேள்வி எழும்பலாம். இந்த நீடிய பொறுமை நம்முடைய ஓட்டத்தின் முடிவில் நமக்குள் வருவதில்லை, ஆனால் நம்முடைய முழுமையான ஓட்டத்திற்கு இது மிக அவசியமானது என்று நாம் பதில் அளிக்கிறோம். துவக்கத்தில் கிறிஸ்தவ வழியில் வரும் சோதனைகளில் உற்சாகத்துடன் இந்த சகிப்பு தன்மை நமக்கு தேவைப்படுகிறது, மற்றும், நம்முடைய பந்தயத்தின் வேகம் அதிகரிக்கும் போது, நம்முடைய உற்சாகமான சகிப்புத்தன்மை பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் வலுவாகவும், வலிமையோடும் வளர வேண்டும். இது முதல் கால் பங்கு, இரண்டாம் கால் பங்கு, மூன்றாவதும் கால் பங்கு மற்றும் பரிசுக்கான அடையாளகுறியான பரிபூரண அன்பை பெற, இன்னும் நான்காவது கால் பங்கை அடையவேண்டும். பந்தயத்தில், நாம் இந்த நிலையை அதாவது நம்முடைய நண்பர்களை மட்டும் அல்ல, பகைவர்களையும் நேசிக்கக்கூடிய அன்பை அடைந்தபின், நாம் தகுதிப்பெற்றவர்களா என்று ஆண்டவர் இனிமேல் நம்மீது அனுமதிக்கும் சோதனைகளில், அதே நிலையில், விசுவாசத் தோடும், உற்சாகத்தோடும், பொறுமையோடும், நீடிய சகிப்பு தன்மையோடும் நாம் நிற்கவேண்டியது மிக அவசியம். எனவே, எல்லாவற்றையும் செய்த பின், தாங்கி நிற்க வேண்டும். "அந்த அடையாள குறியை அடைந்த பின், நீடிய பொறுமை பூரணமாக கிரியை செய்யட்டும்." என்று அப்போஸ்தலர் நமக்கு அறிவுரை கூறுகிறார். இந்த நீடிய பொறுமையானது - நீங்கள் நல்ல குணமுடையவர்கள் என்றும், பந்தயத்திற்குரிய பரிசாகிய அன்பின் தகுதிகளை பெற்றவர் என்று செயலாற்றுவதோடுமல்லாமல், எதிர்ப்புகளை உற்சாகமாக சகிக்க, எந்த ஒரு மாற்றமும் ஏற்படாமல், அந்த குணத்தின் கூறுகளை ஆழமாக வேரூன்ற வேண்டும். ஆம், ஒரு மோசமான சூழ்நிலையில் நம்முடைய ஆண்டவர் சோதிக்கப்பட்டது போலவே நாமும் சோதிக்கப்படவேண்டும் என்று தேவன் செய்த முன்னேற்பாட்டின் காரணத்தை இப்போது நம்மால் காணமுடிகிறது. நாம் இந்த குணங்களை மட்டும் கொண்டிராமல், அவைகளை நாம் ஆழமாக வேரூன்றி, நிறுவி, ஸ்தாபித்து, தெய்வீக முன்னேற்பாட்டின்படி நமக்கு என்ன தீங்கு விளைவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டாலும், நம்முடைய உற்சாகமுள்ள சகிப்பு தன்மையினால் அதை செயலாற்றி நிரூபிக்க வேண்டும்.

**53.ஆயிர வருட யுகத்தில் அன்பின் பிரமாணம் எவ்வாறு இயங்கும்?**

**R2330 [col. 2 P 3 through end] - ஆயிர வருட யுகத்தில் இராஜரீக பிரமாணம்.**

ஆயிரவருட யுகத்திலும் இதே கொள்கைள் ஒரு குறிப்பட்ட அளவிற்கு பொருந்தும். இந்த புதிய உடன்படிக்கையின் செயல்பாட்டில், இப்போது, இனி வருங்காலத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளில் சிலவற்றை கவனியுங்கள்.

முதலில் இந்த புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளில் அவர்களுக்கு அருளப்பட்ட தேவ கிருபையைப் பற்றிய அறிவைப் பெற அக்காலத்தில் அனைவரும் மத்தியஸ்தரால் அழைக்கப் படுவார்கள். ஆனால் இப்போது, எல்லோரும் அல்ல,"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்"(யோவான்6:44) மட்டுமே அழைக்கப்

படுகிறார்கள். அழைக்கப்பட்டவர்கள் ஞானிகளோ அறிவாளிகளோ ஐஸ்வரியவான்களோ அல்ல.

இரண்டாவதாக, இப்போதை விட, அப்போது புதிய உடன்படிக்கையின் அங்கீகரிப்பில் குறைந்த பட்சமான விசுவாசமும், அதிகமான அறிவும் தேவைப்படும். ஏனெனில்,"சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், இந்த மலையிலே அகற்றிப்போடுவார்" ( ஏசாயா 25:7) தேவன், பூமியின் மேல் மூடப்பட்டிருக்கும் அறியாமையின் மூடலை அகற்றிபோட்டு, குருடான கண்கள் தெளிவற்ற நிலையிலிருந்து பார்வை அடையச் செய்வார். ( ஏசாயா 29:18)

மூன்றாவதாக - இருந்த போதிலும், மத்தியஸ்தரோடு ஒரு நேர்மறையான உடன் படிக்கைக்குள் பிரவேசிக்க, ஒவ்வொருவரும் அன்பு என்ற புதிய உடன்படிக்கையின் பிரமாணத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு, புதிய உடன் படிக்கையின் ஆசீர்வாதமான ஏற்பாடுகளில், பிரயோஜனப்படுத்திக் கொள்வதும் மிக அவசியமாகும். அன்பு என்பது பெரிய போதகரின் குரல் அல்லது பிரமாணமாகும். அவர் அதிகாரத்துடன் எழுந்து நின்று, மனுக்குலம் முழுவதும், "தீர்க்கதரிசியின் சொல் கேளாதோர் (கீழ்ப்படியாதவர்கள்) தம் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள்" என்ற செய்தியைக் கேட்கும்படி செய்வார். மேசியாவின் இராஜ்யத்தின் பிரமாணமாகிய அன்பின் பிரமாணத்திற்கு இணங்காத அனைவரும், இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள்.

நான்காவதாக, மேசியாவின் யுகத்திலும் கூட மனுக்குலத்தை, இந்த பிரமாணத்திற்கு இணங்கும்படிக்கு தேவன் அவர்களை கட்டாயப் படுத்த மாட்டார். "எல்லா முழங்கால்களும் முடங்கும்படிக்கும், எல்லா நாவுகளும் அறிக்கையிடும் படிக்கும்..." என்று எழுதியிருக்கிறபடி, அன்பின் ஆட்சியை ஏற்றுக் கொள்வதற்கும் அதை மதிப்பதற்கும் அவர் கட்டாயப்படுத்துவார். ஏனெனில், துன்மார்க்கர் பயப்படுவார்கள், நீதிமான்கள் செழிப்பார்கள் என்ற நோக்கத்திற்கு ஏற்றபடி, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது, நீதியான ஒழுக்க நெறிகள் அங்கு விதிக்கப்படும். பொன்னான பிரமாணமாகிய இராஜ்யத்தின் சட்டங்கள் ஒவ்வொன்றும் மீறப்படும்போது, விரைவான தண்டனை கொடுக்கப்படும். ஆனால் தேவன் யாருடைய இருதயத்திலும் இந்த அன்பின் பிரமாணத்தை ஆழமாக பதியச் செய்வதில்லை, இக்காலத்தை போலவே, அவர் இந்த வேலையைச் செய்ய தேவன் விட்டுவிடுகிறார். இப்பொழுது போலவே, ஒவ்வொருவரும், அவரது இருதயத்தில் உள்ள சுயநலத்தையும், பாவத்தின் விளைவாக ஏற்படும் அனைத்து தீங்குகளையும் "தள்ளி வைக்க" வேண்டும். இப்பொழுது போலவே, ஒவ்வொருவரும், ".... மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்"(11கொரிந்தியர் 7:1) ஏனெனில், தேவன் ஒருவரையும் கீழ்ப்படிதலுக்கு கட்டாயப்படுத்தும் படிக்கு முயற்சிப்பதில்லை. "அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்."இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பிரமாணத்தை முழு இருதயத்தோடு நேசித்து, குறிப்பாக தங்களுக்குள்ளிருக்கும் சுயநலத்திற்கும், பாவத்திற்கும் எதிராக போர் புரிவார்கள். எனவே, ஆயிர வருட காலத்திற்குள், இந்த உலகத்திற்கு இரண்டு மடங்கான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முழு வாய்ப்பையும் வழங்கிய பின்னர் - இப்போது, பாவம் மற்றும் சுயநலம் மற்றும் அவர்களின் தவறான ஆட்சி மற்றும் தீய முடிவுகள் - அதற்கு பின்னர் நீதியும் அன்பும், மற்றும் அவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட ஆட்சியின் சமாதானமும் மகிழ்ச்சியும் - அவர்களுடைய இருதயங்களில் அன்பின் ஆவியை வளர்ப்பதற்கான முழு வாய்ப்பு அனைவருக்கும் கொடுக்கப்பட்ட பின்னர், தேவனுக்காக இருதயத்தில் விசுவாசமும் உண்மையும் உள்ளவர்கள் யார் என்றும், சூழ்நிலைக்கு ஏற்றவாறு கீழ்படிந்தவர்கள் யார் என்பதையும் செயலாற்றி நிரூபிப்பதற்கு, ஆயிரவருட யுகத்தின் முடிவில் ஒரு சோதனை வைக்கப்படும். இந்த சோதனை, நாம் எண்ணுகிறபடி, அவர்கள் திறந்த மற்றும் வெளிப்படையான தவறுகளைச் செய்வார்களா, இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு அல்ல மாறாக, தந்தையாகிய ஆதாம் அவருடைய பரிபூரணத்தில் சோதிக்கப்பட்டதை போலிருக்கும். இது கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சோதனையாகவும், இருதயம் முழுவதையும் அன்பு ஆக்கிரமித்து, ஆட்சி செய்ய அனுமதிக்கப்பட்டதா என்றும் இதன் விளைவாக தேவனிடத்தில் விசுவாசமும், ஆண்டவரை நம்பி அவருடைய வழியின் கண்டிப்பாக பின்பற்றக் கூடிய நீதியின் ஒவ்வொரு கொள்கையும்

சோதிக்கப்படும். இதன் விளைவாக, உலகில் உள்ளவர்களில் அன்பின் ஆவி வளர்ச்சி அடையாதவர்கள், நித்திய ஜீவனுக்கு தகுதியற்றவர்களாக அல்லது ஆயிரவருட யுகத்திற்கு பின் உள்ள சிறப்பான நிபந்தனைகளுக்கு உட்படாதவர்கள் என்பதால் அவர்கள் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். மேலும் தேவன் நமக்கு வாக்களித்தபடி, இனி மரணமும் இராது, அழுகையும் இராது, துக்கமும் இராது, வருத்தமும் இராது, ஏனெனில், முந்தைய காரியங்கள் அனைத்தும் கடந்து போய்விடும் - பாவத்தின் அனைத்து காரியங்களும், மற்றும் பாவத்தை நேசித்து அல்லது அதற்கு இரக்கம் காட்டும் அனைவரும். - (வெளி 21:4) அவர்களின் ஆயத்தமாக இருந்ததினாலுமல்ல, பூரணமாக ஓடினதினாலும் அல்ல, கிறிஸ்துவின் வழியாக, ஓடுவதை நாடினாலன்றி இந்த பந்தயத்தில் வெற்றி கிடைக்காது. இவ்வாறாக இரக்கம் நீதிக்கு எதிராக மகிழும், ஆயினும், இரக்கம் காட்டாதவர், அன்பில் குறைவுள்ளவர்கள், இரக்கம் பெறமாட்டார்கள். அன்பில் நிலைத்திருப்பவர் தேவனில் நிலைத்திருக்கிறான். அத்தகையவர்களுள் தெய்வீக இரக்கமும் கிருபையுமுள்ள அனைத்து செல்வங்களும் உள்ளது.

**R2607 [col. 2 P2, 3]**:

ஆயிர வருடத்தில் முழு மனுக்குலமும் ஒரே நேரத்தில் எழுப்பப்படாமல் படிப்படியாக எழும்புவார்கள். ஒவ்வொரு புதிய குழுவினரும், முந்தி இருந்தவர்களை தங்களுக்கு உதவியாளர்களாக கண்டுபிடிப்பார்கள். அப்போது எந்த மனுஷர் அன்பையும், இரக்கத்தையும் ஒருவருக்கொருவர் (கிறிஸ்துவின் சகோதரர்கள்) காண்பிக்கிறார்களோ, அவைகளை தனக்கே செய்ததாக இராஜா எண்ணிக்கொள்வார். நீதிமான்களுக்கு வழங்கப்படும் மரியாதை மற்றும் இரக்கங்களும் எந்த பெரிய செயலின் அடிப்படையிலும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் வெறுமனே, தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு இசைவாக வந்து, அதை தங்களுடைய கிரியைகளினால் நிரூபிப்பார்கள். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாக இருக்கிறது."(ரோமர் 13:10) ஆகவே, மனுஷன் தேவனுடைய சாயலுக்கு மீண்டும் திரும்பும் போது - "மிக நன்று" - மனுஷனும் வாழும் அன்பின் வெளிப்பாடாக இருப்பார். "உலகம் உண்டாவதற்கு முன்னதாக உங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்து கொள்ளுங்கள்" இது தெய்வீக பிரமாணம் மற்றும் உச்ச உயர்நிலையின்றி அமைக்கப்படும் சுயாதீனமான ஆட்சியை குறிக்கவில்லை. தேவன் மனிதனுக்கு முதலில் பூமியின் ஆட்சியினைக் கொடுத்திருந்தாலும், அவரிடத்தில் திரும்ப வருவதற்கு வடிவமைத்திருந்தாலும், அவர் மிகுந்த நம்பிக்கையுடன் அவரைத் தயார்படுத்தியபோது, அதை மனுஷன் ஆள வேண்டும் என்ற நோக்கத்தை தேவன் கொண்டிருப்பதாக நாம் எண்ணிவிடக் கூடாது. இல்லையெனில், அவரது உயர்ந்த பிரமாணத்திற்கு இணங்க வேண்டும். "உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்பட வேண்டும்", என்பதே அரசாங்கத்தின் நித்தியமான கொள்கையாக இருக்க வேண்டும். மனுஷன் அது முதற்கொண்டு பரலோக பிரமாணத்திற்கு இசைவாக தன்னுடைய ஆளுமையை அமைத்துக் கொள்வார்."ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு." (சங்கீதம் 16:11) ஓ,"பெருமையின் யுகங்களே, நங்கள் விரைந்து ஓடுங்கள்" என்றும் ஆசீர்வாதத்தின் முழு மலர்ச்சியை கொண்டு வந்த, அன்பார்ந்த திட்டங்களை உடையவருக்கு கனமும் மகிமையையும் கொடுங்கள் என்றும் யார் சொல்லாதிருக்க முடியும் ?

### 54.தெய்வீக குடும்பத்தின் ஒருமைப்பாடு என்ன?

**F467 [P3] through F469**:

அவர்கள் கிருபையிலும், அறிவிலும், வைராக்கியத்திலும் வளரும்போது "எல்லாவற்றையும் குப்பையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன்.", "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" என்றும் அவர் கூறுகிறார். (பிலிப்பியர் 3:11, ரோமர் 8:18) என்று அப்போஸ்தலர் பூலோக நன்மைகள் மற்றும் சிலாக்கியங்களை குறித்து பேசின, அவருடைய கண்ணோட்டத்தில், ஒவ்வொரு விஷயத்தையும் சீர் தூக்கி, நியாயந்தீர்க்க முடியும். பரஸ்பர அன்பு, இரக்கம் மற்றும் ஆர்வத்தை பொருத்தவரையில், மற்றொரு கருத்து என்னவெனில், ஆண்டவரின் ஒரே சரீரத்தில்

அங்கங்களாக இருக்கிற அனைவரிடமும் இவைகள் மேலோங்க வேண்டும் என்பதே. ஆண்டவருடைய ஆவி அதிகதிகமாக நம் இருதயங்களை ஆளும்படி வரும்போது, நமக்கு சமயம் கிடைக்கும் போதெல்லாம் எல்லாருக்கும், விசேஷமாக விசுவாச மார்க்கத்தாருக்கு நன்மை செய்வதில் அது நம்மை களிக்கூரும்படி செய்யும்.

நம்முடைய இரக்கங்கள் வளர்ச்சியுற்று உலகத்திலுள்ள மனுக்குலம் முழுவதற்கும் செல்லும்போது, அவர்கள் விசேஷமாக ஆண்டவரில் வளரவேண்டும், மாத்திரமல்ல அவருடைய ஆவி உள்ளவர்கள் என்று அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், அவருடைய அடிச்சுவட்டில் நடக்க நாடுபவர்களுக்கு நேராக வளர வேண்டும். நாம் ஆண்டவர் மேல் வைத்திருக்கிற அன்பின் அளவு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக நம்மோடு உள்ள சகோதரரிடத்தில் நாம் காட்டும் அன்பைப் பொறுத்து இருக்கும் என அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார்.

மற்றவர்களுக்காக நாம் எல்லாவற்றையும் சகிக்கிற, தாங்கிக் கொள்கிற அளவுக்கு நம்முடைய அன்பு இருக்குமென்றால், நம்முடைய தலையாக இருக்கிறவர் முலமாக நம்மோடு மிக நெருக்கமாக ஐக்கியம் கொண்டிருக்கிற அதே சரீரத்தின் இந்த உடன் அங்கங்களைப் பொருத்த வரையில் இது எவ்வளவு பெரிய உண்மையாக காணப்படும், நாம் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் வந்து விட்டோம் என்பதற்கு முக்கியமான அடையாளங்களில் ஒன்று நம்முடைய சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறோம் என்பதுதான் என்று அப்போஸ்தலர் யோவான் கூறுவது வியப்பிற்குரியதல்ல. (யோவான் 3:14) கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நாம் நிறைவேற்றுவதைக் குறித்து அப் பவுல் பேசும்பொழுது, "சரீரமான சபைக்காக நிறைவேற்றுகிறேன்" என்று கூறுவதை நாம் நினைவு கூறுகிறோம். (கொலோசேயர் 1:24) " நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளி களாயிருக்கிறோம்." (1யோவான் 3:16) என்ற வசனத்திலும் இதே கருத்துதான் மறுபடியும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட சகோதரத்துவம் இவ்வாறு சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது பாருங்கள், அவர்களுக்காக ஜீவனையே கொடுக்கக் கூடிய ஒரு சகோதர அன்பை வேறு எங்குதான் நாம் காணமுடியும் ? "ஆண்டவரின் வெள்ளாடுகள்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிற சபையின் பலியை பாவநிவாரண நாளின் பலிகளின் ஒரு பகுதியாக ஈடுபடுத்துவதில் ஆண்டவர் எப்படி சந்தோஷ்பபடுவார் என்று நாம் இப்பொழுது பார்க்கபோவதில்லை. நம்மைப் பெறுத்த வரையில், ஜீவனைக் கொடுக்கும் பலியானது, சகோதரர்களுக்கு செய்கிற ஊழியத்தில் முக்கியமாக செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலருடன் இணைந்து, நாமும் கவனத்தில் கொள்ளுகிறோம். உலகத்திற்காக செய்கிற ஊழியம் முக்கியமாக வர இருக்கின்ற யுகமான ஆயிரம் வருட யுகத்திற்கு உரியதாகும். தற்போதுள்ள சூழ்நிலையில் நம்முடைய நேரம், தாலந்துகள், செல்வாக்குகள், வசதிகள் எல்லாம் ஏறத்தாழ மற்றவர்களிடத்தில் (மனைவி, அல்லது பிள்ளைகள், அல்லது வயதான பெற்றோர் அல்லது நம்மை சார்ந்து வாழ்பவர்கள்) அடகு வைக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் நாமாகவே, மனுஷருடைய பார்வையில் நேர்மை யானவைகள், தேவையானவைகள், நல்ல வைகளாக காண்பபடுகிற தேவையான காரியங்களை செய்ய நாம் கடமைப்பட்டு இருக்கிறோம். இப்படியிருக்க, பலிக்கென குறைந்த அளவே நம் பட்சத்தில் மிஞ்சியிருப்பதைக் காண்கிறோம், சகோதரருக் கென கொடுப்பதற்கு குறைந்த அளவே நம்மிடத்தில் மிஞ்சியிருப்பதைக் காண்கிறோம். இந்த குறைவானதையும் உலகமும், மாம்சமும், பிசாசும் நம்மிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளவும், நாம் அர்ப்பணித்திருக்கிற பலியிலிருந்து திசை திருப்பவும் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. இந்த பொல்லாத காலத்தில், ஆண்டவர் சபையைத் தேர்ந்தெடுப்பது, இந்த சூழ்நிலையில் ஒருவர் மேல் மற்றவர் வைத்திருக்கிற அன்பு, ஆண்டவர் மேல் வைத்திருக்கிற அன்பு விசுவாசம் ஆகியவையின் அளவைப் பொறுத்துதான் இருக்கும். நம்முடைய அன்பு குளிராயிருந்தால், உலகம், மாமிசம், சத்துரு நம்மிடத்தில் அதிகமாக உரிமை கொண்டாடுவார்கள், நம்முடைய நேரத்தை, நம்முடைய செல்வாக்கை, நம்முடைய பணத்தை, சத்துரு கவர முயற்சிப்பான். இன்னொரு பக்கம், ஆண்டவர் மேல் உள்ள அன்பு, அனலாயும், வலிமையுள்ளதாயும் இருக்கும் அளவின்படியே இவைகளை அவருக்கு அர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைவோம், சகோதரருக்கென செய்கின்ற ஊழியத்தில் நமக்கு சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம், நம்மிடத்தில்

தேவைக்கு மேலாக உள்ள சத்துவத்தையும், செல்வாக்கையும் வசதியையும் அவருக்கென்று கொடுப்போம், இதற்கும் மேலாக வீட்டின் குடும்பத்தின், முக்கியமாக தனது சொந்த பொருளாதார தேவைகளைக் கூடுமான வரை கட்டுப்படுத்தி ஆண்டவருடைய பலிபீடத்தில் செலுத்தும்படியாக, அதிகமாக கொடுக்க, ஆண்டவரின் மேல் வைத்திருக்கிற இந்த பக்தியின் ஆவி நம்மை உந்தித்தள்ளும். நம்முடைய ஆண்டவர் மூன்றரை வருடங்களாக அவருடைய சரீரத்தைப் பிட்கக் கொடுத்தார், மூன்றரை வருடங்களாக அவருடைய இரத்தத்தை, ஜீவனைக் கொடுத்தார், ஆனாலும் இந்த பலிகள் கல்வாரியில் தான் முற்றுப் பெற்றன, இப்படியேதான் நமக்கும் இருக்கிறது. உலகப் பிரகாரமான அல்லது ஆவிக்குரிய விஷயங்களில், சகோதரருக்கென நம்முடைய ஜீவனைக் கொடுப்பது சிறு ஊழியங்களில் உள்ளது, ஆனாலும் ஆவிக்குரிய விஷயங்களில் அது பெரிய காரியமாகும். ஆகிலும் உலகப்பிரகாரமான தேவையுடன் உள்ள ஒரு சகோதரனுக்கு இரக்கம் காட்டாவிட்டால், அது ஆண்டவருடைய ஆவி அவனுடைய இருதயத்தில் சரியான அளவுக்கு ஆட்சி செய்யவில்லை என்று பொருள்படும்.

**R3160 -"தெய்வீக குடும்பத்தின் ஒற்றுமை".**

**R3553 [col. 1 P3 to end]—"இவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும்:**

இந்த உலகத்திற்கு பரவலாக இருக்கும் அறங்காவல் குழு (trusts) மற்றும் அதற்கு இணையான காரிங்கள் எல்லாவற்றையும் ஊடுருவி வருகிறது. இதன் விளைவாக சபைகளின் இணைப்பு, அமைப்புகளின் இணைப்பு மற்றும் பொதுவாக பெரிய மத அறங்காவல்களின் உருவாக்குவதில் விரைவாக விரைந்து செல்கிறது. இவைகளின் வளர்ச்சி, மெய்யான அர்ப்பணித்த தேவனுடைய ஜனங்களில் சுயாதீனத்துக்கு தீவிரமான அச்சுறுத்தாக இருக்கும், ஆனால் அவர்களின் ஆவிக்குரிய நலன்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. மாறாக, அது தேவனுடைய சிறு மந்தைக்கு ஒரு ஆசீர்வாதமாக நிரூபிக்கும். எப்படியெனில், வேதாகமத்தின் போதனைகளை அவர்களுக்கு உறுதிப்படுத்தி, பெயரளவிலான அமைப்புகளிலிருந்து முழுமையாக அவற்றை பிரிக்கவும், களைகளை கட்டுகளாக கட்டி, மேலும், இது வேதவாக்கியங்களை உறுதிப்படுத்தி, மகா பாபிலோன் சரிவுக்கு முந்திய யுகத்தின் இறுதியில் இருக்கும் இந்த நிலைமைகளை தெளிவாக விவரிக்கிறது. (வெளிப்படுத்தல் 18:21) "இவர்கள் அனைவரும் ஒன்றாயிருக்கவும்" என்ற நம்முடைய ஆண்டவரின் ஜெபம், இந்த யுகம் முழுவதிலும் நிறைவேறியது. உண்மையிலேயே பிதாவோடும், குமாரனோடும், இருதயத்தில், நோக்கத்தில், ஆவியில் உண்மையில் ஒருமைப்பட்ட அனைவருக்கும் - இந்த பூமியின் எந்த நம்பிக்கைகளும் கொடுக்கக்கூடாத தெய்வீக ஐக்கியத்தை கொடுக்கிறது. எனவே உண்மையான தேவ ஜனங்களுக்கு இன்றும், என்றும் இந்த ஐக்கியம் உண்டு. அவர்கள் ஒருவருக் கொருவர் வெளிப்புற சொற்கள் அல்லது பிடிப்பு அல்லது அறிகுறிகளால் அறிந்துக்கொள்ளாமல், விசுவாசம் மற்றும் அன்பினால் அறிந்துக்கொண்டு, அங்கீகரிக்கப்படுகிறார்கள். "நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துக் கொள்வார்கள் என்றார்." நாம் சகோதரரை நேசிப்பதினால், மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து வந்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம்." உண்மையில், நாம் அனைவரையும் நேசிக்கிறோம், வாய்ப்புகள் கிடைக்கும் போது அனைவருக்கும் நன்மை செய்ய விரும்புகிறோம், ஆனால் "விசேஷமாக, விசுவாச வீட்டாருக்கு" என்று அப்போஸ்தலர் விவரிக்கிறபடி, குறிப்பாக, தேவனை நேசிப்பவர்களும், விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேல் நம்பிக்கையுள்ளவர்களும், அவரிடத்தில் முழுமையாக அர்ப்பணித்தவர்களும், முடிந்தவரை அவருடைய சித்தம் செய்து நாள்தோறும், மேலும் அவருடைய சித்தத்தை அறிந்துக்கொள்ள முயலுகிறவர்களாகவும் இருப்பார்கள். தேவ ஜனங்களுக்கு இடையிலான இந்த ஐக்கியம், வெளிப்படையான நபர்களின் ஐக்கியம் அல்ல. ஆண்டவரை பின்பற்றுபவர்கள் ஒரே நபராக அல்ல, ஆவியில் ஒன்றாயிருக்கிறார்கள். தனக்கும் பிதாவுக்கும் இடையே உள்ள ஒருமைப்பாட்டிற்கு, ஆண்டவர் கொடுக்கும் ஒரு விளக்கம் இதுவே - இவர்கள் ஒரு நபராக அல்ல, ஆவியிலும், நோக்கத்திலும், சித்தத்திலும் ஒன்றாயிருக் கிறார்கள். ஏனெனில், நம்முடைய ஆண்டவர் எப்போதும் பிதாவின் சித்தத்தையும், அவருடைய பார்வையில் பிரியமாக இருப்பதை மட்டுமே செய்வதாக அவர் அறிவிக்கிறார். இவ்வாறு நாம் அவருடைய அன்பிலும், அவருடைய சித்தம், அதுவே பிதாவின் சித்தத்தைச் செய்வதன் மூலம் அவரிலும் நாம் நிலைத்திருக்கிறோம். இப்படியாக, பிதா, குமாரன், மணவாட்டியாகிய சபை அனைவரும் சத்தியத்திலும் ஆவியிலும் ஒன்றாயிருக்கிறார்கள்.

நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் - (வசனம் 24) " பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" பிதாவே,என்னுடைய சீஷர்களை பொருத்த வரையில், உமது விருப்பத்தை நான் அறிந்திருக்கிறேன் மற்றும் நீர் எனக்காக செய்திட்ட இந்த மிக பெரிய , தாராளமான ஏற்பாட்டிற்காக நானும் ஏற்றுக்கொள்கிறேன், இறுதியாக, என்னுடைய சீஷர்களும், என்னுடன் ஒரே விதமான மகிமையில் பங்குப் பெறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உலக தோற்றத்திற்கு முன், என் சீஷர்களுக்கு ஏற்பாடு செய்யப்படுவதற்கும் முன் ...நீர் என்னிடத்தில் அன்பு கூர்ந்து, பாராட்டிய மகிமைகளை அவர்கள் கண்டு, பகிர்ந்துக் கொண்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள் - என்று நம்முடைய ஆண்டவர் சொல்லுவதை போலிருப்பதினால், இது ஒரு வேண்டுகோள் அல்ல, ஆனால் இது தேவனுடைய சித்தத்தின் அறிவிப்பாகும். ஜெபத்தின் முடிவு வார்த்தைகள் மிக அழகாக இருக்கிறது, மேலும் இது அவருடைய பிதாவிலும் அவருடைய ஐக்கியத்திலும், அவர் பெற்றிருந்த நம்பிக்கையின் உட்பார்வையை நமக்கு அளிக்கிறது. அவர் பிதாவை அறிந்திருந்தார். நம்மை பொருத்தவரையில், "ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிவதே நித்திய ஜீவன்" என்பதே பிதா நம்மை ஏற்றுகொள்வதற்கும், நித்திய ஜீவனில் நாம் பங்கு பெறுவதற்குமான உயர்ந்த சான்றாகும்."நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன், நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்." என்று நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார். "உம்முடைய நாமத்தையும், குணாதிசயத்தையும், மேன்மையையும், நன்மையையும், அன்பையும், விருப்பங்களையும் நான் அவர்களுக்கு வெளிப்படுத்தினேன். மற்றும் சத்தியத்தின் அறிவில் அவர்கள் வளரும்போது, நீர் என்னிடத்தில் வைத்த அன்பு, அவர்களிடத்தில் நிலைத்திருக்கும் போது அவர்கள் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு இன்னமும் உம்முடைய நாமத்தை அவர்களுக்கு தெரியப்படுத்துவேன். தேவனுடைய இந்த அன்பும்,கிறிஸ்துவின் இந்த அன்பும் எவ்வளவு அற்புதமானது, அதனுடைய ஆழமும், அகலமும், உயரமும், நீளமும் அளவிடுவது எவ்வளவு சாத்தியமில்லாதது. ஆண்டவரை தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொண்டு, அவருடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள், தங்களுக்குரிய சிறிதானாலும், எல்லாவற்றையும் அவரிடத்தில் கொடுத்து, அவருடைய முன்னேற்பாடான ஆசீர்வாதங்களில் பங்கேற்றபின், பலவீனத்தினாலோ, எதிர்ப்பின் காரணத்தினாலோ, அல்லது செய்யக்கூடாததால், வீழ்ச்சி அடைந்தால் பிதா நம்மேல் கொண்ட மிகுந்த அன்பையும், அதில் குமாரனுடைய பங்கையும், நாம் பாவிகளாயிருந்தும், நம்மை மீட்கும் படிக்கு அவருடைய அன்பிற்கு மேலாக, நம்முடைய ஆண்டவர் கிறிஸ்துவோடு, பாடுப்பட்டால் அவருடைய உடன்பங்காளிகளாக நம்மை மாற்றுவதற்கும், இப்படிப்பட்ட அற்புதமான ஆசீர்வாதங்களுக்கும், சலுகைகளுக்கும் அவர் நம்மை அழைத்த அவருடைய அன்பு சிறிதளவும் மாறாமல், நம்மை மரணத்திற்குள் தள்ளிவிடாமல், சிட்சித்து வழிநடத்தும். இயேசுவை தொடர்ந்து விசுவாசிக்கிறவர்களையும் அவருடைய வார்த்தைகளை தொடர்ந்து பற்றிக் கொள்ளும் அனைவரையும், இந்த அன்பு இறுதியில் சிறு மந்தையாகவோ, திரள் கூட்டமாகவோ மீட்டுக்கொள்ளும். ஆனால், எந்த அளவுக்கு தேவனுடைய இந்த உண்மையான அன்பு நமக்குள் செழிப்பாக இருக்கிறதோ, எந்த அளவுக்கு கிறிஸ்து நம் இருதயத்தில் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறாரோ, அதற்கு பதிலான அன்பை பெறுவோம். அது நம்முடைய பிதாவின் பார்வையில் பிரியமான காரியங்களைச் செய்வதற்கும், ஆண்டவரின் அங்கீகரிப்பிலும் மகிழ்ச்சி அடையும். மேலும் ஆண்டவருக்கும் நம்முடைய ஆத்துமாக்களுக்கும் இடையில் மேகத்தை கொண்டவரும் எதையும் அந்த அளவுக்கு நாம் தடைச்செய்வோம். அப்படியானால், தெய்வீக அன்பின் ஆழங்களையும், உயரங்களையும், அகலங்களையும் நீளங்களையும் பற்றி நாம் அறிந்திருப்பதினால், புதிய தைரியத்தை நாம் பெறவேண்டும் மேலும், தேவனுடைய இந்த அன்பு நம்மை மிகுந்த பக்தி வைராக்கியத்திற்கும் அவருடைய நோக்கத்திற்கும் நம்மை கட்டுப்படுத்தட்டும்.

### 55.அன்பாகவே இருப்பவர் மனுஷனுக்காக அவரது அன்பின் மிக பெரிய வெளிப்பாடாக எதை காண்பித்தார்?

1யோவான் 4:9" தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன்

அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது"

யோவான் 3:16" தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"

**R2713 [col. 2 P3]**:

இந்த செய்தியைப் பொருத்தவரை, தீர்க்கதரிசியின் சாட்சியத்திற்கு திரும்பும் போது, கர்த்தருடைய மகத்துவத்தையும் மகிமையையும் வெளிப்படுத்தும் போது, சங்கீதம் 145,7ம் வசனத்தில், முக்கிய அம்சத்திற்கான அருமையான சாட்சியம் மற்றும் தெய்வீக தன்மை மற்றும் அவருடைய மிக பெரிய திட்டத்தின் வெளிப்பாட்டைக் காண்கிறோம். "அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப்பாடுவார்கள்."தேவன் நமக்கு தந்திருக்கும் எந்த விதமான மிகுந்த தயவை நினைக்கும் படி கூறுகிறார் ? அவருடைய மகத்தான, அற்புதமான கிரியைகளில் எதை நாம் தெய்வீக இரக்கமாக நினைவில் கொள்வது ? "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது"(1யோவான் 4:9) என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறபடி, நம்முடைய மீட்பின் விலையாக, தேவனுடைய அன்பான குமாரனையே பரிசாக தந்ததைத் தவிர வேறு எந்த மகத்தான செயலும், நினைத்து பார்ப்பதற்கு இல்லை என்று நாம் பதில் அளிக்கலாம். ஆனால் ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்கு விதிக்கப்பட்ட மரண தீர்ப்பு, தேவனுடைய மிகுந்த தயவினால் கொடுக்கப்பட்ட மிகச் சிறந்த நீதி, என்பதை வெகு சிலரே உணர்ந்துக் கொள்கிறார்கள். ஆதாமின் பாவத்திற்கு முழு ஈடாக கிறிஸ்துவின் மரணம், முழுமையாக ஈடுபலியை அதாவது, அவருடைய மற்றும் அவருடைய சந்ததியின் தண்டனைக்கான முழு பரிகாரத்தையும் செலுத்தியது என்ற தேவனுடைய ஏராளமான நற்குணத்தின் சிறப்பான வெளிப்பாட்டை, மிக சிலரே பாராட்டலாம்.

**R3321 [col. 1 P5]**:

தேவனுடைய நன்மை கொடூரத்தன்மையில் காணப்படாமல், முற்றிலுமாக பிரிக்கப்பட்டு, அதோடே பக்கம் பக்கமாக நிற்கிறது. தேவனுடைய நற்குணம், தாராள குணம், இரக்கம், தயவு, அன்பு இவையணைத்தும் அவருடைய தீர்ப்பில் காணப்படுவதில்லை. ஆனால், அவரது தண்டனையை நிறைவேற்றுவதில், அவருடைய அன்பின் மிகப்பெரிய பரிசாகிய அவருடைய அன்பு - ஆண்டவராம் இயேசு மற்றும் அவருக்குள் கொடுக்கப்பட்ட மீட்பில், வெளிப்படுத்தப்படுகிறது வீழ்ச்சியோடும், தண்டனைத் தீர்ப்போடும் இணைந்திருக்கும் மீட்பு."தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது"(1யோவான் 4:9) என்று இக்காரியத்தை அப்போஸ்தலர் தம்முடைய வார்த்தைகளில் குறிப்பிடுகிறார். விழுந்துபோன மற்றும் கறைபடிந்த மனுக்குலத்தின் மேல் தேவன் அன்பான உணர்வுகளை வைத்திருக்கிறார் என்றும், இது காலப்போக்கில் பூமியின் அனைத்து குடும்பங்களுக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் என்றும் ஆபிரகாமுக்கும் அதற்கு பின்னர் தீர்க்கதரிசிகளின் வழியாக ஒரு குறிப்பு வழங்கப்பட்டாலும், தேவனுடைய அன்பு முன்னர் வெளிப்படுத்தப் படவில்லை, நான்காயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுகள் தீவிர தன்மை காணப்பட்டது, தெய்வீக குணாதிசயத்தின் நீதி வெளிப்பட்டது.

**E451 [P1] through E452 [P1]**:

மனிதன் தெய்வீக விதிமுறைக்கு எதிராகச் செயல்பட்ட உடனேயே, தேவநீதி முன்சென்று அவன் கலகக்காரன் என்று தீர்ப்பிட்டு, மரணத் தீர்ப்பினை அவனுக்கு வழங்கியது. அவனுக்கு உயிர் வாழத் தேவையான அனைத்து அத்தியாவசியத் தேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏதேன் தோட்டத்திலிருந்த அவனை வெளியே துரத்தி சாத்தானிடம் ஒப்படைத்தது. கட்டளையை மீறியதன் சாபத்தினால், தீமை அவனை ஆட்கொள்ளவே, மனிதன் செத்துக் கொண்டே சாகிற நிலைக்குத் தள்ளப்பட்டான். தெய்வீக சுபாவத்தின்படியான நீதி இவ்வாறு மனிதனிடம் செயலாற்றுகையில் தெய்வீக அன்பானது எவ்விதத்திலும் மாறாதிருந்தாலும், அது இரு காரணங்களுக்காக வலிமை குன்றிக் காணப்படுகிறது. முதலாவது தேவ அன்பானது தேவநீதிக்கெதிராக செயல்பட முடியாது. விழுகையினால் ஏற்பட்ட தீர்ப்பை நிறைவேற்றும் பலவிதமான படிகளில் அன்பு குறுக்கிட முடியாது. நீதியின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கிற மனிதனை மீட்டுக் கொள்ள தெய்வீக அன்பினால் முடியாது. ஏனெனில் நீதியே தேவ சிங்காசனத்தின் ஆதாரம்.

இரண்டாவதாக அந்த சமயத்தில் குறுக்கிட்டு பாவத்திற்காக ஈடுபலி கொடுத்து தேவ அன்பானது மனிதனை விடுவிக்க முடியாது. ஏனெனில் அவ்வாறு இடையில் அன்பு குறுக்கீடு செய்யுமானால் அது முன்னரே திட்டமிட்டு நிறைவேற்றி வருகிற தேவ ஞானத்திற்கு எதிராகிவிடும். இவ்வாறு தெய்வீக அன்பும் வல்லமையும் மனுக்குலத்தை மீட்க வழியின்றி ஒருசில காலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் நேரிட்டிருக்கிறது. ஆனால் தேவஞானம் அனுமதித்ததினால், தேவநீதி செயல்படுத்தப்பட அனுமதிக்க வேண்டியிருந்தது.

இதனிமித்தம் கடந்த ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலம் தவிப்பும், வேதனையும், சஞ்சலமும் மரணமும் நிறைந்த வாழ்வை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நீதிக்கு இசைவாக அன்பு செயல்பட்டு மனிதனை விடுவிக்க முடியாமல் ள்ளது. மாறாக, தெய்வீக அன்பு, தேவனால் உரைக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் மற்றும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நடைபெற்ற நிழலான பலி முறைமைகளைக் கொண்ட அறிவுரை கூறியும் தேவ ஞானத்தினால் முன் குறிக்கப்பட்ட காலத்தில் மனுக்குலம் விடுதலை பெற்று அன்பு பூரணப்பட்டிருக்கும் என உற்சாகப்படுத்தி தற்போது தேற்றி வருகிறது. இவ்வாறாக அன்பானது கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும் காலத்தை எதிர்நோக்கி பொறுமையோடு காத்திருக்கிறது. அந்நாளில், தேவஞானத்தின் வழிநடத்துதலின் மூலம் தெய்வீக வல்லமையின் உதவியுடன் அன்பு செயல்படும்.

வேதாகமம் உரைக்கிறபடி காலம் நிறைவேறினபோது (கலாத்தியர் 4:5) அன்பு தன் உச்சக்கட்ட வெளிப்பாட்டைக் காட்டியதினால், ஏற்ற காலத்தில் (ரோமர் 5:6) தேவன் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். மனிதனாக வந்த இயேசுவும் தேவ கிருபையினால் "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்"(1தீமோத்தேயு 2:5, எபிரெயர் 2:9) தேவ அன்பு இவ்வுலகில் இருந்து வந்த போதிலும் அதுவரை தெய்வீக அன்பின் முழு பரிமாணம் இன்னதென்று மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்படவில்லை. நாம் வேதத்தில் காண்கிறதாவது -

"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படி.... அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" " நாம் பாவிகளாயிருக்கும் போதே கிறிஸ்து நமக்காக மரித்தார்..."(யோவான் 4:9, ரோமர் 5:8)

இவ்வாறாக வெளிப்பட்ட தேவ அன்பானது, தேவனுடைய பிரமாணத்திற்கு இசைவாக அதன் தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தது. அது ஒருபோதும் தெய்வீக நீதிக்கு முரண்பாடாக செயல்படவில்லை. தெய்வீக அன்பு கொடுக்கப்பட்ட சாபத்தீர்ப்புக்கு எதிராகவோ, அதை நிறைவேற்றத்தடை ஏற்படுத்தவோ, தீர்ப்பை மீறுவதாகவோ இல்லாமல், அந்த தீர்ப்புக்கு சரி நிகராகத் தகுந்த ஈட்டுக்கிரயம் செலுத்தி மனிதனை சாபத்திலிருந்து விடுவிக்கவுமே இவ்விதமாக செயல்பட்டது. தேவ நீதி அளித்த மரணதண்டனையை சரிகட்டி தேவ அன்பு ஆதாமின் தண்டனையிலிருந்த மனுக்குலத்திற்கு விடுதலையை கொண்டு வந்தது. இந்த தேவ அன்பின் வெற்றி தேவநீதியின் வெற்றிக்கு எந்த விதத்திலும் குறைவானதல்ல. இயேசுவை ஈட்டுகிரய பலியாக தேவநீதிக்கு செலுத்தியதின் மூலம், அன்பானது, இவ்வெற்றியை அடைந்தது. தேவனுடைய குணலட்சணமாகிய இந்த தேவ நீதிதான் அவரது நீதியான தீர்ப்பையும் அதன் தண்டனையையும் நிறைவேற்றுகிறது.

**56.“பிதாவின் அன்பில் நிலைத்திருப்பதற்கு,” இயேசுவின் வாழ்க்கையை குறித்த சிந்தனை நமக்கு எப்படி உதவியாக இருக்க வேண்டும்?**

**R3021 [col. 1 P5]**:

நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அழகான நற்குணத்தை திரும்பி பார்க்கையில், நீதியின் மேலும், சத்தியத்தின் மேலும், அவர் கொண்டிருந்த அன்பையும், மரணபரியந்தம் தேவனுடைய சகலவிதமான ஒழுங்குக்கும் அவர் கீழ்ப்படிய வேண்டும் என்ற அவருடைய மனவிருப்பத்தையும் நாம் காணும்போது, பிதாவின் பிரமாணத்திற்குள் அமைந்திருக்கும் கொள்கைகளின் மேல் நம்முடைய ஆண்டவர் வைத்திருந்த அன்பை நாம் உணரமுடிகிறது. வலுக்கட்டாயமாகவும் அல்ல, பயத்தினாலும் அல்ல, பரிபூரண அன்பினாலே அவர் பிதாவுக்கு கீழ்படிந்தார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங்கீதம் 40: 8) என்று தீர்க்கதரிசி சொல்லியபடி, நம்முடைய ஆண்டவர் மிகுந்த துன்பத்தோடு அல்ல, மிகுந்த மகிழ்ச்சியோடு பிதாவின் பிரமாணங்களை

கண்டுணர்ந்தார். நாம் ஆண்டவரை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவருடைய அன்பில் நிலைத்திருப்பதற்கு, அவர் கொண்டிருந்த அதே மனநிலையை நாமும் அடைய வேண்டும் - பிதாவின் வழிகளையும், நீதி மற்றும் சத்தியத்தின் கொள்கைகளின் மேல் அவர் கொண்டிருக்கும் அன்பு. முதலாவது மற்ற சூழ்நிலைகளின் கீழ், அவருடைய அன்பிற்குள் நிலைத்திருப்போம். அதாவது நம்முடைய அன்பின் வழியாக அவருடைய அன்பின் பிரமாணத்தை உணர்ந்து அதற்கு கட்டுப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் அறிவில் வளர்ச்சி அடையும் போது, நாம் கிருபையிலும் வளர்ச்சி அடைந்து, அவ்விதமான உணர்வுகளை அபரிமிதமாக வளர்த்துக் கொண்டு, ஆண்டவருக்கேற்ற கீழ்படிதல், நம்முடைய இருதயங்களுக்கு மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஆண்டவரின் ஆவியிலும் இக்காரியங்களிலும் வளர்ச்சி அடைய வேண்டும். மேலும், அவருடைய சித்தத்தை செய்வதில் ஏதாகிலும் தோல்வி அடைந்தால், ஒரு வேதனை, ஒரு நிழல், ஒரு பூமிக்குரிய மேகம், பிதாவின் புன்னகையிலிருந்து நம்மை மறைத்துவிடும்.

**57.அன்பின் ஆவி அதிகமாக வளர்ச்சி அடைய, குறிப்பாக என்னென்ன சிறப்பு அனுபவங்கள் மற்றும் பழக்கங்கள் உங்களுக்கு உதவியுள்ளது?**

**சில கேள்விகளுக்கான நீண்ட பதில்கள் தொடருகிறது**

**R2517[col.1 P6 to end]:** (13ம் கேள்வி யைக் காண்க)

அசுத்தமான சிந்தைகளினால் தாங்கள் ஆட்கொள்ளப்பட்டுள்ளோம் என்று கண்டுபிடித்தவர்கள் எந்த வழியை பின்பற்றி செல்லுவது ? - நன்மையை காட்டிலும், தீமையை ஊகிப்பதற்கு மனங்கள் விருப்பம் கொள்கிறது. பொறாமை, சுயநலம், கோபம், கசப்பு, மன்னியாமை போன்ற மனம் உடையவர்கள், தங்களை நேசித்து, புகழ்ந்து பசப்புபவர்களையே விரும்புவார்கள். இவைகளுக்கு ஏதாகிலும் நம்பிக்கை உண்டா ? இப்படிப்பட்டவர்களை தேவன் முற்றிலும் புறக்கணித்துவிடுவார் அல்லவா ?

தேவன் மகா இரக்கமுள்ளவர், "நாம் அனைவரும் கசப்பான பிச்சிலும் பாவ கட்டிலும்" இருக்கும் போதே நமக்காக அவர் மீட்கும் கிரயத்தை கொடுத்தார். தங்களுடைய தூய்மையற்ற நிலையை கண்டு, தாங்கள் சுத்திகரிக்கப் படவேண்டும் என்று விரும்பக்கூடிய அனைவருக்கும் நம்பிக்கை உண்டு.

"அவரின் இரத்தம் மோச அசுத்தத்தையும் சுத்திகரிக்கும், அவர் இரத்தம் எனக்கு என்றும் இருக்கும்."

ஆனால் உண்மையான மனம் வருந்துதல் என்பதற்கு செய்ததற்கிரங்கி, சீர்த்திருத்தல் என்பதே பொருளாகும். நாம் சீர் பொருந்துவதற்கு உதவும்படி, இப்படிப்பட்ட நடத்தை சார்பான எல்லா வியாதிகளையும் சுகமாக்க வல்லவராகிய, நம்முடைய பரம வைத்தியரிடம் செல்ல வேண்டும் என்று எழுதியிருக்கிறது. அவரால் சுத்திகரிக்கப்பட்ட அனைவரும், "நாங்கள் அனைவரும் வியாதிப்பட்டிருந்ததினால், "அவருடைய பணியை செய்வதற்கு நாங்கள் அனைவரும் "**அபாத்திரர்கள்**" என்று சொல்லுவது பாதுகாப்பாக இருக்கும். உண்மையில், ஒரு முறை சுத்திகரிக்கப்பட்டு, சேற்றில் புரளும் பன்றியை போல, மீண்டும் பாவத்திற்கு திரும்புவது இன்னும் மோசமான நிலையாகும் - ஆனால், பரம வைத்தியரின் மருந்துகளை விடாமுயற்சியோடு முன் எடுத்தது போல தொடர்ந்து எடுத்து கொண்டால், இன்னும் நம்பிக்கையோடிருக்கலாம். **மனசான்று**, தூய்மையற்ற நிலைக்கு சென்றால் மட்டுமே மிகுந்த **அபாயங்கள்** நேரிடலாம். ஏனெனில், கசப்பை தித்திப்பு என்றும் தீமையை மற்றும் பகையை, நீதி என்றும், பாவமாகிய சேற்றை அழகுள்ள பரிசுத்தம் என்று நியாயத்தீர்ப்பை திசை திருப்பி விடலாம். இந்த விதத்தில், இது நம்பிக்கையற்றதாக இருக்கும். சில நல்ல வைத்தியர்கள், இருதயத்தின் அசுத்தங்களுக்கு மாற்று மருந்து அல்லது முறிவு மருந்துகளை ஆயத்தம் செய்திருக்கிறார்கள்.

ஆத்துமாக்களின் நஞ்சுக்கு, நம்முடைய பரம வைத்தியர் சில மாற்று மருந்துகளை குறிப்பிட்டிருக்கிறார். சரியான வழிநடத்துதலின் கீழ், ஒழுங்கான முறையில் இந்த மருந்துகளை உட்கொண்டால், கசப்பான இருதயத்தையும் தித்திப்பாக மாற்றும். பொறாமையை உருவாக்குவதற்கு பதிலாக, அன்பும் அதை சார்ந்த குணமும் வளரும். புறம் கூறுதல், தீமை பேசுதல், பழிச்சொல்லுதலுக்கு பதிலாக, தீங்கு நினையாத அன்பும், அயோக்கியமானதைச் செய்யாத அன்பும், நீடிய சாந்தமும் தயவுமுள்ள அன்பும், தன்னை புகழாத அன்பும், பொறாமை கொள்ளாததும், தற்பொழிவை நாடாத அன்பும் சகலத்தையும் தாங்கும் அன்பும் மற்றும் இது கர்த்தரின் ஆவியும்,

கிறிஸ்து இயேசுவின் வாழ்க்கையின் ஆவியின் பிரமாணமாக உள்ளது. மிக மோசமாக வியாதிப்பட்டவர்களுக்கு மட்டும் அல்ல, மீண்டும் நல்ல உடல் நலம் பெற்றவர்களின் நன்மைக் காகவும் நாம் அனைவரும் இந்த மருந்துகளை உட்கொள்ளுவோம். சில மருந்துபட்டியலை நாம் காணலாம்.

(1) "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ள வராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்"1யோவான் 3:3

நாம் விசுவாசத்தை காத்து கொண்டால், நாம் அவரை போலிருந்து, அவரை கண்டு அவருடைய மகிமையில் பங்கடைவோம் என்ற வாக்குத்தத்தத்தை பெற்ற நாம் தேவனுடைய புத்திரர்களாக தத்தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்ற நம்பிக்கை பற்றி இங்கு குறிப்பிடப்படுகிறது. நம்முடைய சிந்தைகளும், இருதயங்களும் இந்த நம்பிக்கையில் விரிவடையும் போது, அதனுடைய நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும், ஆழங்களையும் அளவிடுவதற்கு துவங்கும் போது இது நிச்சயமாக, பரலோக பிதாவின் அன்பும், இரட்சகரின் அன்பும் வானவில் நிறங்களில் நமக்கு முன் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், பிதாவும் குமாரனும் நம்மை முதலில் நேசித்ததினால், நாம் அவர்களை அதிகபட்சமாக நம்முடைய குறிக்கோளாகிவிடும். மேலும் அதை நாம் ஏற்றவாறு கைமாறு செய்ய தேடி அதை பின்பற்றும் போது, நம்முடைய இருதயங்களில் சுத்திகரிப்பும், தூய்மைப்படுத்தலும் தொடர்ந்து நடைபெறும். சுயாதீனம் மற்றும் அன்பின் பரிபூரண பிரமாணத்தை பார்க்கையில் - நமக்கு கொண்டு வந்த வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த சகலவிதமான சுயநலங்கள் மற்றும் கயமையினிமித்தம் நாம் அதிகதிகமாக வெட்கமடைகிறோம். மேலும், தங்களுடைய உண்மையான வெளிச்சத்தில் இந்த மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகள் என்று கண்டறிந்தபின், சகல விதமான கோபம், பகை, பொறாமை, சண்டை, தீமை பேசுதல், புறம்கூறுதல், வதந்திகள் பரப்புதல், பழிகூறுதல், அவதூறு கூறுதல் போன்றவைகள், நமக்கு அதிகதிகமாக வெறுப்பூட்டக்கூடியதாக இருக்கும். இறுதியாக இந்த தீமையான பண்புகளின் சிறிதளவிலானவைகளும், இராஜ்யத் திற்கும், எந்த நற்கிரியைகளை செய்வதற்கு தகுதி இல்லாமல், பொருத்த மற்றவர்களாக நம்மை நாம் காணும்போது, விரைவாக பரவக்கூடிய இந்த சாவுக்குரிய பண்புகளிலிருந்து நாம் விரைந்து ஓடுவோம். நம்முடைய இருதயங்கள் (சித்தங்கள், நோக்கங்கள்) உடனடியாக தூய்மைப்படும். மேலும் நம்முடைய உதடுகளுக்கு மட்டும் அல்ல, நம்முடைய சிந்தையிலும் காவல் வைக்க வேண்டும் அதாவது நம்முடைய வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் தேவனுக்கு பிரிதியாக இருக்க வேண்டும்.

(2)"அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் **சுத்திகரிக்கும்**படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்"தீத்து 2:14

நாம் யாரால், எப்போது, எவ்வாறு மீட்கப்பட்டோம் என்ற மிக சரியான சிந்தனைகளை நமக்குள் உருவாக்கவேண்டும். ஆனால் நாம் **ஏன்** மீட்கப்பட்டோம் என்பதை நாம் மறந்துவிட்டால், இவை அனைத்தும் நஷ்டமாகிவிடும். கல்லறையின் வல்லமையிலிருந்து மட்டுமே இரட்சிக்கப்படாமல், **சகல விதமான அநீதியிலிருந்தும்** பிரதானமாக இரட்சிக்கப்பட்டோம். மேலும் நம்முடைய ஆண்டவர் வெறும் சிறப்பான ஜனங்களை மட்டும் தேடாமல், விசேஷமாக தனிசிறப்பாக சுத்திகரிக்கப்பட்டு, தூய்மையான ஜனங்களை தேடுகிறார். நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதி படுத்தி கொள்வதற்கு ஆர்வமுள்ளவர்களாக இருந்தால் இந்த மருந்து, நிச்சயமாக, அநீதியிலிருந்து நம்மை துப்புரவாக்கும்.

(3)" அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு"11தீமோத்தேயு 2:22

நாம் சரியான துவக்கத்தை மட்டும் அல்ல, சரியான வழியையும் பின்பற்றவேண்டும். ஒரு விநாடிகூட அநீதியை நாம் பின்பற்றிவிடக்கூடாது. எவ்வளவு செலவானாலும் சரி, நீதி மற்றும் நேர்மையை பின்பற்றவேண்டும். ஆனால் இங்கு சிலருக்கு பிரச்சனைகள் எழும்பலாம். நேர்மையான தீர்ப்பை எவ்வாறு எடுப்பது என்பதை அறியாதிருக்கிறார்கள். காணக்கூடியவைகளின் அடிப்படையிலும், வதந்திகளின் அடிப்படையிலும் நியாயத்தீர்ப்பு செய்வதற்கு இணங்கிவிடுகிறார்கள். அல்லது "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் இவனுடைய இரத்தபழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் வருவதாக" என்று

கோஷம் இட்ட திரளானவர்களை போல, இவர்கள் பரிசேயர்கள், வேத பாரகரின் நியாயத்தீர்ப்புகளை ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் நீதியை பின்பற்றியிருந்தால், ஆண்டவரின் நல்ல கிரியைகளிலும், மற்றும் ஜீவனுக்குரிய அவருடைய அற்புதமான வார்த்தைகளிலும் அவருடைய நற்குணத்தை கண்டிருந்திருப்பார்கள். அவர் தேவ தூஷணம் சொல்லாதவரும், "பரிசுத்தரும், பாவமற்றவரும், பாவிகளுக்கு விலகினவர்" என்பதை கண்டிருந்திருப்பார்கள். அவர்மேல் பழிசுமத்தினவர், பகையினாலும் பொறாமையினாலும் இவ்வாறு தீர்ப்பு சொன்னார்கள் என்று கண்டிருப்பார்கள்.

மேலும் கர்த்தருடைய கட்டளையை என்றுமே கடைபிடிப்பது மகிவும் அவசியமானது - "நீதியாக தீர்ப்பு செய்யுங்கள், அதை புறக்கணிப்பவர்கள், தங்களுடைய தலையில் மேல் "இரத்தபழியை சுமப்பார்கள் மேலும், பொய்யாக பழிசொல்லியதால், அந்த தண்டனைக்கு பங்காளிகளாவார்கள். ஆண்டவர் நடத்தப்பட்டது போலவே அவருடைய "சகோதரர்களும்" நடத்தப்படுவார்கள். மேலும் நம்முடைய இருதயங்கள் எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு, வதந்தி களினாலும், புறம் கூறுதலினாலும், தீமை பேசுதலினாலும் நாம் பாதிக்கப்படமாட்டோம். கசப்பான வார்த்தைகள் எழுப்பும் கசப்பான இருதயம் கொண்டவர்கள், அன்பின் இனிமையை அல்ல கசப்பான பிச்சை கொடுக்கும் அசுத்தமான நீர் ஊற்றாக இருக்கிறார்கள் என்பதை அதிகதிகமாக உணர்ந்து கொள்வோம்.

அடுத்து வருவது மெய்ப்பற்று, அதவாது விசவாசம், நம்முடைய ஆண்டவர் தம்முடைய சொந்த விசுவாசத்தை அல்லது மெய்ப்பற்றை அறிவித்தார். மேலும், ஒரு சகோதரனை காட்டிலும் மிக நெருக்கமான ஒரு சிநேகிதனை போல தன்னை வெளிப்படுத்துகிறார். மேலும், உலகரீதியான விசுவாசம் கூட கிருபையாக அங்கீகரிக்கப்படுகிறது. விசுவாசமுள்ள ஒரு சிநேகிதன் வழியாக பலர் திருட்டு அல்லது பொய் சத்தியம் செய்வதுண்டு. இப்படிப்பட்டவர்களால், பெரும்பாலும் இதற்கு முதலிடம் கொடுக்கப் படுகிறது. ஆனால், தேவனுடைய வார்த்தை, நீதியை **முதல்** வைக்கிறது. விசுவாசம், அன்பு மற்றும் சமாதானம், நீதியோடு மட்டுமே இசைந்து செயல்பட முடியும் ஆனால் அநீதி, ஒரு சகோதரனுக்கு எதிராக நிருபிக்கப்படாததினால், அவரை பொருத்த வரையில் நம்முடைய விசுவாசம் அன்பு, சமாதானத்தை தொடர்ந்து வெளிப் படுத்தப்பட வேண்டும். உண்மையில், "காரணமில்லாமல்" பகை, அவதூறான பேச்சுக்கள் மற்றும் துன்மார்க்கத்தின் சகல விதமான தாக்கும் பொறி பறக்கும் ஏவுகனைகளுக்கும் அதிகமாக, வெளிப்படுத்த வேண்டும். இந்த விலையேறபெற்ற மருந்து, எதிராளியாகிய சாத்தான் மிக சுறுசுறுப்பாக பயிரிட்டு கொண்டிருக்கும், கசப்பான வேரிலிருந்து முளைக்கும் விஷத்திலிருந்தும், பிச்சிலிருந்தும் நம்முடைய இருதயங்களை விடிவிப்பதற்கு உதவி அளிக்கும்.

நியாயம் இருதயத்தின் **பரிசுத்தம்**, - அநியாயத் தியிலிருந்து விடுதலை.

நீதி இருதயத்தின் **பரிசுத்தம்** - அநீதியிலிருந்து விடுதலை

அன்பு இருதயத்தின் **பரிசுத்தம்** - சுய நலத்திலிருந்து விடுதலை

(4)"ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் **சுத்தமாக்கி**க் கொண்டவர் களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" 1பேதுரு 1:22

மற்ற மருந்துகளை பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்டவர்களுக்கே இந்த மருந்து கொடுக்கப்படுகிறது. இந்த தூய்மை, சத்தியத்தை **கேட்பதினால்** மட்டும் அல்ல, **நம்புவதினால்** மட்டும் அல்ல, அதை **கீழ்ப்படிந்தால்** மட்டுமே பெறமுடியும் என்று குறிப்பிடுகிறது. வெளிப்புறமான பண்டிகை, பழக்கவழக்கங்கள் மற்றும் பளப்பளப்பான பாணியில் இது வெறும் புறப்பண்புக்குரிய கீழ்ப்படிதல் அல்ல. ஆனால், இது சத்தியத்தின் ஆவிக்கு, கீழ்ப்படிவதன் வழியாகவே இந்த தூய்மையை நாம் அடையமுடியும். இதுவே, உண்மையான உட்பொருள். இவ்வணைத்துமே, **மாய்மால மற்றதும்**, மெய்யான கிறிஸ்துவின் "சகோதரர்க்கான" அன்பிடம் உங்களை கொண்டு வந்து சேர்த்தது. முதலில் அனைவரையும் நீங்கள் நவநாகரீகத்தோடும், அன்போடும் நடத்தினீர்கள் ஆனால் அதில் பலரை நீங்கள் **விரும்பவில்லை**. மிக குறைவாக நீங்கள் நேசித்தீர்கள். ஒருவேளை அவர்கள் தரித்திரராகவோ, படுமோசமான நிலையிலோ, அறியாமையிலோ அல்லது விநோதமாக இருந்திருக்கலாம். ஆனால்

சத்தியத்தின் **ஆவிக்கு** கீழ்படியும் போது, விலையேறபெற்ற இரத்தத்தின் மேல் நம்பிக்கை கொண்டு அன்பான இரட்சகரிடம் தங்களை ஒப்புவித்து எந்த இனமானாலும், நிறமானாலும் கல்வியானாலும், வறுமையானாலும் அல்லது வீடற்றவர்களானாலும் சரி அவருடைய வழிநடத்துதலை பின்பற்ற விரும்பும் யாவரும் "சகோதரர்கள்" என்பதை நீங்கள் கண்டுணர்ந்தீர்கள். சகலவிதமான பகை, பொறாமை மற்றும் சுயநலத்திலிருந்து உங்கள் இருதயம் விடுப்பட்ட நிலையை நீங்கள் அடைந்து, மாயமற்றதும், துாய்மையான அன்போடு "நான் அனைத்து சகோதரர்களையும்" நேசிக்கிறேன் என்று நேர்மையோடு கூறும் அளவுக்கு ஆண்டவருடைய ஆவியை முழுமையாக பெற்றிருப்போம்.

இப்போது இந்த நன்மையான வழியிலே இது வரையில் வந்த நமக்கு நம்முடைய இருதயங்களை தொடர்ந்து பரிசுத்தமாக காத்து கொள்வதற்கு - "ஒருவரில் ஒருவர் பரிசுத்தமான இருதயத்தோடு **ஊக்கமாக** அன்புக் கூறுங்கள்"என்று அப்போஸ்தலர் வழியாக நம்முடைய ஆண்டவர் கூறுகிறார். ஆம், துாய்மையான இருதயங்கள் இருக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒருவேளை, இந்த பரிசுத்தமான அன்பிலிருந்து எதிராளியின் பொய்யான அன்பின் கண்ணிக்குள் நம்மை வழிநடத்திவிடலாம். ஆனால் உண்மையான அன்பு குளிராகவும், வேறு விதமாகவும் இருந்துவிடக்கூடாது. இது அனலாயும், உறுதியாயும், " சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் " முழு விருப்பமுடையதாகவும் இருக்கவேண்டும். (1யோவான் 3:16)

நம்முடைய இருதயங்களாகிய பலிபீடத்தின் மேல், தேவனுக்காக தகனிக்கப்படுவதை போல் இந்த அன்பு துாபமாக ஏறெடுக்கப்படும் போது, எந்த விதமான சுயநலத்திற்கும், பொறாமையான சிந்தனைக்கும் வார்த்தைகளுக்கும் கிரியை களுக்கும் இடமிராது. இந்த ஆவி அனைவரிடமும் மேம்பட்டிருந்தால் இப்படிப்பட்ட "சகோதரர்களின்" அனைத்து கூடுகைகளும் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும்! அது அரை (அ) மூன்றில் (அ) நான்கில் ஒரு பங்கில் செல்வாக்கு பெற்றால், நீதி, மெய்ப்பற்று, அன்பு, சமாதானத்திற்காகவும் மற்றும் பொறாமை, கலவரம், அழுக்கு, அவதுாறுகள், வம்பு பேச்சுக்கு எதிராக அது வேகமாக கிருபையின் தாக்கத்தை அனைவர் மீதும் பயிற்றுவிக்கும் என்பதை நாம் சந்தேகிக் கலாமா ?

இப்பொழுதும், இனி வரக்கூடிய காலங்களிலும், நம்முடைய ஆண்டவரின் பணியை செய்வதற்கு நம்மை சுத்திகரித்து, ஆயத்தம் செய்ய உகந்ததாக இருக்கும் இந்த மருந்துகளை எல்லா சகோதரர்களும் அதிகதிகமாக எடுத்து கொள்ளட்டும்.

**R2753[col.1 P5] through R2754[col.1 P3]:**(15ம் **கேள்வி காண்க**)

"ஜெயங்கொண்டவர்கள்" என்ற தெய்வீக அங்கீகாரத்தை பெற்றுகொள்ளும் அனைவரும். குறிப்பான குணலட்சணங்களை அவசியமாக பெற்றிருக்க வேண்டும் என்ற சிந்தை மற்றும் "நல்லது உத்தமும் உண்மையுமான ஊழியக்காரனே" என்று கூறும் நம்முடைய ஆண்டவரின் குரலை கேட்பதற்கு அனைவருக்கும் திகைப்பூட்டக் கூடியதாக இருக்கும். கிறிஸ்துவ இனம் என்றால், வெளிப்படையான பாவத்தை தவிர்ப்பது என்று பலர் எண்ணி கொள்கிறார்கள், மற்றவர்கள் இரகசியமான பாவங்களையும் தவிர்த்து விடுவதாக எண்ணுகிறார்கள். இதற்கும் மேலாக பலர் இக்காலத்து வாழ்க்கையின் பல விருப்பங்களை பலிசெலுத்தக்கூடிய பொதுவான மனநிலை பெறுவதை எண்ணுகிறார்கள். இன்னும் பலர், சீஷத்துவத்தின் சோதனையானது, கர்த்தருக்கு, சுயத்தை அர்பணித்து இந்த பூமிக்குரிய வாழ்க்கையையும் அதன் விருப்பங்களையும் நம்முடைய தலையாகிய, ஆண்டவருடைய சித்தத்திற்காக முழுமையாக பலிசெலுத்த வேண்டும் என்பதை புரிந்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய அனைத்து பலிகளும், அனுபவங்களும், சுயத்தை வெறுத்தலும், "தெரிந்து கொள்ளப் பட்டவர்களுக்காக" தேவன் வைத்திருக்கும் குறிப்பிட்ட குணலட்சணங்களுக்கு நம்மை வளர்ச்சி அடைய செய்யும் என்ற சிந்தனையை பெரும்பாலும் ஒருவரும் பெறுவதில்லை. இந்த குறிப்பிட்ட குணலட்சனங்களை பெறாவிட்டால், ஆயிரவருட ஆட்சியில், கிறிஸ்துவோடு அவருடைய பங்காளியாக பரிசை பெறமுடியாது. கல்வாரியில் மரிக்கும் திருடனுடனான நமது ஆண்டவரின் உரையாடலுக்கு கொடுக்கப்பட்ட தவறான விளக்கத்தைப்போல, அநேகமாக, எதுவும், இந்த குறி (அ) நிரந்தர நிலையான குணத்தைப்பற்றிய கருதாப்பிழைக்கு பெரும் பங்களிக்கவில்லை.

தேவனுடைய ஆயிர வருட ஆட்சியில் பங்கு பெறவும், கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருப்பதற்கு

தகுதிபெறவும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் மிகுந்த ஆசீர்வாதங்களுக்கும் கனத்திற்கும் தகுதியுள்ள நிலையை தீர்மானிப்பதற்கு தேவன் சில சோதனைகள் அல்லது அளவை வைத்திருப்பது, எதிர் வாதமிடமுடியாத அல்லது தவிர்க்க முடியாத நியாயமாகும். "மகிமையையும், கனத்தையும் மற்றும் அழியாமையையும் தேடுபவர்களின் " விசுவாசத்திற்குள் உள்ளடக்கப்பட்டவைகள் என்ன மற்றும் அழைக்கப்பட்டவர்கள் மற்றும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், மற்றும் விசுவாசமுள்ளவர்கள் (உண்மையுள்ளவர்கள்) யார் ? ஒரு இலக்கு உண்டு, விரும்பிய பரிசை பெறுவதற்கு, நம்பிக்கையோடு ஓடும் யாவரும் இந்த உலகத்தை நோக்கி ஓடி அதை அடைய வேண்டும் அல்லது இழக்கவேண்டும், என்ற மறுக்க முடியாத அறிக்கையை அப்போஸ்தலர் கூறுகிறார். அப்போஸ்தலர் தாமே இந்த அளவுக்கு ஏற்றபடி தன்னை நியாயம் தீர்த்து கொள்வதை நாம் காணலாம். மேலும் அவர் எழுதியபோது, அவர் இந்த இலக்கை அடையவில்லை அல்லது அந்த அளவிலான குணலட்சணத்தின் வளர்ச்சியை அவர் பெற வில்லை என்பதை அவர் கூறினார். இப்படிப்பட்ட பிரதிபலிப்புகள் இயலாததாக இருந்தாலும், இந்த ஓட்டத்தில் நாம் அடைய வேண்டிய இலக்கை தெளிவாக காண விருப்பமுள்ள வர்களின் அனைவருடைய இருதயத்தையும் தட்டி எழுப்பலாம். மேலும் நாம் மிக பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும், நம்முடைய கர்த்தராகிய தேவன் நமக்கு முன் வைத்திருக்கும் அந்த மகா இலக்கை நோக்கி, நாளுக்கு நாள் நம்முடைய முன்னேற்றம் எந்த அளவில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம் என்று நம்மில் ஒவ்வொரு வரையும் இது செயல் விரைவுப்படுத்தலாம். (stimulate)

ஓட்டபந்தயத்தை பற்றிய சிந்தையை அப்போஸ்தலர் பெற்றிருந்ததாக நாம் காண்கிறோம். மேலும், ஆற்றல் வாய்ந்த அந்த எடுத்துக்காட்டை நாம் காணலாம். (1) பந்தயத்திற்காக ஓடுபவர் சட்டபடி அல்லது முறையாக பந்தய சாலைக்குள் பிரவேசிக்க வேண்டியதால், நாம் நம்முடைய பந்தய சாலைக்குள் பிரவேசிப்பதற்கு - நம்மை இரட்சித்து, தேவனுக்கு முன் நம்மை நீதிமானாக்கின விலையேறபெற்ற இரத்தத்தின் மேலுள்ள விசுவாசம் என்னும் வாசல் வழியாக மட்டுமே நாம் பிரவேசிக்க முடியும் (2) இந்த பந்தையத்தில் ஓடுபவர்கள், தங்களை நிலையான ஓட்டக்காராக தொடர்ந்து பதிவு செய்து கொண்டிருக்க வேண்டும், இவர்கள் தங்களுடைய உள்நோக்குகளை நேர் அளவைக் கொண்டிருக்க வேண்டும், (positive) இல்லாவிடில் இவர்கள் பந்தயத்தில் பங்கு பெற இயலாது. ஆகவே நாம் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டு", இந்த பந்தயத்திற்கு தொடர்பான நம்முடைய சிலாக்கியங்களை (சிறப்புரிமைகளையும்) கிடைக்கக்கூடிய பரிசை பற்றியும், அறிவிக்கப் பட்டிருக்கிறோம். இந்த பூமிக்குரிய சபை புத்தகங்களில் அல்ல, ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் பரலோகத்தில் பெயர் எழுதப்பட்ட வர்களாக" காணப்படுவதற்கு கர்த்தரோடு உடன்படிக்கை செய்து, தொடர்ந்து அதை காத்துகொள்வோம் என்று அறிக்கையிடுவதற்கு நாம் கடமை பெற்றுள்ளோம். - (எபிரெயர் 12:23)

ஓட்டப்பந்தய வீரர்களுக்கு ஒரு பரிசும் கொடுக்கப்படுகிறது. ஆனால் இவர்கள் ஓடும் போது, அவர்களின் பார்வைக்கு இது காணும்படிக்கு தொங்க விடப்படுவதில்லை. இவர்கள் அந்த பரிசை நோக்கி ஓடுவதுமில்லை. மாறாக, ஒரு அடையாளம் அல்லது ஒரு இலக்கை நோக்கி ஓடுகிறார்கள். இதில் கால் பங்கு, அரை பங்கு, முக்கால் பங்கு, இறுதியாக முழு இலக்கை அடையும் போது ஓட்டம் நிறைவடையும். இந்த ஓட்டத்தில் ஓடும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பங்கை கடக்கும் போது, பரிசை பெறுவதற்கான இலக்கை அடையும் வரையில், உற்சாகத்தோடு ஓடுவதற்கு ஒருவரை ஒருவர் கவனிக்கிறார்கள். வழியில் கடந்து செல்லும் இந்த அளவுகளை கவனித்து கொண்டிருந்தால், ஒவ்வொரு படிநிலையிலும் தன்னை கணக்கிடுவது, தனக்குள் ஒரு செயல் தூண்டுதலாக இருக்கும். ஒரு வேளை அவர் சோர்வடைந்தவராக பயணித்து கொண்டிருந்தால், அவர் மீதியுள்ள இடைவெளியை உற்சாகத்தோடு, துரிதமாக செல்ல உதவும். அவ்வாறாக, மகிமையுள்ள ஆண்டவராகிய இயேசுவுக்கு உடன் பங்காளிகளாக இருப்பதற்கு தேவன் வாக்களித்த, அந்த மாபெரும் நெருக்கமான பாதையில் ஓடும் கிறிஸ்தவர்களுக்கும் இது உரியது. (தகும்) -"பரிசை ஜெயிக்கும் இலக்கு" - அதை நோக்கி நாம் நெருங்கி, நெருங்கி வரும்போது, நம்முடைய பாதையில் இலக்குகளை குறிப்பதற்கும் நம்முடைய முன்னேற்றத்தை உணருவதற்கும் இது நம்மை ஊக்குவிக்கும். மேலும் இந்த ஓட்டத்தை ஓடுபவர் கவனமில்லாமல், கருத்தில்லாமல், மந்த நிலையில் இருந்தால், தன்னுடைய சொந்த கவன குறைவே அல்லது மந்த நிலையே, தான்

பெறக்கூடிய பரிசை இழக்கசெய்யும் என்ற அறிவே அவரை அதிகபட்சமாக பெறுவார்.

நம்முடைய தேவனால், நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள அந்த நற்குணத்தின் மாபெரும் "இலக்கு என்ன" ?

இது பல்வேறு நாமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாம் பதில் அளிக்கிறோம். எடுத்துக்காட்டாக - " ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத்தேயு 5:48) என்று நம்முடைய ஆண்டவர் கூறும்போது இதை பற்றி குறிப்பிட்டார். இதே இலக்கை பற்றி அப்போஸ்தலனாகிய பவுலும் குறிப்பிடுகிறார். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் 8:29)இந்த இரண்டு வாக்கியங்களும் வடிவத்தில் வேறுபட்டிருந்தாலும், பொருள் ஒன்றுதான். இதே இலக்கை அப்போஸ்தலர் மீண்டும் குறிப்பிடுகிறார். "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" "சகோதரசிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக் கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" ( ரோமர் 8:4, 13:10) இப்போது, இங்கே தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவ நற்குணத்தின் இலக்கை உருவாக்கும், உட்பொருட்களின் மொத்தமான ஒரு பொருள் விளக்கத்தை பெற்றுள்ளோம். இது தெய்வத் தன்மையுள்ள, கிறிஸ்துவை போன்ற, அன்பு . ஆகையால், பரிசுத்தமும் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஜனங்கள் அதே நற்குணத்தை அல்லது, தேவன் பெற்றிருக்கும் அன்பின் தன்மையையும், நம்முடைய ஆண்டவராம் இயேசுவினால் வெளிப்படுத்தப்பட்ட அதே அன்பையும் பெற்றிருக்க வேண்டும் என்ற தோன்றுகிறது.

ஆனால், "நம்மால் எப்படி முடியும் ? இயல்பாகவே மற்றவர்களை போல கோபாக் கினையின் பிள்ளைகளாக இருக்கும் நாம், தேவன் அன்பு செலுத்துவது போலவும், கிறிஸ்து அன்பு செலுத்துவது போலவும், ஒரு உயர்வான நிலை அல்லது குணலட்சணத்தின் அடை யாளத்தை நாம் எப்போதாவது அடைவதற்கு நம்பிக்கை உண்டா ? " மாம்சத்தை பொருத்த வரையில் இப்படிப்பட்ட உயர்வான நிலையை அடைய வேண்டும் என்ற நம்பிக்கையை பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை என்று நாம் பதில் அளிக்கிறோம். மாமிசத்தில், நாம் இந்த உயரிய நிலையை அடைய நாம் எதிர்பார்க்க தேவையில்லை, நாம் இந்த நிலையற்ற உடலில் இருக்கும் வரை, மற்றும் அதின் மூளையை நாம் பயன்படுத்த கடமைப்பட்டுள்ள போது, நாம் கட்டாயமாக அதிகாமாகவோ அல்லது குறைவாகவோ சுயநலத்தினால் எதிர்க்கப் படுவோம், அதன் மூலம் வீழ்ச்சியானது, ஆறு ஆயிரம் வருட சீரழிவின் விளைவாக மனம் அறநெறி மற்றும் உடல் சீர்குலைவின் மூலம் மற்றும் நமது இனத்தை உடைமையாக்கியுள்ளது.

பரிபூரண அன்பின் இலக்கை இருதயத்திலும், சித்தத்திலும் நாம் அடைய வேண்டும் - புதிய சித்தம், "அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்."அல்லது நம்முடைய கிறிஸ்தவ அனுபவங்களின் துவக்கத்திலே, இந்த புதிய சிந்தை இந்த உயர்வான நிலையை அடைய வேண்டும் என்று நாம் எதிர்பார்த்து விடக்கூடாது. தேவனுடைய வார்த்தைகளாகிய அவருடைய விலையேற பெற்ற வாக்குத்தத்தங்களின் வழியாக தேவன் இந்த புதிய சிந்தையை தூண்டினாலும் நம்முடைய சொந்த சித்தமும் ஏறக்குறைய மனித மூளையின் கட்டுபாட்டை சார்ந்து தான் இருக்க வேண்டும். ஆகவே புதிய சிந்தை, தொடர்ந்து மாம்சத்தோடு போராடி கொண்டிருக்க வேண்டும் என்றும் அதன் வெற்றி மாம்சத்தின் மரணமே என்றும் அப்போஸ்தலர் நமக்க அறிவிக்கிறார். முதல் உயிர்த்தெழுதலின் போது, புதிதாக ஜெனிப்பிக்கப்பட்ட புதுசிருஷ்டி ஆவிக்குரிய சரீரத்தை பெற்ற இந்த நிலை, "மாற்றம்" ஏற்படும் வரையில் உண்மையான பரிபூரணத்தை அடைய முடியாது. ஆனால், முதலாம் உயிர்த்தெழுதலின், ஆவிக்குரிய சரீரத்தை பெறுவதே, பரிசை பெறுவதாகும். அந்த இலக்கை நோக்கி தொடர்வதும், அந்த இலக்கை அடைவதும், இந்த புதிய சிந்தை, அழியக்கூடிய இந்த மாம்சத்தில் அல்லது "மண்பாண்டங்களில்" பூரண நிலையை அடைய வேண்டும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும் - 11கொரிந்தியர் 5:2-4.

**F 187[P2] through F189[P1]** (16ம் கேள்வி **காண்க**)

நாம் ஓட்டப்பந்தயத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது பகுதியில், அன்பு ஒரு

திவ்விய தேவை என்பதை அறிந்து கொள்ளுகிறோம். அதை கடமை என்ற கருத்தின்படி மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமென்றாலும், அதைப் பெறும்படியாக நாடுகிறோம். நம்முடைய தேவனிடத்தில் அன்பு செலுத்தக் கடமை உள்ளவர்கள் என்று உணர்கிறோம். ஏனெனில், அவர் நம்முடைய சிருஷ்டிகராக, நம்முடைய கீழ்ப்படிதலை,அன்பை, பக்தியை வற்புறுத்த உரிமையுள்ளவராக இருக்கிறார். ஆண்டவராகிய இயேசுவினிடத்திலும் கடமை, அன்பு உள்ளவர்களாக இருக்கிறோம். ஏனெனில் அவர் நம்மேல் அன்பு கூர்ந்தார், ஆகவே நியாயப்படி பதிலுக்கு நாம் அவரில் அன்பு கூறவேண்டும். நம்முடைய சகல ஜனங்களோடும் அன்பு செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம், ஏனெனில் அதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

ஓட்டப்பந்தயத்தின் இரண்டாவது பகுதி, நம்மை இன்னும் சற்று முன்னோக்கி அழைத்துச் செல்கிறது. குறிக்கோளுக்கு இன்னும் கொஞ்சம் நெருக்கமாக அழைத்துச் செல்கிறது. ஆகவே முதலாவதாக கடமைப் பிரகாரமான அன்பினால் செய்ய முயன்றவைகளை நாம் படிப்படியாக நன்மையான விதத்தில் நோக்கினோம். ஏதோ என்று அல்ல. அதன் பிறகு சரியானது, செய்யவேண்டியது என்று தேவன் கட்டளையிடுகிறவைகள் எல்லாம் நல்லவைகள் என்றும், நமக்கு அதைக் குறித்ததான மேலான எண்ணங்கள் எல்லாம், நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் நீதி, அன்பு ஞானம் என்பவைகளோடு சம்பந்தப்பட்டவைகள் என்றும், அப்படி அந்த நேரத்திலிருந்து அவைகளை உயர்வாக எண்ணினோம் என்றும் பார்த்தோம். தேவன் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறார் என்பதற்காக கடமைக்காக அவரை நேசிக்கத் தொடங்கவில்லை, ஆனால் அதற்கு மேலாக, விசேஷமாக நம்மேல் சுமத்தப்பட்டதான குணாதிசயத்தின் உன்னதமான பகுதிகள் அவரிடத்தில் இருப்பதைப் பார்த்தோம், எல்லா கிருபைக்கும் நன்மைக்கும் அவரே அசலாக இருந்தார். இந்த இரண்டாவது பகுதியின் குறிக்கோளை அடைபவர்கள் எல்லாம், ஆண்டவர் முதலாவதாக நம்மை நேசித்தார் என்பதற்காக மாத்திரம் அல்ல, அதற்கு பதிலாக நாம் அவரை நேசிக்க வேண்டும் என்பது கடமை என்பதற்காகவும் அல்ல, ஆனால் இப்போது கம்பீரமான மகிமையான அவருடைய குணாதிசயத்தில் சிலவற்றை அதாவது நம்முடைய சிருஷ்டிகளின் நீதி, அன்பு, ஞானம், வல்லமை ஆகியவற்றின் ஆழம், அகலம், உயரம், நீளம் ஆகியவைகளைப் பார்க்கும் அளவிற்கு விரிவாக நம்முடைய மனக்கண்கள் திறக்கப்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறபடியால் அவரை நேசிக்க முடியும்.

ஓட்டப்பந்தயத்தின் மூன்றாவது குறிக்கோளை சகோரருக்கான அன்பு என்று அழைக்கிறோம். ஆரம்பத்திலிருந்து பிதாவுக்கு காட்டின கடமை - அன்பை விட சகோதரருக்குக் காட்டின கடமை - அன்பு குறைவானது என்று உணருகிறோம், ஏனெனில் சகோதரர் நமக்கு குறைவாக செய்திருக்கிறார்கள், நாம் அவர்களை அறிந்து கொண்டதின் முக்கியமான காரணம் பிதாவின் சித்தம் அப்படியாக இருந்தது. ஆனால் நாம் நீதியின் ஒழுங்குகளைப் பார்த்து அதன் மூலம் பிதாவை உயர்வாக எண்ணியபோது, நம்முடைய வேண்டுமென்று செய்யப்படாத கறைகளிருந்தாலும், அப்பொழுதும் பிதா தாமே நம்மை நேசிக்கிறார் என்பதைப் பார்த்தபோது நம்முடைய இருதயங்கள் சகோதரர்கள் பக்கம் அதிகமாக விசாலமடையவும் ஆழமாகவும் தொடங்கின. மேலும் இயேசுவின் பாதபடியிலும், அவருடைய திவ்விய சுபாவத்திற்கு, ஏற்றபடி நடக்க இருதய வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்கு அவர்களில் ஆதாரங்களை கண்ட பின்னர், அவர்களுடைய பூரணமற்ற தன்மையையும், கறைகளையும், தவறுகளையும் அதிகதிகமாக நாம் பாராமுகமாக இருக்க முடிந்தது. சகோதருக்கான அன்பு நம்முடைய அனுபவங்களில் அதிகமாக காணப்பட்டது அந்தோ பரிதாபம், நம்முடைய உன்னத அழைப்பை நோக்கி, ஓட்டப்பந்தயத்தில் மூன்றாவது குறிக்கோளினிடத்தில் ஆண்டவருடைய அருமையான ஜனங்களில் நிறைய பேர் வராமலிருக்கிறது தெரிகிறது. வேதம் அறிவுறுத்துகின்ற, சகோதர அன்பை, பொறுமையை நீடிய பொறுமையை வளர்த்துக் கொள்ள அதிக அவசியம் இருக்கிறது. இவைகள், நம்முடைய பிதாவோடு, ஆண்டவரோடு அதிகமாக பரீட்சிக்கப்படுவதைக் காட்டிலும் சகோதரர்களோடு சம்பந்தப்பட்டவைகளில் அதிகமாக பரீட்சிக்கப் படுகின்றன. பிதாவையும், குமாரனையும் பூரணராக நாம் காண்கிறோம், அவர்களிடத்தில் பூரணமற்றவை கிடையாது. அவர்கள் நமக்குக் காட்டும் பெருந்தன்மையையும், அவர்களுக்கு நேராக உள்ள நம்முடைய குறைபாடுகளையும் நாம் அறியலாம். நம்முடைய சகோதரரிடத்தில் ஒருவரிடத்தில் இந்த பெலவீனத்தையும் மற்றவரிடத்தில் அந்த பெலவீனத்தையும் காணலாம். இப்பொழுது வருகிற பொதுவான

சோதனை, நாம் சகோரரிடத்தில் இப்படிச் சொல்லுவதாகும். "உன்னுடைய கண்ணிலிருந்து நான் ஒரு துரும்பை எடுக்கட்டும்" இப்படி துரும்பு எடுப்பது,சகோதரர்களுக்கு எதிராக குற்றம் கண்டுபிடிப்பது, தொந்தவு கொடுப்பது போன்றவைகள், நாம் சரி செய்ய வேண்டிய பொறுமையின்மை, அன்பில்லாமை என்ற பெரிய உத்திரம் நம்மிடத்தில் இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. இந்த மூன்றாவது குறிக்கோளை நெருங்கி வரும்போது, நம்முடைய சொந்த கண்களிலிருந்து உத்திரத்தை படிப்படியாக அகற்றுகிறோம். அப்பொழுது நம்முடைய கறைகளைப் பார்க்கிறோம். நமக்கு ஆண்டவர் காட்டுகின்ற கிருபையின் ஐசுவரியத்தை அதிக உயர்வாக மெச்சுகிறோம். இப்படியான ஒரு நிலை வரும்போது நம்முடைய இருதயத்தில் எல்லாரிடத்திலும் காண்பிக்கும் அதிகமான சாந்தத்தின், பொறுமையின், சாதுவான தன்மையின் ஆவியைப் பிறப்பிக்கும், இது மறுபடியும், சகோதரரில் பெருந்திரளான பாவங்களையும், பூரணமற்றவைகளையும் மூட அல்லது பாராதிருக்க உதவி செய்யும், அவர்கள் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்து, இதே பந்தயப் பொருளுக்காக இதே ஓட்டத்தை ஓடும் காலம்வரை இப்படி நமது உள்ளம் இருக்கும்.

நான்காவது, அதாவது நமது ஓட்டப்பந்தயத்தின் கடைசி குறிக்கோள் என்னவெனில், நாம் எல்லாரும் சீக்கிரமாக அடையும்படி நாட வேண்டிய பூரண அன்பு - தேவனிடத்தில், சகோதரரிடத்தில், எல்லாரிடத்திலும் காட்டும் பூரண அன்பு ஆகும். நம்முடைய குறிக்கோள் ஒன்றிலும் அப்படியே நில்லாது, நாம் பொறுமையாக விடா முயற்சியோடு, ஊக்கத்தோடு ஓட வேண்டும். ஒரு வகையில் "நாம் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருக்க வேண்டும்" இன்னொரு வகையில் "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும் விசேஷாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்ய வேண்டும்."(கலாத்தியர் 6:10) இது நம்முடைய சத்துருக்களையும் நேசிக்கிற அன்பாகும். இந்த அன்பு நம்முடைய பிதாவின் மேலும், அவருடைய குணாதிசயத்தின் மேலும் நம்முடைய சகோதரர் மேலும் வைத்திருக்கிற அன்பைக் குறைக்கவோ அல்லது நீக்கவோ செய்யாது. ஆனால் இவைகளை அதிகரிக்கும். இது அதிகரிக்கும் போது இந்த அன்பில் இரக்கத்தையும், நன்மையையும், தேவ புத்திரர் வெளிப்படும்படி பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிக்கு நாம் காட்ட உதவி செய்யும். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்", என்பது ஆண்டவரின் கட்டளை. நம்முடைய சத்துருக்களையும் நேசிக்கும் இப்படிப்பட்ட ஒரு அன்பின் நிலையை அடையும் வரை, ஆண்டவர் அவரைப் பின்பற்றுகிற நமக்குக் குறித்திருக்கிற நிலையை அடைந்து விட்டோம் என்று ஒரு வினாடிகூட நினைத்துவிடக் கூடாது. நாம் இந்த நிலையை அடையும் வரை நாம் தேவனுடைய பிரியமுள்ள குமாரனின் பிரதிகள் அல்ல.

## F369[P2] through F373

### இலக்கை நோக்கி ஓடுதலும், அங்கே நிலைத்து நிற்பதும் (16ம் கேள்வி காண்க)

அப்போஸ்தலர் இன்னொரு விளக்கத்தில், நம்முடைய தற்போதைய அனுபவங்களை ஒரு ஓட்டப்பந்தய மைதானத்திற்கு ஒப்பிடுகிறார். மேலும் நாம் பாரமானயாவற்றையும், நம்மைச் சூழ்ந்திருக்கின்ற எல்லா பாவத்தையும், எல்லா மாம்சீக பெலவீனத்தையும் உலகப் பிரகாரமான எல்லா ஆசைகளையும் ஒதுக்கிவைத்து விட்டு, சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தைப் பொறுமையுடன் ஓடக்கடவோம், பந்தயப் பொருளை அடையும்படி இலக்கை நோக்கி ஓடக்கடவோம், அவைகள் எல்லாவற்றையும் செய்து முடித்து உண்மையோடு, முழுமையாக கிறிஸ்துவுக்குள் நிலைநிற்க வேண்டும்.(பிலி 3:13,14, எபி 12:1, எபே 6:13) இது நமக்கு முதலாவது, இரண்டவாது, மூன்றாவது, நான்காவது கால் - பங்குகளைக் கொண்ட ஒரு ஓட்டப்பந்தய மைதானத்தை நினைவுபடுத்துகிறது. ஓடுகின்ற வழியில் உள்ள சோதனைகள், துன்பங்கள், எதிர்ப்புகளையும், மேலும் நாம் இந்த ஓட்டத்தில் ஓடத் தொடங்குவதையும், பரிபூரண அன்பு என்னும் இலக்கை அடையும்படி ஓடத் தொடங்குவதையும், அந்த இலக்கை நாம் அடையாவிட்டால் தேவனுடைய பிரியமான குமாரனின் பிரதியாக நாம் இருக்கமாட்டோம் என்ற சிந்தனையையும் இது தருகிறது. மேலும் அப்படியானால், பரவலாக நோக்கும் போது தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்று ஒரு சிந்தனையை இது தருகின்றது. தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்றால், இராஜ்யத்தில் இயேசுவோடு உடன் சுதந்திரராக இருக்க முடியாது. ஆரம்ப வாசலிலிருந்து முடிவு

வரை முழு ஓட்டப்பந்தய மைதானமும் அன்பைக் குறிக்கிறது. நாம் வாசலுக்குள் நுழையும் போது நம்முடைய பாவங்களை மன்னித்த கிறிஸ்துவுக்குள் நமக்கு கிடைத்த அவருடைய புண்ணியத்திற்காக தேவனுக்கு நன்றியுடன் கூடிய அன்போடு நுழைகிறோம். இந்தக் கடமை அன்புதான், ஆரம்பத்தில் நம்முடைய சரீரங்களை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுக்க நம்மை வழிநடத்துகிறது. தேவன் நமக்கு இவ்வளவு செய்து இருப்பாரென்றால், நம்முடைய மதிப்பு மரியாதையை அவருக்குக் காண்பிக்க வேண்டும் என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்ளுகிறோம். கிறிஸ்து நமக்காகத் தன்னுடைய ஜீவனையே கொடுத்தார், நாமும் நம்முடைய வாழ்க்கையை சகோதரருக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

இப்படியாக இருக்கவேண்டிய கடமை அன்பானது முற்றிலும் சரியானது, நியாயமானது, உண்மையானது, ஆனால் அது போதாது அடுத்து, இன்னும் உன்னதமான அன்பிற்கு வழிநடத்த வேண்டும், மேலும் ஓட்டத்தில் முதலாவது கால் - பங்கு ஓடியிருக்கும் வேளையில், இன்னமும் கடமை அன்பு நம்மிடத்தில் இருக்கிறது. ஆனால் அதைக் காட்டிலும் மேன்மை பாராட்டக் கூடிய அன்பை அடைந்திருக்கின்றோம். திவ்விய அன்பை நாம் மேன்மை பாராட்டக் கற்றுக்கொள்வது நல்லது. தேவனுடைய அன்பு ஒருவிதத்திலும் சுயநலம் என்ற வார்த்தையின்படி இருந்ததில்லை. ஆனால் அவருடைய கம்பீரமான, உயர்ந்த குணாதிசயத்தின் கிரியை ஆகும். திவ்விய நீதி, திவ்விய ஞானம், திவ்விய வல்லமை, திவ்விய அன்பு ஆகியவற்றைக் குறித்துச் சில காரியங்களை உணருகின்றோம், மேலும் நம்முடைய சிருஷ்டிகரின் இந்தக் குணாதிசயங்களை நோக்கிப் பார்க்கும் போது, நாம் அவைகளை நேசிக்கிறோம், அதன் பின்னர் நாம் நீதியைக் கடைப்பிடிக்கின்றோம், நம்முடைய கடமையாக இருப்பதினால் மாத்திரமல்ல, நாம் நீதியை நேசிப்பதால் அப்படிச் செய்கிறோம்.

ஓட்டப்பந்தய மைதானத்துக்குள் தொடர்ந்து முன்னேறும் போது இரண்டாவது கால் - பங்கு இலக்கை வந்தடைகிறோம், இதற்குள் நாம் நீதியை நேசிக்கக் கற்றுக் கொண்டிருப்பது மாத்திரமல்லாமல், அதே விகித்ததில் பாவத்தை வெறுக்க கற்றுக் கொள்கிறோம். மேலும் உலகத்தை மூழ்கடித்திருக்கின்ற பெரிய அலை போன்றதும், (அதன் சம்பளமாகிய) மரணத்தைக் கொண்டடு வந்ததுமான பாவத்தைத் திருப்பிவிடுகிற திவ்விய திட்டத்தைக் குறித்த ஒரு இரக்கம் நம்முடைய இருதயங்களில் வருவதையும் காண்கிறோம். இந்த இரண்டாவது கால் - பங்கு இலக்கானது நமக்குள் ஒரு ஆர்வத்தைப் பிறப்பிக்கின்றது, ஒரு "எழுப்புதலையும்", நீதிக்கான ஒரு செயலையும், பாவத்திற்கெதிரான செயலையும் பிறப்பிக்கின்றது.

நம்முடைய அன்பு வளர்ந்து கொண்டு வருகிறது, நாம் மூன்றாவது கால் - பங்கு இலக்கை நோக்கி முன்னேறுகின்றோம். நாம் அந்த இலக்கை அடையும்போது, நம்முடைய கடமை அன்பு, அதோடு கூட நீதியின் நியமங்களின் மேல் அன்பு, திவ்விய குணாதிசயத்திற்கு நேராக மாத்திரம் விரிவடையவில்லை, அதோடு கூட மனுக்குலத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற எல்லாப் பொல்லாத காரியங்களின் மேல் வெறுப்பும், திவ்விய குணாதிசயத்தையும், திட்டத்தையும் மீறுகிற காரியங்களின் மேல் வெறுப்பும் விரிவடைந்தது. ஆனால் இந்த குறி அளவில் இருக்கும்போது நாம் மற்றவர்களுக்கு விசாலமான முறையில் இரக்கம் காட்டும் ஒரு நிலையை அடைந்துள்ளோம், தேவனுடைய உணர்வில் பங்கு பெறுவதற்கு ஆரம்பிக்கிறோம், பாவத்திற்கு எதிராக மாத்திரமல்ல, நீதியின், பரிசுத்தத்தின் வழியில் நடக்க விரும்புகிறவர்களுக்காக அன்பையும் இரக்கத்தையும் உணரத் தொடங்குகிறோம். இந்த வேளையில் சகோதரர்களை இதற்கு முன்பு இல்லாத எப்படியோ ஒரு வித்தியாசமான வெளிச்சத்தில் அறிந்து கொள்ள நம்மால் முடிகிறது. இப்பொழுது நம்மால் சகோரரைப் புது சிருஷ்டிகளாய்ப் பார்க்க முடியும், மேலும் அவர்களுக்கும் (புது சிருஷ்டி) அவர்களுடைய பரிபூரணமற்ற தன்மைகள் நமக்குத் தெளிவாக தெரிகின்ற அவர்களது அழிவுள்ள சரீரத்திற்கும் இடையில் வித்தியாசப்படுத்த முடியும். நாம் சகோதரர்களைப் புது சிருஷ்டிகளாக நேசிக்கக் கற்றுக்கொள்ளுகிறோம், மாத்திரமல்ல, அவர்களுடைய மாம்சத்தினால் ஏற்படும் பல்வேறு பெலகீனங்கள், தவறாகப் புரிந்துகொள்ளுதல் போன்றவைகளில் அவர்களுக்காகப் பரிதாபம் காட்டவும் கற்றுக்கொள்ளுகிறோம். நம்முடைய அன்பு அவர்களுக்காக அவ்வளவு அதிகமாய் கூடுகிறபடியால் நம்முடைய ஜீவனையே அவர்களுக்கென்று, தினமும், ஒவ்வொரு மணி நேரத்தையும் கொடுப்பதில் மகிழ்ச்சிடையகிறோம். அவர்களுக்கு உதவி செய்வதில் சேவை செய்வதில் நம்முடைய உலக நலன்களை அல்லது

சந்தோஷத்தை அல்லது வசதிகளைத் தியாகம் செய்வதிலும், நம்முடைய நேரம், நம்முடைய செல்வாக்கு, அல்லது எதுவென்றாலும் அவர்களுக்கென தியாகமாகத் செலுத்துவதில் சந்தோஷமடைகிறோம்.

ஆனாலும் இன்னும் நாம் இந்த வழியில் "இலக்கை", நோக்கி முன்னேறுகிறோம். ஏனெனில் இதைக்காட்டிலும், நாம் அடையவேண்டிய ஓர் உன்னதமான அன்பு உண்டு, அதாவது நான்காவதும், கடைசி கால் - பங்கு இலக்காகிய "பந்தயப் பொருளுக்கான இலக்கை" அடைய வேண்டும். இந்த அன்பு எப்படிப் பட்டது ? சகோதரருக்காக தன்னையே தியாகம் செய்கின்ற அன்பைக்காட்டிலும் அது எப்படிப் பெரிதாக இருக்க முடியும்? அது தேவனிடத்தில் முழு பயபக்தியுடனும் நீதியின் வழிகளிலும், அன்பிலும் பயபக்தியுடனும் கூடிய அன்பைக் காட்டிலும் அது எப்படி பெரிதாக இருக்க முடியுமா ? நாம் பதில் சொல்லுகிறோம், ஆண்டவர் நியமித்திருக்கிற அன்புதான் பெரியதென்று, அவர் நம்முடைய சத்துருக்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர் சொல்லும்போது, அதுதான் பெரிய அன்பாயிருக்கிறது. நாம் கெட்ட கிரியைகளினால் சத்துருக்களாய், அந்நியராய், பரதேசிகளாய் இருந்த போதுதான், "தேவன் இவ்வளவாய் இவ்வுலகத்தில் அன்பு கூர்ந்தார், " நாம் பாவிகளாய் இருக்கும்போதுதான், நமக்காகத் தன்னுடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார். பரிபூரண அன்பின் நிலை இதுதான். இதைக் காட்டிலும் குறைந்த அளவில் நாம் நின்று விடக்கூடாது. யாரெல்லாம் மகிமையில், புது சிருஷ்டியின் அங்கமாக ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப் படுகிறார்களோ, அவர்களெல்லாரும் சத்துருவையும் நேசிக்கக்கூடிய அன்பின் நிலையை எட்ட வேண்டும்.

புது சிருஷ்டி தன்னுடைய சகோதரரை நேசிப்பது போலத் தன்னுடைய சத்துருக்களை நேசிக்க வேண்டும் என்றல்ல, ஏனெனில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள முறை இதுவல்ல, தேவன் தன்னுடைய புத்திரரை, நண்பர்களை நேசிப்பது போன்று தன்னுடைய சத்துருக்களை நேசிப்பதில்லை. மேலும் தன்னுடைய சீஷர்களை நேசிப்பது போன்று இயேசு தன்னுடைய சத்துருக்களை நேசிக்கவில்லை. ஆனால் அவர்களுக்கென ஆயத்தத்துடன் இருந்து, நீதியின்படி அவர்களுக்கு எதையெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்யும்படியாக தேவன் சத்துருக்களை நேசித்தார், இயேசு தன்னுடைய சத்துருக்களை நேசித்தார், அதனிமித்தம் அவர் இதய பூர்வமாக அவர்களுக்கு நன்மை செய்யும்படியாக இருந்தார். அவர்களுடைய எதிர்ப்புக்குப் பதிலாக அவரிடத்தில் அவர்களுக்கெதிராக விரோதமோ குரோதமோ இருந்ததில்லை. ஆனால் ஏற்ற சமயத்தில் அவர்கள் மேல் தன்னுடைய ஆயிரம் வருட யுகத்தின் ஆசீவாதங்களை ஊற்ற ஆயத்தமாக இருக்கிறார். அதன் மூலம் சத்தியத்தை அறிகிற அறிவிற்குள்ளாய் அவர்கள் எல்லோரும் வரும்படியாக அப்படிச் செய்வார், மேலும் அவரைக் குத்தினவர்களும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள், அப்பொழுது அவர்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஏற்ற காலத்தில் ஊற்றுவார். (சகரியா 12:10) "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்காக நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்காக நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிற வர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு 5:44) என்று நம்முடைய ஆண்டவர் கூறுவதுபோல், நாம் சத்துருவினிடத்தில் அன்பு கொள்ள வேண்டும். எவ்விதமான கசப்பு உணர்வோ, பகையோ, அல்லது வெறுப்பு உணர்ச்சியோ நம்முடைய இருதயங்களில் வாசம் பண்ண அனுமதிக்கக் கூடாது. இருதயம் அன்பினால் அவ்வளவாய் நிறைந்திருக்க வேண்டும். ஒரு சத்துரு கூட நம்முடைய இருதங்களில் ஒரு பொல்லாங்கான அல்லது குரோதமான எண்ணங்களைக் கிளராத அளவுக்கு அன்பினால் நிறைந்திருக்க வேண்டும்.

ஆ, குரோதத்தை, அல்லது வெறுப்பை, அல்லது சண்டையை உண்டாக்கக்கூடிய காரியம் ஒன்றையும் சத்துருவினிடத்தில் பார்க்கமுடியாத அளவுக்கு, இப்படி ஒரு குணாதிசயத்தை அடைவதற்கு எப்படியான நீடிய பொறுமையும் சகோதர அன்பும் குறித்து சொல்லப்படுகிறது. இந்த இலக்கை நோக்கித்தான் புது சிருஷ்டிகளாக நாம் கூட செல்ல வேண்டும். இந்த அன்பின் ஆவியைக் குறித்து நாம் வெளிப்படையாக

மெச்சியுள்ளோம். நாம் அதற்கான அறிக்கை செய்துள்ளோம், அதன் கொள்கைகளுக்கு ஏற்ப நாம் நம்முடைய ஜீவியங்களை அர்ப்பணம் செய்துள்ளோம். இப்பொழுது நாம் அறிக்கை செய்தவைகள் எந்த அளவுக்கு உண்மையுள்ளவைகளாக இருந்தன என்பதைக் கண்டறியும்படியாக சோதிக்கப்படுகின்றோம். கர்த்தர், இந்த ஓட்டத்தை நாம் ஓடும்படிக்கும், நம்முடைய குணாதிசயத்தை அபிவிருத்திச் செய்யவும் அதிக கிருபையுடன் நேரத்தை தருகின்றார். "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்." இருந்தபோதிலும் புது சிருஷ்டியின் அங்கங்களாக தேவனுடைய பிரியமான குமாரனோடு உடன் சுதந்திரராக இருப்போமென்றால், நாம் இந்த ஒழுங்கு முறைகளோடு ஒத்து நடப்பது மிக முக்கியம்.

நம்முடைய இரட்சிப்பின் தளபதியாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இந்த ஓட்டத்தை ஓட அவசியமில்லாதிருந்தது. இந்த அன்பின் பல்வேறு அம்சங்களை அபிவிருத்தி செய்ய அவருக்கு அவசியமில்லாதிருந்தது. ஏனெனில் பூரணமாயிருப்பதற்கான தகுதிகளை அவர் ஆரம்பத்திலேயே பரிபூரணமாகப் பெற்றிருந்தார். அவருடைய பரீட்சை என்னவெனில் இந்த கொள்கைகளுக்கும், குணாதிசங்களுக்கும் ஏற்ப அவர் உறுதியாக நிற்பாரா, எல்லாவற்றிற்கும் மேலாக தேவனையும், நீதியையும் தொடர்ந்து நேசிப்பாரா, தன்னுடைய ஜீவனையே அவர்களுக்காகக் கொடுக்கும் அளவுக்குத் தொடர்ந்து சகோதரரை நேசிப்பாரா ? தன்னுடைய சத்துருக்களுக்கு நன்மை செய்வதில் களிகூறும் அளவுக்கு அவர்களைத் தொடர்ந்து உறுதியாக நிற்பாரா என்பதாகும். அவர் தன்னுடைய ஜீவனை தன்னுடைய நண்பர்களுக்காக மாத்திரமல்ல, தன்னை சிலுவையிலறைந்த சத்துருக்களுக் காகவும் ஈந்தார் என்பதில், அன்பிற்கான தகுதியில் அவர் தொடர்ந்து உறுதியாக நிற்பாரா என்பதாகும். அவர் தன்னுடைய ஜீவனை தன்னுடைய நண்பர்களுக்காக மாத்திரமல்ல, தன்னை சிலுவையிலறைந்த சத்துருக்களுக்காகவும் ஈந்தார் என்பதில், அன்பின் எல்லா அம்சங்களிலும் அதன் மேல் உள்ள தனது வாஞ்சையை எப்படி அவர் வெளிப்படுத்தினார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதே அனுபவம் நம்முடையதாகவும் இருக்க வேண்டும். நம்முடைய மாம்சத்தில் நம்முடைய இருதங்களின் உணர்வை எப்பொழுதுமே முழுமையாக வெளிப்படுத்த முடியாவிட்டாலும், நம்முடைய இருதயங்களில் பரிபூரண அன்பின் நிலையை நாம் எட்டியாக வேண்டும்.

சிலர் ஓட்டத்தை வெகு வேகமாக ஓடலாம், அவர்கள் இந்த மூன்று கால் - பங்கு இலக்குகளையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்து, பரிபூரண அன்பு என்கிற நிலையைத் துரிதமாக அடையலாம். மற்றவர்கள் மனதில் சிறிதளவு வைராக்கியத்தோடு, அல்லது நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரை சாதாரணமாக உற்றுப்பார்த்து, ஓட்டத்தில் மெதுவாக முன்னேறுகிறார்கள். அவர்கள் பல வருடங்களாக கடமைக்கான அன்புடன் தங்களைத் திருப்திப் பண்ணிக்கொள்கிறார்கள். அல்லது ஒரு வேளை திவ்விய குணாதிசயத்தின் அன்புக்கும், நீதியின் முறைகளுக்கும் சற்று முன்னேறுகிறார்கள். குறிப்பிடத்தக்க விதத்தில் சிலர்தான், சகோதரருக்கான அன்பை அடையும்படி இதைவிட சற்று மேலாகச் சென்றிருக்கிறார்கள், அது அவர்களைத் தங்களுடைய சுயத்தை வெறுப்பதில் களிகூறச்செய்யும், இதன்மூலம் அவர்கள் விசுவாச வீட்டாருக்கு ஊழியம் செய்ய முடியும். இதை விட இன்னும் சிலரே தங்களுடைய சத்துருக் களுக்காக அன்பு, என்ற பரிபூரண அன்பின் நிலைக்குச் சென்றிருப்பார்கள். இந்த நிலை அவர்களை வார்த்தையினாலாவது அல்லது செயலினாலாவது தீமை விளைவிக்காது தடுப்பது மாத்திரமல்ல, அதற்கும் மேலாக அவர்களுடைய ஆசீர்வாதத்தில் களிகூரும். இலக்கை நாம் அடையும்படி நம்மோடு ஆண்டவர் அபரிமிதமாகப் பொறுமையுடன் இருந்திருப்பாரென்றால், நாம் அவருடைய இரக்கத்தில் களிகூர வேண்டும். மேலும் "பந்தயப்பொருளின் இலக்கை" அடைவதற்கு இன்னும் அதிக வைராக்கியம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும், அப்படிச் செய்யும்போது காலம் குறுகியதாய் உள்ளது என்பதையும், மேலும் இந்தப் பரிபூரண அன்பு என்ற குணாதிசயத்துக்குக் குறைவாக எதுவும் பிதாவினால் புது சிருஷ்டியில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

நம்முடைய ஆண்டவர் பரிபூரண அன்பு என்ற "இலக்கில்" சோதிக்கப்பட்டது போல, நாம் எல்லோரும் அதை அடைந்த பின்னர் சோதிக்கப்படுவோம். ஆகவே வாழ்வின் கடைசி மூச்சின்போது அந்த இலக்கை அடையலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் கூடுமானவரை துரிதமாகச் செயல்பட வேண்டும். நாம் இந்த

இலக்கை அடையும் வேகத்தை வைத்து நம்முடைய வைராக்கியத்தின் அளவும், அன்பின் அளவும் தேவனுக்கும் சகோதரர்களுக்கும் சுட்டிக்காட்டப்படும்.

அப்போஸ்தலருடைய வார்த்தையான "சகலத்தையும் செய்த முடித்தவர்களாய் நிற்கவும்" (எபேசியர் 6:13) என்பது பரிபூரண அன்பு என்ற இலக்கை அடைந்த பின்னர் நமக்கு அதிகமாக சோதனைகள் உண்டு, அவையாவன, விசுவாசத்தை சோதிக்கின்றவைகள், பொறுமையை சோதிக்கின்றவைகள், மேலும் அன்பின் பல்வேறு அம்சங்களில் வரக்கூடிய சோதனைகளாகும். நம்மைச் சரியான வழியில் முன்னேறும்படி உதவி செய்வதற்கு உலகமானது கிருபைக்கு ஒரு நல்ல நண்பனல்ல, சாத்தான் இன்னமும் நம்முடைய சத்துருவாயிருக்கிறான். நாம் அடைந்துள்ள நிலைமையிலிருந்து நம்மை பின்னடையும்படியாகப் பலவந்தப்படுத்த அதிகமான எதிர்ப்புகளைக் கிளறிவிட முடிந்தவனாயிருப்பான். இதுவே நம்முடைய சோதனையாகும். நாம் அடைகின்ற நிலையில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். நம்முடைய உலக வாழ்க்கையைத் துச்சமாக உதறிவிடும் வரை, நமக்குச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்யவும், தேவனுடைய ஊழியத்தில் சகோதரருக்கென நம்முடைய ஜீவனையே கொடுக்கும் வரை நாம் "இலக்கை நோக்கித் தொடர வேண்டும்," "நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்," இந்த வழியில் நாம் செல்லும்போது தேவையான ஒவ்வொரு உதவியையும், ஆபத்தில் பாதுகாப்பையும் அவர் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். அவருடைய கிருபை நமக்குப் போதுமானது. (1தெசலோனக்கியர் 5:24, 11கொரிந்தியர் 12:9)

**F364 P1 through F367 P2** (21ம் கேள்வி காண்க)

இந்தப் புது சிருஷ்டி தேவனுடனும், மற்றும் அவரது பிரமாணங்களுடனும் கொண்டுள்ள தொடர்பு மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வேறானதும் தனிப்பட்டது மாகும். அவர்கள் விசுவாசத்தினால் தேவனோடு ஒரு புதிதானதும் நல்ல நிலையையும் உடையவர்களாக எண்ணப்படுகிறார்கள். அது நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி நீதிமானாக்கப்பட்ட நிலை அல்ல அப்படி எண்ணப்பட்ட நிலையாகும். இந்த நீதிமானாக்கப்பட்ட நிலை அவர்களுக்குக் கிறிஸ்துவின் பலியினால் உண்டான புண்ணியத்தினிமித்தம் கொடுக்கப்பட்டது. அது கடந்த காலத்தின் பரிபூரணமற்ற தன்மைகளை மூடுவது மாத்திரமன்றி, அவர்களோடே இருந்து ஒரு மூடுகிற, நீதிமானாக்குகிற, நீதியின் வஸ்திரமாக உள்ளது. இந்த புண்ணியத்தினால் மனப்பூர்வமாக செய்யப்படாத ஒவ்வொரு குறையையும், வார்த்தையில், சிந்தனையில் அல்லது செயலில் உள்ள கறையையும் மூடிவிடுகிறது. புது சிருஷ்டிகளாக அவர்கள் எல்லோரும் வெண் வஸ்திரத்தினால் உடுத்திவிக்கப்படுவதாகக் கற்பனை செய்து பார்க்கப்படுகிறார்கள். அந்த வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதியும், அவர்கள் தலையாயிருக்கின்ற மீட்பரால் அளிக்கப்பட்ட நீதியுமாகும். இந்தப் புதுசிருஷ்டிகள் அவர்களுடைய அன்பை வெளிக்காட்டும் போது அவர்களுடைய நிலைக்கும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள் என்ற உறவு முறைக்கும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். தேவனுடைய குமாரனின் மரணத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனின் இரக்கத்தையும், கிருபையையும் அவர்கள் அவ்வளவாய் உணர்ந்திருக்கிறார்கள். அவர் மூலமாக அவர்கள் நீதிமானாக்கப்பட்டதையும், அதன்மூலம் அவர்களுக்கு எல்லா ஈவுகளையும் கொடுக்கிறவரை நேசிப்பதாலும், திவ்விய அழைப்புக்கு ஏற்ப தங்கள் சரீரங்களை ஜீவ பலியாய் ஒப்புக்கொடுப்பதில் அவர்களுக்குச் சந்தோஷம் உண்டு என்பதை வெளிப்படுத்துவதின் மூலமாய் அவர்களுடைய அர்ப்பணிப்பைத் தெரிவிக்கிறார்கள்.

பூலோகத்தின் ஆசைகளையும், எதிர்பார்ப்புகளையும், குறிக்கோள்களையும், எதிர்காலத்திட்டங்களையும் அர்ப்பணிப்பது, அல்லது பலியாக செலுத்துவது என்பது பயத்தினாலோ அல்லது வெகுமதி கிடைக்கும் என்று சுயநல ஆசையினாலோ வருவது அல்ல, ஆனால், சுத்தமான அன்பினாலும், திவ்விய அன்பை உணர்ந்து கொள்வதாலும், தேவனுக்கு நேராகத் தன்னுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சையாலும், அவருடைய எல்லாவிதமான அற்புதமான திட்டங்களோடும் ஒத்துப் போவதாலும் வருவதாகும். இப்படியாக அன்பையும், வாஞ்சையையும் வெளிப்படுத்தும்போது, அது ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்படும் போது, அவருடைய ஆவி கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் தேவ புத்திரர் என்றும், பரிசுத்த ஆவியினால் பிறந்தவர்கள் என்றும் எண்ணப்படுகிறார்கள். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய

பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போம் (ஆண்டவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற புதிய மறுரூபமாக்கப்பட்ட சரீரங்களை நாம் பெறும்போது, எப்படிப்பட்ட மாற்றத்தை நாம் அனுபவிப்போம்) என்று இன்னும் வெளிப்படவில்லை ,ஆகிலும் அவர் வெளிப்படும் போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (இந்தச் சிந்தனை நமக்கு திருப்தியாயிருக்கிறது.) 1யோவா 3:2

பரலோகப் பிதா தன்னுடைய தேவபுத்திரரை (தேவதூதர்களை) சீனாய் மலையின் நியாப்பிரமாணத்திற்குக் கீழாக்கியிருக்கிறாரா ? அவர்களுக்கு வேறு தேவர்கள் இருக்கக்கூடாது என்று அவர்களை எச்சரிக்கிறாரா? அவர்கள் யாதொரு சொரூபத்தையும் உண்டாக்கக்கூடாது. அவர்களை நமஸ்கரிக்கவும் கூடாது, அவர்கள் இச்சியாமலும், திருடாமலும், பொய் சொல்லாமலும், கொலை செய்யாமலும் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறாரா ? நாம் இல்லை என்று சொல்லுகிறோம். நிச்சயமாகவே அவர் தன்னுடைய தேவ தூதர்கள் மேல் இப்படியான ஒரு பிரமாணத்தை வைக்கவில்லை. அப்படியானால் ஏன் இப்படியான ஒரு பிரமாணம் புது சிருஷ்டிக்குக் கொடுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும் ? பரலோக தகப்பன் இந்தப் புது சிருஷ்டிப்புகளைத் (தேவ தூதர்) தன்னுடைய குமாரராக ஏற்றுக் கொள்ளவில்லையா ? மேலும் அவர் தன்னுடைய ஆவியை அவர்களுக்குக் கொடுக்க வில்லையா ? மேலும் தங்களுடைய சுபாவத்தின் படியான சுய நல நோக்கங்கள் அல்லது சித்தத்திற்குப் பதிலாக பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இப்படிப்பட்ட பிரமாணங்களைக் கொடுப்பது அவசியமாயிருக்குமா ? பணிவிடைக்காரரை பிரமாணங்களுக்குக் கீழாகப் போடுவது சரியானதென்று நாம் பார்க்கக்கூடும், ஏனெனில் அவர்கள் முக்கியமாக பொதுவான நலத்தில் நாட்டமுள்ளவர்கள் அல்ல, மேலும் தங்களுடைய எஜமானருடைய ஆவியையோ அல்லது நோக்கத்தையோ முழுமையாகப் பெற்றிராமல் இருக்கலாம், ஆனால் பரிபூரணமான ஓர் எஜமான் பரிபூரணமான குமாரர்கள் என்று வைத்துக் கொள்வோம், அவர்கள் அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். அவருடைய சித்தத்தைச் செய்ய வாஞ்சை உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவருடைய மகிமையான திட்டம் எல்லாவற்றிலும் அவரோடு சக வேலையாட்களாக இருக்க விரும்புகிறார்கள். அப்படியிருக்கும்போது இப்படிப்ட்ட ஒரு தகப்பனுக்கு இப்படிப்பட்ட குமாரர்களை இப்படிப்பட்ட பிரமாணங்களுக்குக் கீழாக வைப்பது எப்படி அவசியமாகும் ?

"மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கு உண்மையுள்ளவனாய் இருந்தான்." அவர் வீட்டிலுள்ள பணிவிடைக்காரர்கள் அனைவரும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இருந்தார்கள். "வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாக கூட்டப்பட்டது. "மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு, பிரமாணமானது நீதியானது என்பதைக் காட்டுவதற்காக மாத்திரம் அல்லாமல், மாம்சத்தில் தன்னுடைய பரிபூரணத்தை வெளிப்படுத்தும் படியாகவும் அவர் உலகத்தை மீட்கக்கூடும் என்பதற்காகவும் அவர் மரணத்தின் கீழாகத் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். மரித்தோரிலிருந்து அவர் எழும்பி "மரித்தோரிலிருந்து முதற்பலனான போது" அவர் புது சிருஷ்டியின் தலையாக அநேக சகோதரருக்குள் முதற் பலனானார். மாம்சத்தின்படி அவர் பிரமாணத்திற்குக் கீழாக இருந்தார், ஆனால் புது சிருஷ்டியாகிய உயிர்த்தெழுந்த ஆண்டவர் பிரமாணத்திற்குக் கீழாக இல்லை, மேலும் அவர்தாமே குமாரர்களின் புதிய வீட்டிற்குத் தலைவரானார். "கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார். அவரை பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்" நாம் இன்னும் மாம்சத்தில் இருந்தாலும், புதிய சிருஷ்டிகளாகிய நாம் மாம்சத்திற்குரியவர்கள் அல்ல, மேலும் நாம் மாம்சத்திற்குரியவர்களாக எண்ணப்படுவதில்லை. உலகத்தில் உள்ள மற்றவர்களை எண்ணுவதுபோல, நாம் தேவனால் எண்ணப்படுவதில்லை. ஆனால் புது சிருஷ்டிகளாக ஒரு கூடாரத்தில் அல்லது தற்காலிக வாசஸ்தலத்தில் சுவிகாரத்திற்காகக் காத்திருந்துகொண்டு, சொல்லப் போனால் நம்முடைய முழு சரீரமும் விடுதலை அடையும்படி, ஏற்கெனவே மகிமை அடைந்த நம்முடைய தலையாக இருக்கிறவரோடு அவரைப் போல இருக்கும்படி, சொற்பகாலத்திற்குப் பரதேசிளாக இருக்கிறோம். "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்திற்குட்பட்ட வர்களாயிராமல் (தேவனால் அப்படி எண்ணப்

படுகிறோம்) ஆவிக்குட்பட்ட வர்களாயிருப்பீர்கள்." (ரோ 8:8-9)

இந்த திவ்விய நோக்கோடு இதைப் பார்க்காவிடில், யாரும் இந்த விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாது. பரிசுத்த ஆவியினால் பிறந்த இந்தப் புது சிருஷ்டிகள் எல்லாம், அவர்கள் ஒரு தேவனைத் தவிரவேறு தேவனை உடையவர்களாய் இருக்கும் படியாக நினைக்கவும் முடியாது, அவர்களால் சொரூபங்களை உண்டாக்கவோ அவைகளைத் தொழுது கொள்ளவோ நினைக்க முடியாது. அவர்களால் தேவனுடைய நாமத்தை தூஷிக்கும்படியாகவும் நினைக்க முடியாது. அவர்களால் மற்றவர்களிடமிருந்து திருடவும் நினைக்க முடியாது. கொடுக்கத்தான் விரும்புவார்கள், அவர்களால் மற்றவர்களுக்கெதிராக பொய் சாட்சி சொல்லவும் நினைக்க முடியாது அதற்குப்பதிலாக அவர்களுக்குள் இருக்கின்ற அன்பு, கறைகளை மூடவும் மறைக்கவும் முயற்சிக்கும், அதுவும் சகோதரருக்குள் உள்ளவைகளை மாத்திரம் அல்ல பொதுவாக உலகத்தாருடையதையும் கூட, அவர்களால் சக சிருஷ்டியைக் கொல்ல நினைக்கமுடியாது அதைக்காட்டிலும், அவர்கள் தங்களுடைய ஜீவனை மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள், அதுவும் பரிபூரணமாக, ஆம் அவர்களுடைய பரிசுத்த ஆவி அவர்களுடைய சகோதரருக்கென அவர்களுடைய ஜீவனையே கொடுக்கும்படியாக தூண்டும், அதே பரிசுத்த ஆவி நம்முடைய இரட்சிப்பின் தலையானவரை தன்னையே மீட்கும் பொருளாகக் கொடுக்கத் தூண்டியது போன்று தேவன் புது சிருஷ்டிக்கென ஒரு பிரமாணத்தை குமாரர்களின் வீட்டாருக்கும், பணிவிடைக்காரர்களின் வீட்டாருக்கும் கொடுத்தது போன்று கொடுத்திருப்பாரென்றால், அது முற்றிலுமாகப் பொருத்தமற்றதாக முழுவதுமாக தகுதியற்றதாக இருந்திருக்கும் என்று நாம் பார்க்கவில்லையா ? இந்த "குமாரர்களின் வீட்டின் அங்கத்தினார்கள்," பரிசுத்த ஆவியை இழந்து போகாமல், புது சிருஷ்டியாக இருப்பது நின்று விடாமல் இப்படியான ஒரு பிரமாணத்திற்கு ஒத்துப் போக முடியாது. "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன்(மம், சிந்தை) அவருடையவன் அல்ல" (ரோம 8-9)

ஆனால் எப்படி இந்தப் புது சிருஷ்டிகள் ஒரு பிரமாணமோ, சில ஒழுங்குகளோ இல்லாமல் இருக்கமுடியும் ? திவ்விய பிரமாணத்தின் உன்னத செய்தி அன்பு என்று நாம் பதில் கூறுகிறோம். தேவனுடைய கட்டளைகள் அவ்வளவு விரிவாக, ஆழமானதாக, கணுக்களையும் ஊணையும் பிரிக்கத்தக்கதாயும் உள்ளது, ஆகவே அவைகள் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டுமென்றால் அன்பினாலேயேயன்றி முடியாது. பிரமாணத்தின் ஒவ்வொரு பகுதியும் கண்டிப்புடன் நிறைவேற்றப்பட்டாலும், தேவனுக்கென்று பயபக்தியுடன் கூடிய அன்பின் உணர்வு இல்லா விட்டால், திவ்விய பிரமாணம் திருப்தி அடையாது. அதற்கு மாறாக, அன்புதான் பிரமாணத்தின் நிறைவாகும். மேலும் எங்கு அன்பு ஆட்சி செய்கின்றதோ, அங்கெல்லாமல் திவ்விய ஒழுங்கின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு அம்சமும், சிருஷ்டியினால் முடிந்த அளவுக்கு தேடிப்பிடிக்கப்பட்டு, மனப்பூர்வமாகக் கீழ்ப்படிதலினால் நிறைவேற்றப்படும், அதுவும் பலவந்தத்தினால் அல்ல, ஆனால் மகிழச்சியினாலும், அன்பினாலும் அப்படி ஆகும்.

இப்படியான தேவனுக்கான அன்பையும், அவருடைய நீதியையும் புது சிருஷ்டியானது அர்ப்பணிப்பின் போது பகிரங்கமாக ஏற்றுக்கொண்டது, மேலும் அன்பே அதன் பிரமாணமாயிற்று, அது மரணபரியந்தம் கூட அன்பினால் உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது. உடன்படிக்கையிலான உறவின்படி பிரமாணத்திற்கு எவ்விதத்திலும் கீழ்ப்படியாமல் இருப்பது ஒரு மீறுதலாகும். அறிவின்படி இயன்ற அளவுக்கு அந்த அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது என்பது சுய தியாகமும், உலகத்தின் ஆவியின் மேல் வெற்றியும், மாம்ச பெலகீனங்களின் மேல் வெற்றியும் சத்துருவின் மேல் வெற்றியும் ஆகும். மனப்புர்வமாகச் செய்யப்படாத கறைகளை ஆண்டவருடைய கிருபை ஈடு செய்கிறது. மேலும் இப்படிப்பட்ட வெற்றி பெற்றவர்களை அவருடைய சொந்த நாமத்தினாலும் புண்ணியத்தினாலும் கொண்டு வருவதும் ஆகும். ஆகவே, இன்னொரு பக்கம் மனப்பூர்வமாக அதற்குக் கீழ்ப்படியாமல் இருப்பது, இந்த அன்பின் பிரமாணத்தை வேண்டுமென்றே, அடிக்கடி மீறுவது என்பது சுவிகாரத்தின் ஆவியை இழந்துபோதல் என்றும்,பரிசுத்த ஆவியை அவித்துப் போடுதல் என்றும், புது சிருஷ்டி இறந்துவிட்டது அல்லது இல்லாமல் போய்விட்டது என்று பொருள்படும்.

**R3145[col.2P2 to end]** (22ம் கேளவியை காண்க)

" குமாரன் ஒருவரை விடுதலையாக்கினால் அவர் உண்மையில் விடுதலையாவார்."என்பது உண்மையே. மேலும், நாம் அனைவரும் கிறிஸ்து நமக்கு அளித்த விடுதலையில், சுயாதீனத்தோடு உறுதியாக நிற்க நாடவேண்டும். அதேநேரத்தில் நம்மை காட்டிலும் பலவீனமுள்ளவர்கள் இடறல் அடையும்படிக்கு நம்முடைய சுயாதீனத்தை பயன்படுத்தாதபடிக்கு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதும் உண்மையாகும். - வேறுபாடுகள் உள்ள கிறிஸ்துவின் சுயாதீனத்தை நாம் பயன்படுத்த இயலாது. நம்மை விடுதலையாக்கின கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனம், இரண்டு நோக்கு நிலையிலிருந்து காணலாம் - யூதர்கள் புசிப்பதற்கு சுதந்திரம் பெறாதது போல இராமல், நமக்கு எந்த கட்டுபாடின்றி புசிப்பதற்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருதால், புசிப்பதை தவிர்பதற்கும் நமக்கு சுதந்திரம் கொடுக்கப்படுகிறது. - மேலும் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் மற்றும் அவருடைய அடிசுவடுகளை பின்பற்ற விரும்பும் யாரானாலும் சரி, அவர்கள் பெற்ற சுதந்திரத்தை ஆண்டவருக்கென்று பயன்படுத்துவதற்கு, முன்னதாகவே உடன்படிக்கை செய்துவிட்டார்கள். மாம்சத்தின் விருப்பங்கள், இலக்குகள் மற்றும் இன்சுவை அருந்துவதில் முன்னேற்றம் அடையவதற்காக அல்ல மாறாக, சுயத்தை பலிசெலுத்துவதிலும், ஆண்டவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி அவருக்காகவும், சகோதரகளுக்காகவும் , அவர்களின் உதவிக்காகவும் தங்களுடைய ஜீவனையே கொடுப்பதற்காகவே நாம் பெற்ற சுதந்திரத்தை பயன்படுத்தவேண்டும். சுயாதீனத்தின், இந்த இரண்டு பயன்பாடுகளில் ஏற்றளவு வேறுபாடுகள், சுயநலமான அதன் பயன்பாடு, சுய திருப்தி (மனநிறைவு) மற்றவர்களின் ஆர்வங்களை பொருட்ப்படுத்தாமை என்று பொருள்படும். அதன் அன்பார்ந்த பயன்பாடு, மற்றவர்களின் அதன் விருப்பங்களுக்காக, சுயத்தை பலி செலுத்துவதற்கு நம்மை தூண்டும் அல்லது ஊக்குவிக்கும்.

ஆனால் காரணம் என்ன ? - ஒருவர் மற்றொருவருடைய உள்ளத்தை தெளிவாக புரிந்துகொள்ளும், பொறுப்பை பெறுவதற்கு எந்த கொள்கையை நினைவில் வைக்கவேண்டும் ? பலவீனமானவர்கள் தன்னுடைய சொந்த உள்ளத்தை பாதுகாத்து, தன்னுடைய நடைமுறை ஒழுகிற்கு ஏற்றவாறு புசிக்கலாம் அல்லது அதை தவிற்கலாம் அல்லவா ? கூடுமானால், இது சரியாக இருக்கும் என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். ஆனால் பலவீனமான சிந்தையுள்ள நபர், சீர் தூக்கி பார்க்கும் வல்லமையில் ஆற்றலற்றவராக இருப்பவர், எல்லா கோணங்களிலும் பலவீனமாக இருப்பது போல தோன்றலாம். இதனால் மற்றவர்களின் வழி நடத்துதலிலும் பாதிக்கப்படக் கூடிய அளவுக்கு அவருடைய சொந்த மனசாட்சியே அங்கீகரிக்காதபடிக்கு அவருடைய பலவீனமான தாழ்வு நிலையிலான அறிவு அல்லது சீர் தூக்கி பார்க்கும் வல்லமையில் ஆற்றலற்ற நிலை காரணமாக உள்ளது. ஒருவர் தன்னுடைய மனசாட்சியில் பாதிப்புகள் ஏற்படாதபடிக்கு விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவை புசிக்கலாம் அல்லது தன்னுடைய மனசாட்சி காயப்படாமல், விக்கிரகங்கள் உள்ள ஆலயத்தில் அமர்ந்து விருந்துண்ணலாம். ஆனால் இப்படிப்பட்ட ஒரு காரியம் செய்வது தவறு என்று மற்றவர் உணர்ந்து, உறுதியான அவருடைய சகோதரனின் எடுத்துக்காட்டை பின்பற்றுவதற்கு கடும் முயற்சிகளை எடுத்து அது அவருக்கு ஒரு பாவமாக ஏற்படும்படிக்கு தன்னுடைய மனசாட்சியை மீற செய்யும். மனசாட்சியின் எப்படிப்பட்ட மீறுதலும், அந்த காரியம் தன்னிலே தவறாக இருந்தாலும், சரியாக இருந்தாலும், மனப்பூர்வமான பாவத்தின் திசையை நோக்கி எடுத்து வைக்கக்கூடிய ஒரு படியாகும். இது ஆண்டவருடைய ஐக்கியத்திலுமிருந்தும் தோழமையிலிருந்தும் நம்மை தொலைவில் வழிநடத்தக்கூடிய கீழ் நோக்கி செல்லும் பாதையாகும். மேலும் மொத்தமாக மனசாட்சிக்கு மீறி நடந்து, கூடுமானால் இரண்டாம் மரணத்திற்கும் வழிநடத்தும். - "எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவுகொள்ளுமல்லவா? "(1கொரிந்தியர் 8 :11) என்று அப்போஸ்தலர் இந்த காரியத்தை குறித்து முன்னிலைப்படுத்துகிறார்.

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பது பாவமா ? என்பது கேள்வி அல்ல. ஆனால் நம்முடைய சகோதரன் - சபையாக இருக்கும், கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரனுக்கு மட்டும் அல்ல, மாம்சத்தின்படி ஒரு சக மனுஷருக்கும் கூட இடறல் உண்டாக்கும் எந்த காரியத்தை செய்தாலும், அது புது சிருஷ்டியின் பிரமாணமாகிய அன்பின் ஆவிக்கு விரோதமான பாவமாக இருக்குமா ? - ஏனெனில் கிறிஸ்து முழு

உலகத்தின் பாவங்களுக்காக மரித்தாரே. ஒரு சகோதரனுக்கு இடறல் உண்டாக்குவது, அன்பின் பிரமாணத்திற்கும், ஆண்டவரின் கட்டாயமான உத்தரவுக்கும் எதிரான, கொடிய குற்றமாகும். (ரோமர் 14 : 13,21, மத்தேயு 18: 6) ஆனால், அவருடைய பார்வையில் - சகோதரர்களாகவும், விசுவாச வீட்டாராக மாறுவதற்கும் தடை செய்யக்கூடிய தடுக்கல்களாக இருப்பதும் குற்றமாக இருக்கும். நம்முடைய மனசாட்சியின் சகலவிதமான தடையுத்தரவுகளையும் அறிவு களைந்து போட்டாலும், நம்முடைய சுதந்திரத்தை முழுமையாக அடக்கிவைத்தாலும், அன்பே முதலாக பிரவேசித்து, நாம் செயலாற்றவதற்கு முன்னதாக நம்முடைய சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக." என்று கூறி அன்பு நம் மேல் ஒரு உறுதியான கற்பனையை வைக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கேள்வியையும் தீர்மானிக்க வேண்டியது அன்பு மட்டுமே. அறிவோ, சுதந்திரமோ (சுயா தீனமோ )அல்ல.

இப்போது நாம் ஆண்டவரோடு நிற்கக்கூடிய நிலையை எடுத்துக்கொண்டும், நம்முடைய சுயாதீனத்தை பயன்படுத்துவதில் எந்த விதத்திலாவது மற்றவர்களை காயப்படுத்துவதின் நிமித்தம் அவைகளை பயன்படுத்துவதை மறுத்து, அவர்களின் நலனுக்காக பலிசெலுத்துவதை தேர்ந்தெடுப்போம் என்று தீர்மானிக்கலாம் - நம்முடைய எஜமானனும், நம்முடைய இரட்சகரும் அவருக்குண்டான எல்லாவற்றையும் கொடுத்தது போல இந்த பாடத்தின் கடைசி வசனத்தில், அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை ஏற்றுகொண்டு ஒரு சகோதரனை காயப்படுத்தும் எந்த கிரியைகளையும் இனி ஒரு போதும் செய்ய வேண்டாம் என்று தீர்மானிக்கலாம் - நம்முடைய எந்த சுயாதீனமானாலும் சரி, அது தன்னில் தான் எவ்வளவு நியாயமாக இருந்தாலும் சரி, ஒரு சகோதரனுக்கு காயத்தை ஏற்படுத்துமேயானால், அந்த சுயாதீனத்தை நாம் பயன்படுத்தாமல், அதை அவருடைய விருப்பத்திற்கு விட்டுகொடுப்போம். அவருடைய சார்பாக, நம்முடைய ஜீவனையே அவருக்கு கொடுக்கும் அளவுக்கு அதை நாம் அவருக்காக பலி செலுத்துவோம்.

இது, ஒருவேளை சில சந்தர்ப்பங்களில், இந்த கொள்கை, தவறாக பயன்ப்படுத்தக்கூடிய அபாயமும் நேரிடலாம். எடுத்துகாட்டாக, மாம்சம் புசிப்பது தவறு மற்றும் மிருகங்களின் தோல்களை காலணிகளாக பயன்படுத்துவதும் தவறு என்று ரசியாவிலிருந்து கனடாவுக்கு குடியேறிய சமயப்பிரிவினர் கூறலாம். அப்போது இந்த விஷயத்தில் உங்களுடைய பலவீமான மனசாட்சிக்கு நீங்கள் உடன்பட்டு, நீங்கள் மாம்சமும் புசிக்கக்கூடாது, மிருகங்களின் தோல்களினால் செய்யப்பட்ட காலணிகனளயும் அணியக்கூடாது. நம்முடைய சுயாதீனத்தை விட்டுகொடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் விவரித்த காரியங்கள் இப்படிப்பட்ட கேள்விக்கு அல்ல என்று நாம் அறிந்திருக்கிறோம். சமுதாயத்தின் வழக்கமும் இந்த மனங்குழம்பிய ஜனங்களுக்கு முரண்பட்டதாக உள்ளது. மேலும், இந்த கேள்வியை பொருத்த வரையில், அவர்களின் சமசீரற்ற மனநிலைக்கு இணங்குவது, அவர்களின் தவறான வழியில் நடத்துவதற்கு உதவுவதாகும். நாம் மாம்சம் புசிப்பதை தவிப்பது அல்லது தோலினால் செய்த காலனிகளை அணியாமல் இருப்பது, அந்த விதமான வார்தையிலும் மேம்பட்ட நோக்கத்தில் காணும்படிக்கு அவர்களுக்கு உதவியாக இராது. அல்லது நாம் மாம்சம் புசிப்பது அல்லது தோல் காலணிகளை அணிவது, அவர்களின் மனசாட்சியை எந்த விதத்திலும் குறுக்கிடாது. அணல் மூட்டும் இடங்களில் சபை கூடுவது மற்றும் சௌகரியமான இருக்கைகள் கொடுக்கப்படுவதை சில ஜனங்கள் தடைசெய்ததுபோல தேவனை ஆராதிக்கும் போது இசை கருவிகளை பயன்படுத்துவதில் மற்ற சகோதரர்கள் இயல்பான வெறுப்புகள் இருக்கலாம். சகோதரர்களின் சுயாதீனத்தினால் அவர்கள் மனசாட்சி காயப்பட்டதென்றும், அவர்களின் விருப்பத்திற்கேற்ப, இப்படிப்படட் சுதந்திரங்களை அடக்கவேண்டும் என்று கோருவதால் இவைகள் சில நேரங்களில், அப்போஸதலரின் சான்றுகளை பழிகூறலாம். இவர்கள் அப்போஸ்தலர்களின் சான்றுகளை தவறாகச் செயற்படுத்துகிறார்கள் - என்பதே நம்முடைய பதிலாகவும் உள்ளது. சபையில் பொதுவான தீயசெயல் ஏற்படும் விதத்தில், ஒவ்வொருவருடைய மனதில் திடீரென மாறும் மனப்பாங்குக்கு இசைவாக கர்த்தருடைய ஜனம் இருக்க வேண்டும என்பது பொருள் அல்ல. மூட நம்பிக்கைகள் சபையில் ஊக்கவிக்கப்பட கூடாது. அல்லது அதன் ஆவிக்குரிய நன்மைகளும், சுயாதீனமும் அவைகளின் காரணத்திற்காக பலி செலுத்திவிடப்படக்கூடாது. இருப்பினும்,

கர்த்தருடைய ஜனங்களின் அனைத்து நிகழ்வுகளிலும் அன்பு என்பது ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். மற்றும் அந்த ஜனங்கள் தவறுதலாக சகோதரர்கள் மீது அவர்கள் பெலவீனத்தின் மீது பழி சுமத்தும் போதும் கூட, அன்போடு நடத்தப்பட வேண்டும் மற்றும் அவர்களின் எதிர்ப்புகள் முதலியான பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். தீமையாக தோன்றும் சகலத்தையும் தவிர்த்து, தங்களுடைய சகோதரர்களும் இதே சிலாக்கியத்தை பெற்றவர்களாக, கர்த்தர் அவர்களிடத்தில் எதிர்ப்பார்க்கக்கூடிய எல்லாவற்றையும் எதுவானாலும் அவைகளை செய்ய முழு சுந்ததிரம் பெற்றிருக்கிறார்களா என்பதை பார்க்கவேண்டும். மனசாட்சிக்கு கட்டுப்பட்டு, பாடல்களை கருவியோடு அல்லது இராகத்தோடு பாட முடியவில்லை என்றால் அவர்கள் அமைதியாக இருக்கக்கடவர்கள் அல்லது வீடுகளில் அவர்கள் பாடிக்கொள்ளட்டும். இசை கருவிகளோடு தேவனை ஆராதிப்பதும் விக்கிரக கோவில்களில் புசிப்பதும் முற்றிலும் ஒரு வேறுப்பட்ட காரியமாகும்.

ஏறக்குறை இதே போல ஒரு கேள்விக்கு அதாவது பெயர் சபைகளில் புரோடெஸ்டன்ட்டு அல்லது கத்தோலிக்கர்களின் பொதுவான ஆராதனையில் கலந்து கொள்வததைப்பற்றி அப்போஸதலரின் முடிவு, இன்று நமக்கு முன்வரலாம். - பூசை பலியில் கலந்துகொள்வது. இந்த கேள்வியை பொருத்த வரையில், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சுயாதீனம் உண்டு. ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்த சிந்தையில் முழுமையாக இணங்கி, சொந்த மனசாட்சியின் வழிநடத்துதலை பின்பற்ற வேண்டும். நம்முடைய தீர்ப்பின்படி, விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டதை புசிப்பதை காட்டிலும் ரோம கத்தோலிக்க, கிரேக்க கத்தோலிக்க, அல்லது உயர்ந்த மேற்றாண ஸ்தலத்தில் பூசை பலியில் கலந்து கொள்வது மிக பெரிய குற்றமாகவும், ஏனெனில் இது கர்த்தருக்கு அருவருப்பான காரியமாக உள்ளது. (எபிரெயர் 7:25, 10:14) கர்த்தருடைய போஜனத்தில் பங்கு பெறுவதை பொருத்தமட்டில், பெரும்பாலான புரோட்டஸ்டண்டு மதத்தினரிடம், அதில் எந்த தீமையும் நாம் கண்டதில்லை. வேத வசனத்தின்படி இப்படிப்பட்ட ஒரு அனுசரிப்பு பொருத்தமற்றதாக இருப்பதை உணர்ந்தாலும் - அதில் பங்கெடுப்பவர்களின் பயபக்தியுள்ள தேவாராதனை அறிவாற்றுலுடன் இருக்கலாம். ஆயினும், பாபிலோனின் ஆராதனைகளிலும் ஆண்டவரின் இராபோஜனத்தை குறித்து தவறான பொருள் கொள்ளும், அவளுடைய பந்தியில் தவறாமல் பங்குகொள்ளுதல், கண்டனத்திற்குரியதாகும் - நம்முடைய சொந்த ஆவிக்குரிய முன்னேற்றத்தின் இழப்புக்கும், இன்னும் சிலருடைய புரிந்துகொள்ளுதலில் பலவீனமாக இருப்பவர்கள் இடறுவதற்கான அபாயம் ஏற்படலாம். ஆகவே நம்முடைய ஆலோசனை என்னவெனில், ஒரு பக்கத்தில் ஒரு பெயர் சபையின் கட்டிடத்திற்குள் அவர்களின் ஆராதனையை கேட்பதற்காக நுழைவதற்கு நம்மை கட்டுப்படுத்தி கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில் தொடர்ந்து அவர்களின் ஆராதனையில் கலந்து கொண்டு அவர்களின் தவறுகளுக்கு இணங்குதலை நாம் தெரிவிக்க வேண்டியதும் இல்லை - விதிவிலக்காக இப்படிப்பட்ட சபை கூட்டங்களில் சத்தியத்தை அறிவிப்பதற்கு முழு வாய்ப்பை நமக்கு கொடுக்கப்பட்டால் மட்டுமே, அவைகளில் கலந்து கொள்ளலாம்.

நம்முடைய காலத்தில் இந்த கொள்கையின் மற்றொரு எடுத்துக்காட்டு, மதுபானத்தை குறித்த கேள்வியில் காணப்படுகிறது. ஒரு மனுஷன் குடித்து தன்னுடைய சுயநினைவை இழந்து தனக்கும் கூடுதலாக மற்றவர்களுக்கும் தீங்கு விளைவித்து சிருஷ்டிகருக்கு அவமதிப்பை ஏற்படுத்தாமல் மதுபானம் அருந்தும் வரையில் விவாதங்களுக்கு இடம் இல்லை. தேவனுக்கு அவமதிப்பை ஏற்படுத்தாமல், மற்றவர்களுக்கோ தமக்கோ எந்த கேடும் விளைவிக்காமல், மதுபானத்தை பயன்படுத்துவதை பொருத்த வரையில் சுயாதீனத்திற்கான கேள்வி இங்கு எழும்புகிறது. பொதுவாக உலகத்திற்கு வெறியூட்டும் போதையான மதுபானங்கள் ஒரு கொடிய அபாயத்தை விளைவிக்கும் சோதனை என்ற உண்மையை அனைவரும் கண்டறிந்திருக்கிறார்கள். மது அருந்துவதில் சுய கட்டுப்பாட்டின் முழு ஆற்றல் பெற்றிருக்கிறோம் என்று, என்னும் சகோதரர்களுக்கு நமது ஆலோசனை என்னவெனில், இப்பாடத்திற்கு அப்போஸ்தலர் கூறும் வாதத்தை பொருத்திப்பார்க்க வேண்டும் மற்றும் கர்த்தரை மேலும் மகிமை படுத்த தம்மை விட பெலவீனமானவர்களின் சுதந்திரத்தை, மிதமாக அருந்த உபயோகிக்காமல், முழுவதுமாக விட்டொழித்தல், முழுவதுமாக விட்டொழித்தல் (அ) உரிமைகளின் தியாகம் என்னும் திசையில் உபயோகிக்கலாம் என்பதை தீர்மானிக்கவேண்டும்.

இது வரையில் நாம் அறிந்திருக்கிறபடி, இக்காலத்தில் நம்முடைய இனத்தை அழிக்கும் போதை பொருட்கள் மிக கொடூரமான கொள்ளை நோய்களில் ஒன்றாக கருதப்படுகிறது. பலர் மிகவும் பலவீனர்களாக இருப்பதினால் மரபு வழியில் அதில் விழுபவர்கள், ஒரு முறை அதற்கு இணங்கிவிட்டால் மொத்தத்தில் அந்த போதை வஸ்துவின் கட்டுபாட்டை எதிர்க்க முடியாமல் போய்விடுகிறது. நீதிக்கும் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தரிடத்தில் தங்களுடைய ஜீவனை, இந்த விஷயத்தில் தங்களை வெறுத்து, இப்படிப்பட்ட சுதந்திரங்களையும், சிலாக்கியங்களையும் சகோதரர்களின் விருப்பத்திற்கு மற்றும் பொதுவாக இந்த உலகத்தின் விருப்பத்தையும் விட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்பது அதிகபட்சமானதாகும்.

இதேபோல, மனுக்குலத்தை பாவத்திற்குள் வழி நடத்துவதற்கு சாத்தான் பயன்படுத்தும் பல கவர்ச்சியான வஞ்சனைகளாகிய சீட்டு விளையாட்டு, புகையிலை பயன்படுத்தல் போன்ற கரியங்களுக்கு இப்படிப்பட்ட வாதங்கள் தூண்டி விடப்படலாம். முழுமையாக, குறிப்பிட்டிருக்கும்படி இது அன்பின் சான்றாக உள்ளது. நாம் கர்த்தருடைய கிருபையில் வளர்ச்சி அடைந்தால், அதற்கேற்படி அவருடைய அன்பின் ஆவியில் வளர்ச்சி அடையும் போது, நாம் மகிழ்ச்சி அடைந்து, நம்முடைய சொந்த நலனுக்காக மாம்சத்தின் சகல அசுத்தங்களையும் புறம்பே அகற்றுவதோடு மட்டும் அல்லாமல், நம்முடைய கர்த்தரை போலவும் மாறுவோம். ஆனால் அன்பின் எடுத்துக்காட்டாக, மற்றவர்களிடம் ஏற்படுத்தும் தீங்கான தாக்கங்களை ஏற்படுத்தும் ஏதுவானாலும் சரி, அவர்களை பொருத்த வரையில் நம்முடைய தனிப்பட்ட சுதந்திரமாக இருந்தாலும் சரி, அனைத்தையும் நம்மை விட்டு அப்புறப்படுத்துவதற்கு விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும்.

நம்முடைய பொன்னான விரிவுரை இங்கு இடம் பெற்றுள்ளது - கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கும் அனைவரும் இதை கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் - "ஆகவே நாம் " மற்றவர்கள் ஆசீர்வதிக்கப் படுவதற்கும், நாமும் ஆசீர்வாதங்களை பொறுவதற்கும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அவருக்குள் சிருஷ்டிகளாக கட்டியெழுப்பப் படுவதற்கும் சமாதானத்தை ஏற்படுத்தும் காரியங்களை பின் தொடரலாம்.

**R3070-** (29ம் கேள்வி காண்க)

### நீதி மற்றும் அன்பின் கோரிக்கைகள்

தேவனுடைய சபை சமாதானமாகவும், வளமாகவும் இருப்பதற்கு - சபையின் அங்கத்தினர்கள், தெளிவான புரிந்து கொள்ளுதலை பெற்று ஒழுங்கின் கொள்கைகளை சரியாக மதிப்பிட்டு, அவைகளினால் கட்டுப்படுத்தப்படுவதற்கு முழுமையாக தீர்மானிப்பதை தவிர வேறு ஏதும் தேவையில்லை. வளமான ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் அதிகமாக குறுக்கீடு, கிரியைகளின் கொள்கைகளை பொருத்தவரையில், கிறிஸ்தவர்கள் மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அன்பு மற்றும் நீதியின் இசைவான கோரிக்கைகளுக்கு இடையில் உள்ள சரியான வேறுபாட்டை அறிந்து கொள்வதில் ஏற்படும் தோல்வியின் வழியாக, இப்படிப்பட்ட கஷ்டங்கள் அடிக்கடி எழும்புகிறது. ஆகவே, தேவனுடைய பிள்ளைகள் இடையில், இந்த கோட்பாடுகளையும் அவைகளின் செயல் பாடுகளையும் சுருக்கமாக ஆராய்வது லாபகரமாக இருக்கும் என்று எண்ணுகிறோம்.

சிலநேரங்களில், நீதி, ஒரு சமமாக நிறுத்தப்படும் தராசையும், சிலநேரங்களில் சதுரத்தையும், வட்டத்தையும் அடையாளப் படுத்தும். இந்த இரண்டுமே அதன் குணத்திற்கு பொருத்தமான அடையாளங்களாகும். நீதி தன்னுடைய நிலையான ஒழுங்கிலிருந்து திசைமாற தெரியாது. இது ஒரு சரி நுட்பமான காரியம். அதற்குள் எந்த விதமான கிருபையும் , இருதயமும், அன்பும், பரிவும், இரக்கமும் இல்லை சத்தியம் மற்றும் நீதியின் துல்லியமான அளவை இது கணக்கிடுகிறது. இது உணர்ச்சியற்றது. நீதியை நிறைவேற்றுபவர், ஒரு கடமையை செய்வதினால், நீதி நிறைவேற்றப்படும் போது, அங்கு எந்த விதமான நன்றியறிதலும் இருக்காது. ஒரு வேளை இந்த கடமை தவிர்க்கப்பட்டால், அவர் குற்றமுடையவராக இருப்பார். ஆகவே நீதியை செய்வதினால், எந்த கருணை அல்லது புகழ்ச்சிக்குரிய பரிசுகள் பெறப்படுவதில்லை. ஆயினும், இந்த கோட்பாடு உணர்ச்சியற்றதும், கண்டிப்பானதும், உறுதியானதுமாக இருப்பினும், இதுவே தேவனுடைய சிங்காசனத்திற்கு அஸ்திபாரம் என்று வலியுறுத்தப்படுகிறது. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் தான், தேவன் அவருடைய சகல சிருஷ்டிகளோடு நடைமுறை தொடர்பு கொண்டிருக்கிறார். இது மாற்ற முடியாத அலுவல் கொள்கையாகும். இரட்சிப்பின் திட்டத்தை

அனைவரும் அடிப்படையாக கொண்டிராத எந்த கிரியையும், அன்பின் வெளிப்பாடாக நாம் ஏற்று கொள்ள முடியாது என்று காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, ஒருவர், உங்களிடம் கடன்பட்டவராக, அந்த கடனை மறந்து, உங்களிடம் ஒரு வெகுமதியோடு வந்தால், அன்பின் வெளிப்பாடாக கொடுக்கப்படும் அந்த வெகுமதியின் மதிப்பு மிகவும் குறைவாக என்னப்படும். தாராளமாக இருப்பதற்கு முயற்சிப்பதற்கு முன் நீதியாக நடந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லலாம்.

இது சரியானது - தேவனுடைய நடைமுறை தொடர்புகள் அனைத்திலும் நீதியே அஸ்திபாரமான கோட்பாடாக இருந்தால், நம்முடைய கோட்பாடுகளிலும் இப்படியாகவே இருக்க வேண்டும். இந்த உலகத்தில் உள்ளவர்களை காட்டிலும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர்கள் மத்தியிலும், இதில் ஒன்றும் குறைவுப்படக்கூடாது. கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர்கள், ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் கிருபைகளை உரிமையின்றிச் செயலாற்றுவதற்கு நமக்கு ஏற்புடையதில்லை. நாம் அனைவருக்கும் உள்ள ஒரே உரிமை ஒருவருக்கொருவர் எளிமையான நீதியை உரிமை கோரலாம். அதாவது நாம் ஒருவருக்கொருவர், நம்முடைய நேர்மையாக கடன்களை செலுத்துவதில் நீதியை காட்ட வேண்டும். நேர்மையான ஒருவரை ஒருவர் நியாயந்தீர்க்கும் போது நீதியை வெளிப்படுத்த வேண்டும். (உறுதியற்ற கடன் தொகைகளுக்கு நாம் சலுகை அளிக்கவேண்டும், ஏனெனில், நாமும் அதேபோல அபூரண நிலையில் இருப்பதை உணர்ந்திருக்கிறோம்.) அதே போல ஒருவருக்கொருவர் மாசற்ற நட்பின் நடத்து முறையிலும், நீதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். இவைகளை மட்டுமே நாம் உரிமையோடு எதிர்பார்க்க முடியும். இப்படியாக நாம் மற்றவர்களிடம் இவைகளை பெறுவதற்கு உரிமை பெற்றிருப்பதை போல சட்டபடி மற்றவர்களுக்கு நாமும் இவைகளை முழுமையாக வழங்க வேண்டும் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஆனால், நமக்கென்று உரிமையுடன் கேட்பதற்கு, எந்த கடமையும் இல்லாத போதிலும், நாம் நீதியை கோருவோமேயானால், மேலும், குறைக்கூறாமல், அநீதியை அனுபவிப்பதற்கு நாம் விரும்பினாலும் - கட்டாயமாக நாம் இவ்வாறு செய்ய வேண்டும். நாம் கிறிஸ்தவர்களானால், அதை திரும்ப கொடுக்க வேண்டும். மற்றொரு வார்த்தைகளில் சொல்லுவோமேயானால், இந்த காரியத்தை பொருத்த வரையில் மற்றவர்களின் கிரியைகளுக்கு நாம் தான் பொறுப்பு. ஆகவே, அன்பை வெளிப்படுத்தும் எந்த ஒரு கிரியையும் நாம் செய்வதற்கு முன், நம்முடைய எல்லா கிரியைகளும் நீதியின் துல்லியமான கோட்பாட்டினால், எல்லா கோணங்களிலும் பொருந்துகிறதா என்று நாம் பார்க்கவேண்டும்.

அன்பின் கொள்கை, நீதியின் கொள்கையை போல துல்லியமாக அளவிட்டு, நிறுத்து பார்க்க முடியாது. அது மையப்படுத்தும், அந்த பொருளுக்கு ஏற்றவாறு இரக்கம், பரிவு, பயபக்தி போன்ற இதன் நற்குணம் மூன்று படிப்புகளாக காணப்படுகிறது. இரக்கத்தினால் வரும் அன்பே மிகவும் குறைந்த நிலையான அன்பாகும். இது பயனற்ற மற்றும் தரம் குறைந்த காரியங்களையும் கவனிக்கும். மற்றும் இன்னலை தவிர்க்கும் உதவிகளை சுறுசுறுப்பாக படியளக்கும். பரிவினால் ஏற்படும் அன்பு அதை காட்டிலும் சற்று உயர்வானது, நமக்கு ஐக்கியத்தை கொடுக்கும். ஆனால் பய பக்திக்கேற்ற அன்பு இவை அனைத்தை காட்டிலும் அதிகமாக உயரக்கூடியது. ஆழமான நன்மையிலும் பரிசுத்தத்திலும், அழகிலும் மகிழ்கிறது. இந்த பிந்தைய பொருளில், தேவன் மீது நாம் பிரதானமாக அன்புகூருவோம். ஏனெனில், அவை உருவகப்படுத்தும் அனைத்தும், மெய்யாகவே போற்றுதலுக்கும் மரியாதைக்கும் பாத்திரமாய் உள்ளது மற்றும் சக மனிதர்கள் தேவனின் சாயலில் இருப்பதால், அதே விகிதத்தில் அவர்கள் மீதும் அன்புகூருவோம்.

இந்த உணர்வுகளில், ஏதோ ஒன்றில் நாம் ஒவ்வொருவருக்கும் கடன்பட்டிருந்தாலும், நாம் மற்றவர்களிடம் இந்த நீதியின் கோட்பாட்டை எதிர்ப்பார்க்க மாட்டோம். ஏனெனில், அன்பு நீதியின் பெருக்கமாக உள்ளது. நீதி சரியான அளவினால் அளக்கப்படுகிறது. ஆனால் அன்பு அதை அமுக்கி, குலுக்கி அதன்மேல் தன்னையே குவித்து பொங்கி வழிய விடுகிறது. ஆகவே இது கட்டாயமாக கேட்டு பெறக்கூடிய காரியம் அல்லது அதன் குறைவை பற்றி முறையிடாமல் ஒரு இரக்கத்தை போல அதை அதிகமாக மெச்சிக் கொள்ள வேண்டும். அதற்கு சரியாக நாம் பரந்த மனதோடு திரும்ப கொடுக்க வேண்டும். இதை வாஞ்சையோடும் விரும்பும் ஒவ்வொருவரும் - ஆர்வத்தோடு பாராட்டும் உணர்வோடும், பயபக்தியில் - உண்மையான

உணர்வுகளோடு வாஞ்சிக்க வேண்டும். ஆனால் இந்த விதமான அன்பு மிகவும் விலையேற பெற்றது. ஆனால் வெறுமனே, அது ஒரு எதிர்ப்பார்ப்பினால் வரக்கூடிய அன்பாக இருந்தால் அதில் பிரயோஜனம் இல்லை. ஆகவே இதை என்றுமே உரிமை கோர வேண்டாம், மாறாக, அந்த அன்பை மற்றவர்களிடம் வெளிப்படுத்தி, அதற்கு பதிலாக அதே அன்பை நாம் பெற்றுகொள்ளலாம்.

உண்மையில் இந்த உயர்வான குணத்தை பிரதிபலிப்பதன் வழியாகவே நாம் இக்குணத்தை பாதுகாக்க முடியும். இரக்கத்தினால் ஏற்படும் அன்பு ஒருவருடைய பெருந்தன்மையினாலே அல்ல, கொடுப்பவரின் பெருந்தன்மையினாலே வெளிப்படும். அதாவது இவர் அன்பின் கொள்கையில் முழுமையாக நிறைந்து, அபாத்திரவான்களின் மேலும் பொங்கி வழியும் அளவுக்கு அதன் நிறைவான உணர்வுகள் வெளிப்படும்.எனினும், உன்னத அர்த்தத்தில், பரிதாபத்திற்குரிய அனைவரும் அன்புக்கு பாத்திரமானவர்கள் தான், மற்றும் அவற்றில் சிலரும் கூட அடிக்கடி நமது அன்பினால், அனைத்து வகையிலும் பலன் அடைவதுண்டு.

நீதியின் கோரிக்கைகளுக்கு அப்பாற்பட்ட - பொங்கி வழியும் ஆசீர்வாதத்தின் அன்பின் கோரிக்கை - தகாத விருப்பத்தின் வெளிப்பாடாகும். இந்த அன்பின் கொள்கையை நாமே நம்மேல் செயல்படுத்தலாம். ஆனால், மற்றவர்களிடமிருந்து நாம் உரிமை கோர மாட்டோம். இதற்கு எதிர் மறையான செயல், அன்பின் குறைவையும், போதுமான அளவு சுயநலத்தையும் வெளிக்காட்டுகிறது.

எடுத்துக்காட்டாக இரண்டு தேவ பிள்ளைகள் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தனர். ஒரு தோல்வி ஏற்பட்டதினால், அதற்கு தொடர்பான அன்பு மற்றும் நீதியின் கொள்கைகள் சரியாக கருத்தில் கொள்ளப்பட்டது. நஷ்டம் அடைந்த ஒருவர் அன்பின் கொள்கையின் அடிப்படையில், மற்றவர் அந்த வீட்டின் வாடகையை முழுமையாக கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இவரோ நீதியின் அடிப்படையில் சகோதர அன்பின் கோரிக்கையை தள்ளி, அந்த கோரிக்கையை மறுத்து விடுவதற்கு வகை அறியாமல், அரைகுறை மனதுடன் வாடகையை கொடுத்தார். எப்படியாயினும், சில கிறிஸ்தவர்கள் பல உலக ஜனங்களை காட்டிலும் குறைவான கொள்கைகளை உடையவர்களாக இருப்பதை உணரலாம். எந்த தேவ பிள்ளையும், ஒரு பக்கமான குறுகிய கண்ணோட்டத்தில் இருப்பது எவ்வளவு விநோதமாக உள்ளது, அன்பும், நீதியும் இரண்டு வழிகளில் வேலை செய்ய வேண்டும் என்பதை காண வேண்டாமோ? ஒவ்வொருவரும், இந்த கோணங்களில் மற்றவர்களை மேற்பார்வையிடுவது அவர்களின் வேலை இல்லை, மாறாக ஒவ்வொருவரும் தங்களுக்குண்டானவைகளை மட்டுமே கவனி தங்களது ஒருவேளை மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும் என்றால், கட்டளைகளினால் அல்ல, நல்ல மாதிரியினால் போதிப்பது ஏற்றதாயிருக்கும்.

நாம் தகாத விருப்பமுள்ள மனநிலைக்கு எச்சரிக்கையாக இருக்கலாம். அயலானுடைய உடமைகளுக்கு அல்ல, நம்முடைய உடமைகளுக்கே நாம் உக்கிராணக்காரர் என்றும் ஆண்டவர் அவர் அவர் மேல் வைத்த நம்பிக்கையை சரியாக பயன்படுத்துவதற்கு அவர் அவர் சகோதரனுக்கு அல்ல ஆண்டவருக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவர்களின் தனிப்பட்ட விவகாரத்தில் தலையிடுவதை காட்டிலும் தேவனுடைய பிள்ளைகளுக்கு அன்பற்ற மற்றும் ஒவ்வாத காரியம் ஒன்றுமில்லை. பரிசுத்தவான்களுக்கு இது மிக அற்பமானதும், விசேஷமாக பரந்துவிரிந்த அளவில் தாராளமாக வெளிப்பட்டு, சிறிய பாவங்களை பெரிதாக்காமல், திரளான பாவங்களை மூடக்கூடிய அளவுக்கு சகோதர சிநேகம் வெளிப்பட வேண்டிய சூழ்நிலையில், இது சகோதரர் அன்பின் குறைபாட்டின் பரிதாபமாக வெளிப்படுத்துகிறது.

எதிராளி மகிமை அடையாதபடிக்கு, தேவ ஜனங்கள் அனைவரின் இருதயங்களில், அன்பும், நீதியும் சரியான உறவில் சரியான இடத்தை கண்டுபிடிக்கட்டும். . "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்."(சங்கீதம் 119:97) என்ற சங்கீதக்காரர் கூறுகிறார். இதுவே, அனைவரின் நிலையான தியானமாக இருந்தால், நிச்சயமாக வெளிப்படையான தவறுகள் குறைவை துவங்கும். நம்முடைய எதிராளி நம் மேல் ஆதாயம் கொள்ளாதபடிக்கு விழித்திருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**F402 P2 through F409 "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள்**

**மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்." - மத்தேயு** 7:1,2

சபையின் திறமையான நியாயாதிபதிகளாக இருப்பவர்கள் பிதாவும், குமாரனுமாகும். குமாரன், பிதாவின் பிரிநிதியாக இருக்கிறார், நியாயந்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. (யோவான் 5:22,27) புது சிருஷ்டிகள் இரண்டு காரணங்கள் நிமித்தமாக ஒருவரையொருவர் நியாயந்தீர்க்க தகுதியற்றவர்களாய் இருக்கிறார்கள். 1. அவர்களில் ஒரு சிலரே, எல்லாரையும் ஆளுகிற திவ்விய அன்பின் பிரமாணத்தை முழுமையாக அறிந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். 2. நாம் அறிந்திருக்கிறபடி அவர்களில் ஒரு சிலரே தங்களுடைய இருதயங்களை குற்றமின்றி நிர்ணயிக்க முடிந்தவர்களாய் இருக்கிறார்கள். அநேகர் தங்களை மிகக் கடுமையாக அல்லது மிக இலகுவாக நியாயந்திர்க்கிறார்கள். ஆகவே, இன்னொருவருடைய நோக்கங்கள் திருப்தியற்ற நிலமையில் இருக்கக்கூடும் என்பதால், அவருடைய இருதயத்தை நியாயந்தீர்க்க பண்புடன் மறுத்துவிடவேண்டும். நியாந்தீர்ப்பதில் நம்மூடைய திறமையற்ற நிலையை அறிந்த ஆண்டவர், முதலாம் உயிர்த்தெழுதலில் நாம் பங்கு பெற்ற பின்பு, இராஜ்யத்தில் நம்முடைய எதிர்கால வேலைகளில் ஒன்றாக இது இருக்கும் என்று உறுதி அளித்தாலும், இப்பொழுது அவரைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் எல்லா தனிப்பட்ட நியாத்தீர்ப்புகளையும் அவர் தடைபண்ணுகிறார். மேலும் தொடர்ந்து ஒருவரையொருவர் நியாந்தீர்க்கும் பட்சத்தில், அவர்கள் மற்றவர்களுக்கு காட்டுகின்ற அளவிற்கு மேலாக இனியும் இரக்கமும், தயாளமும் கிடைக்காது என்று எச்சரிக்கிறார். (மத்தேயு 7:2, லூக்கா 6:38) நமக்கு கொடுக்கப்பட்ட மாதிரி ஜெபமான "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை (மீறுதல்களை) எங்களுக்கு மன்னியும்" என்பதிலும் இதே சிந்தை வலியுறுத்தப்பட்டுள்ளது. (மத்தேயு 6:12)

நாம் மற்றவர்களோடு இப்படி நடந்து கொண்டால், ஆண்டவர் நம்மோடு நியாயமற்ற முறையில் இரக்கமில்லாமல் நடந்து கொள்வார் என்று பொருள்படுகின்ற ஏதோ ஒரு கட்டளை அல்ல ஆனால் இது அதற்கு மாறாக சரியான முறை காணப்படுகிறது. சுபாவத்தின்படி "நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாக ", அழிவுக்கு எத்தனமான பாத்திரங்களாக" இருக்கிறோம். மேலும், தேவன் நம்மை கிருபையாய் ஆசீர்வதித்து, நம்முடைய பாவங்களிலிருந்தும், பெலவீனங்களிலிருந்தும் நம்மை விலக்கி, நம்முடைய மீட்பர் மூலமாக பரிபூரணப்படுத்தி இருந்தாலும், அவருடைய அன்பின் பிரமாணத்தை நாம் ஏற்றுக் கொண்டு நம்முடைய இருதயத்தில் அதோடுகூட ஒத்துப் போகும்போது மாத்திரமே இதை அவர் செய்வார். அவருடைய குடும்பத்தில் மனந்திரும்பாதவர்களையும், "கோபாக்கினையின் பிள்ளைகளையும்" ஏற்றுக் கொள்வதாக இல்லை. பிதாவின் வாசஸ்தலங்களில் (யோவான் 14:2 ) ஏதாவது ஒன்றில் இடம் பெறுவதற்கும் தகுதி பெறுவதற்கும், எல்லாரும் கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருப்பதிலிருந்து அன்பின் பிள்ளைகளாக மாறவேண்டும். ஆண்டவருடைய ஆவியால், அன்பின் ஆவியால் மகிமையின் மேல் மகிமை அடைந்து மாற்றப்படவேண்டும். ஆகவே அன்பின் ஆவியை வளர்க்க யாரெல்லாம் மறுக்கிறார்களோ மற்றும் அதற்கு எதிராக தன்னோடு உள்ள மற்ற விசுவாசிகளை அன்பற்ற நிலையில் நியாந்தீர்க்க தீமானிக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் அறிவிலும், கிருபையிலும் வளரவவில்லை என்பதை அது நிரூபிக்கிறது. இருதயத்தில் ஆண்டவரின் சாயலுக்கேற்ப மகிமையின் மேல் மகிமைடைய வில்லை என்பதையும் நிரூபிக்கிறது. ஆகவே ஆண்டவர் சொல்லுகிறபடி சரியான முறையில் அவர் பின்பற்றுகிற அளவை விட அதிகமாக இரக்கம் காட்டக் கூடாது. ஆண்டவரின் சாயலை அவர் பெற்றிருக்கும் அளவானது (அன்பில்) அவர் தன்னுடைய சகவிசுவாசிகளுக்கு அவர் காட்டுகின்ற இரக்கம், பெருந்தன்மையான சிந்தை, வார்த்தை, செய்கை ஆகியவை மூலம் வெளிப்படுத்தப்படும்.

ஓ, "புது சிருஷ்டி"யாகிய ஆவியினால் பிறந்தவர்கள் அனைவரும், இந்த நியாயம் தீர்க்கிற (குற்றப்படுத்துகிற) ஆவி, பரிதாபமான நிலையில் மிகவும் சாதாரணமாக (உண்மையிலேயே, ஆண்டவருடைய ஜனங்களை "சூழ்ந்து இருக்கும் பாவமாக" இருக்கிறது) காணப்படுகிறது என்பதை உணரவேண்டும் இது அவர்களுடைய அன்பின் ஆவியிலும், கிறிஸ்துவின் ஆவியிலும் குறைவுபட்டுள்ளதைக் காட்டுகிறது என்பதையும், இவைகள் ஒருவரிடத்தில் முற்றிலுமாக இல்லாதிருக்கும் போது அவர்கள் "அவருடையவர்கள் அல்ல" என்பதையும் உணர

வேண்டும். (ரோமர் 8:9) இந்த உண்மையை நாம் எவ்வளவு சீக்கிரமாக புரிந்துகொள்ளுகின்றோமோ அவ்வளவு வேகத்தில் "மகிமையின் மேல் மகிமை" என்ற மாறுதலைப் பெறுவோம். நாம் புது சிருஷ்டியின் அங்கங்கள் என்று திட்டவட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது மிகவும் அவசியம்.

ஆனால், ஆண்டவருடைய ஜனங்களில் வெகுசிலரே இதை, அதாவது எந்த அளவுக்கு அவர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கிறார்கள், எவ்வளவு கடுமையாக மற்றவர்களை நியாயந்தீர்க்கிறார்கள், அதே கடுமையான நியாயத்தீர்ப்பு அவர்களிடத்தில் ஆண்டவர் மேற்கொள்வாரானால், நிச்சயமாகவே அவர்களை இராஜ்யத்திற்குள் செல்ல தடை செய்யும் என்பதை உணருகின்றனர். ஆண்டவருடைய தயாளமான வாக்குத்தத்தத்தின் படியாக, மற்றவர்களை நாம் இலகுவாக நியாயந்தீர்ப்பது போன்று நாமும் நியாயம் தீர்க்கப்படுவோம் என்று பயந்திருக்கலாம். இந்த நோக்கம் அதிகதிமான இரக்கத்திற்கும், அதிகதிமான தயாளத்திற்கும் வழிநடத்தும், மேலும் "பொல்லாங்கு நினையாதே" என்ற உயர்ந்த நிலைக்கும் எடுத்து செல்லப்படக் கூடும். ஆனால் அப்படி அல்ல, நம்முடைய விழுந்துபோன சுபாவம் எல்லாம் எதிர்வழியில் உறுதியாக இருக்கிறது. இந்த தயாள எண்ணத்தை நம்முடைய ஆண்டவர் அறிவித்து, அதாவது அவர் நம்மை இரக்கத்துடன் நியாயந்தீர்ப்பது போன்று நாம் மற்றவர்களையும் நியாயந்தீர்க்க வேண்டும் என்கின்ற எண்ணத்தை வெளிப்படுத்தி பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டாலும், மிக குறைவானவர்கள் மாத்திரமே இந்த வாக்குத்தத்தின்படி இரக்கத்தை எதிர்பார்க்க முடியும். நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்க முற்படும் குணத்தை நாம் ஆராய்ந்து பார்ப்பது நமக்கு நன்மை தரும். நாம் அதை ஜெபத்துடன் செய்வோமாக.

விழுந்துபோன அல்லது மாம்ச சிந்தை சுயநலம் உள்ளதாக இருக்கிறது. நாம் எவ்வளவு சுயம்நலம் உள்ளவர்களாக இருக்கிறோமோ அதே அளவுக்கு மற்றவர்களுக்கு எதிரிடையாக அது உள்ளது. ஒன்று ஆதரிக்கும்படியாக உள்ளது, இல்லையெனில் சுயநலத்திற்கு இடம் அளித்துவிட்டு, மற்றவர்களை ஆதரிக்காமல் குற்றப்படுத்தும் படியாக உள்ளது. இது நம்மை அறியாமலே நமக்குள்ளாக வளர்ந்துள்ள பழக்கமாக உள்ளது. நாம் நம்மைஅறியாமலே கண் சிமிட்டுவது அல்லது மூச்சுவிடுவது போன்று உள்ளது. கல்வியறிவு வளரும் போது இந்த பழக்கம் அதிகமாக உள்ளது. மனம் மேலான நோக்கங்களையும், குறிக்கோள்களையும் உணர்வதுடன், உடனடியாக மற்றவர்களையும் இதே போன்று அளவிட முற்படுகிறது, அப்படி செய்யும் போது எல்லாரிலும் ஏதாவது பிழையைக் காண்கிறது. அது மற்றவர்களுடைய பிழைகளையும் பெலகீனங்களையும் மனதளவில் திரும்ப திரும்ப கொண்டு வருவதில் சந்தோஷப்படுகிறது, ஆனால் அதே நேரத்தில் தன்னுடைய பிழைகளை அதே வழியில், அல்லது வேறு முறையில் காணாது விட்டு விடுகிறது. சில வேளைகளில் தன்னுடைய பிழையை மறைப்பதற்கு அல்லது அதே முறைப்படி தன்னுடைய குணாதிசயம் மிக உயர்வானது என்ற எண்ணத்தை உண்டு பண்ணும்படியாக, மற்றவருடைய பெலவகீனங்களை மாய் மாலத்துடன் கேலி செய்கிறது விழுந்துபோன பழைய சுபாவம் இப்படியாக, கேவலமான முறையில் காணப்படுகிறது- புதிய மனம், அன்பு எனும் பரிசுத்த ஆவியினால், ஆண்டவருடைய ஆவியினால் பிறந்திருப்பது, ஆரம்பத்திலிருந்தே சுயநலத்துடன் உள்ள பழைய மனதோடு போராட்டத்தில் உள்ளது. அது ஆண்டவருடைய வார்த்தையின் வழி நடத்துதலின்படி, அன்பு எனும் பிரமாணத்தின்படியும் முக்கிய கட்டளையின்படியும் இருப்பதோடு, நாம் அதிகதிகமாக கிருபையிலும் அறிவிலும் வளரும்போது, ஆரம்பத்திலிருந்தே சுயத்துடன் போராடுகிறது. ஆரம்பத்தில் புது சிருஷ்டிகள் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய்" இருந்து இந்த புதிய பிரமாணத்தை மேலோட்டமாக விளங்கிக் கொள்ளுகிறார்கள். ஆனால் வளர்ச்சிடையாமல், அன்பின் பிரமாணம் வாஞ்சிக்கப்பட்டு, விருத்தி பெறாவிடின் மகா பெரிய வெகுமதியை அடைய முடியாது.

அன்பின் பிரமாணம் கூறுகிறது - சகோதரர்களுடைய அல்லது மற்றவர்களுடைய பெலவீனங்களும், குறைகளும் உலகத்தார் முன்பாக கூறப்படுவது வெட்கத்துக்குரியது. அவைகளை முற்றுமாக மறைக்கும்படியாக அவர்களுடைய பிழைகள் மீது இரக்கம் என்கிற போர்வையை விரிக்க தாமதமாகிவிட்டாலும் கூட, குற்றம் சாட்டப்படுபவர்கள் சார்பில் ஒரு வார்த்தை கூட பேசும்படியாக அன்பும், இரக்கமும் உடனடியாக எழாவிட்டால் வெட்கத்துக்குரியது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பாவியை ஆக்கினைக்குள்ளாக குற்றப்படுத்தும்படி நம்முடைய பிரபுவான, அன்புள்ள ஆண்டவர் கேட்டுக் கொள்ளப்பட்ட போது, அவர் சொன்னதாவது - "உங்களில் பாவமில்லாதவன்

முதாலவது கல்லெறியக்கடவன்" தன்னில் பெலம் இல்லாத மனுஷன், ஆண்டவர் கேட்காமலேயே அவர், தவறு செய்பவர்கள் மேல் பழிவாங்க வேண்டும், அவர்களை வெளிச்சத்தில் கொண்டு வர வேண்டும் என்பது போன்று, நீதி வழங்கும் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நினைக்கும்போது ஓர் அளவுக்கு முக்கியத்துவம் கொடாமல் விட்டுவிடலாம். ஆனால், நம்முடைய ஆண்டவர், பாவம் அறியாதவர், அவருடைய இருதயம் அவ்வளவு அன்பினால் நிறைந்திருந்த படியால் எளிமையாக எடுத்துக் கூறி மன்னித்தார், அவர் தண்டிக்கவோ, எல்லோரிடம் தெரியும்படி செய்யவோ, அதட்டவோ இல்லை என்பதை நாம் காண்கிறோம். ஆகவே ஆவியினால் பிறந்தவர்கள் எல்லோரும் அப்படியாகத்தான் இருப்பார்கள். எவ்வளவுக்கு அதிகமாய் அவருடைய சாயலில் வளருகிறார்களோ, அதன்படியாக பழிவாங்குதலுக்காக ஜெபிப்பதிலும் முந்திக் கொள்ளமாட்டார்கள், அவர்கள் தங்கள் நாக்கின் மூலமாகவோ, மற்றபடியோ தண்டனை வழங்கு வதற்கு மகாபெரும் நியாயாதிபதியால் கட்டளையிடப்பட்டால் ஒழிய, மற்றபடி முந்திக் கொள்ளமாட்டார்கள். இதற்கு மாறாக, அவர் நமக்கு போதனையாக கூறுகிறதாவது - மேலும் நம்மிடம் "பழிவாங்குதல் எனக்குரியது" என்று அறிக்கையிடுகிறார்.

தவறு செய்பவர்களுக்கு "அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளதாய் இருக்கிறது" என்று அப்போஸ்தலர் அன்பின் ஆவியைக் குறித்து விளக்கமாக கூறியிருக்கிறார். மற்றவர்களின் வெற்றியின் மேல் "அன்புக்கு பொறாமையில்லை" அவர்களுடைய கனத்தை குறைவாய் மதிப்பிடவோ, அதை அவர்களிடமிருந்து எடுக்கவோ முயற்சிக்காது. "அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. "ஆகவே மற்றவர்கள் மேல் உள்ள புகழ்ச்சியைத் இழிவுபடுத்தாது, அப்படிச் செய்வதன் மூலம் தனக்கு புகழ்ச்சியை தேட முற்படாது. அது "அயோக்கியமானதைச் செய்யாது" அன்பிற்கு தேவையற்ற, முறையற்ற வழிகளைத் தவிர்த்து விடுகிறது. அன்பு "தற்பொழிவை நாடாது" மற்றவர்களுடைய புகழ்ச்சியையோ அல்லது செல்வத்தையோ, அல்லது புகழையோ நாடாது, அதற்குப் பதிலாக அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைகிறது, அந்த ஆசீர்வாதங்களைக் கூட்டத்தான் முயற்சிக்குமே ஒழிய குறைக்காது. "அன்பு சினமடையாது," பழிவாங்கும்படி கூட செயல்படாது, முழு மனுக்குலத்தின் வீழ்ச்சியின் மூலம் வந்த கஷ்டங்களை மனதில் நினைத்து, கோபமாய் இருப்பதற்கும் பதிலாக இரக்கப்படும். "அன்பு தீங்கு நினையாது"அது தீங்கு நினையாதிருப்து மாத்திரமன்றி, தீங்கு செய்ய எண்ணாது, சந்தேகம் எழும்பும் பட்சத்தில், சந்தேகத்திற்கு இடம் கொடாமல், அப்படியே விட்டு விடுவதுடன், சந்தேகத்துடன் ஊகிப்பதையும் தவிர்த்து விடும். (1தீமோத்தேயு 6:4) அன்பு "அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷ்பபடும்" ஆகவே கனிவான வார்த்தை களைச் கூறுவோ, அல்லது நலமானவைகளை செய்யவோ சந்தோஷப்படும். அது கனவீனமான வார்த்தைகளை சொல்லுவதிலோ அல்லது கனவீனமான காரியங்களை வெளிப்படுத்துவதிலோ பிரியப்படாது. அன்பு "எல்லாவற்றையும் தாங்கும்" அது இரக்கம் என்கிற போர்வையினால் மூடும், ஏனெனில், யாரும் எதுவும் பரீட்சைக்கு நிற்கும் அளவிற்கு பரிபூரணரல்ல. அன்பு எதிர்பார்ப்புடன் இருப்பதால் எப்பொழுதும் இரக்கம் (தயாளம்) என்னும் போர்வையோடு ஆயத்தமாய் இருக்கிறது. அன்பு "சகலத்தையும் நம்பும்" ஆகவே நல்ல எண்ணத்துடன் கேள்வி கேட்கலாம். அவைகளை நம்பும். அன்பு "சகலத்தையும் விசுவாசிக்கும்." கூடுமானவரை இழிவானவைகளைக் குறித்த எண்ணங்களை ஒதுக்கி விடும். அன்பு " சகலத்தையும் சகிக்கும்" உண்மையாகவே மனந்திரும்புகிறவர்களை ஏற்றுக்கொள்வதில் "கெடு" நினைக்க இயலாது. "அன்பு ஒருக்காலும் ஒழியாது" மற்ற கிருபைகளும், வரங்களும், அவைகளின் நோக்கங்கள் நிறைவேறிய பின்னர் மறைந்து போகலாம். அன்பு அடிப்படையானது, அதை நாம் அடைந்த விட்டோமெனில் அது எப்பொழுதும் நம்முடையதாக, நித்திய காலம் வரை நம்மோடு நிலைத்திருக்கும். அன்பே பிரதானமானது. (1கொரிந்தியர் 13:4-13)

அன்பற்ற வார்த்தைகளைக் கூறுவதே பொன்னான பிரமாணமாகிய அன்பின் பிரமாண ஒழுங்கை மீறுவதாக இருக்குமென்றால், உண்மையான காரியத்தை அறியாமல் இருக்கும் போது, மற்றவர்களைக் குறித்து அவதூறான காரியங்களையும், மோசமான, அன்பற்ற, குற்றப்படுத்தும் காரியங்களையும் பேசும் பழக்கம், உலகப்பிரகாரமானவர்கள், பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியில் மாத்திரம் அல்லாது, உண்மையான கிறிஸ்தவர்கள் மத்தியிலும் காணப்படுவதைக் குறித்து என்ன சொல்ல முடியும். அது எவ்வளவு வெட்ககரமான காரியம். "ஒருவனையும் தூஷியாதே" என்கிற ஆண்டவரின் அறிவுரையை மீறுவது

எவ்வளவு வெட்ககரமான காரியமாயிருக்கும். அன்பின் பிரமாணத்தில் குழந்தைகளும், அன்பின் பிரமாணத்தில் வளர்ச்சி அடையாதவர்களும் மாத்திரம் தான் தவறாக புரிந்து கொள்ள முடியும். அவர்கள் மாத்திரமே இரண்டு மூன்று பேரின் சந்தேகத்திற்கு இடமில்லாத சாட்சியான வார்த்தைகள் இல்லாமல் தனது ஒரு அயலகத்தானைக் குறித்தோ அல்லது சகோதரனைக் குறித்தோ, ஒரு பொல்லாங்கை நம்பவோ, அதுவும் மிகவும் பயத்துடன் நம்பவோ முடியும், சந்தேகத்தை ஆதாரமாக வைத்தோ, அல்லது மற்றவர்கள் சொல்வதை வைத்தோ அவதூறாக பேச முடியும். நம்மை நாமே நியாந்தீர்க்க வேண்டும். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயம் தீர்க்கப்படோம்" (ஆண்டவரால் தண்டிக்கப்பட மாட்டோம் சீர்திருத்தப்பட மாட்டோம். - (1கொரிந்தியர் 11:31)

மற்றவர்களைக் குறித்து, அவர்களுடைய காரியங்களைக் குறித்து "வீண் பேச்சு" பேச எத்தனிப்பதை பொன்னான பிரமாணம் நிச்சயமாக நியாயந்தீர்க்கும். அவதூறு கூறித்திரிகின்ற எந்த மனிதன் தான் அவதூறு கூறப்படுவதை விரும்புவான் ? யார்தான் வீண் பேச்சு பேசுவான் ? யார் தான் தன்னுயை விஷயங்கள், பெலவீனங்கள், பொதுவாகவோ அல்லது இரகசியமாகவோ பேசப்படுவதை விரும்புவான்? "உலத்தாருக்கு " வீண் பேச்சு பேசுவதும், அவதூறு பேசுவதும் தவிர, பேசுவதற்கு வேறொன்றும் கிடையாது. ஆனால், புது சிருஷ்டி, தேவதூதர்கள் பாடிய "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்ற பாடலின் கருத்தடங்கிய தேவனுடைய அன்பையும் திட்டத்தையும் அவர்கள் பெறும் வரை ஊமையாக இருப்பது நலமாக இருக்கும். அப்பொழுது "அவர்களுடைய வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானங்களும்" ஆண்டவருக்கு பிரியமானதாயிருப்பது மாத்திரமன்றி அவர்கள் சந்திக்கின்ற ஜனங்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கும்.

அப்போஸ்தலர் நாவைக் குறித்து பேசும் போது, நம்முடைய சரீரங்களில் சிறிய அவயவமாயிருக்கிற இதற்கு அதிக வலிமை உண்டு என்கிறார். அது அழியாத அன்பான வார்த்தைகளையும் பரப்பலாம். அதன் மூலம் ஜீவிகிறவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்கலாம், அவர்கள் மூலமாக இன்றும் பிறக்காதவர்களையும் ஆசீர்வதிக்கலாம். இல்லையெனில், "சாவுக் கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது."அது விஷம் நிறைந்த சிந்தனை விதைகளைப் பரப்பி சிலரின் வாழ்க்கையை கசப்பாக்கி விடலாம், மேலும் மற்றவர்களுடைய வாழ்க்கையை நோயுற்றது போலாக்கி, அவர்களுடைய வாழ்க்கையை நசுக்கியும் விடலாம். அப்போஸ்தலர் கூறுகின்றார் - "அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்.... மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.துதித்தலும் சபித்தலும் ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா ? "(யாக்கோபு 3:8-11)

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது" ஆகவே நாம் மற்றவர்களைப் பற்றி வீண் பேச்சு பேசும் போதோ, அல்லது மற்றவர்களுடைய அலுவல்களில் மும்முரமாய் இருக்கும்போதோ, அது நம்முடைய இருதயங்களில் பெரும் பகுதி, தேவனுடைய அன்பினாலும் கிருபையினாலும் நிரப்பப்படாமல் வெறுமையாக இருப்பதை நிரூபித்துக் காட்டுகின்றது. இந்த சிந்தனை உடனடியாக நம்மை கிருபையின் சிங்கா சனத்திற்கும், தேவவசனத்திற்கும் நேராக, ஆவியினால் நிரப்பப்படுவதற்காக வழி நடத்த வேண்டும், ஏனெனில் அதின் மேல் தாகமுள்ளவர்களுக்கும் பசியுள்ளவர்களுக்கும், ஆவியை அருளிச் செய்வேன் என்று ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். மற்றவர் களைக் குறித்து பொல்லாங்கு பேசப்படுவதை கேட்கும் போதோ அல்லது அதைக் கேட்பதில் மகிழ்ச்சி அடையும்போதோ, நம்முடைய இருதயத்தின் நிலைமை இன்னும் மோசமாயிருப்பதைக் காட்டுகிறது. இப்படியான ஓர் நிலை காணப்படும் என்றால் அது, வீணான வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும், மற்றவர்களுடைய அலுவல்களில் தலையிடு வதைக் காட்டிலும் மிக மோசமாக இருக்கும். அப்படியென்றால் இருதயமானது கசப்பினாலும், பொறாமையினாலும் சண்டையினாலும், விரோதங் களினாலும், பகைகளினாலும் நிறைந்துள்ளது. இந்த குணாதிசயங்களை அப்போஸ்தலர் "மாம்சத்தினாலும், பிசாசினாலும் உண்டான கிரியைகள்" என்கிறார். (கலாத்தியர் 5:19-21) இந்த விஷயத்தில் புது சிருஷ்டியை முற்றிலுமாக ஆச்சரியப்படவும் விழிப்புணர்வு பண்ணவும் செய்வோமா ? ஏனெனில், இந்த மாம்சத்தின் கிரியைகள் நம்மிடத்தில் காணப்படுமென்றால், நாம்

நிச்சயமாக விழுவது மாத்திரமன்றி, இப்படிப்பட்ட வர்களுக்கு நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நித்திய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கிடைக்காது.

இராஜ்யத்திற்கு தகுதி பெறுவது என்பது இதற்கு மிக எதிர்மாறான வழியில் நடத்துகின்றது. அப்போஸ்தலர் பேதுரு கூறுகின்றபடி, "உங்கள் விசுவாசத்தோடே பொறுமையையும்.. சகோதர சிநேகத்தையும்... அன்பையும் கூட்டி வழங்குங்கள். ..இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.....நித்திய இராஜ்யத்துக் குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்."(11பேதுரு1:5-11)அப்போஸ்தல னாகிய யாக்கோபு இந்த விஷயத்தைக் குறித்து மிக தெளிவாகக் கூறுகிறார். "உங்கள் இருதயத் திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால் நீங்கள் பெருமை பாராட்டா திருங்கள், சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத் துக்குரியதும், பேய்த்தனத்துக் கடுத்ததுமாயி ருக்கிறது." (யாக் 3:14,15) எவனிடம் இப்படிப்பட்ட ஒரு அவதூறு பேசும் ஆவியும், கசப்பான ஆவியும் காணப்படுகிறதோ, அவன் கிறிஸ்துவின் ஆவியான, பரிசுத்த ஆவியான, அன்பின் ஆவிக்கு நேர் எதிரானதை உடையவனாய் இருக்கிறான். அவன் தனக்குள்ளாகவோ அல்லது மற்றவர்களிடத்திலோ பொய் சொல்லாதிருப்பானாக. அவன் தன்னுடைய வெட்கத்தில் பெருமை பாராட்டாமல் இருப்பானாக, அவன் இப்படியாக அபிஷேக ஆவிக்குப் பதிலாக சாத்தானின் ஆவியாயிருக்கிற இருளை வெளிச்சம் என்று காண்பியாதிருப்பானாக.

தொடர்ந்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது - குழப்பமும், சமாதானமற்ற நிலையும், எல்லா நேரங்களிலும் ஆண்டவரின் ஜனங்களை துன்பப்படுத்துவதின் இரகசியம், இருதயம் அசுத்தமாயிருப்பதும், முழுமையாக அர்ப்பணிக்கப் படாமல் இருப்பதும் தான் - "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (யாக்கோபு 3:16) பழைய விழுந்துபோன சுபாவத்திற்குரிய இந்த களைகள் வளர அனுமதிக்கப்பட்டால், அவைகள் தீங்கு விளைவிப்பது மாத்திரமல்ல, இந்த களைகள் அதிகமாக வளர்ந்து ஆவியின் இன்பான, அழகான பூக்களையும் கிருபைகளையும் கொன்றுவிடும்.

**R3594[col.1 P III to IV]:** (37ம் கேள்வி காண்க)

மற்றவர்களின் வார்தைகளின் மூலம் நாம் எளிதில் சினம் கொள்ளக்கூடாது. மற்றவர்களுடைய கிரியைகளிலும் வார்த்தைகளிலும் அன்பான காரியங்களை மட்டுமே கண்ணோக்க வேண்டும். வெறுப்பூட்டும் அற்பமான காரியங்களை அன்பு மற்றும் தாராள மனதோடு கவனியாமல் விட்டுவிடவேண்டும். பெரிதான குற்றங்களை பார்க்கும் போது அவைகளுக்கான விசாரணையில் மிக அன்பான வார்த்தைகளை கொண்டு நடத்த வேண்டும். குற்றவாளிகளின் கோபத்தை கிளறி விடாதபடிக்கு நம்முடைய பேச்சு, கிருபை பொருந்தினதாக இருக்கவேண்டும். எந்த குற்றங்களும் திட்டமிட்டு செய்யக்கூடியதாக நாம் எண்ணக்கூடாது. இவ்வாறு நாம் நடந்து கொண்டால் அநேக குற்றங்கள் குற்றங்களாக பொருள்படாது.

புறங்கூறக்கூடாது என்று நம்முடைய வசனங்களில் கற்பனையாக கொடுக்கப் பட்டுள்ளது. மற்றவருடைய கிரியைகளையும் வார்த்தைகளையும் வைத்து தீமையான எண்ணங்களையும் நோக்கங்களையும் நாம் கற்பனை செய்யக்கூடாது. தெய்வீகமான இயேசுவின் வார்த்தைகளுக்கு இவைகள் எதிரிடையானது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஏனெனில் இது மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியையாகும். (1தீமோத்தேயு 6:3,5, கலாத்தியர் 5:19-21)

**ஆவிக்குரிய பிரமாணத்தை நேசித்தல்**

தேவனுடைய ஜனங்களாக ஜெநிப்பிக்கப்ப டுவதற்கு காரணமாய் இருக்கும் அன்பின் ஆவியை நாம் நித்தமும் நமக்குள் பெருக்கிக்கொள்வதற்கு அப்போஸ்தலர் நமக்கு அறிவுரை கூறுகிறார். இதில் நாம் அடையும் வளர்ச்சியே "ஜெயிப்பவர்களுக்கான ஆதாரம் ஏனெனில் - "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது....சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்." (1கொரிந்தியர் 13) என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட குணங்களை வளர்ப்பதற்கு தடையாக தீமையான குணங்கள் அடிக்கடி வருவதுண்டு. அன்பின் ஆவி உடையவர்கள் மிகவும் மிருதுவாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அன்பின் ஆவியில் வளர்ச்சி அடையக் கூடியவர்கள் கர்த்தருக்கு பயப்படக்கூடிய பயம் இன்னதென்று எளிதில் உணர்ந்து கொண்டு அவர்களுடைய அந்தரங்கமான இருதயத்தில் வெளிப்படுத்துவார்கள். தீமையை காணும்போதே இவர்கள் எச்சரிப்போடு நடந்து கொள்வார்கள். தீமையான எண்ணங்களை வலுகட்டாயமாக விரட்டும் வரைக்கும் அவர்கள் கண்ணுரங்க மாட்டார்கள். இதனிமித்தம் சில நேரங்களில் சில நஷ்டங்களை சந்திக்க வேண்டியதாயிருக்கும். நமக்கு எந்தளவுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் அதை நிறைவாக்குவதற்கு தேவன் வல்லமையுள்ள வராயிருக்கிறார். ஏனெனில் தம்மில் அன்பு கூர்கிறவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாய் நடத்துகிறார். தம்முடைய ஒழுங்ககளுக்கு கீழ்டிப்படியகூடியவர்களுக்கு தேவன் முதலிடத்தை கொடுக்கிறார். (பலி செலுத்துவதற்கு முன்) "என்னுடைய கற்பனைகளை கைக் கொள்ளுவீர் களானால் எனக்கு சீஷராயிருப்பீர்கள்."

தீமையான புறங்கூறுதலை நடப்பித்து தேவனுடைய கற்பனைகளை புறக்கணிக்கிற வர்கள் தாங்களே சிக்கிக்கொள்ள வலையை பின்னுகிறார்கள். ஏனெனில், சந்தேகம் நிறைந்த இருதயமுள்ளவர்கள் சகோதரர்களை மட்டுமல்ல தேவனுடைய காரியங்களையும் சந்தேகப் படுவார்கள். இந்த சந்தேகமானது கசப்பு மற்றும் பாவமான வைராக்கியங்களை பிறப்பிக்கும். இவைகள் அனைத்துமே தேவனுடைய ஆவிக்கும் அன்பின் ஆவிக்கும் விரோதமாக யுத்தம் செய்யக்கூடியது. இதில் ஏதோ ஒன்று ஜெயிக்க வேண்டும். தவறான ஆவி விரட்டப்பட வேண்டும். இல்லாவிட்டால் கொடுக்கப்பட்ட புதுசிருஷ்டி அழிக்கப்படும் அதற்குபதிலாக புது சிருஷ்டி ஜெயித்து விட்டால் நாம் ஜெயிப்பவர்களாக காணப்படுவோம். இவை அனைத்தும் நம்முடைய இருதயத்திலிருந்து தோன்றக் கூடியவைகள். நம்முடைய வார்த்தைகள் கிரியைகள் நன்மையாக இருந்தாலும் தீமையாயிருந்தாலும் இவை களுக்ககு இருதயத்தின் எண்ணமே காரணமாக இருக்கிறது.

உங்களை பற்றி ஒருவர் புறங்கூறுவதாக நீங்கள் கேள்விபட்டால் முதலில் நீங்கள் உங்களை திருத்தி கொள்ள வேண்டும். அதற்கு பதிலாக நாம் புறங்கூறி இரட்டிப்பான தவறுகளை செய்யவதை தவிர்க்க வேண்டும் ஏனெனில் தீமைக்கு பதில் தீமை செய்ய வேண்டாம் என்ற கற்பனையை நாம் பெற்றிருக்கிறோம். உங்களுக்கு எதிராக தவறான காரியங்கள் சொல்லப்பட்டாலும் அதற்கு பதிலாக உண்மையான காரியங்களையும் சொல்லவேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்களும் புறங்கூறுபவர்களாக மாறிவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும், இவைகளே நமக்கு முன் வைக்கப்பட்ட சோதனைகள் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

**பொன்னான பிரமாணம்**

இது வசனங்களின் அடிப்படையிலான ஒரு பிரமாணமாகும். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமா அவைகளை நாமே முதலில் செய்ய வேண்டும் என்று ஆவிக்குரிய கற்பனையை பெற்றுள்ளோம். நமக்கு ஒருவர் தீங்கு செய்தால் அதற்கு பதிலாக நாம் தீமை செய்வது எந்த விதத்திலும் நீதியாகாது. "நன்மையான பலன் கிடைப்பதற்கு தீமையான காரியங்களை செய்யலாம்" என்ற சாத்தானுடைய கருத்துக்கு உண்மையான தேவ ஜனங்கள் என்றும் இணங்கக்கூடாது. புறங்கூறுகிறவர்களின் தவறான காரியங்கள் சாத்தானை பின்பற்றி அநீதியான ஊழியக்காரர்களாய் மாறி தீமையான அறிக்கைகளை சோர்வில்லாமல் கொடுத்துக் கொண்டிருப்பார்கள் என்று அனுபவங்கள் நிரூபிக்கிறது. நாம் இவைகளை மனப்பூர்வமாய் செய்வதற்கு துணிந்தால் சந்தேகத்திற்கு இடமின்று சாத்தான் நம்மை சிறப்பாக வழிநடத்தி சுவிசேஷத்தின் நற்செய்தியை பரப்புவதை தவிர நம்மேல் அவன் ஜெயம் கொள்ளுவான் நாமோ நஷ்டமடைவோம்.

நம்முடைய பந்தய பொருளை பெற்றுக் கொள்வதற்காக அழைக்கப்பட்ட அழைப்புக்கு கீழ்படிந்து நம்மை நாம் அவருடைய பாதத்தில் ஒப்புக்கொடுத்து பலி செலுத்தி நம்முடைய தெரிந்து கொள்ளுதலை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனிமித்த மாக நாம் நஷ்டமடைந்தால் நிச்சயமாக நம்முடைய பலன் பரலோகத்தில் மிகுதியாயிருக்கும். இறுதியில் வெற்றிபெற்றவர் களாக முடிசூட்டப்படுவோம்.